சிலுவையின் பெயரால்

கிறித்தவம் குறித்து

ஜெயமோகன்

சிலுவையின் பெயரால்

கிறித்தவம் குறித்து

ஜெயமோகன்

ஜெயமோகன்

பிறந்தது 1962, ஏப்ரல் 22ல். பள்ளி நாள்களில் ரத்னபாலா என்கிற சிறுவர் இதழில் முதல் கதையை எழுதினார். 1987ல் கணையாழியில் எழுதிய ‘நதி’ சிறுகதை பரவலாகக் கவனம் பெற்றது. 1988ல் எழுதப்பட்ட ‘ரப்பர்’ நாவல் அகிலன் நினைவுப்போட்டியின் பரிசைப் பெற்றது. இது தவிர கதா விருதும் சம்ஸ்கிருதி சம்மான் தேசிய விருதும் பெற்றுள்ளார். இவர் எழுதிய விஷ்ணுபுரம் தமிழ் இலக்கிய உலகில் பெரிய கவனத்தைப் பெற்றதோடு விவாதத்தையும் ஏற்படுத்தியது. இவரது படைப்புகள் தொடர்ந்து தமிழ் இலக்கிய உலகில் அதிர்வலைகளையும் புதிய சாத்தியங்களையும் ஏற்படுத்திய வண்ணம் உள்ளன. தமிழ் மற்றும் மலையாளத் திரைப்படத் துறைகளிலும் இவரது பங்களிப்பு தொடர்கிறது.

ஃபாதர் ஜோசஃப் புலிக்குந்நேல் அவர்களுக்கு

பொருளடக்கம்

என்றுமுள கண்ணீர்

கண்ணீரும் குருதியும் சொற்களும்...

பகுதி 1

1. 1. ஓர் எளிய கூழாங்கல்

1. 2. வலியின் தேவதை

1. 3. விவிலியம், புதிய மொழியாக்கம்

1. 4. அன்னையர் இருவர்

1. 5. இரண்டு காதலியர்

பகுதி 2

2. 1. கத்தோலிக்க மதம் பெண்ணுரிமை ஒரு கடிதம்

2. 2. காமமும் கிறித்தவமும் ஒரு கடிதம்

2. 3. கிறித்தவ விஜயதசமி

2. 4. கிறித்தவ தசரா கடிதங்கள்

பகுதி 3

3. 1. தமிழர்களுக்கு சிந்திக்கச் சொல்லித் தந்த புனித தாமஸ்

3. 2. தாமஸ் : கடிதங்கள்

3. 3. தாமஸ் : மேலும் கடிதங்கள்

3. 4. தாமஸ் கடிதங்கள் மீண்டும்

3. 5. தாமஸ் : குமரிமைந்தனின் கடிதம்

3. 6. தோமாகிறித்தவம் தமிழியம் : ஞானியின் கடிதமும் பதிலும்

பகுதி 4

4. 1. விவிலியத்தின் முகங்கள் – ஓர் அறிமுகம்

4. 2. புனித தோமையர் ஓர் அறிமுகம்

4. 3. மறைக்கப்பட்ட பைபிள் : தோமையர் எழுதிய சுவிசேஷம்

என்றுமுள கண்ணீர்

கிறிஸ்துவை என் பத்துவயதில் அறிந்தேன் என நினைக்கிறேன். நான் கண்ட முதல் மரணத்தின் இரவில். தனிமையில், துயரில். அன்றுமுதல் பைபிளின் சொற்களாக கனவுகனிந்த விழிகளாக அவர் என்னுடன் என்றும் இருக்கிறார். தனித்தவன், தனியர்களின் தெய்வம்.

எந்த மதமும் அமைப்பாகி அரசியலாகி அந்த முதல் கண்ணீர்த்துளியில் இருந்து வெகுவாக விலகிவிடுகிறது. அவ்விலகல் மீதான என் கண்டனத்தைப் பதிவுசெய்வதுகூட கிறிஸ்துவை மேலும் நெருங்கும் முயற்சியே என உணர்கிறேன். இந்நூலில் இவ்விரு இயக்கங்களும் ஒரே சமயம் நிகழ்ந்துள்ளன.

என் கிறிஸ்துவை சொற்கள் மூலம் மேலும் அறியும் முயற்சி. அவரை மறைக்கும் விஷயங்களை சொற்கள் மூலம் கிழித்தகற்றும் முயற்சியும் கூட.

ஜெயமோகன்
நவம்பர் 2015

கண்ணீரும் குருதியும் சொற்களும்...

கிறித்தவர்கள் சூழ்ந்த கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன் நான். மிகச்சிறு வயதிலேயே கிறித்தவ தேவாலயங்களுக்குச் செல்லவும் கிறித்தவ பிரார்த்தனைகளில் ஈடுபடவும் ஆரம்பித்துவிட்டேன். என் வாழ்க்கையின் மிக ஆதாரமான பாதிப்புகளில் ஒன்று பைபிள். நான் வாசிக்க ஆரம்பித்த ஆரம்பகால நூல்களில் அது ஒன்று. எங்கள் வீட்டில் இருந்த கரிய தோலட்டை போட்ட, பக்கவாட்டுத்தாள் மட்கிச்சுருண்ட பைபிளை இப்போதும் நினைவுகூர்கிறேன். அதில் ஓடிய பூச்சித்துளைகள் பழுப்புநிறக் கறைகள் என் அம்மா அடிக்கோடிட்ட வரிகள்.

என் வாழ்க்கையின் துயரம் நிறைந்த நாட்களில் கிறிஸ்துவின் சொற்களை அந்தரங்கத்தில் உணர்ந்திருக்கிறேன். கருணையை மட்டுமே செய்தியாகக் கொண்ட மாபெரும் ஞானகுருவாகவே நான் கிறிஸ்துவைக் காண்கிறேன். இந்த உணர்ச்சி மதங்களைக் கடந்த ஒன்று. என்னுடைய கிறிஸ்து மதங்களால் எனக்கு அளிக்கப்பட்டவர் அல்ல. மனம் கருணையால் நிறைந்திருக்கும் மிக இளம் வயதில் நேரடியாக சொற்களில் இருந்து இறங்கி என்னருகே வந்தவர். நான் தொட்டு அறிந்தவர்.

சிலவருடங்களுக்கு முன்னர் ஒரு நண்பர் சொன்னார். ‘கிறிஸ்துவை விட்டாலொழிய இந்துவாக இருக்க இயலாது என்று சொல்லப்பட்டால் என்ன செய்வாய்?’ என. நான் தயங்காமல் சொன்னேன் ‘இந்துமதத்தை விட்டு விடுவேன்’ என. அவர் அதிர்ச்சி அடைந்தார். நான் நம்பும் இந்துமதம் உலகின் மெய்ஞானத்தை எல்லாம் தன்னுள்ளே வாங்கி நிறைத்துக்கொள்ளும் ஒரு கடல்போன்றது. கிறிஸ்துவை விலக்க ஆணையிடும் இந்துமதம் இந்துமதமாக இருக்காது.

இன்று நாம் அறியும் கிறிஸ்து ஒருவரல்ல. குறைந்தபட்சம் மூன்று கிறிஸ்துக்கள் உள்ளனர். வரலாற்றுக் கிறிஸ்து யூதர்களின் வரலாற்று நூல்களில் இருந்து நமக்குத் தெரியவருபவர். ஆன்மிகக்கிறிஸ்து கிறிஸ்துவின் சொற்கள் வழியாக கடந்த இருபது நூற்றாண்டுகளில் மாபெரும் மதங்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் திரட்டிக்கொண்ட ஓர் ஆளுமை. மதக்கிறிஸ்து கிறித்தவ திருச்சபையாலும் மதவாதிகளாலும் முன்வைக்கப்படுபவர்.

இந்த மூன்று கிறிஸ்துக்களையும் பிரித்தறியும் ஒருவரே சமநிலை கொண்ட ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியும். கிறிஸ்துவை உணரவும் முடியும். நான் கண்டுவரும் பெரும்பாலான கிறித்தவர்கள் கிறிஸ்துவை ஓர் இறைவடிவமாக மட்டுமே பார்ப்பவர்கள். லௌகீகமான தேவைகளை கோரினால் அளிக்கக்கூடிய கண்ணுக்குத்தெரியாத ஓர் இருப்பு மட்டும்தான் கிறிஸ்து அவர்களுக்கு. பைபிளின் வாசகங்கள் எல்லாமே அவர்களுக்கு வழிபாட்டு மந்திரங்கள் மட்டுமே.

பல்லாயிரம் முறை நான் தேவாலய வாசல்களில் நின்று ஜெபங்களை கேட்டிருக்கிறேன். எப்போதுமே அன்றாடவாழ்க்கையின் எளிய லாபங்களுக்கான மன்றாட்டு மட்டுமே. எனக்கு வேலையைக்கொடும் ஆண்டவரே, நோயைக் குணப்படுத்தும் ஆண்டவரே, பதவி உயர்வு வேண்டும் யேசுவே... ஒருநாள் கூட ஆன்மிகமான ஒரு பிரார்த்தனை என் காதில் விழுந்ததில்லை. அவர்கள் உணரும் யேசுவுக்கும் நான் சொல்லிக்கொண்டிருக்கும் யேசுவுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

இந்த அமைப்பு மனிதர்கள் தங்களுக்கு தங்கள் அமைப்பு இடும் கட்டளையை ஏற்று இரவுபகலாக பிற மதங்கள் மீது தாக்குதல் தொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். உங்களைச் சந்தித்ததுமே உங்களை மதமாற்றம் செய்ய முயலாத தீவிரக் கிறித்தவர்களை பார்ப்பது அரிது. ஒருபோதும் தன்னுடைய ஆன்மிகப்பயணம் குறித்து அவர் ஐயப்படுவதில்லை. அதில் அவர் செல்லவேண்டிய தூரம் ஏதுமில்லை. அவர் நம்பி விட்டார், இனி அந்நம்பிக்கையை பிறருக்கு கொடுப்பதே அவரது ஆன்மிகம்.

நான் நம்பும் கிறிஸ்து அவரல்ல என்றால் அவர்கள் என்னை கிறிஸ்துவை தூஷிப்பவன் என்றே பொருள்கொள்வார்கள். அப்படி என்னிடம் சொன்னவர்கள் பலநூறுபேர் உண்டு. நான் நம்பும் கிறிஸ்து ஒரு மாபெரும் ஆன்மிக ஞானி. மண்ணில் மனிதனுக்குச் சாத்தியமான முழுமையை அடைந்தவர். அதை தன் பெருங்கருணையால் மனுக்குலத்துக்குச் சொல்லிவிட்டுச் சென்றவர். அவரது சொற்களில் இருந்து உருவான சபைகளுக்கு அவர் பொறுப்பல்ல. அவரது சொற்கள் ஆன்மிகமான தேடல் கொண்டவர்களுக்கு அவர்களின் அகத்தில் ஒளிரும் விளக்குகளாக என்றும் துணைவரக்கூடியவை.

நான் அந்த கிறிஸ்துவை தல்ஸ்தோய், தஸ்தயேவ்ஸ்கி வழியாகவே என் ஆத்மாவில் கண்டுகொண்டேன். பின்னர் நித்ய சைதன்ய யதி வழியாக மீண்டும் கண்டுகொண்டேன். பின்னர் காந்தி வழியாக கண்டு கொண்டேன். உலகமெங்கும் ஆதிக்கத்தின் அடையாளமாக சென்றடைந்த கிறிஸ்துவிலேயே அந்த மீட்பின் கிறிஸ்துவும் உள்ளடங்கியிருக்கிறார் என்று படுகிறது. மெய்மையை தேடும் ஒருவன் தன் ஆன்மாவின் இயல்பாலேயே அவரை தனித்து எடுத்துவிட முடியும்.

இந்தக் கட்டுரைகள் கிறிஸ்துவைப் பற்றியும் கிறித்தவம் பற்றியும் வெவ்வேறு தருணங்களில் எழுதிய கட்டுரைகள் மற்றும் எதிர்வினைகளின் தொகுப்பு. இவை கிறிஸ்துவ மெய்யியலிலோ அல்லது வரலாற்றிலோ முறையான வாசிப்பு இல்லாத ஆனால் ஆர்வத்தால் எப்போதும் அறிந்துகொண்டிருக்கிற ஒரு வாசகனின் பதிவுகள் மட்டுமே.

கேரளத்தில் கிறிஸ்துவின் ஆன்மிகத்தை மட்டுமே வாழ்நாள் முழுக்க முன்வைத்தவர் ஃபாதர் ஜோசஃப் புலிக்குந்நேல். அவரது சொற்கள் எண்பதுகளில் எனக்கு கிறிஸ்துவை மீண்டும் மீண்டும் அடையாளம் காட்டியிருக்கின்றன. இந்நூல் அவருக்கு சமர்ப்பணம்.

ஜெயமோகன்

பகுதி 1

1. 1. ஓர் எளிய கூழாங்கல்

பதினான்கு வருடம் காட்டில் உழன்றாலும் அவன் சக்ரவர்த்தித் திருமகன். இடையர்குடிலில் வளர்ந்தாலும் அவன் யாதவர்களின் மன்னன். அரசு துறந்து சென்றாலும் அவன் சாக்கிய குலத்தரசு. ஆம், மகதி கோசாலனும் வர்த்தமான மகாவீரனும் கூட பிறப்பால் மன்னர்களே. பெரும் ஜனக்கூட்டங்களை ஆள்வதற்காகவே அவதரித்தவர்கள். கோடிக்கணக்கான மனிதர்கள் நடுவே கூழாங்கல்வெளியில் வைரமென ஒளிவிடுபவர்கள்.

ஆனால் தச்சன்மகன் எளியவன். அவனை நெரிசலான சாலையில் ஒருவருமே அடையாளம் காணமுடியாமல் போகலாம். அவன் நம் வீட்டுவாசலில் வந்து நின்றானென்றால் நாம் ஒருவேளை அதிருப்தியுடன் முகம் சுளிக்கக்கூடும். மாட்டுத்தொழுவில் பிறந்த அவன் ஒருவேளையேனும் நல்ல உணவு உண்டிருக்க வாய்ப்பில்லை. புழுதியில்லாத உடை ஒன்றை அவன் அணிந்திருக்க மாட்டான். பாம்புகளுக்கு வளைகளிருந்தன பறவைகளுக்கு வானமிருந்தது, மனிதகுமாரன் தலைசாய்க்க இடமிருந்ததில்லை.

அவனுக்காகவா இந்த மாபெரும் ஆலயம்? அவன் இங்கே எப்படி உணர்கிறான்? இந்த மாபெரும் சிற்ப வளைவின்கீழ், இந்த நீரலை மின்னும் பளிங்குக்கல் தரையில், இந்த ஒளி நடனமிடும் வண்ணக் கண்ணாடிச் சில்லுகளில் அவன் எப்படி தன்னை உணர்கிறான்? இந்த ஆலயத்து மையத்தில், வானுருவம் கொண்ட கன்னியொருத்தியின் பிரம்மாண்டமான நகை போல பொன்னொளி சுடர நின்றிருக்கிறது தேவாலய மையபீடம். அதன் நடுவே பொன்னிற தேவதைகள் சூழ்ந்து வாழ்த்த, பொன் மின்னும் கன்னங்களுடன் தூயவள் அவனை கையில் ஏந்தி நிற்கிறாள். பேரழகுடன் பூத்த இளமரம் ஒன்றில் இருந்து எழும் பூங்குருத்துபோல அவன் குழந்தையாக கைநீட்டி நம்மை அழைக்கிறான்.

எத்தனை கம்பீரம்! சக்ரவர்த்தியொருவரின் களஞ்சியம் திறந்ததுபோலிருக்கிறது. பூதங்கள் கைவிட்டு விலகிய பொற்புதையல் போலிருக்கிறது. ஆயிரம் வருடங்களாக மண்ணுக்குரியவற்றில் மேன்மையானவற்றையெல்லாம் பொன்னென உணர்ந்த மரபில் பூத்துவந்த என் கண்கள் இவ்வெழிலை விட்டு விலக மறுக்கின்றன. ஆனால் இது கடையர்களுக்காக மண்ணுக்கு வந்த கருணையாளனின் இடம்தானா?

பழைய கோவா ‘கிழக்கின் ரோமாபுரி’ என்று ஒருகாலத்தில் அழைக்கப்பட்டிருக்கிறது. அந்த சுத்தமான அழகிய நகரத்தில் எங்கு பார்த்தாலும் மனிதர்களை சிறியதாக்கி மண்ணுடன் சேர்த்து அழுத்திவிடும் மாபெரும் தேவாலயங்கள் உள்ளன. உதிரிச் சுற்றுலாப்பயணிகள் அன்றி அதிகம்பேர் கண்ணில்படாத கடற்கரையில் இருக்கிறது காஜதான் தேவாலயம். (Church of St. Cajatan) தியேட்ரின் குருமரபைச் சேர்ந்த தந்தையர் அவர்களின் முதல் குருவான புனித.காஜதான் அவர்களின் நினைவுக்காக விரும்ப, 1651ல் இத்தாலியச் சிற்பிகளால் ரோமாபுரியின் புனிதபீட்டர் தேவாலயத்தை மாதிரியாக்கிக் கட்டப்பட்ட ஆலயம் இது.

பீட்டரின் தேவாலயம் இதைவிட ஆறுமடங்கு பெரிது என்றார்கள். ஆனால் காஜதான் தேவாலயமே உள்ளே நுழைபவர்களின் பிரக்ஞையை ஒரு புறாவாக ஆக்கி பறக்கச்செய்யுமளவுக்கு பிரம்மாண்டமானது. புனித உபகார அன்னையின் தேவாலயம் இது. மேற்குநோக்கிய மாபெரும் கூடத்தில் தியேட்ரின் மரபைச்சேர்ந்த நூற்றுக்கணக்கான திருத்தந்தையரின் கல்லறையைமூடிய மேற்கற்களே தரையாகியிருக்கின்றன. அவர்களின் புனிதப்பெயர்களின் மீது நடந்து சென்றுதான் நாம் எதிரே பொற்குன்றம் போல் ஓங்கி நிற்கும் உபகார அன்னையின் ஆல்டரை எதிர்நோக்கி விழிதூக்க முடியும்.

மைய ஆல்டருக்கு இருபக்கமும் பகுதிக்கு ஒன்று வீதம் மூன்று ஆல்டர்கள் உள்ளன. இடதுபக்கத்தின் மூன்று ஆல்டர்களில் ஒன்றில் தன் தாய்தந்தையுடன் சிரிக்கும் மனிதகுமாரன். இன்னொரு ஆல்டரில் பக்தியுள்ள அன்னை. புனித கிளேரின் சிலை. மூன்றாவது மறுபக்கம் மூன்று ஆல்டர்களில் புனித ஜான், புனித காஜதன் மற்றும் புனித ஆக்னஸ். கைதூக்கி அருள்புரிந்து தலைசரித்து தாங்களும் பிறிதொரு பேரருளில் நனைந்து நிற்கும் சிற்பங்கள்.

கண்கள் நிறைக்கும் பொன்னொளியில் ஒருகணமேனும் அந்தப்பொன்னிறம் அவன் கிடந்த மாட்டுத்தொழுவின் வைக்கோல்நிறத்துக்கு ஈடாகுமா என்ற எண்ணம் எழாமலிருக்காது. விசித்திரமானதோர் தத்தளிப்பு அங்கே உருவாகிறது. இதுவல்ல, இவ்வளவல்ல என்று மனம் சொல்லிக்கொண்டே இருப்பது போல. ஆனால் அந்த இடத்திலிருந்து விலகிச்செல்ல முடியாமல் பிரக்ஞை ரீங்கரித்துக்கொண்டு சுற்றிச் சுற்றிப் பறக்கிறது.

எந்த தேவாலயத்திலும் எந்த கோயிலிலும் நான் எதையும் கேட்டு பிரார்த்தனை செய்வதில்லை. பிரார்த்தனை என்பது எப்போதும் எனக்கு மிக அருகே உணரப்படும் ஓர் அருகாமை மட்டுமே. அது என்னுள்ளிருந்து வெளிப்பொருட்களில் எதிரொளிப்பதாகவும் இருக்கலாம். ஆனால் உடனிருத்தல் என்னும் அனுபவம் மட்டுமே அது. நான் கேட்பதற்கிருப்பதெல்லாம் அது அறியும் என்பதுபோல. குறையொன்றுமில்லை என்று வான்பெருகும் பெருநிறைவின்முன் உணரும் தருணமே உண்மையான பிரார்த்தனையாக இருக்கமுடியும்.

இங்கே என்னை இழுத்து வைத்திருப்பது எது என எண்ணிக்கொண்டேன். அது கலைதான். மனிதக் கற்பனையின் தரிசன உச்சங்கள் கைகளாக ஆகி கல்லிலும் உலோகத்திலும் தங்களை நிகழ்த்திக்கொண்டிருக்கின்றன. பொருட்கள் வழியாக நாம் அதை உருவாக்கியவனின் அகத்தின் எழுச்சியைச் சென்றடைய முடியும் என்றால் அதுவே கலை. இந்த சிலைகளை உருவாக்கியவன் எத்தகைய கனவில் இருந்தான். மண்ணுலகையே அழைக்கும் இந்த குட்டிக்கைகளின் குண்டுவிரல்களைச் செதுக்கியபோது முதல் குழந்தையை கருவாசனையுடன் அள்ளி மார்போடணைத்துக்கொள்ளும் அன்னையின் மார்புகள் போல அவன் ஆத்மாவில் அமுதூறியதா என்ன?

கலையின் தருணங்களை ஒருபோதும் அள்ளிவிடமுடிவதில்லை. அலையலையான மன எழுச்சிகளாக கரையை வந்து மோதிக்கொண்டே இருக்கிறது கலையின் முடிவிலி. அதன் விரிவை அவ்வலைகளே

மறைத்துவிடுகின்றன. எத்தனை நுட்பங்கள். எத்தனை ஆயிரம் மலர்வளைவுகள், எத்தனை ஆயிரம் நுண்நெளிவுகள். இக்கணம் வரை ஒருவருமே கவனிக்காத எத்தனை ஆயிரம் செதுக்கல்கள் இங்கே இன்னுமிருக்கக் கூடும். கலைஞன் அவற்றை தன் அகக்கண்களுக்காகவே செதுக்கியிருப்பான். தன்னுள் ஊறிய மகத்துவமொன்றை பொன்னிலும் கல்லிலும் கண்டுகொள்வதற்கப்பால் அது வேறெதுவுமில்லை அவனுக்கு.

கலையை விட்டு வரச்சொல்லி மனதை பிடித்திழுக்கிறது தர்க்கம், தாயின் முந்தானையைப் பிடித்திழுக்கும் சேய்போல.‘நேரமாகிறது, நேரமாகிறது’ என. ஆனால் நேரமின்மையில் நிரந்தரமாக நின்று விட்டிருக்கின்றது மாபெரும் கலை. புனிதர்களின் கண்களின் பெருங்கருணை. மரியின் கண்கள் மட்டுமல்ல அவள் உடைகளின் நெளிவில் அவள் கூந்தலின் அலைகளில் அவளுடைய சிறிய பாதங்களில் அவள் குழந்தையை ஏந்தியிருக்கும் மென்மையில் எங்கும் கருணை மட்டுமே. ஆயினும் அது சிலைதான். கலையின் வழியாக தெய்வங்களைக் காட்டிவிடமுடியுமா என்ன? கலை எத்தனை எளியது. எத்தனை வரையறைக்குட்பட்டது. கல்லின் வரையறை, பொன்னின் வரையறை, உருவங்களின் வரையறை. அழகு என்னும் மகத்தான வரையறை. ஆயினும் கடவுளரை காட்ட வேண்டுமென்றால் மானுடனுக்குக் கலையன்றி வேறென்ன வழி இருக்கிறது?

வெளியே வரும்போது நெஞ்சை விம்மச்செய்யும் ஒரு பெருமூச்சுடன் உணர்ந்தேன். இந்த பேராலயத்துக்கு ஆறுமடங்கு இருக்குமாம் ரோமாபுரியின் பேராலயம். ஒருவேளை இந்தச்சிறிய வாழ்க்கையின் நான் அங்கே செல்லமுடியாமலே போகலாம். ஆனால் சிலைகளில் இருந்து தெய்வங்களுக்குச் செல்லும் கற்பனையால் இவ்வாலயத்தில் இருந்து அவ்வாலயத்திற்குச் செல்கிறேன் இப்போது. அதன் பிரம்மாண்டமான கலைவெளியில் ஒரு சிறிய பூச்சியாக ஊர்ந்து செல்கிறேன். நான் என்ற எளிமையை ஒரு கணமும் நான் என்ற மகத்துவத்தை மறுகணமும் உணர்ந்தபடி நடக்கிறேன். அதன் வானில் நிறைந்திருக்கின்றது மைக்கேலாஞ்சலோவின் பெருங்கனவு. காலத்தை தனக்குத் திரைப்புலமாக விரித்துக்கொண்ட வல்லமை உடையது அது.

ஆயினும் எளிய தச்சன்மகனுக்குப்போய் எதற்காக இந்த ஆடம்பரம்? இத்தனை பொன்னை அவன்பெயரால் குவித்து வைத்தால் எப்படித்தாங்குவான் அவன்? அவனுடைய காட்டுச்சுனைபோன்ற எளிய சொற்களின் மீது இந்த பிரம்மாண்டமான கலைச்சிகரங்களை ஏற்றி வைத்தால் இவற்றை விலக்கி அச்சொற்களை சென்றடைய முடியுமா என்ன? இங்கே ஒவ்வொன்றிலும் திமிறியெழும் ஆடம்பரம் அதற்குள் உள்ள அதிகாரத்தைச் சுட்டுகிறது. அதிகாரம் சுயமுனைப்பின் அறுவடை. சுயமுனைப்போ அனைத்து தியாகங்களுக்கும் எதிரானது. தியாகங்களினால் மட்டுமே நெருங்கக்கூடிய அவன் மாளிகையின் படிகள் எப்படி பொன்னால் அமையமுடியும்? எங்கிருந்து வந்து எதைத் தீண்டியிருக்கிறது இந்த பேராலயம்?

எத்தனை எளிமையானவை அவனுடைய சொற்கள் ! நாற்பது வருடங்களுக்கும் மேலாக அனேகமாக தினமும் அவனுடைய ஒருவரியையேனும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மண்ணில் மாபெரும் ஞானம் ததும்பிய சொற்கள் நிகழ்ந்துள்ளன. பெருங்கருணை விளங்கிய

சொற்கள், கூரிய நீதி சுடர்ந்த சொற்கள், முடிவில்லாத அழகு நிறைந்த சொற்கள் பிறந்துள்ளன. அவன் சொற்களின் அளவுக்கு எளிமை எச்சொற்களிலும் கூடவில்லை. பாலைவனத்து சிற்றோடை போல தெளிந்தவை. கைக்குழந்தை தேடி எடுத்து பட்டுச் சிறுகையில் பொத்தி வைத்திருக்கும் ஈரமான வெதுவெதுப்பான கூழாங்கல் போல சர்வசாதாரணமான பேரெழில் கொண்டவை.

ஏனென்றால் அவை ஞானதாகிகளுக்காகச் சொல்லப்படவில்லை. சான்றோருக்காகவோ கற்றோருக்காகவோ சொல்லப்படவில்லை. ஏன், நல்லவர்களுக்காகக்கூடச் சொல்லப்படவில்லை. பூமிக்கு வந்த அருளாளர்களிடையே தச்சன்மகனை தனித்து நிறுத்தும் அம்சம் அது ஒன்றே. அவன் மட்டுமே கைவிடப்பட்டவர்களுக்காக, புறக்கணிக்கப்பட்டவர்களுக்காக, தோற்கடிக்கப்பட்டவர்களுக்காக, பாவத்தில் நீந்துபவர்களுக்காக பேசினான். பிறர் சமூகத்தின் கோபுரமுகடுகளை நோக்கிப் பேசினார்கள், அவனே அதன் அழுக்கு ஓடைகளை நோக்கிப் பேசினான். பிறர் கல்விச்சாலைகளை நோக்கிப் பேசினார்கள், அவன் போகசாலைகளை நோக்கிப் பேசினான். பிறர் அவர்களின் மகத்துவத்தை அறியும் வல்லமை கொண்டவர்களுக்காகப் பேசினார்கள். அவனோ அவனை சிலுவையில் ஏற்றுபவர்களுக்காகப் பேசினான்.

என் இருபதுவயதில் அவனை மீண்டும் சுங்கக்காரர்களும் பரிசேயர்களும் சிறையிட்டு வைத்திருப்பதைக் கண்டேன். அவனை விட்டு வெகுதூரம் விலகிச்சென்றேன். எத்தனை தேவாலயங்கள். வானபரியந்தம் ஏறி இல்லை என்று கைவிரித்து நிற்கும் சிலுவைகள் (ராஜசுந்தர ராஜனின் கவிதை) பின்பு ஒருநாள் ஒரு கடற்கரைக் குடிலில் புகைபடிந்த சிறிய கண்ணாடிக்குப்பிக்குள் தாமரையில் தனியிதழ்போல நின்ற மண்ணெண்ணெய்ச்சுடரின் வெளிச்சத்தில், கயிறுகொண்டு காதுடன் கட்டப்பட்ட உடைந்த மூக்குக்கண்ணாடியின் செவ்வொளி மின்னும் கீழ்ப்பிறை வளைவுவழியாக குனிந்து விவிலியத்தைப் படிக்கும் ஒரு அன்னைமுகத்தில் மீண்டும் அவன் சொற்களை கண்டெடுத்தேன். அவளின் பறக்கும் கூந்தலிழைகளில், ஒளிபரவிய கன்னங்களில், நடுங்கி அசையும் கரிய உதடுகளில் மண்ணில் சாத்தியமான மிகப்புனிதமான ஒன்று நிகழ்வதைக் கண்டேன். ஏனென்றறியாமல் நான் கண்ணீர் மல்கினேன்.

பின்பு எனக்காக அவனைக் காட்டித்தருபவர்களை தேடியலைந்தேன். தாகம் கொண்டவன் என்ன செய்தாலும் அகம் நீர் நீர் என எண்ணிக்கொண்டிருப்பதைப்போல. அவனை நான் இந்த ஆலயங்களில், ஞாயிற்றுக்கிழமைதோறும் கூடி எனக்கு எனக்கு என தவிக்கும் உலகியல் வேண்டல்களில், எங்களிடம் வா எங்களிடம் வா என்று நச்சரிக்கும் மதவெறியர்களின் வெளிறிய சொற்களில் ஒருபோதும் கண்டடைய முடியாது என்று உணர்ந்தேன். ஒரு நாத்திகனுக்காவது என்றாவது அவன் சொற்கள் திறக்கக்கூடும். இந்த இறுகிய மதநம்பிக்கையாளர்கள் அவனை வெளியே விட்டு கதவைமூடி இறுகத்தாழிட்டுக்கொண்டவர்கள்.

அவனை நான் தேடிச்செல்லவேண்டியதில்லை. என்னுடைய பாதை எதுவானாலும் அவன் அங்கே வந்தே ஆகவேண்டும். ஏனென்றால் அது அவனுடைய விதி. அவனை விட்டுச்செல்பவனை ஒருபோதும் அவனால் விட்டுவிட முடியாது. மழைபெய்துகொண்டிருந்த ஓர் இரவு. நான் என்

தனிவீட்டில் என்னுடைய பழைய கட்டிலில் போர்த்திக் கொண்டு அமர்ந்து தல்ஸ்தோயின் நெஹ்ல்யுடோவின் மாபெரும் உயிர்த்தெழலின் கதையை வாசித்துக் கொண்டிருந்தேன். கந்தலுடுத்து வந்து அழைத்த எளியதச்சனின் சொல்லைக் கேட்டு படகுடன் கடலையும் விட்டு அவனைத்தொடர்ந்த பீட்டரைப்போல தன் மனசாட்சியைப் பின் தொடர்ந்து செல்வத்தை பதவியை குடும்பத்தை தாய்நாட்டை உதறிச் செல்லும் நெஹ்ல்யுடோவ் ருஷ்ய மொழியில் மனசாட்சியின் ஒளியைக் கொண்டுவந்தார் என்றார் லெனின்.

நாவலின் முடிவு வரியில் அலைகள் அடங்கி அமர்ந்து அனைத்தையும் ஒரேகணம் நினைவுகூர்ந்து நெஹ்ல்யுடோவ் பெருமூச்சுடன் அந்த மாபெரும் நூலைப் பிரித்தான் 'அனைத்துக்குமே இதில் பதிலைக் கண்டுகொள்ள முடியும் என்கிறார்கள்' என்று நினைத்தான். குத்துமதிப்பாக புதிய ஏற்பாட்டை திறந்து மாத்யூ வின் நற்செய்தியை வாசிக்க ஆரம்பித்தான். 'அந்நேரத்தில் சீடர்கள் இயேசுவை அணுகி 'விண்ணரசில் மிகப்பெரியவர் யார்?' என்று கேட்டார்கள். அவர் ஒரு சிறு பிள்ளையை அழைத்து அவர்கள் அருகே நிறுத்தி பின்வருமாறு கூறினார். நீங்கள் மனம்திரும்பி சிறுபிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என்று உறுதியாகவே உங்களுக்குச் சொல்கிறேன். இந்தச்சிறுபிள்ளையைப்போல தம்மைத் தாழ்த்திக்கொள்பவரே விண்ணரசில் மிகப்பெரியவர். இத்தகைய சிறு பிள்ளை ஒன்றை என்பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார்'.

அதுவே எனக்கான வழி என்றார் ருஷ்யக் கிழஞானி. நூல்களிலும் உறவுகளிலும் பனிவெளியிலும் கண்ணீருடன் அலைந்து, ரயில் நிலையத்தில் தனித்துக்கிடந்து இறந்து அவர் கண்டடைந்த மெய்ஞானம். என் கழுத்தில் எந்த அடையாளமும் தொங்கவேண்டியதில்லை. என் தலையில் எந்த நீரும் விழவேண்டியதில்லை. என்னால் எனது தனித்த பாதைக்கு முன்னால் காற்றில் கரையும் முன் அவனுடைய பாதத்தடத்தைக் காணமுடிந்தால் போதும். இதோ வசந்தகுமார் சிகரெட் வாங்கும் பெட்டிக்கடையிலிருப்பவளின் இடையில் குட்டிவாய்க்குள் மொத்தக்கையையும் செருகி எச்சில் வழிய அமர்ந்திருக்கும் இந்தக் கரிய சிறுபிள்ளையை கையில் வாங்கி இவனை அவன் என என்னால் எண்ணமுடிந்தால் போதுமானது.

மீண்டும் மீண்டும் அவனை என் ஆசிரியர்களாக வந்த பெரும் கலைஞர்களிடமே கண்டேன். அவர்கள் மட்டுமே அவனைக் கண்டிருக்கிறார்கள் என்றுணர்ந்தேன். இன்னொரு புத்துயிர்ப்பான 'குற்றமும் தண்டனையும்' நாவலில் கொலைப்பாவத்தைச் சுமந்து குருதிவழியும் இதயத்துடன் விபச்சார விடுதிக்குச் சென்று சோனியாவைக் காண்கிறான் ரஸ்கால்நிகா.ஃப். யேசுவைத் தேடியலைந்தவன் மக்தலீன் மேரியைக் கண்டடைந்தான். ஏனென்றால் அவன் யேசுவாக ஆக ஆரம்பித்திருந்தான். இருவரும் பாவத்தில் கறைபடிந்த உடல்களை தியாகத்தால் கழுவி புதிதாகப் பிறந்தெழும் தருணம். விவிலியத்தை எடுத்து லாஸரஸ் உயிர்த்தெழுந்த கதையைப் படிக்கச் சொல்கிறாள் சோனியா. ரஸ்கால்நிகா.ஃப் படித்தான். தஸ்தயேவ்ஸ்கியின் சொற்கள்.

"அது உயிர்த்தெழும் லாசரஸைப் பற்றியது" அவள் திடீரென்று தீவிரமாக முணுமுணுத்தாள். திரும்பிக்கொண்டு அசைவில்லாது நின்றாள். தன்

கண்களை அவனுக்காக உயர்த்தக்கூட அவள் தயாராகவில்லை. காய்ச்சல்கண்டவள்போல மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தாள். சிதைந்துபோன தண்டின்மீது அசைந்த மெழுகுவர்த்திச் சுடர் வறுமைமூடிய அந்த அறையையும் அதற்குள் நின்றபடி அழியாத அந்த நூலை வாசிக்கும் ஒரு கொலைகாரனையும் தாசியையும் மங்கலாக ஒளிரச்செய்தது. அந்த உயிர்த்தெழும் தருணத்தில் நான் என் கையிலிருந்து நடுங்கிய நூலின் ஒவ்வொரு எழுத்தும் பாலைநிலத்தில் பதிந்த அவனுடைய காலடிச்சுவடுகள் எனவே உணர்ந்தேன்.

இந்த வருடங்களில் என் மேஜை மீது எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது அவனுடைய சொற்களின் நூல். சஞ்சலங்களில், மன எழுச்சிகளில், தனிமையில், அச்சொற்களினூடாக அலைந்து அதன் ஏதோ ஒருவரி என்னை வெளியே தள்ளும்போது மூடிவிடுகிறேன். “அத்திமரத்திலிருந்து ஓர் உண்மையைக் கற்றுக்கொள்ளுங்கள். அதன் கிளைகள் தளிர்த்து இலைகள் தோன்றும்போது கோடைகாலம் நெருங்கிவிட்டதென்று அறிந்துகொள்வீர்கள்.” வேர்கள் காயும் கோடையில் புதிதெனத் தளிர்க்கும் மரங்கள் மட்டுமே அறியும் அவன் ரகசியம்.

இத்தனை வருடங்களில் நான் வாசித்த மேலைஇலக்கிய நூல்களில் பாதிக்கும் மேலானவை எப்படியோ அவன் சொற்களில் இருந்து முளைத்தவை என்பதை எண்ணிக்கொள்கிறேன். எமிலி ஜோலா, பேர் லாகர் குவிஸ்ட், நிகாஸ் கசந்த் ஸகீஸ், மேரி கொரெல்லி, லியூ வாலஸ், ஜோஸ் சரமாகோ... அவர்கள் வழியாகவே நான் அவனை இன்னும் அறிய முடிகிறது. ஏனென்றால் ஆன்மிகத்திற்கும் லௌகீகத்திற்கும் இடையேயான மாபெரும் இடைவெளியை உணர்ச்சிகளையும் கனவுகளையும் விசுவரூபம் கொள்ளச்செய்து நிறைக்க கலையால் மட்டுமே முடியும். எத்தனை மாபெரும் இலக்கிய ஆக்கங்கள். அவை சொற்களின் திருவிழாக்கள். சொற்கள் பொன்னொளி பெறும் தருணங்கள்.

கலையையும் ஆடம்பரத்தையும் பிரிக்க முடியுமா என்ன? மானுடனுக்கு கலை என்பதே ஓர் ஆடம்பரம் அல்லவா? இந்த தேவாலயத்தை எதற்காக உருவாக்கினார்கள்? அவனுடைய தூய சொற்கள் அளித்த மன எழுச்சியை வேறு எப்படித்தான் சொல்வான் மானுடன்? அவனுக்கு கையில் கிடைப்பது எளிய கல், எளிய பொன் மட்டும்தானே? ரோமாபுரியின் புனித பீட்டரின் தேவாலயம் மகத்தானதுதான். ஆனால் அவனுடைய சொற்களின் மகத்துவத்தை உணர்ந்த மனம் கொண்ட எழுச்சியின் சிறிய துளிதானே அது?

கதைகளில் ஒரு ஊமைச்சிறுமி இருந்தாள். தன் கனவு ஒன்றுக்குப் பதிலாக ஒரு சிறு கூழாங்கல்லை முன்னால் வைத்துவிட்டு கைகள் விரித்து உலகையே சுட்டிக்காட்டி தன் உள்ளத்தைச் சொன்னாள். இந்தப்பேராலயம், ஏன் மண்ணில் எழுப்பப்பட்ட எல்லா பேராலயங்களும், அந்த தனிக்கூழாங்கல் போன்றவை. அதிக பட்சம் மனிதனால் அடையாளமாக வைக்கத்தக்கது அதுவே. இவை மானுடனின் சிறுமையையும் அவன் சொற்களின் மகத்துவத்தையும் சாட்சியப்படுத்தி நிற்கின்றன. மாபெரும் எளிமையை ஆடம்பரத்தால் சுட்டவேண்டுமென்றால் எத்தனை கோடிப் பொன் தேவையாகும்!

1. 2. வலியின் தேவதை

நேற்று அக்டோபர் 12 அன்று கேரளத்தைச்சேர்ந்த அமரத்துவம் அடைந்த கன்னியாஸ்திரீ ஸிஸ்டர் அல்போன்ஸாவுக்கு வாத்திகனில் போப்பாண்டவர் பதினாறாம் பெனடிக்ட் அவர்கள் புனிதர் பட்டத்தை அதிகாரபூர்வமாக வழங்கினார். இந்தியாவின் முதல் புனிதை அல்போன்ஸம்மாள்.

பலவருடங்களாக எதிர்பார்க்கப்பட்டு வந்த ஒரு நிகழ்வு இது. ஏற்கனவே அல்போன்ஸம்மாள் ஒரு புனிதராகவே கேரளத்தில் பார்க்கப்படுகிறார். சிறுவயதிலேயே எனக்குப் பழகிய ஓவியமுகம் அல்போன்ஸம்மாளுடையது. பிரார்த்தனைகள் மீது நம்பிக்கை கொண்டிருந்த பிராயத்தில் உயிர்நண்பன் வர்கீஸுடன் இணைந்து பல மெழுகுவத்திகளை நானும் ஏற்றியிருக்கிறேன்.

என் அம்மா இன்னதென்று தெரியாத கடுமையான காய்ச்சலில் மரணத்தின் விளிம்பில் கிடந்த காலத்தில் அல்போன்ஸம்மா முன் மெழுகுவர்த்தி ஏற்றி மனம் உடைந்து அழுதிருக்கிறேன். பல படங்களில் நம்மைப் பார்க்காமல் வேறெங்கோ செவி மடுத்து அமர்ந்திருக்கும் கோலம் அல்போன்ஸம்மாளுக்கு உண்டு. ஆனாலும் இன்றும் எண்ணற்ற எளிய மக்கள், பெரும்பாலும் பெண்கள், வாழ்தலின் முடிவிலா துயரத்தை அவரிடம் முறையிட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இறைவனிடம் முறையிடுவதை விட நம்மில் ஒருவராக வாழ்ந்து நாமறிந்ததையெல்லாம் அறிந்து சென்ற ஒருவர் நமது வதைகளுக்கு இன்னும் நெருக்கமானவராக இருக்கிறார் போலும். இல்லையேல் நான் ஏன் அந்த வயதில் அத்தனை தெய்வங்களையும் விட்டுவிட்டு அம்மையை நாடவேண்டும்?

காலில் பட்ட காயம் அடுத்தகட்டத்துக்குச் செல்லும் வலியுடன் நேற்று அல்போன்ஸம்மாள் பற்றிய செய்தியை வாசித்தேன். அச்செய்தி பிறரிடம் பகிர்ந்துகொள்ள முடியாத உவகை ஒன்றை இரவெல்லாம் அளித்துக் கொண்டிருந்தது. காலையில் அருமனையில் மேனகா ஸ்டுடியோ என்ற வெற்றிகரமான நிறுவனத்தை நடத்தும் வர்கீஸுக்கு ஃபோன்செய்தேன். சர்ச் வாசலில் வைத்து பேசினான். “உனக்காகவும் பிரெயர் செய்திட்டுண்டு கேட்டுதா?” காலில் அடி என்பதைச் சொல்லவில்லை, திரும்ப சர்ச்சுக்குள் நுழைந்துவிடுவான். பதினொன்றாம் தேதி இரவில் வலியுடன் அல்போன்ஸம்மாவைப்பற்றி வாசித்தது ஒரு நல்ல தொடர்பாகத் தோன்றியது. ஏனென்றால் வலியின் வழியாகவே அல்போன்ஸம்மாளை ஒருவன் புரிந்துகொள்ள முடியும்.

கேரளமாநிலம் கோட்டயம் அருகே குடமாளூர் என்ற சிறிய கிராமத்தில் அல்போன்ஸம்மாள் பிறந்த வீடு உள்ளது. 1989ல் நான் அங்கே சென்றிருக்கிறேன். பழைய கேரள பாணியில் பூமுகமும் சுற்றுப்புரையும் கொண்ட நாலுகெட்டு வீடு அது. அல்போன்ஸம்மாள் பிறந்தபோது சிறியதாக இருந்திருக்கலாம். இப்போது பெரிதாக எடுத்துக்கட்டப்பட்டிருக்கிறது. அங்கே 1910 ஆகஸ்ட் 19 ஆம் தேதி ஜோசப்பச்சன் – மறியாம்மா தம்பதிக்கு மகளாகப் பிறந்தவர் அல்போன்ஸம்மாள். நான்காவது குழந்தை. இயற்பெயர் அன்னக்குட்டி.

அல்போன்ஸம்மாளுக்கு ஒருமாதம் தாண்டுவதற்குமுன்னரே தாய் இறந்துபோனாள். சிறுவயதில் பெரிய குடும்பத்தில் புறக்கணிப்பிலும் தனிமையிலும் வாழ்ந்தது அல்போன்ஸம்மாவின் ஆளுமையை தீர்மானிக்கும் அம்சமாக இருந்திருக்கிறது.

மிக இளம்வயதிலேயே துறவு அவரை கவர்ந்திருக்கிறது. சிறுவயதில் அன்னக்குட்டி மிக அழகாக இருந்ததாகவும் ஆனால் தன்னை மானுடர் மணக்கக் கூடாதென்பதற்காக அவரே தீயில் காலைவிட்டு எரித்துக்கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. 1927 மே 7 அன்று பிரான்ஸிஸ்கன் கிளாரிஸ்ட் (FCC) சபையில் சேர்ந்தார் அல்போன்ஸம்மாள். 1928 ஆகஸ்ட் 2 ஆம் தேதி பாணாங்ஙானம் கிளாரா மடம் கோயிலில் அன்னக்குட்டி கன்னியாஸ்திரி ஆகி அல்போன்ஸா என்று பெயர் பெற்றார்.

கன்னி வாழ்க்கையில் ஒருபகுதியை அல்போன்ஸா ஆரம்பப்பள்ளி ஆசிரியையாகவே செலவிட்டிருக்கிறார். 1932 வாக்கில் வாகைக்காடு பள்ளியில் ஆசிரியராக இருந்தார். நோயுற்றிருந்த காலத்திலும் அவர் அதிகாரபூர்வமற்ற ஆசிரியையாகவே இருந்தார். அவரது மாணவர்களில் பலர் இன்றும் இருக்கிறார்கள். அல்போன்ஸாவின் உயிர்தோழியான ஆர்ப்புக்கரை தொண்ணயம்குழி கரோட்டு போங்கவனம் தரவாட்டில் லட்சுமிக்குட்டியம்மா 98 வயதில் இன்றும் உயிருடன் இருக்கிறார். சிறுவயதில் தன் தோழி தனது வீட்டிலேயே நாட்கணக்கில் தங்கி விளையாடியதையும் சேர்ந்து பள்ளிக்கூடம் சென்றதையும் நினைவுகூர்கிறார். அவரது பேட்டிகள் மலையாள இதழ்களில் வந்திருக்கின்றன.

அல்போன்ஸம்மாவின் மாணவர் ஒருவரிடம் நான் நேரில் பேசியும் இருக்கிறேன். அவரைப்பற்றிய அவர்களின் நினைவுகள் மிக ஒளிபொருந்தியவையாக இருந்திருக்கின்றன. சிறுகுழந்தைகளுக்கு சககுழந்தையாகவும் விளையாட்டுத்தோழியாகவும் அவர் இருந்திருக்கிறார். “என்னை அவர் ஐந்தாம் வகுப்பில் படிப்பித்தார். எனக்கு அவரை டீச்சராக ஞாபகமே இல்லை. நல்ல களித்தோழியாகத்தான் என் ஞாபகத்தில் இருந்தார்” என்று கோட்டயத்தில் 1988ல் நான் சந்தித்த பய்யங்கானம் ராகவன் நாயர் என்ற முதியவர் சொல்லியிருக்கிறார்.

அவரிடம் கல்விகற்ற சிறு குழந்தைகள் அவர்மேல் அளவிலாப்பிரியம் கொண்டிருந்தார்கள். அரைநூற்றாண்டு தாண்டியும் அந்த நேரடி நினைவுகள் அவர்களில் நீடித்தன. உண்மையில் ஸிஸ்டர் அல்போன்ஸாவை புனிதராக அடையாளம் கண்டவர்கள் அக்குழந்தைகளே. அவர்களில் மிகப்பெரும்பாலானவர்கள் இந்துக்கள். அக்குழந்தைகள் வழியாகத்தான் கேரளத்தில் மத எல்லை தாண்டி இந்துக்கள் நடுவேயும் அல்போன்ஸம்மாள் பெரும்புகழ் பெற்றார். இன்றும் அந்த செல்வாக்கு நீடிக்கிறது.

ஆனால் இது ஒருபக்கம். மறுபக்கம் மிகக் கடுமையான உடல் உபாதைகளால் துன்புற்றவராக இருந்தார் அல்போன்ஸம்மாள். மீண்டும் மீண்டும் அவரை மலேரியா நோய் தாக்கியது. கடுமையான வயிற்றுவலியும் மூட்டுகளில் முடக்குவாத நோயும் இருந்தது. நுரையீரல் வீக்க நோயால் கடுமையான நெஞ்சுவலியும் மூச்சுத்திணறலும் இருந்தன.

ஒருவருடம் சுய நினைவிழந்த நிலையில் இருந்திருக்கிறார்.

ஸிஸ்டர் அல்போன்ஸம்மாளின் கவிதைகளும் டைரிக்குறிப்புகளும் மலையாளத்தில் பெருந்தொகுப்பாகக் கிடைக்கின்றன. 1986, 87 களில் நான் பெரும் ஈடுபாட்டுடன் அவற்றை வாசித்திருக்கிறேன். கவித்துவம் ஏதுமில்லாத எளிய நேரடிப்பதிவுகளான அவ்வரிகள் இயற்கை அளிக்கும் அளவில்லாத உடல்வலியை ஆத்மா எதிர்கொள்ளும் விதத்தைக் காட்டும் மிகச்சிறந்த மானுட ஆவணங்கள். அக்காரணத்தாலேயே அவை மாபெரும் ஆன்மிகப்பதிவுகளும் கூட.

துன்பங்களை ஏற்றுக்கொள்வதில் அல்போன்ஸம்மாளின் மனம் பல பரிணாமங்களை அடைகிறது. முதல்கட்டத்தில் தன் பாவங்களுக்கும் குறைகளுக்குமான இறைத்தண்டனையாக அவ்வலியை அல்போன்ஸம்மாள் காண்கிறார். அவற்றுக்காக அவர் துயரம் கொள்கிறார். அவற்றின் முன் மண்டியிட்டு பிரார்த்தனைசெய்து தன்னை தூய்மைப்படுத்திக்கொள்ள முயல்கிறார். பின்னர் வலி என்பதை இறைசக்தியின் ஆணை என்று அவர் ஏற்கிறார். அதன் வழியாக தான் ஆன்மிகமான படிகளில் மேலேறுவதையும் லௌகீக வாழ்க்கையின் பல தளங்களை விட்டு விலகி நின்று மெய்மையை நோக்குவதையும் காண்கிறார்.

ஆகவே வலியை இறைவனின் பரிசு என்றே பிற்கால கவிதைகளில் குறிப்பிடுகிறார். ‘இந்த நாளில் நீ எனக்களித்த இனிய காதல் பரிசை பெற்றேன்’ என்று அவர் சொல்வது உக்கிரமான உடல்வலியை என்பதை உணரும்போது ஒரு அபாரமான மனஎழுச்சியை அடைந்ததுண்டு நான். காரணம் அன்று நானும் உடலாலும் மனதாலும் சிதிலமாகி அழிவின் விளிம்பில் நின்றிருந்தேன். ‘எனக்கான சிலுவையை எனக்குக் கொடு’ என்ற அவரது பிரார்த்தனை மிகப்புகழ்பெற்ற ஒன்று.

கடைசிக் கட்டக் கவிதைகளில் அவர் மண்ணில் மலர்கள் விரிவதைப்போல தன்னில் வலி விரிவதை உணர்கிறார். அந்த வலியின்மூலம் கிறிஸ்து அவரது ஐந்து புனிதகாயங்கள் மூலம் அறிந்த வலிக்கு மிக அருகே அவரும் சென்றுவிட்டதாக எண்ணுகிறார். கடைசிக்கட்டக் கவிதைகளில் கிறிஸ்துவிடம் அல்போன்ஸம்மாள் கொண்ட சகஜபாவனை மிக வியப்பளிப்பது. கிறிஸ்துவுக்கு அருகே சென்றமையின் களியாட்டமும் உவகையும் வெளிப்படும் கவிதைகள் கடைசியில் அவரால் எழுதப்பட்டிருந்தன.

சில கேரள இலக்கிய விமரிசகர்கள் அல்போன்ஸம்மாவின் மன அல்லல்களை மஸோக்கிய மனநிலை என்றும் கடைசியில் அவருக்கும் கிறிஸ்துவுக்கும் உருவான சமபாவனை உறவை ஒரு மனப்பிறழ்வுநிலை என்றும் விளக்க முனைந்துள்ளார்கள். அவையெல்லாம் பலவீனமான கருத்துக் கருவிகளை ஓர் உக்கிரமான அகநிலைமீது போட்டுப்பார்க்கும் முதிரா முயற்சிகள் என்று, நான் அவற்றை முன்வைத்து வாதிடும் நண்பர் ஷாஜியை மறுத்துச் சொல்லியிருக்கிறேன். (நாத்திகரான ஷாஜியிடம் விவாதிக்க லூசி்பரால் மட்டுமே முடியும். ஆனால் இருவரும் ஒரே தரப்பு.) அல்போன்ஸம்மாள் சென்றது ஒரு மன உச்சம். அதை மதத்துக்குள் வைத்தும் விளக்கலாம் வெளியே நின்றும் புரிந்துகொள்ளலாம். ஆனால் அது எளிய ஒரு வரையறைக்குள் அடங்குவதல்ல.

வலி மனிதனை உடல் மட்டுமாகச் சுருக்க முனையும் மகத்தான சக்தி. மனித ஆன்மாவுக்கு இயற்கை விடுக்கும் ஆகப்பெரிய சவாலே வலிதான். அந்த வலியின் முன் மண்டியிட்டு மன்றாடிக் கதறும் மனிதர்களையே நான் மீண்டும் மீண்டும் கண்டிருக்கிறேன். மனிதனின் விதியே அதுதான். நாம் ஒவ்வொருவரும் முதுமையில் அந்த பெரும் கதறலுடன் நம் தோல்வியை ஒப்புக்கொண்டு நம் உடலை ஒப்படைக்கப்போகிறவர்கள் மட்டுமே. சிலரே அதை வெல்கிறார்கள். மண்மீது வாழும் பலகோடி மக்களின் பிரதிநிதியாக நின்று அந்த ராட்சத வல்லமைக்கு அவர்கள் பதில் சொல்கிறார்கள். ஆகவேதான் அவர்கள் புனிதர்கள்.

'இப்போது அம்மா அடைந்த நோயையும் துக்கத்தையும் பற்றி எல்லாரும் சொல்கிறார்கள். காலையிலே குளித்து புன்னகையோடு துள்ளி வரும் அம்மாவை மட்டும்தான் நான் பார்த்திருக்கிறேன்' என்று பய்யங்கானம் ராகவன் நாயர் சொன்னார். அப்புன்னகை அவர் பெற்ற வெற்றியின் பதாகை. அதை தன் டைரியில் அல்போன்ஸம்மாள் 'வலியின் மென்மையான இசை' என்று எழுதியிருக்கிறார்.

1946 ஜூலை 28 ஆம் நாள் தன் 36 ஆம் வயதில் அல்போன்ஸம்மாள் மரணம் அடைந்தார். அப்போது அந்த மரணம் பெரிதாகப்பொருட்படுத்தப்படவில்லை. அவரது உடல் அடக்கத்துக்கு மிகச்சிலர் மட்டுமே வந்திருந்தார்கள். ஆனால் பின்னர் அவர் குழந்தைகளின் நினைவில் மறுபிறப்பு எடுத்தார். அவர்கள் அவரை மறக்கவே இல்லை. தங்கள் கனவுகளில் வந்தார் என்று காய்ச்சல் கண்ட குழந்தைகள் சொன்னார்கள். பய்யங்கானம் ராகவன் நாயர் டைஃபாய்ட் கண்டு கிடந்த இளமைநாட்களில் ஜுரக் கனவில் அல்போன்ஸம்மாள் வந்து புன்முறுவல் செய்திருக்கிறார்.

அவரது கல்லறையில் வேண்டிக்கொண்டால் தேர்வுகளில் நல்ல மதிப்பெண் கிடைப்பதாக குழந்தைகள் நம்பினார்கள். அந்த நம்பிக்கை சிலவருடங்களில் வலுப்பெற்றது. குழந்தைகளுக்கு நோய் வந்தால் பெற்றோர் அங்கே வேண்டுதல் செய்ய ஆரம்பித்தார்கள். மெல்லமெல்ல அல்போன்ஸம்மாள் மக்கள் மனதில் புனிதராக ஆனார். 1986 ல் இந்தியா வந்த போப் இரண்டாம் ஜான் பால் அல்போன்ஸம்மாவை முக்திபேறு பெற்றவராக அடையாளம் காட்டினார். இப்போது அவர் புனிதர் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

மண்ணைப்போல அனைத்தையும் தாங்கி வளத்தை மட்டுமே அளிக்கும் இந்தியப்பெண்மையின் சித்திரத்தை நம் இலக்கியங்கள் மீண்டும் வரைந்து காட்டுகின்றன. 'சர்வம்சஹை' என்று சீதையை வருணிக்கும் வான்மீகி அவளை மண்ணின் மகளாகவே காட்டுகிறார். கம்பன் அவளுக்கு 'புவி' என்றே பெயர் சொல்கிறான். அல்போன்ஸம்மாள் இந்தியப்பெண்மையின் அலகிலாப் பொறுமைக்கும் கருணைக்கும் இன்னொரு மகத்தான சான்று.

1. 3. விவிலியம், புதிய மொழியாக்கம்

இந்திய ஞானமரபை பொறுத்தவரை பைபிளின் மொழியாக்கம் ஒரு புதிய பாய்ச்சல் என்றுதான் சொல்ல வேண்டும். பைபிள் இந்திய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டபோது ஒரு செறிவான, தூய மொழியாக்கம் என்ற நோக்குடன் செய்யப்படவில்லை. மாறாக எளிய, அடித்தட்டு மக்களுக்கும் அம்மொழி புரிய வேண்டும் என்ற நோக்கத்துடன் மொழியாக்கம் செய்யப்பட்டது. இந்திய மொழிகளில் ஒரு மதத்தின் ஆதார நூல் கல்வியறிவில்லா ஒருவரே நேரிடையாக வாசித்துப் பொருள்கொள்ளும்படி வெளிவந்தது அதுவே முதல்முறை.

அந்தக்கருத்து மார்ட்டின் லூதர் கிங்கின் மொழியாக்கக் கொள்கையை ஒட்டியது. அவர் தன்னுடைய பைபிள் மொழியாக்கம் ‘சந்தை மொழி’யில் இருந்தாகவேண்டும் என்று எண்ணினார். ஏனென்றால் சந்தைகளில்தான் பைபிள் அதிகமும் பிரசாரம் செய்யப்பட்டது. ஆரம்பகால தமிழகத்துக் கிறித்தவச் செய்தியாளர்கள் பெரும்பாலும் டச்சு மிஷனைச் சேர்ந்தவர்கள். அவர்களில் அதிகமானோர் ஜெர்மனி, இத்தாலி தேசத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களிடம் மார்ட்டின் லூதர் கிங் அழுத்தமான பாதிப்பைச் செலுத்தினார்.

உதாரணமாக, ஆரம்பகால கிறித்தவச் செய்தியாளர்களில் முக்கியமானவரான இரேனியஸ் மார்ட்டின் லூதர் கிங்கை மேற்கோள் காட்டி பைபிளை வரிக்கு வரி மொழியாக்கம் செய்ய வேண்டிய தேவைகூட இல்லை என்று சொல்லி மிக எளிய பேச்சுவழக்கு பைபிள் மொழியாக்கம் ஒன்றைச் செய்திருக்கிறார். இவரது கல்லறை திருநெல்வேலியில் உள்ளது. அந்தத் தெருவைப்பற்றி ‘ரெயினீஸ் அய்யர் தெரு’ என்று வண்ணநிலவன் ஒரு நாவல் எழுதியிருக்கிறார்.

பைபிள் மொழியாக்கங்கள் பல உண்டு. அனைத்திலுமே இந்த அடித்தட்டு மொழி என்ற கோட்பாடு செயல்பட்டுள்ளது. இலங்கையில் செய்யப்பட்ட மொழியாக்கமே இன்றுள்ள பரவலான பைபிள் வடிவமாக உள்ளது. இதன் மொழியாக்கத்தில் ஆறுமுக நாவலரும் பங்கேற்றுள்ளார். தமிழில் பைபிள் மொழியாக்கம் செய்யப்பட்ட வரலாற்றை சரோஜினி பாக்கியமுத்து எழுதிய ‘விவிலியமும் தமிழும்’ என்ற நூலில் காணலாம்.

பழைய பைபிளின் நடை பேச்சுவழக்கில் அமைந்திருந்தபோதிலும்கூட நூற்றாண்டு தாண்டியபோது அது பழைமையும் அன்னியத்தன்மையும் கொண்டதாக மாறியது. இதற்கான காரணம் தமிழில் உருவான மொழிமறுமலர்ச்சியே. பைபிள் மொழியாக்கம் செய்யப்பட்ட காலம் தமிழில் உரைநடை உருவாகி வந்துகொண்டிருந்த தொடக்க கட்டம். சொற்றொடர் அமைப்புகள் செய்யுளில் இருந்து முழுக்க விலகாத தன்மையுடன் இருந்தன. உரைநடைக்கான தனி இலக்கணம்கூட உருவாகவில்லை. அவை படிப்படியாக உருவாவதற்கு செய்தி மொழியாக்கங்களும் வெள்ளக்கால் சுப்ரமணிய முதலியார், ஆறுமுக நாவலர் போன்றவர்களின் முயற்சிகள் உதவின.

எந்த ஒரு மொழியிலும் முன்னகர்வு என்பது தீவிரமான இலக்கியப்படைப்பாளிகளினாலேயே நிகழமுடியும். தமிழைப்பொறுத்தவரை பாரதியே நவீன உரைநடையின்

திருப்புமுனைப்புள்ளி. நவீன உரைநடை உருவாவதற்கான மூன்று அடிப்படைகளில் பாரதி முன்னோடியாக வழிகாட்டினார். ஒன்று, படைப்பூக்கத்துடன் புதிய வகை சொற்றொடர்களை உருவாக்குதல். இரண்டு, புதிய கலைச்சொற்களை தமிழில் உருவாக்குதல். மூன்று, செய்தி, சட்டம், அரசியல் எல்லா துறைகளுக்கும் மொழியை பயன்படுத்த முனைதல். அதன்பிறகுதான் நவீன உரைநடை உருவாகி இன்றுள்ள வளர்ச்சியை அடைந்தது.

பைபிள் அக்கால மக்கள் மொழியில் அமைந்தது. அக்கால பண்டித மொழி மட்டுமல்ல மக்கள்மொழியும் சமஸ்கிருதம் மேலோங்கியதாகவே இருந்தது. பல சமஸ்கிருதச் சொற்கள் ஒலித்திரிபும் மொழித்திரிபும் கொண்டு புழக்கத்தில் இருந்தன. இப்போதும் பிரபலமான பைபிள் அந்த மொழியில்தான் உள்ளது. அக்காலத்தைய 'மக்களிலக்கிய'மான மதன காமராஜன் கதை, பட்டிவிக்ரமாதித்யன் கதை, வினோத ரஸ மஞ்சரி போன்றவையும் அதே மொழியில்தான் உள்ளன. ஆனால் அவையெல்லாம் இப்போது வழக்கொழிந்துவிட்டன. அக்கால மொழியில் இன்றும் புழக்கத்திலிருக்கும் ஒரே நூல் பைபிளே. ஆகவே அந்த மொழி பைபிள் மொழி என்றே சிலரால் நம்பப்படுகிறது. அந்தப் பழமையை ஒருவகைக் கவர்ச்சியாகக் காண்பவர்கள் உண்டு.

சாதாரணக் கிறித்தவர்களைப் பொறுத்தவரை அந்த மொழி பைபிளுக்கே உரிய தனிமொழி, ஆண்டவனின் மொழி. அது மொழியாக்கம்தான் என்ற எண்ணம்கூட சாதாரண கிறித்தவர்களிடம் இல்லை. அதன் விநோதமான சொல்லாட்சிகள் அவர்களுக்கு அன்றாட வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீகத்தன்மையுடன் ஒலிக்கின்றன. உதாரணமாக, ஆணை என்ற சொல்லானது அந்த பைபிளில் கல்பனை என்றே வரும். வாக்குறுதி என்பது வாக்குதத்தம் ஆக இருக்கும்.

ஆனால் இப்படியே சென்றால் காலப்போக்கில் பைபிள் சாதாரணமாக வாசிக்க முடியாத ஒன்றாக, பைபிள் பண்டிதர்களால் மட்டுமே பொருள்புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றாக ஆகிவிடும் என்ற எண்ணம் பரவலாக உருவாகியது. இப்போதே முப்பது வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் பைபிளை புரிந்துகொள்வது கடினமாக இருக்கிறது. 'உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக' என்ற வசனத்தில் கனம் என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்று ஓர் இளம் கிறித்தவ நண்பரிடம் கேட்டேன். பெற்றோரின் அழுத்தத்துக்கு பணிந்து நடக்கவேண்டும் என்று பொருள் சொன்னார்.

ஆகவே பைபிளுக்கு மீண்டும் ஒரு மொழியாக்கம் தேவை என்ற எண்ணம் ஏற்பட்டது. விவிலிய சங்கங்களின் கூட்டமைப்பு (United Bible Societies) மற்றும் வத்திக்கான் கிறித்தவ ஒன்றிப்புச் செயலகமும் (Vatican Secretariat of Christian unity) இணைந்து 1968ல் ஒரு பொது பைபிள் தேவை என உணர்ந்து ஓர் கொள்கை முடிவை வெளியிட்டன. அதன் அடிப்படையில் 1972ல் தமிழில் ஒரு பொதுவான புதிய பைபிள் மொழிபெயர்ப்புப்பணி தொடங்கியது.

1995ல் இந்த பைபிளின் முதல் பதிப்பு வெளியாகி இதுவரை இருபது பதிப்புகள் வெளியாகியிருக்கின்றன. சென்ற இருபது வருடகாலத்தில் தமிழில் நிகழ்ந்த பிரம்மாண்டமான தமிழ்ச்சாதனைகளில் ஒன்று என்று

இந்த மொழியாக்கத்தை ஐயமில்லாது சொல்லலாம். அனைத்துத் தரப்பினரும் ஒரு பேரிலக்கியத்தைப் படிக்கும் மன எழுச்சியுடன் வாசிக்கத்தக்க அற்புதமான நூல் இது. தமிழ் மொழியின் அழகும் நுட்பங்களும் தொடர்ச்சியாக வெளிப்பட்டுக்கொண்டே இருக்கின்றன இந்த நூலில். அத்துடன் இது பைபிள் சார்ந்த விரிவான ஆய்வின் வெளிப்பாடும்கூட.

மொழியாக்கத்துக்கு மேற்கொண்ட சில அடிப்படைக் கோட்பாடுகளைப்பற்றி நூல்முன்னுரை குறிப்பிடுகிறது. ஒன்று, இது வரையிலான மொழியாக்கங்கள் கிரேக்க ஆங்கில எபிரேய மொழிகளில் உள்ள பைபிள்களில் இருந்து மாறி மாறி மொழியாக்கம் செய்யப்பட்டிருந்தன. இந்நூலில் பழைய ஏற்பாடு எபிரேய பாடமான பிபிலியா எபிராயிக்கா நூலையும் புதிய ஏற்பாடு விவிலிய சங்கங்களின் கூட்டமைப்பு வெளியிட்ட கிரேக்க பாடத்தையும் மூலநூலாகக் கொண்டு மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. விரிவான பாடவேறுபாட்டுக் குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

இரண்டு, இந்நூலின் மொழி திசைச்சொற்களையும் கடினமான சொற்களையும் கலப்புச் சொற்களையும் தவிர்த்து இயல்பான எளிய தூய தமிழில் ஆக்கப்பட்டிருக்கிறது. கலைச்சொற்களும் பெயர் உச்சரிப்புகளும் மூலபாடங்களை ஒட்டி, அதற்கென அமைக்கப்பட்ட நிபுணர்குழுவினரின் ஆய்வுக்குப் பின்னர், உருவாக்கப்பட்டிருக்கின்றன.

மூன்றாவதாக, முந்தைய மொழியாக்கங்களில் உள்ள பல சொல்லாட்சிகள் இன்றுள்ள பொதுவான நாகரீகமுறைகளுக்கு பொருந்தாமல் இருப்பதனால் அவை மாற்றப்பட்டுள்ளன. உதாரணமாக குருடன் என்ற சொல்லாட்சி பார்வையற்றோர் என்று மாற்றப்பட்டுள்ளது. பெரும்பாலான கூற்றுக்கள் ஆண்களை முன்னிலைப்படுத்தியவையாக இருந்தவை மாற்றப்பட்டு இருபாலருக்கும் உரித்தானவையாக ஆக்கப்பட்டுள்ளன. தமிழில் உள்ள சிறப்பியல்பான மரியாதைப் பன்மை பெரும்பாலான மனிதர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இறைத்திட்டத்துக்கு எதிரானவர்களைக் குறிக்கவும், பழித்துரைக்கப்படும்போதும், மிகநெருக்கமானவர்களைச் சொல்லும்போதும் மட்டுமே ஒருமைவிகுதி உள்ளது.

இந்த பைபிள் இவ்வாறு ஆரம்பமாகிறது 'தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தபோது மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின்மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரள்மீது கடவுளின் ஆவி அசைந்தாடிக்கொண்டிருந்தது. அப்போது கடவுள் ஒளி தோன்றுக என்றார். ஒளி தோன்றிற்று.'

ஆதியாகமம் என்று முதலில் அழைக்கப்பட்ட முதல் அத்தியாயம் இம்மொழியாக்கத்தில் 'தொடக்கநூல்' என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல யாத்திராகமம் 'விடுதலைப்பயணம்' என்றும் எண்ணாகமம் 'எண்ணிக்கை' என்றும் உபாகமம் 'இணைச்சட்டம்' என்றும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

கிறித்தவர்களின் முக்கியமான சொல்லான பரலோகராஜ்யம் என்பது 'விண்ணரசு' என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. பெரும்பாலான மொழிவுகள் மாற்றமடைந்துள்ளன. 'வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே

நீங்கள் என்னிடம் வாருங்கள்' என்ற மொழிவு 'பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' என்று ஆகியிருக்கிறது.

பிரசங்கம் என்பது சொற்பொழிவு அல்லது பொழிவு ஆக மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. நற்செய்தி (சுவிசேஷம்) நிலைவாழ்வு, மறைநூல், முன்னறிவிப்பு (தீர்க்கதரிசனம்) போன்ற ஏராளமான தமிழ்ச்சொற்கள் பயின்று வருகின்றன. ஆனால் சவால், சபித்தல் போன்ற பிறமொழிச்சொற்களும் சில இடங்களில் உள்ளன. அவை அடுத்த பதிப்புகளில் மாற்றப்படக்கூடும்.

இந்நூலின் முக்கியமான இன்னொரு சிறப்புகூறு, இது ஓர் ஆய்வுநூலாகவும் உள்ளது என்பதே. இதில் உள்ள முன்குறிப்புகளும் ஆய்வுக்குறிப்புகளும் பைபிளை ஆண்டவனின் நேரடி வார்த்தை என்று கண்மூடித்தனமாக நம்புகிறவர்களுக்கு சீற்றம் கொடுப்பவையாக உள்ளன. உதாரணமாக, மத்தேயும் எழுதிய நற்செய்திக்கான முன்னுரையில் 'கிரேக்க மொழிபேசும் யூதர்கள் நிறைந்த அந்தியோக்கியா போன்ற நகரங்களில் யூதக் கிறித்தவர்களும் பிற இனத்துக் கிறித்தவர்களும் திருச்சபையில் உறுப்பினர்களாக இருந்தனர். இவர்களுக்குள் பல சிக்கல்கள் இருந்தன. இது தவிர யூதக் கிறித்தவர்கள் மற்ற யூதர்களால் துன்புறுத்தப்பட்ட நிலையில் மனத்தளர்ச்சி அடைந்து இருந்தனர். இச்சிக்கல்களுக்கு தீர்வுகாண இந்நூல் எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது' என்ற கூற்று ஒரு மரபான கிறித்தவரை கொந்தளிக்க வைத்ததைக் கண்டேன்.

எல்லா கிறித்தவ சபைகளில் இருந்தும் பிரதிநிதிகள் வரவழைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட மொழியாக்கம் இது என்றாலும் இப்போது கத்தோலிக்கர்களில் ஒரு சாரார் அன்றி பிறர் இந்த பைபிளை ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. குறிப்பாக தென்னிந்தியத் திருச்சபையினர் இந்நூலை முழுவேகத்துடன் நிராகரிக்கிறார்கள். கடவுளின் சொற்கள் மாற்றப்பட்டுவிட்டதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். பழகிப்போன மொழியை விட்டு நீங்கமுடியாத சிக்கலே அவர்களிடம் உள்ளது என்பதே உண்மையாகும்.

ஆனால் இந்நூல் காலப்போக்கில் தன் இடத்தைக் கண்டுகொள்ளும் என்றே தோன்றுகிறது. தொன்மையான செவ்வியல் நூல்களுக்குரிய எளிமையான கவித்துவம் இந்த மொழியாக்கத்திலேயே சிறப்பாக வெளிவந்திருக்கிறது.

> கடலின் ஊற்றுவரை
>
> நீ போனதுண்டோ?
>
> ஆழியின் அடியில்
>
> நீ உலவினதுண்டோ?
>
> சாவின் வாயில்கள்
>
> உனக்குக் காட்டப்பட்டனவோ?
>
> இருள் உலகின் கதவுகளைக்
>
> கண்டதுண்டோ நீ?

அவனியின் நிலப்பரப்பை
நீ ஆய்ந்தறிந்ததுண்டோ?
அறிவிப்பாய் அதிலுள்ள
அனைத்தையும் அறிந்திருந்தால்!
ஒளி உறைவிடத்துக்கு
வழி எதுவோ?
இருள் இருக்கும்
இருப்பிடம் எங்கேயோ?
அதன் எல்லைக்கு அதனை
அழைத்துப்போவாயோ?
அதன் உறைவிடத்துக்கு
நேர்வழி அறிவாயோ?
ஆம், அறிவாய்!
அன்றே நீ பிறந்தவனன்றோ?
ஆமாம், ஆண்டுகளும்
உனக்கு அதிகமன்றோ?

(யோபு 38)

போன்ற வரிகளின் வழியாக செல்லும் அனுபவமென்பது மெய்ஞானம் மொழியச் சந்திக்கும் தீவிரமான கவித்துவத்தை நமக்குக் காட்டித்தருவதாகும்.

(திரு விவிலியம், Tamil Nadu Biblical Catechetical & Liturgical Centre, Tindivanam, India 604002)

1. 4. அன்னையர் இருவர்

மேரி மக்தலீன் குறித்து தேவாலயங்கள் வழியாக தெரிந்துகொள்ள முடிவதில்லை. அவளைப்பற்றி மதகுருக்கள் மேடையில் சொல்ல முடியாது. ஆனால் எனக்கு அவளைப்பற்றிச் சொன்னவர் ஒரு மதகுரு. எங்களூரின் கத்தோலிக்க தேவாலயத்தில் அவர் சிறிதுகாலம் பணியாற்றினார். அந்த ஆலயத்தின் அத்தனை மதச்சடங்குகளுக்கும் அப்பால் நிற்பவராக தோன்றினார் அவர். கீழே லௌகீக லாபங்களுக்காக காணிக்கைகளுடன் வந்திருக்கும் மக்களுக்கு மேலே வானைத்தொட எழுந்து நிற்கும் சிலுவையின் தூரமும் தனிமையும் அவருக்கிருந்தது.

அவர் பெயரை எழுதி அந்த தனிமையைக் கலைக்க விரும்பவில்லை என்றாலும் என்னுடைய 'பூமியின் முத்திரைகள்' என்ற குறுநாவலில் அவரது சித்திரத்தை உருவாக்கி எனக்காக நிரந்தரப்படுத்திக்கொண்டேன். அவரது அறைக்கு சிலசமயம் நான் செல்வதுண்டு. பைபிள் எப்போதும் அவரது மேஜைமேலிருக்கும் என்றாலும் அதை அவர் வாசித்து நான் கண்டதில்லை. பஷீர், தகழி, தேவ், காரூர் என இலக்கியநூல்கள் மட்டும்தான் இருக்கும். வாஷ்பேசினில் நீர் நிறைத்து பிராந்திப்புட்டியைப் போட்டிருப்பார். துணியாலான சாய்வுநாற்காலியில் வெள்ளை பனியனுடன் அமர்ந்து படித்துக்கொண்டே இருப்பார்.

தகழியின் 'பதிதபங்கஜம்' என்ற நாவலைப் படித்துக்கொண்டிருந்தவர் தன்னிச்சையாக மேரி மக்தலீனைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். அவள் கிறிஸ்துவின் தோழி என்றார். அந்தக்கூற்று எனக்கு முதலில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவள் விபச்சாரி அல்லவா என்றேன். "அதைப்பற்றி என்ன? அவள் கிறிஸ்துவின் தோழி. கிறிஸ்துவை அவள்தான் கடைசிக்கணம் வரை பின் தொடர்ந்து வந்தாள். அவர் உயிர்த்தெழுவதைப் பார்க்கும் வரம் அவளுக்கு மட்டுமே அளிக்கப்பட்டது" என்றார்.

"மேரி மக்தலீன் அவனை நிழல்போலப் பின்தொடர்ந்தாள். அவன் செல்லுமிடங்களில் எல்லாம் அவளும் சென்றாள். அவன் சொன்ன சொற்களை எல்லாம் அவளும் கேட்டாள். அவனை சிலுவையில் அறையும்போதும் கூட இருந்தாள். அவன் விண்ணகம் செல்லும்போது அவனைக் கண்டாள்" என்றார் அவர்.

"கிறிஸ்துவைப் பின்தொடர்வது எளிய விஷயமல்ல. அது உடைகளில் தீ பற்றும் அனுபவம் போன்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவளைத்தவிர பிறரால் அவனுடைய உக்கிரத்தை தாங்க முடியவில்லை. அதற்குக் காரணம் அவளுடைய காதல். அளவிலாத காதலால் மேரி கிறிஸ்துவின் தெய்வீகத்தை முழுக்க தானும் உள்வாங்கிக் கொண்டாள். காதலின் சுயசமர்ப்பணம் எத்தனை மகத்தானது என்பதற்கு அவளே ஆதாரம். உலகம் முழுக்க ஞானியரையும் தெய்வமகன்களையும் காதல்கொண்ட பெண்களன்றி பிற எவருமே கடைசிவரை பின்தொடர்ந்து சென்றதில்லை..."

நான் பின்பு பலமுறை அவரது சொற்களை நினைத்துக்கொண்டிருக்கிறேன். என்னுடைய கல்லூரி நாட்களில் கிறிஸ்துவை பார்க்கும்போது அவருக்கு ஒரு தோழி இருந்திருக்கிறாள்

என்ற எண்ணமே இன்னும் நெருக்கமானவராக அவரை ஆக்கியது. அவருடன் தனிமையில் இருந்தால் முகம் பார்த்துப் புன்னகை செய்ய முடியும் என்பது போல. பின்னர் நிகாஸ் கஸந்த் ஸகீஸின் 'கிறிஸ்துவின் கடைசி சபலம்' நாவலில் மேரி மக்தலீனை மிக நெருங்கிக் கண்டறிந்தேன். அவள் வழியாக புதிய ஒரு கிறிஸ்துவை உணர்ந்தேன்.

கிறிஸ்துவின் வாழ்க்கையின் இருபெண்களுக்கும் மேரி என்றே பொதுப்பெயர் என்பது என்னை பலசமயம் விசித்திரமான முறையில் ஆழ்ந்துபோகச் செய்திருக்கிறது. அதில் மர்மமான ஏதோ ஒன்று இருப்பது போல. எங்களூரில் மக்தலீனாவுக்குச் சிலைகள் இல்லை. அவள் ஓவியங்களை நான் கண்டதில்லை. ஆகவே இளமையான மேரியின் முகமே மக்தலீனாவின் முகமென என் நெஞ்சில் வடிவம் கொண்டது. இன்று இரு முகங்களும் மனத்தில் ஒன்றுபோலத்தான் தெரிகின்றன. ஒருவரை விலக்கி இன்னொருவரை எண்ண முடிவதில்லை. கஸந்த் ஸகீஸின் மகத்தான நாவல் உண்மையில் இருபெண்களுக்கும் ஒரு தேவமகனுக்கும் இடையேயான உறவின் கதை.

மேரி மக்தலீன் கிறிஸ்துவின் சீடர்களில் முதலாமிடத்தில் இருப்பவள் என்று நூல்கள் சொல்கின்றன. எல்லா கிறித்தவ குழுக்களிலும் அவள் புனிதவதிதான். ஆனால் அவளுடைய இடம் கிறித்தவம் ஒருமைவடிவம் கொள்ளும்தோறும் குறைந்தது. ஆதிக்கிறித்தவத்தில் கிறிஸ்துவின் தோழியாக, அவர் சொற்களை முற்றுணர்ந்த முதல் ஞானியாக அவள் வழிபடப்பட்டாள். அன்று கிறித்தவம் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரே மதமாக இருக்கவில்லை. கிறிஸ்துவின் சொற்கள் ஒற்றை அர்த்தத்தில் முறைப்படுத்தப்படவுமில்லை. ஏன் கிறிஸ்து ஞானியாக கருதப்பட்டாரே ஒழிய கடவுளின் ஒரே குமாரராக எண்ணப்படவில்லை.

ஞானவாத கிறித்தவம் என்று சொல்லப்பட்ட அந்த மரபுகள் கி.பி. 388 முதல் கத்தோலிக்க அதிபர் பாப்பரசரின் ஆணைப்படி கடுமையான ஒடுக்குதலுக்கு ஆளாகி கிட்டத்தட்ட பூமியின் மீதிருந்தே ஒடுக்கப்பட்டன. பைபிளின் பல பகுதிகள் புறனடையாகக் கருதப்பட்டு விலக்கப்பட்டு புதிய ஏற்பாடு உருவாகி வந்தபோது மக்தலீன் வெறும் ஒரு பெயராக பைபிளில் உருவம் கொண்டாள். நான்கு மைய நற்செய்திகளிலும் மேரி மக்தலீன் குறித்து ஒரு சில வரிகளே உள்ளன.

ஆனால் ஞானவாத கிறித்தவத்தில் மேரி பேரொளியுடன் திகழும் ஞானவதி. அவளுடைய சொற்களே உண்மையில் கிறிஸ்துவின் ஞானத்தைப் பதிவுசெய்தன. மேரி மக்தலீன் எழுதிய நற்செய்தி கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரைகூட புழக்கத்தில் இருந்திருக்கிறது. 1896ல் செங்கடல் தாள்கள் என்று சொல்லப்படும் பாப்பிரஸ் ஆவணங்கள் கிடைத்தன. அவற்றில் ஒன்று மேரி எழுதிய நற்செய்தி. அதன்பின்னர் 1945 ல் எகிப்தில் நாக் ஹமாதி என்ற இடத்தில் புதைபொருட்களாக தாமஸின் நற்செய்தி உள்ளிட்ட ஆவணங்கள் கிடைத்தன. இவை கி.பி. இரண்டு, மூன்றாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவையெல்லாம் மிகச்சிதிலமடைந்த வகையில் ஓரளவே கிடைக்கின்றன.

இந்த அழிக்கப்பட்ட பைபிள் பகுதிகள் ஒன்றுடன் ஒன்று சரிவரப் பொருந்திப்போகின்றன. இவை கிறிஸ்துவை மாபெரும் ஞானகுருவாக

எண்ணிய ஒரு கிறித்தவ மரபு இருந்திருப்பதற்கான சான்றுகள். இந்த நற்செய்திகளில் வரும் கிறிஸ்து மண்ணில் செய்யும் நன்மைகளுக்கு விண்ணில் ஊதியம் அளிக்கும் கடவுள் அல்ல. விண்ணகத்தில் மீட்பு உள்ளது என்று சொல்லும் மதநிறுவனரும் அல்ல. வாழ்வாங்கு வாழ்ந்தால் மண்ணிலேயே இறைவனின் உலகம் அமையும் என்று சொல்லக்கூடிய புரட்சியாளர். அந்த விண்ணகத்தை மண்ணில் அமைக்கும் பொறுப்பு ஒவ்வொரு மனிதருக்கும் உண்டு என்று சொன்னவர்.

ஒருபோதும் எந்த ஓர் அமைப்பாலும் உள்ளிழுத்துக்கொள்ள முடியாத உக்கிரத்துடன் இருக்கிறார் ஞானவாத கிறிஸ்து. அமைப்புகளும் அரசுகளும் வைக்கோல்போர்கள், அவர் அனல். அவரை கடவுளாக்கி, எதிர்பார்ப்புகளை வானுக்குத் திருப்பி, நம்பிக்கையை உரிமைக்கான வாளாக ஆக்குவதற்குப் பதில் கீழ்ப்படிதலுக்கான பத்திரமாக ஆக்கி, கான்ஸ்தண்டீனின் ரோமப்பேரரசு இன்றைய கிறித்தவத்தை உருவாக்கியது. கிறிஸ்துவின் அணையாத கனலை ஆவணமாக்கிய மேரி மக்தலீன் பின்னகர்ந்தாள். பின்னர் கிறிஸ்து இறைமகனாக, மானுடர் அண்டமுடியாத தூய வடிவமாக ஆனபோது மக்தலீன் விபச்சாரியானாள். வரலாற்றில் தன் சொற்களுடன் புதைந்து மறைந்தாள்.

கிறிஸ்துவின் ஞானத்தை ‘பிரபஞ்சத்தின் பெண்மைஞானம்’ என்று சொல்லலாம். கிருஷ்ணனின், புத்தரின் மெய்ஞானம் பிரபஞ்சத்தை ஞானத்தால் வென்று மூடும் ஆண்மைத்தன்மை கொண்டது. வீரியத்தால் வேகத்தால் ஆனது. மூளைத்திட்பம் கொண்டவர்களால் மட்டுமே அணுகத்தக்கது. கண்ணனின் சொற்களில் வீரமே முதல் விழுமியம். அனைத்தும் தொடங்குவது அங்கிருந்தே. அச்சமின்மையே ஞானத்தின் ஆரம்பம் என்றார் புத்தர். புறத்துக்கும் அகத்துக்கும் அஞ்சாமை. ஒருபோதும் பின்னகராத விழிப்புணர்வு. ஆகவேதான் அவர் அஜிதர் எனப்பட்டார்.

நேர் மாறாக கிறிஸ்துவின் மெய்ஞானம் கீழ்ப்படிதலை முதல் விழுமியமாக வைக்கிறது. மகத்துவத்திற்கு முன்னால் அகங்காரத்தை கழற்றி வைத்து மண்டியிடும் எளிமையில் இருந்து ஆரம்பிக்கிறது அது. களங்கமின்மையையும் கருணையையும் ஆயுதங்களாகக் கொண்டது. மனம்கனியும் வல்லமை கொண்ட எவருக்கும் உரியது அது. பாவத்திற்கு அஞ்சுதலை, துயரங்களைப் பொறுத்துக்கொள்ளுதலை முன்வைக்கிறது. அது பெண்மைத்தன்மை கொண்ட ஞானம்.

ஆகவேதான் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் கடவுளின் மனையாட்டிகளாக தங்களை நிறுத்திக்கொண்டார்கள். சகித்துக்கொள்ளுதல் மூலம் அடையும் வெற்றியில், கசப்புகளை உள் வாங்குவதன் மூலம் அடையும் இனிமையில், சோதனைகள் மூலம் பெறும் தூய்மையில் நம்பிக்கை கொண்டார்கள். உலகமெங்கும் ஆறுதல் அளிக்கும் சொற்களுடன், இளைப்பாற்றும் தோள்களுடன், கண்ணீர் படர்ந்த பிரார்த்தனைகளுடன் அவன் செய்தியைக் கொண்டு சென்றார்கள்.

அவன் வாழ்ந்தபோது அச்செய்தியை பெண்மனம் புரிந்துகொண்ட அளவுக்கு வேறெவராவது புரிந்துகொண்டிருப்பார்களா என்ன? மேரி மக்தலீன் மீது பிற சீடர்கள் காழ்ப்பு கொண்டிருந்தார்கள் என்று ஞானவாத நூல்கள் குறிப்பிடுகின்றன. அவளை கிறிஸ்து நெருங்கிய அளவுக்கு

பிறரை நெருங்கவில்லை. ஏனென்றால் அவர்கள் ஆண் மகன்கள். அவரோ அவர்களிடம் திரும்பவும் குழந்தைகளாகும்படி அறிவுறுத்தினார்.

‘மிக அழகான விண்மீனை விட அழகானவள்’ என்று வேர்ட்ஸ்வர்த் கன்னிமரியைச் சொன்னார். எளிய யூதகுலப்பெண், வெயிலிலும் மணற்புயலிலும் அடிபட்டவள், எப்படி பேரழகுடன் இருந்திருக்க முடியும்? தன் தவத்தாலும் பொறுமையாலும் மனுக்குலத்துக்கு அவள் அளித்த பெரும் தியாகத்தாலும் அந்த பேரழகை அவள் பெற்றாள். கவிஞனின் கண்கள் மட்டுமே தொட்டெழுப்பும் அழகு அது.

கிறித்தவ நூல்களில் மரியன்னை மீண்டும் மீண்டும் நட்சத்திரமாக உருவகிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கடல்களின் விண்மீன் என்று அவளைச் சொன்னார்கள். வழிகாட்டும் விண்மீன் என கடற்பயணங்களில் அடையாளம் கண்டார்கள். கிறித்தவ மரபின் தொடக்கத்தில் மரியன்னை கிறிஸ்துவை அவரது ஞானத்துடன் பெற்றுக்கொண்ட தூயவளாக வழிபடப்பட்டிருந்தாள். பின்னர் அவளுடைய இடம் மெல்ல மெல்ல பைபிளில் குறைந்தது. புதிய ஏற்பாட்டு பைபிளில் இருந்து நாம் பெறுவது மேரியின் வெறும் ஒரு கோட்டுச்சித்திரம் மட்டுமே.

ஆனால் கிறித்தவத்தைப் பின்பற்றிய கோடிக்கணக்கானவர்களில் அவள் நிலைமாறா விண்மீன் என நின்றமையால் பின்னர் திருச்சபை அவளை அங்கீகரித்தது. மனிதகுமாரனைக் கையில் ஏந்திய அன்னை உலகமெங்கும் வழிபடு சின்னமாக ஆனாள். ஒருவேளை உலகில் மிக அதிகமான பேர் வழிபடுவது கிறிஸ்துவை விட அன்னையைத்தான் என்று தோன்றுகிறது.

ஆரம்பகால பைபிளில் மரியன்னை எந்த வகையில் இருந்தாள் என்பதற்கான தடையங்கள் குர் ஆனில் உள்ளன. குர் ஆனின் பத்தொன்பதாம் அத்தியாயத்தில் ஈசா நபியின் பிறப்பை வருணிக்கும்போது பெண்களுக்கு முதல்வி என மரியத்தை நபியின் சொற்கள் சிறப்பிக்கின்றன. இறைபக்தியால் தன்னுடைய குடும்பத்தைவிட்டு நோன்பு நோற்றபடி தனித்து வசிக்கும் மரியத்தை இறைவனின் தூதனாகிய மலக்கு வந்து சந்திக்கிறது. இறைமகன் பிறக்கப்போவதை அறிவிக்கிறது. தான் கன்னி என்று மரியம் சொல்கிறாள். கன்னியின் வயிற்றிலேயே அவன் பிறப்பான் என்று மலக்கு சொல்லி விலகுகிறது.

மரியம் மக்களிடமிருந்து ஏளனத்தையும் வசைகளையும் எதிர்கொள்ள நேர்கிறது என்று குர் ஆன் சித்தரிக்கிறது. அப்போது நிலைமாறாத விசுவாசத்துடன் ‘எனக்கு வேதம் அருளப்பட்டுள்ளது’ என்று அவள் சொல்கிறாள். சமூகம் அளித்த வசைகளையும் ஒதுக்குதலையும் அரசின் வேட்டையையும் தன் கண்ணீர் நனைந்த பிரார்த்தனையால் அவள் வென்று தாண்டிச்செல்கிறாள்.

ஜெருசலேம் தேவாலயத்திற்கு மகனுடன் செல்லும் மேரியிடமிருந்து குழந்தையை வாங்கி முத்தமிட்டு இறைவனின் பெருங்கருணையை வாழ்த்திய சிமியோன் தீர்க்கதரிசி சொன்னார் ‘…மரியமே உன் இதயம் வழியாக ஒரு வாள் துளைத்துச் செல்லும்.’ குரூரமான சொற்கள். ஆனால் அந்தக்குழந்தை பிறந்ததுமே அன்னைக்கு உள்ளூரத் தெரிந்திருக்கும், அதுதான் அந்த பொன்னாலான வாள் என்று. அந்த கணத்தை நோக்கி அவள்

வாழ்நாள் முழுக்கச் சென்றுகொண்டிருந்தாள்.

கிறிஸ்துவுக்காக மேரி அலைந்துகொண்டே இருந்தாள். கர்ப்பிணியாக இருந்தபோது பெத்லகேமுக்குச் சென்றாள். பிறகு எகிப்துக்கு தப்பி ஓடினாள். வேட்டையாடிய எரோது மன்னன் இறந்தபின்னர் அவள் மீண்டும் இஸ்ரேலுக்கு திரும்பிவந்தாள். பிறகு கலீலியில் நசரேத்துக்குச் செல்கிறாள். பின்னர் யேசு சென்ற இடங்களுக்குச் சென்றாள். கல்வாரிமலை வரை அப்பயணம் நீடித்தது.

கிறிஸ்துவின் வாழ்க்கை முழுக்க அவரை மரியத்தின் பிரக்ஞை பின் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தது. ஒரு கணம்கூட அவனை விட்டு அவள் ஆத்மா விலகியிருக்காது. பைபிளின் குறைவான சொற்களிலேயே மீண்டும் மீண்டும் தன் மகனிடம் வந்துசேரும் அன்னையை நாம் காண்கிறோம். ஜெருசலேம் நகரில் தேவாலயத்தில் மதபண்டிதர்கள் நடுவே விவாதித்துக்கொண்டிருந்த குழந்தை யேசுவைக் கண்டு அச்சமும் பீதியும் கொண்டு அவள் சொன்னாள் “நானும் உன் தந்தையும் உன்னை பதற்றத்துடன் தேடிக்கொண்டிருந்தோம்.”

மேரிக்கு அவன் பிறக்கும்முன்னரே அவன் யார் என சொல்லப்பட்டுவிட்டது. ஆனாலும் அவள் தாயாகவே இருந்தாள். தாயின் பெரும்பிரியத்தால் அவனை மூடிக்கொண்டாள். அந்தப்பிரியமே அவன் யாரென அவளுக்குக் காட்டாமல் மறைத்தது. அவனுக்கு சித்தப்பிரமை என்று சொல்லிக்கேட்டபோது கடுந்துயர் கொண்டாள்.

அந்தத் தாய்ப்பாசத்தில் மூடிய கண்களுடன்தான் அவள் தன் சீடர் நடுவே இருந்த அவனைத் தேடிச் சென்றாள். அவள் பிரியம் வெறும் தாய்ப்பாசமா என்று அறிய விரும்பிய கிறிஸ்துவே “என் உறவினர்கள் என் சொற்களை ஏற்றுக்கொண்டவர்கள் மட்டுமே” என்று அவளை நிராகரித்தார். நீ என்னை உன் மகன் என எண்ணியிருந்தால் அந்த மகன் இறந்துவிட்டான் என உணர்வாயாக என்று அவளிடம் அவர் சொல்லியிருக்கலாம். ஒவ்வொரு கணமும் சிலுவையை நோக்கிச் சென்று கொண்டிருந்த கிறிஸ்து இறைவனுக்கு மட்டுமே மகன். மனிதகுலத்துக்கு முழுக்க சொந்தமானவன். தன் மார்புகளின் மீது அவரை அணைத்துக்கொள்ள மரியத்திற்கு உரிமை இல்லை.

அதை மரியம் உணர்ந்திருப்பாள் என்றே பைபிளைக் கொண்டு ஊகிக்க முடிகிறது. அவளும் கடைசிக்கணம் வரை இறைமகனை பின் தொடர்ந்து சென்றாள். சிலுவைப்பாட்டின் இறுதிக்கணம் வரை அவளும் இருந்தாள். அவளுக்காக தயாராகி இருந்த அந்த வாள் அவள் ஆத்மாவில் பாய்ந்தது. அவளை துயரத்தின் சிகர நுனிகள் வழியாக அவளை தூயவளாக்கி மானுடத்தின் அன்னையாக்கியது.

அவனுடைய தூய உடலை தன் கைகளில் பெற்றுக்கொண்டாள். கிறிஸ்துவின் விண்ணேற்றத்திற்குப் பின்னர் சீடர்கள் நடத்திய பிரார்த்தனைகளில் மரியம் கலந்துகொண்டாள் என்று பைபிள் சொல்கிறது. கல்வாரியில் அவன் தியாகம் முழுமை பெற்றபின்னர் அவள் அவனை முழுதுணர்ந்திருக்கலாம்.

ஜார்ஜ் ஹென்றி டவார்ட் எழுதிய கன்னி மேரியின் ஆயிரம் முகங்கள் (The thousand faces of the Virgin Mary, George Henry Tavard) என்ற நூல் ஒய்.எம்.சி.ஏ

நூலகத்தில் கிடைத்தது எனக்கு. அதை பத்திபத்தியாக ஒருவருடம் முழுக்க வாசித்தேன். ஒரு மனப்பிம்பமாக அதை இன்று நினைவுகூர்கிறேன். கிறிஸ்து உலகமெங்கும் சென்றபோது கூடவே மேரியும் பெருகிக்கொண்டே இருக்கிறாள். தமிழ்நாட்டிலேயே எத்தனை அன்னைகள். நமது கடற்கரை வழியாகச் சென்றால் ஐந்து கிலோமீட்டருக்கு மேரியின் ஒரு முகம் தெரிகிறது. கிறிஸ்து ஓர் ஆடிபோல, அவள் அதில் பிரதிபலித்துப் பெருகுகிறாள்.

இரு பெண்கள். ஒரு சுடருக்கு இருபக்கமும் பொத்திக்கொண்டிருக்கும் இரு கைகளைப்போல. பேரழகு கொண்ட ஒரு பறவையின் இரு சிறகுகளைப்போல. இரண்டு மேரிகள். நான் கற்பனைசெய்வதுண்டு, மேரி தன் மகனை நோக்கிச் சென்று அவனை தன்னுடன் அழைக்கும்போது அவன் காலடியில் மேரி மக்தலீன் இருந்திருப்பாளா என. இருந்திருந்தால் அன்னையில் இல்லாத தோழியில் இருந்த எது அவளை மேலும் அருகே கொண்டுசென்றது?

அதற்காகத்தான் மேரி மக்தலீன் மனம் திரும்பிய பாவி என்று சொல்லப்பட்டிருக்கிறதா? பாவிகளுக்கும் துயரம் கொண்டவர்களுக்கும் கைவிடப்பட்டவர்களுக்கும் மட்டுமே புரியும் செய்தியைத்தான் அவன் சொன்னான் என்பதா? அன்னையின் பேரன்பு உணராத ஒன்றை கண்ணீர் நிறைந்த காதல் புரிந்துகொண்டதா என்ன?

மேரி மக்தலீன் எழுதிய நற்செய்தியில் பீட்டர் சினத்துடன் ஆண்ட்ரூவிடம் கேட்கிறார் “அவர் நம்மிடம் பொதுவாகப் பேசாமல் ஒரு பெண்ணிடம் தனியாகப் பேசினார் என்பது உண்மையா? இனி நாம் அவளை நோக்கிச் சென்று அவள் வாயொலியிலிருந்து ஞானமொழிகளைக் கேட்க வேண்டுமா? எங்களை விட்டுவிட்டு அவர் அவளையா தேர்ந்தெடுத்தார்?”

கண்ணீர் விட்டு மேரி மக்தலீன் சொன்னாள் “பீட்டர் என் சகோதரனே, நீ என்ன நினைக்கிறாய்? என் இதயத்தால் நான் இந்த அளவுக்கு சிந்திக்க முடியுமா? அல்லது என் மீட்பரைப்பற்றி நான் பொய் சொல்வேனா?”

பீட்டரை லெவி சமாதானம் செய்கிறார். “பீட்டர் நீ எப்போதுமே சினம் கொண்டவனாக இருக்கிறாய். இந்தப்பெண்ணை எதிரியைப்போல நீ நடத்துகிறாய். நம்முடைய மீட்பர் அவளே தகுதியானவள் என்று எண்ணினால் அதை மறுக்க நீ யார்?”

பீட்டர் உருவாக்கிய திருச்சபையை யேசுவின் மணவாட்டி என்று சொல்லும் ஒரு மரபு உண்டு. அந்த ஒரே ஒரு தோழிக்கு நிகராகவா அத்தனை பெரிய அமைப்பை அவர் உருவாக்கினார் என்று தோன்றுகிறது.

யேசு உயிர்த்தெழுந்ததைக் கண்டு மகிழ்ந்து பிறருக்குச் சொல்ல ஓடும் மேரி மக்தலீன் முன்னால் திடீரென்று யேசு தோன்றி அவளை வாழ்த்தினார். அவள் அவரை நோக்கி ஓடி அவரது காலடிகளைப்பற்றிக் கொண்டு பணிந்து நின்றார்கள் என்கிறது பைபிள். என்றும் தன் ஆத்மா அறிந்திருந்த ஓர் உண்மையை அப்போது மேரி மக்தலீன் தன் கைகளாலும் உணர்ந்திருப்பாள்.

நெடுந்தூரத்துக்கு அப்பால் இளமையின் ஒளிமிக்க நாட்களில் நான் குன்னத்துக்கல் அச்சனின் முகத்தையும் கண்களையும் காண்கிறேன். அவர் என்ன சொன்னார் என்று இப்போது புரிகிறது. தோழியாக ஆகும்போது

அன்னையும், அன்னையாக மாறும்போது தோழியும் கண்டுகொள்ளும் அழியாத மெய்மை ஒன்று உண்டு.

1. 5. இரண்டு காதலியர்

ஊட்டியில் மழைக்காலம் மிகவும் உக்கிரமானது. மரங்கள் மீது சாந்தியடையாத சினம் கொண்ட ஆவிகள் ஏறிக்கொண்டதுபோல, ஒரு விபரீத வரத்தால் அவை ஆவேசமான விலங்குகளாக ஆகிவிட்டதுபோல் இருக்கும். தலைசுழற்றி அவை ஊளையிடும். மார்பிலறைந்துகொண்டு தரையில் இருந்து வேர் பெயர்த்து எம்ப முயலும். ஒரு கட்டத்தில் கட்டடங்கள் கூட உயிர்கொண்டு விடும். மிரண்ட மாபெரும் மிருகங்கள் போல அவை முனகும். விம்மும். உதடுகள் துடிக்க சிறகுகள் படபடக்க அதிரும்.

ஊட்டியில் மழையென்றாலே மின்சாரம் போய்விடும். ஆனால் நல்ல மழை பெய்யும்போது குளிர் சற்று குறைந்து இதமான ஒரு கதகதப்புகூட தோன்றும். குருகுலத்திற்குள் ஸ்வெட்டருக்குள் கைகளை இறுக்கிக் கொண்டு கண்ணாடிச் சன்னலை முற்றாக முட்டிவிட்டிருக்கும் மழையைப் பார்ப்பதென்பது கிளர்ச்சியூட்டும் அனுபவம். மண்ணில் மிக ஆன்மிகமான ஏதோ நடந்துகொண்டிருக்கிறது என்று தோன்றிவிடும். மிக மகத்தான ஒன்று. எத்தனை சிந்தனைசெய்தாலும் புரிந்துகொள்ள முடியாத ஒன்று. மண்ணில் மனிதன் பேசத்தொடங்கிய நாள்முதலே வர்ணித்தும் தீராத ஒன்று...

நித்யா உள்ளிருந்து வந்தார். அவருடன் ஜோதி அவரைப்பற்றிக்கொண்டு வர உஸ்தாத் ஷௌகத் அலி அவர் வாசித்துக்கொண்டிருந்த புத்தகத்துடன் வந்தார். டாக்டர் தம்பான் (சுவாமி தன்மயா) நித்யா அமரும் இருக்கையை சரிசெய்தார். என்னுடன் தாமஸ் ஜேக்கப் இருந்தார். அன்று மாலைக்கூட்டத்துக்கு வேறு எவரும் இல்லை. நித்யா நாற்காலியில் அமர்ந்து தலையணை ஒன்றை முதுக்க்கு வைத்துக்கொண்டதும் என்னை நோக்கி புன்னகைசெய்தார்.

தகரக்கூரைமீது அருவி போல கொட்டியது மழை. சாட்டையால் மாறி மாறி வீறியபின்னரும் எழுவதற்கு அடம்பிடிக்கும் சண்டிமாடு போல குருகுலக்கட்டடம் அமர்ந்திருந்தது. திரைச்சீலைகள் மீது ஈரம் சீனித்துளிகள் ஒட்டியிருப்பது போல மெல்லிய துளிப்படலமாக புல்லரிக்க ஆரம்பித்திருந்தது. நான் நித்யாவின் காலடியில் அமர்வதற்கான குட்டி மெத்தை ஒன்றை போட்டு அமர்ந்துகொண்டேன்.

எண்ணெய்விளக்குகளின் ஒளியில் நிழல்நித்யா எழுந்து கட்டடத்தின் கூரைமீது வளைந்து அவரையே குனிந்து நோக்கினார். அவரை விலக்கி விரிந்து அந்த நிழலுருவை நோக்கி மடிந்திருந்தன எங்கள் நிழல்கள். நித்யா என்னிடம் “மழையைப்பற்றி உங்கள் கவிஞர்கள் என்ன சொல்கிறார்கள்” என்றார் நான் புன்னகைத்து “பெயல்கால் என்று கபிலர் சொல்கிறார். மழையின் கால்கள் என்று. பெயல்கால் மறைத்தலின் நிலம் காணலரே என்கிறார். மழையின் பல்லாயிரம் கால்கள் ஊன்றி மறைத்து மண் தெரியாமலாகிவிட்டிருக்கிறது என்று...”

நித்யாவின் மனம் கொளுத்தப்பட்டு விட்டது என அறிந்தேன். “அருமையான வார்த்தை. இத்தனை களங்கமின்மை ஒரு பழங்குடி மனத்துக்கே வரமுடியும்... அது மாபெரும் விவேகங்களையும்

ஞானங்களையும் புல் நுனியில் இருந்து பனித்துளியை கைவிரலில் எடுப்பது போல ஒற்றி எடுக்கும்…”

“எனக்கு மழை ஒரு பறவையின் சிறகு என்று படுவதுண்டு. இந்தப் பெரிய முட்டையை அந்தப்பறவை தன் சிறகால் மெல்ல மூடிப்பாதுகாக்கிறது. சிலசமயம் தோன்றும் மேலே நீலமாக விரிந்திருப்பதும் ஒரு கடல்தான் என. நாம் அதை தொடுவதில்லை. சில சமயம்தான் அதன் அலை எல்லை மீறிவந்து மண்ணை அறைந்துசெல்கிறது… கடற்பாறை போல பூமி அடிவாங்கி சிலிர்க்கிறது.”

“வேதங்களில் மழையைப்பற்றி நிறைய சொல்லப்பட்டிருக்கிறது” என்று பொதுவாகச் சொன்னார் சுவாமி தன்மயா. நித்யாவை உரைக்கு கொண்டு செல்லும் நோக்கத்துடன். நித்யா சொல்ல ஆரம்பித்தார், “மழையை வேதகால மனம் ஒரு பெரும் லீலையாகக் கண்டது. மண்ணில் உள்ள அனைத்தையும் பிறப்பிக்கும் ஒரு மகத்தான காதல் லீலை. வானத்தின் விந்துவே மழை என்றுணர்வது ஒருதனிமனித மனத்தில் முதன்முதலாக தோன்றிய கணம் எத்தனை பயங்கரமாக இருந்திருக்கவேண்டும். புல்லாக மரங்களாக புழுப்பூச்சிகளாக ஆறாக காடாக மனுக்குலங்களாக ஊர்களாக நகரங்களாக சிந்தனைகளாக முளைத்தெழும் அந்த விந்து யாருடையது! அந்த எண்ணம் தன்னுள் வந்த அக்கணம் அவன் உடல் திறந்து இறக்காமல் அதைச் சொல்லாக ஆகியதே ஆச்சரியம்தான்…”

நித்யா தொடர்ந்தார். “இந்து மரபில் எந்நிலையிலும் காமத்தை அருவருப்பானதாக, விலக்கவும் மறைக்கவும்படவேண்டிய ஒன்றாக, உருவகித்ததில்லை. மாறாக இந்தப் பிரபஞ்சத்தை அறிந்துகொள்வதற்குரிய வழியாகவே அதை ரிஷிகள் கண்டார்கள். இப்பிரபஞ்சத்தின் சாரமான ஆற்றல் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் தருணங்களில் ஒன்று அது. அதில் இருந்தே லீலை என்ற சொல் பிறந்தது. இந்தப்பிரபஞ்சமே ஒரு மாபெரும் விளையாட்டு. சாதாரண விளையாட்டல்ல காதல் விளையாட்டு. ஏனென்றால் பிறவிளையாட்டுகளில் இல்லாத முழுமையான லயம் காதல் விளையாட்டில் உள்ளது. விளையாடும் இருவரும் ஒருவரை ஒருவர் நிரப்புகிறவர்கள். ஒருவரை ஒருவர் முழுமை செய்துகொள்பவர்கள். விளையாட்டின் உச்சியில் இருவரும் தங்களை ஒருவரில் ஒருவர் இழந்து ஒன்றாகிறார்கள். அதுவரை இல்லாதிருந்த ஒன்று அவர்களை தங்கள் கருவியாக்கி தன்னை நிகழ்த்திக்கொள்ளும் ஒன்று உருவாகிறது.”

“வானகமும் மண்ணகமும் கொள்ளும் லீலையே இவ்வுலகம் என்று உணர்ந்தனர் ரிஷிகள். ஒளி ஒரு லீலை. காற்று ஒரு லீலை. அருவம் உருவத்துடன் ஆடுவதும் லீலையே. கருத்து பருப்பொருளுடன் ஆடுவதும் லீலையே. அளவிறந்த ஆற்றல்வெளியுடன் ஆக்கும்கருத்து ஆடுவதும் லீலையே. சிவசக்தி நடனத்தை நான் பார்த்து நிற்பதுண்டு. ஆற்றலை அன்னையாக்க வேண்டுமென எந்த மூதாதைக்கு முதலில் தோன்றியது? ஏனென்றால் அது தன்னளவில் முழுமை கொண்டது என்பதனாலேயே. அதற்கு சிருஷ்டியின் நடனம் தேவையில்லை. அதன் ஆழத்தில் உள்ளது எல்லையில்லாத கருணையும் காதலும் மட்டுமே. அந்தக் கருணையையும் காதலையும் தொட்டு எழுப்பி அதனை சிருஷ்டிவெளியாக ஆக்க ஒரு கருத்தாற்றல் தேவை. சிவம், அது ஒரு நடனம். ஏன் அது நடனமிடுகிறது என்றால் நடனத்திற்காகவே…”

“லீலை என்றால் வேறு எதற்காகவும் இன்றி அந்தச் செயலின் இன்பத்திற்காக மட்டுமே நிகழ்வதாகும். ஏன் ஏன் என்று இந்தப்பிரபஞ்சத்தை கேட்டுக்கொண்டே சென்றால் கட்டக்கடைசியில் அந்தக் கேள்விகள் எல்லாம் ஒன்றாகி, கோடானுகோடி ரிஷிகளின் கோடானுகோடி கேள்விகள் எல்லாம் இலைசொட்டும் துளிகளே கடலாக ஆனதுபோல திரண்டு ஒற்றைப்பெரும் கேள்வியாக எழுந்து நிற்கும். ஏன்? அதற்கு ஒரே பதில்தான். லீலை! அலகிலாத காதல் விளையாட்டு. அந்த களிநடனத்தை முதலில் தன் அகத்தரிசனமாகக் கண்டவன் யார்? மரவுரி உடுத்து மாமிசம் உண்டு குகையில் வாழ்ந்தானா? அவனுக்கு சுட்டுத்தின்ன தெரிந்திருந்ததா? அவனால் பேச முடிந்ததா, இல்லை நடனமாடித்தான் தன்னை வெளிப்படுத்தினானா? எத்தனை மகத்தானவன். அவனுடைய மாபெரும் மெய்ஞானத்தின் நிழலில் அல்லவா நாம் நின்றுகொண்டிருக்கிறோம்?” நித்யா சொன்னார்.

பின்னர் எப்போதோ துறவு முதல் விழுமியமாகியது. சமணமே அதைக் கண்டுபிடித்தது என்று படுகிறது. துறவு ஒரு மாபெரும் கருதுகோள்தான். அதை துறவியாகிய நான் உறுதியாகச் சொல்லமுடியும். இந்தா இந்தா என்று மண்ணுலகமே மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இல்லை. எனக்கு எதுவும் தேவையில்லை என்று மனிதன் சொல்வானென்றால் அதுவும் மகத்தானதல்லவா? காதல் லீலையாக உள்ள இப்பிரபஞ்சத்திற்கு நேர் எதிரான ஒன்று துறவு. மகத்தான ஒன்றுக்கு இணையான மகத்துவம் உள்ள ஒன்றே எதிராக இருக்க முடியும். ஆனாலும் அது எதிரானதே. அது தலைகீழானதே.

சமணம் துறவை நேர்நிலையாக ஆக்கியது. லீலையை எதிர்நிலையாக ஆக்கியது. அந்த தரிசனத்தை பௌத்தம் எடுத்துக்கொண்டது. பட்டுப்பாதையில் சமண வணிகர்கள் மேற்கே பாரசீகத்துக்கும் சுமேரியாவுக்கும் எகிப்துக்கும் மாசிடோனியாவுக்கும் கிரேக்கத்திற்கும் சென்றார்கள். உலகமெங்கும் துறவைக் கொண்டுசென்றார்கள். துறவு ஒருபெரிய வாள் போல ஒருவனை இந்த பிரம்மாண்டமான கூட்டு நடனத்தில் இருந்து அறுத்து வெளியே தள்ளிவிடுகிறது. அவன் அதன்பின்னர் இந்த மொத்த நடனத்தையும் விலகியமர்ந்து பார்ப்பவனாகிறான். அவன் பார்க்கும் அந்தப் பெருநடனத்தை அதில் ஆடுபவர்கள் ஒருபோதும் பார்ப்பதில்லை. ஆகவே விலகியவர்கள் ஞானிகளானார்கள். ஞானத்தின் அதிகாரம் துறவை மண்ணுலகமெங்கும் நிலைநாட்டியது.

ஆனால் துறவென்பதே இந்தக் காதல்லீலையைக் காண்பதற்கான கண்பெறும் தவம்தான் என்று பலர் புரிந்துகொள்வதில்லை. இங்கே முன்பொரு துறவி இருந்தார். கொஞ்சநாள் அலைந்து திரிந்துவிட்டு இங்கே வந்தார். மாபெரும் சமஸ்கிருத அறிஞர். அவரது இளமையில் அவர் மிகச்சிறிய குடிலில் வாழ்ந்தார். தீண்டாமைக்கு உள்ளான சாதியைச் சேர்ந்தவர். அவர்களின் குடிசைகள் ஒரே அறை கொண்ட ஓலைமாடங்களாக இருக்கும். நிலையான வீடுகளை அவர்கள் கட்டிக்கொள்வது தடுக்கப்பட்டிருந்த காலகட்டம் அது. அவர்கள் எட்டுப்பேர். அத்தனைபேரும் ஒரே குடிசைத்தரையில் தரையில் போடப்பட்ட வைக்கோல் மீது ஒட்டி ஒட்டி படுத்துக்கொள்வார்கள்.

ஒருநாள் அவர் கண்விழித்துப் பார்த்தபோது அவரது அன்னையும்

தந்தையும் உடலுறவு வைத்துக்கொண்டிருந்தார்கள். இருளில் ஒரு மின்னலில் அவர்களின் லீலையை அவர் கண்டார். நிர்வாணமாக இருவர் உடல்களும் பிணைந்திருப்பதை மகிழ்ச்சியின் உச்சத்தில் ஒருவரை ஒருவர் மட்டுமே உணர்ந்தபடி அவர்கள் இருப்பதை. ஒருகணத்தில் அவரது மனம் அதிர்ந்தது. அந்த அசாதாரணமான காட்சியில் இருந்து அவர் விடுபடவே இல்லை. ஆரம்பத்தில் ஆழமான மனக்கசப்பு குமட்டிக் குமட்டி வந்தது. ஒவ்வாத ஏதோ ஒன்றை உண்டுவிட்டவர் போல.

பின்னர் அவர் வீட்டை விட்டுக்கிளம்பி நாடோடியானார். பல பெண்களுடன் உறவு கொண்டார். ஆனால் அவருள் ஒரு கேள்வி இருந்தது. உடலுறவை கூர்ந்து கவனிப்பவனால் அதில் தன்னை மறந்து ஈடுபட இயலாது என்பார்கள் உளவியலாளர்கள். அவர் துறவியானார். குருகுலங்களில் கற்றார். ஏதோ ஒரு புள்ளியில் தியானத்தில் அவரது கேள்விக்கு பதில் கண்டுபிடித்தார். லீலை. அந்தக் கணத்தில் அவ்விருவரும் பிரபஞ்சத்தை நிகழ்த்தும் ஆற்றலின் கையில் இருந்தார்கள். அந்த தரிசனம் வழியாக அவர் மேலும் மேலும் தன்னைக் கண்டடைந்தார். இந்த மழையை தாய்தந்தையின் முயக்கமாக சிவசக்தி லீலையாக காண நம்மால் முடியுமென்றால் அந்தக் கணங்களில் அழிவற்ற உண்மையொன்றின் வாசலில் நாம் நிற்கிறோமென்று பொருள்.

காமத்தை வெறுக்கவும் அருவருக்கவும் கற்பித்தது சமணம். அதிலிருந்து உலகமெங்கும் சென்றது அந்த ஒழுக்கவியல். மானுடனுக்குச் சாத்தியமான ஒரு மாபெரும் படிமத்தை அதன் மூலம் அவன் இழந்தான். எத்தனை எத்தனை ஞானிகள் அதன் வழியாகச் சென்று அந்த முதல்முழுமையின் கணத்தை தொட்டிருக்கிறார்கள். நான் ஒருமுறை அமெரிக்காவின் ஓர் கிறித்தவ தேவாலயத்தில் பேசும்போது சாலமோனின் பாடல்களை மேற்கோள் காட்டினேன். அங்கிருந்த பல பெண்களுக்கு அந்த வரிகள் அதிர்ச்சியை அளித்தன என்று சொன்னார்கள். ஏனென்றால் அந்த வரிகளை அவர்கள் தந்தையின் காமம் போல பார்த்தார்கள். அது இல்லாமல் நாம் வந்திருக்க முடியாது. ஆனால் அதை நாம் சிந்திப்பதில்லை. நம் மனம் கூசி உறைந்து விட நாம் எண்ணங்களை திருப்பிக்கொள்கிறோம். ஆனால் பைபிளின் ஆக அழகான வரிகளாக சாலமோனின் பாடல்கள் நின்றுகொண்டிருக்கின்றன."

நித்யா சாலமோனின் பாடல்களைப் பற்றிச் சொன்னார். பழைய ஏற்பாட்டில் உன்னத சங்கீதம் என்று சொல்லப்பட்டிருக்கும் இப்பாடல்கள் தொல்காலம் முதலே யூதர்களால் பாடப்பட்டவை. மொத்தம் இருபத்தெட்டு பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உண்மையில் நெடுங்காலமாக இந்தப்பாடல்களை வெட்டிக்குறைத்தபடியே இருந்து மக்கள் மனதில் தங்கிப்போனதனால் சிலவற்றை மட்டும் விட்டுவைத்திருக்கிறார்கள். யூதர்களின் திருமணங்களிலும் வசந்தகால விழாக்களிலும் பாடப்பட்டவை என்பது ஓர் எளிய விளக்கம். ஆனால் ஏன் அவை இறைநூலில் சேர்க்கப்பட்டன என்பதற்கும் ஏன் அவை சாலமோனின் சொற்களாகச் சொல்லப்பட்டன என்பதற்கும் இது விளக்கம் அளிப்பதில்லை.

யூத மரபின் மாமன்னர்களில் ஒருவர் சாலமோன். அவரது ஆண்மையையும் வெற்றிச்சிறப்பையும் நிர்வாகத்திறனையும் யூதபுராணங்கள் வாழ்த்துகின்றன. சாலமோனுக்கு எழுநூறு

மனைவியரும் முந்நூறு ஆசைநாயகிகளும் இருந்தார்கள் என்கிறது யூத புராணம். யூதர்களுக்கு அவர் ஒரு பிதாவடிவம். ஆனால் அவர் இப்பாடல்களில் தன்னை பெண்ணாக, காதலனுக்காக ஏங்கும் பேதையாக கற்பனைசெய்துகொண்டிருக்கிறார் என்பதில்தான் ஆன்மிகமான சாராம்சம் உள்ளது.

மாமன்னர்களை ஆணாகவும் அவர்கள் ஆண்ட மண்ணை பெண்ணாகவும் உருவகப்படுத்துவது எங்கும் உள்ள வழக்கம். அந்த மண் விளைநிலம், அவர்களோ ஆக்கும் ஆற்றல். அந்த உலகியல் சார்ந்த தளத்திற்கு நேர் எதிரானது ஆன்மிகமான தளம். அங்கே சாலமோனின் மனமே விளைநிலம். அங்கே முளைக்கவேண்டிய விதைகள் விண்ணிலிருந்து வரவேண்டும். ஆகவே விண்நோக்கிக் காதலுற்றுக் காத்திருக்கும் கன்னிநிலமாக அவர் தன்னை உணர்கிறார். அந்த உணர்வையே இக்கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

பெண்ணாக ஆகாத மனம் பிறிதொன்றை உள்வாங்கிக் கொள்வதில்லை. தன்னில் இருந்து எதையும் பிறப்பிப்பதும் இல்லை என்பதே சாலமோன் பாடல்கள் நமக்குக் காட்டும் உண்மை என்றார் நித்யா. தன் ஒவ்வொரு துளி இருப்பிலும் பிறிதொன்றுக்காக காத்திருக்க, தன்னை வந்தடையும் ஒரு சிறு தொடுகையில் பூரித்து கண்விழித்தெழ, தன்னுள் விழும் ஒரு துளி உயிர்த்தூண்டலை தன் மொத்த ஆன்மாவையும் உணவாக்க் கொடுத்து உருவாக்கி எடுக்க பெண்மையாலேயே முடியும். உடலிலும் உள்ளத்திலும் உறுதியாகிவிட்ட ஆண்மையின் இறுக்கத்தை கரைத்து பெண்மையாகி நெகிழ எத்தனை தவம் எத்தனை கண்ணீர் தேவைப்பட்டிருக்கும்!

ஞானவாத கிறித்தவ மரபுகளின்படி சாலமோன் அவரது நூறு வயதுக்குமேல்தான் இந்த உன்னத சங்கீதப் பாடல்களை எழுதியிருக்கிறார்! அன்று நாமறியாத பலவகையான சடங்கு முறைகள் இருந்திருக்கலாம். இப்பாடல்கள் அந்தச் சடங்குகளுடன் பிணைந்தவை என்று படுகிறது என்றார் நித்யா. பத்தாம் நூற்றாண்டுவரைகூட ஞானவாத கிறித்தவர்கள் இதற்கான தாந்த்ரீ கச் சடங்குகளைச் செய்து வந்தார்கள்.தொடர்ச்சியான ஒடுக்குமுறைகள் காரணமாக அவை பொதுத்தளத்தில் இருந்து முற்றாக மறைந்தன.

சாலமோனின் காதல்பாடல்களை இன்று பார்க்கும்போது அவற்றில் அழிவற்ற ஒன்றை தன்னுள் வாங்கி முளைத்தெழுப்ப அவர் மனம் கொள்ளும் எத்தனிப்பையே காண்கிறோம். லீலையை. அதன் ஏக்கத்தை எதிர்பார்ப்பை வலிகளை ஆனந்தங்களை. அந்த வரிகளை மெய்மையை உள்வாங்கும் நிலைகள் என்று புரிந்துகொண்டால் ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு மலர்களாக விரிய ஒரு நறுமணச்சோலையில் நாம் உலவமுடியும் என்றார் நித்யா.

தலைவிகூற்று (பாடல் 1)

> தம் வாயின் முத்தங்களால்
>
> அவன் என்னை முத்தமிடுக!
>
> ஆம், உனது காதல்
>
> திராட்சை ரசத்தினும் இனிது.

உனது உடலின் நறுமணம்
இனிமையானது.
உமது பெயரோ உன் வாசனையைவிட
மேலாக எங்கும் பரவியுள்ளது
எனவே இளம்பெண்கள்
உன்னைக் காதலிக்கிறார்கள்.
உன்னோடு என்னைக் கூட்டிக்கொள்
நாம் ஓடிவிடுவோம்
அரசே என்னை உன் அறைக்குள் கொண்டுசெல்
நாம் மகிழ்ந்தாடுவோம்
நான் உன்னில் களியாட்டமிடுகிறேன்
திராட்சை ரசத்தைவிட மேலானது
உனது காதல்
திராட்சை ரசத்தை விட தூயது
உன்னுடைய காதல்.

தலைவி கூற்று (பாடல் 25)

கிச்சிலி மரத்தடியில் நான் உன்னை எழுப்பினேன்
அங்கேயல்லவா உன் அன்னை உன்னை வலித்து பெற்றாள்?
உன் நெஞ்சில் முத்திரையாய் என்னை பொறித்துக்கொள்!
உன் கைகளின் இலச்சினையாய் என்னை அணிந்துகொள்!
ஆம் காதல் சாவைப்போலவே மகத்தானது!
அன்பின் வேகம் பாதாளம் போல் பொறாதது!
அதன் பொறி எரிக்கும் நெருப்பாகும்.
அதன் கதிர்களோ பொசுக்கும் சுவாலையாகும்.
பெருங்கடலும் அணைக்காது பெருங்காதலை.
பெருவெள்ளமும் மூழ்கடிக்காது அதை.
காதலுக்காக ஒருத்தி தன்
செல்வங்களையெல்லாம் துறந்துவிடுவாள்
ஆயினும் அவள் ஏளனத்துக்குள்ளாகிறாள்.

ஆன்மிகச் சாரமுள்ள காதல்பாடல்களிலெல்லாம் இரண்டு மையக்கருத்துகள் பயின்றுவருவதைக் காணலாம் என்றார் நித்யா. என்னைக்கூட்டிச்செல், நாம் இங்கிருந்து ஓடிவிடுவோம் என்று பெண் ஏங்குகிறாள். இங்கே என் பெற்றோர் இருக்கிறார்கள். என்னுடைய தோழிகள் இருக்கிறார்கள். நான் இதுவரை அறிந்து உணர்ந்து விரும்பி

சேர்த்த எல்லாமே இருக்கின்றன. ஆனால் இவையனைத்தையுமே உனக்காக விட்டுவிட்டு நான் உன்னுடன் வருகிறேன். நீ எங்கு கொண்டுசென்றாலும் நான் உன்னுடன் மகிழ்ச்சியுடன் வருவேன். உன் கைகளைப் பற்றிக்கொண்டு, உன் மொழிகளைக் கேட்டுக்கொண்டு, நீ என்னை கொண்டுசெல்லும் அறியாத உலகங்களுக்கு விருந்தாளியாக வருவேன்.

போதும் இந்தச் சிறிய கூண்டு. இங்கே நான் சலித்துவிட்டேன். இது இனி எனக்குக் கொடும் சிறை. ஆனால் காதல் கொண்ட என் மனதுக்கு சிறை ஒரு பொருட்டே அல்ல. சுவர்களும் காவல்களும் ஒரு தடையல்ல. நீ என்னை அழைத்தால் நான் எப்படியும் தப்பி வந்துவிடுவேன். ஏனென்றால் நீ மட்டுமே என் இருப்புக்குப் பொருள் அளிக்க முடியும். என் உடலும் ஆத்மாவும் உனக்காகவே உருவாக்கப்பட்டவை. நீ என்னை அழைக்கும் கணத்திற்காகவே நான் பிறந்த கணம் முதல் அவை காத்திருக்கின்றன. நீ உன் காதல் மொழியை என்னை நோக்கிச் சொன்னால் அந்தக் கணமே இந்த குளிர்ந்த மலர்ச்சுனை தடையில்லாத காட்டாறாக ஆகும். வருக என் தேவனே, என்னை ஆளும் என் இறைவனே, என் காதலனே! மீண்டும் மீண்டும் மன்றாடுகின்றன தெய்வீகக் காதல்பாடல்கள்.

அவனுடனான கூடலை தன்னை அழித்து முழுதாக மறையும் அனுபவமாகவே அவை எப்போதும் சொல்கின்றன. உன் முத்தங்களால் என் உடலின் சுனைகளை எழுப்பு. என் ஆன்மாவின் அக்கினியை மூண்டெழச்செய்து என்னை பற்றியெரியச்செய். நான் என எதுவும் எஞ்சக்கூடாது. நான் நீயாக வேண்டும். உன்னுடைய உடலாக உன் ஆன்மாவாக நான் ஆகிவிடவேண்டும். என்னை அணிந்துகொள் என்னை உண்டுவிடு என அவை மன்றாடுகின்றன.

கலவியும் மரணமும் ஒன்றேயான ஒரு உச்சத்தையே அவை பாடுகின்றன. அவனுடைய காதல் சாவைப்போலவே மகத்தானது. சாவைப்போல முழுமையானது, மிச்சம் மீதியேதும் இல்லாதது. நீ என்னைக் கொல் என்று அவை வீரிடுகின்றன. நான் இன்றி நீ மட்டுமே இருக்கும் ஒருதருணமாக அதை ஆக்கு. என் அன்பே, நான் அளிப்பதை மிச்சமில்லாமல் ஏற்றுக்கொள். தூய கன்னியொருத்தியின் ஆத்மாவின் பொங்கியெழுதலாக அன்றி அந்த மனஎழுச்சியை எப்படிச் சொல்லிவிட முடியும்?

“நெடுங்காலம் கழித்து ஒருவர் மீண்டும் சாலமோனின் பாடல்களை தன் ஆத்மாவால் பாடியதை நாம் கேட்கிறோம்” என்றார் நித்யா. ஸ்பெயினின் புனித ஜான் (St.John of Cross). நெருப்பாகவும் பனியாகவும் உருகிவழியும் அவரது பாடல்களை இன்றும் அம்மொழி தன் மிகமெல்லிய இதயத்தசையால் பேணி வைத்திருக்கிறது. ஸ்பானிஷ் மொழியின் இலக்கிய உச்சமெனக் கருதப்படுபவை புனித ஜானின் பாடல்கள். பலநூறு விளக்கங்களுக்கும் ஆய்வுகளுக்கும் உள்ளானவை அவை.

இருண்ட இரவு

ஓர் இருண்ட இரவில்

காதலால் எரிந்தபடி

நான் என் வீட்டை விட்டுச் செல்கிறேன்.

எத்தனை இனிய வாய்ப்பு!

என் இல்லம் அமைதியாக இருந்தது
இருளின் மறைப்பில் பாதுகாப்பாக
நான் இறங்கிய ரகசிய ஏணியினால்
இருளையே ஆடையாக அணிந்துகொண்டு
உயரத்தை அளந்தேன்.
எத்தனை இனிய வாய்ப்பு!
என் வீடு அமைதியில் துயின்றுகொண்டிருந்தது.
ஆசீர்வதிக்கப்பட்ட அவ்விரவில்
ரகசியமாக எவராலும் பார்க்கப்படாமல்
எவரையுமே நானும் பார்க்காமல்
என் இதயத்தின் சுடரன்றி
வேறு துணையோ விளக்கோ இல்லாமல்
நான் விலகிச்சென்றேன்
இந்த வழிகாட்டி, இந்த அழியாச்சுடர்,
மதிய சூரியனைவிட ஒளிமிக்க இந்தக் கதிர்,
என்னைக் கொண்டுசேர்க்கும்
என்னைக்காத்திருக்கும் ஒருவனிடம்.
நான் நன்கறிந்தவன். என் உள்ளத்திற்கு இனியவன்.
எவருமே இல்லா இடத்தில் காத்திருப்பவன்.
இரவே, என் வழிகாட்டியே,
விடியலைவிட பிரியமானவளே,
காதலிப்பவர்களை துணையுடன் சேர்ப்பவளே,
மெலிந்து வெளிறிய பெண்ணை
இனிய காதலியாக உருமாற்றுபவளே!
அவனுக்காகவே நான் கொண்ட
மலரணிந்த என் இளமுலைகள் மீது
அவன் இதோ உறங்குகிறான்.
அவனை நான் வருடுகிறேன்
தேவதாருக்கள் எங்கள் மீது தென்றலை வீசுகின்றன
அவன் குழல்கற்றைகளுடன் விளையாடும்
தேவாலயக்கோபுரத்தின் குளிர்காற்றை
நான் அருந்துகிறேன்
அவனுடைய கரம்

மிக மென்மையாக
என் தொண்டையை வெட்டிச் செல்கிறது.
என் உணர்வுகள் குருதியென வழிந்தோட
நான் நினைவிழந்தேன்
என்னை இழந்தேன் எனினும் எஞ்சுகிறேன்
என் தலைவன் தோள் சாய்ந்து என்னை உணர்கிறேன்
இதோ எல்லாம் மறைகின்றன
எஞ்சியவை எல்லாம்
என் ஆசைகள் முழுக்க.
ஏன் நானேகூட!
நான் இறந்த அந்த லில்லிமலர் வெளியில்
அனைத்துமே தொலைந்து போயின!

ஸ்பெயின் நாட்டில் 1542 ஜூன் 24 ஆம் தேதி பிறந்தவர் புனித ஜான். அவரது உண்மையான பெயர் யுவான் டி ஈப்ஸ் ஆல்வாரிஸ் (Juan de Yepes Alvarez). இளம் வயதிலேயே ஏழை நெசவாளியான தந்தை மறைந்த பிறகு குடும்பப் பொறுப்பை ஏற்ற இவர் வெள்ளை அடிப்பது, தச்சு வேலை, தையல் வேலை என்று கிராமங்கள் தோறும் அலைந்தார். கல்விக் காலத்தை உழைப்பில் செலவிட நேர்ந்தது. இளமைப்பருவத்தில் குடும்பம் மெடினாடெல் கேம்பஸிற்குக் குடிபெயர்ந்தபோது சொசைட்டி ஆ்ஃப் ஜீஸஸ் அமைப்பின் மருத்துவமனை ஒன்றில் வேலை பார்த்தார். அது ஏழைகளுக்காக நடத்தப்பட்ட ஒரு சேவை அமைப்பு. மருத்துவமனைக்காக தெருவில் பிச்சையெடுத்தார். கூடவே பள்ளியில் படிக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

21ஆம் வயதில் கத்தோலிக்க கார்மலைட் பிரிவின் பாதிரியானார். பின்பு 1564ல் புகழ்பெற்ற சாலமான்கா பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். இங்குதான் அவர் ஃப்ரேலூயிஸ் டி லியோனின் (Frey Luis de Leon) பாதிப்பைப் பெற்றிருப்பார் என்று நம்பப்படுகிறது. டி லியோன் ஒரு மனிதாபிமானிகவிஞர். பழைய ஏற்பாட்டின் ஹீப்ரூ மூலத்திலிருந்து சாலமோனின் ‘உன்னத சங்கீதம்’ பகுதியை நேரடியாக மொழிபெயர்த்தமைக்காக பாழுஞ் சிறையில் அடைக்கப்பட்டவர். அன்றைய சூழலில் மத அடிப்படைவாதிகளால் சமூக விரோதியாகச் சித்தரிக்கப்பட்டவர்.

புனித ஜானின் மனதில் இந்த மொழிபெயர்ப்பு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. ‘இருண்ட இரவு’ போன்ற கவிதைகளில் உள்ள பாலுணர்வைத் தீண்டும் படிமங்கள் அனைத்துமே சாலமனின் பாடலில் உள்ளவையே. இந்தச் சமயத்தில்தான் கார்மலைட் பிரிவில் அவிலாவின் புனித தெரஸா செல்வாக்கு செலுத்தத் தொடங்கியிருந்தார். புனித ஜான் அவரது கருத்துகளால் ஈர்க்கப்பட்டார். இதனால் கார்மலைட் மதத் தலைவர்களுக்கு ஜானின்மீது துவேஷம் ஏற்பட்டது.

1577ல் அவரை ஒரு கும்பல் கடத்திச் சென்று டோலிடா என்ற இடத்தில் உள்ள சிறையில் அடைத்து சித்ரவதை செய்தது. தரையில் அவர்

மண்டியிட்டிருக்க அவரைச் சுற்றி பாதிரிகள் அவரது வெற்று முதுகில் சவுக்கால் அடித்துக்கொண்டே நடப்பார்கள். இதனால் அவரது முதுகெலும்பில் முறிவு ஏற்பட்டு வாழ்நாள் முழுவதும் முடவனாகவே இருக்க நேர்ந்தது.

1578ல் சிறையிலிருந்து தப்பினார். வெளியில் தலைமறைவாக வாழத் தொடங்கிய அவர் இக்காலகட்டத்தில் அழுத்தமான ஆன்மிகத்திறப்புகளுக்கு ஆளாகி கவிதைகள் எழுதத் தொடங்கினார். ஸ்பெயினின் கிராமங்களுக்குச் சென்று சிறிய மடாலயங்களை அமைத்தார். இவரது எதிரிகள் பல்வேறு சதிவேலைகளில் இறங்கினார்கள். ஒரு கன்னியாஸ்திரியை ஜன்னல் கிராதிகளின் வழியே முத்தமிட்டார் என்று குற்றம் சாட்டினார்கள். அவரை காமத்தில் அறிவிழந்தவர் என்று சொல்லி வேட்டையாடினார்கள். பொதுமக்களும் அவரை பித்தன் என்றும் காமுகன் என்றும் எண்ணினார்கள்.

இறுதிநாள்வரை வெறுப்பை மட்டுமே சந்தித்து வாழ்ந்தார் புனித ஜான். குடல் புற்றுநோய் உடலின் பெரும்பகுதியை சிதைக்க 1590 டிசம்பர் 14ல் மரணமடைந்தார். இறந்த பிறகும்கூட அவரது உடலுக்கு சாந்தி கிட்டவில்லை. உபேடா என்ற ஊரில் மக்கள் அவரை துறவி என்று எண்ணி அவரது உடலை ஒரு பள்ளியில் கிடத்தியிருக்க கும்பலொன்று நுழைந்து அவரது உடைகளையும், காயங்களைக் கட்டியிருந்த துணிகளையும், தசைகளையும்கூட கிழித்தெடுத்துச் சென்றது. அவர் அவசரமாக மேலோட்டமாக புதைக்கப்பட்டார். இருமுறை சடலம் மேலெழவே மீண்டும் புதைக்கப்பட்டார்.

ஆறு மாதங்களுக்குப்பிறகு அவரை காமக்குற்றவாளி என்று தீர்ப்பளித்த சகோலியா நகர மன்றம் அவரது உடலுக்கு உரிமை கொண்டாடியது. எனவே அது தோண்டியெடுக்கப்பட்டது. அவரது உடல் பீரங்கி வாயில் வைத்து வெடிக்கப்பட்டு மீண்டும் துண்டு துண்டாக்கப்பட்டது. ஆனால் மரணத்திற்குப் பின்னர் புனித ஜான் பொதுமக்களால் புனிதராக அடையாளம் காணப்பட்டு வழிபடப்பட்டார். 1618ல் அவரது கவிதைகள் வெளியிடப்பட்டன.

1726 ல் பாப்பரசர் பதிமூன்றாம் பெனடிக்ட் புனித ஜானை கத்தோலிக்க மதத்தின் புனிதர்களில் ஒருவராக அறிவித்தார். அவரது சடலம் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு உபேவாவுக்கு ஒரு காலும், மேட்ரிட் நகருக்கு ஒரு காலும் தரப்பட்டது. விரல்கள் பல புனித இடங்களில் வைக்கப்பட்டன.

எத்தனை மகத்தான அனுபவம். அவனது அன்பின் கரம் கூரிய வாளாக மாறும் பொற்கணம். அவள் கழுத்தை அது வெட்டிச்செல்கிறது மிக மிக இனிமையாக குருதி வழிய அவள் அங்கே இறக்கிறாள். மிச்சமில்லாமலாகிறாள். அவனை தீர்க்கதரிசிகளின் சொற்கள் ஒரு வாள் என்றுதானே சொல்கின்றன. லில்லி மலர் வெளியில் அவளை மிச்சமின்றி கொண்டு உண்டு செல்கிறது அது.

“புனிதஜானை அக்காலகட்டம் புரிந்துகொள்ளாததில் வியப்பில்லை” என்றார் நித்யா. நம்முடைய கால்கள் லௌகீகத்தில் ஊன்றியிருக்கும்வரை நாம் ஒருபோதும் அவரை உள்வாங்கிக்கொள்ள முடிவதில்லை. அவரது ஆன்மா எதற்காக தவிக்கிறதோ அதை நாம் மண்ணில் வைத்துப் புரிந்துகொள்கிறோம். இடுப்புக்குக் கீழே இருக்கும் சில

தசைநார்களின் தினவுக்காகவா இத்தனை சொற்கள்? இத்தனை கண்ணீர்? இத்தனை கனவுகள்? மனித ஆத்மா என்றும் ஏங்கும் ஒரு புனிதமான கூடல் உண்டு. எங்கிருந்து வந்ததோ அங்கே செல்வது. எதுவாக இருந்ததோ அதுவாக ஆவது. எது பிரபஞ்சத்தை நிகழ்த்துகிறதோ அதனால் ஆளப்படுவது. அந்த உத்வேகத்தை காமத்தின் கணங்களினூடாக அடையாளம் காண்கிறது ஞானியர் உள்ளம்.

இந்த மலைச்சரிவுக்கு

ஆடுகளை மேய்க்க வந்தவள்நான்

என் ஆடுகளெல்லாம் சென்றுவிட்டன

நானே மந்தையைப்பிரிந்து தவிக்கும்

ஆடானேன்

என் மேய்ப்பனை தேடுகின்றேன்

என் பழைய உலகம் இன்று விலகிச்சென்றுவிட்டது

என் தலைவனுக்காக மட்டுமே

தவமிருப்பவளானேன்

அவனது நினைவெனும் மணிகளை

என் காதல்சரடால் கோர்த்துக்கொண்டிருக்கிறேன்

புனித ஜானின் பாடல்களில் தேடப்படும் அந்த மேய்ப்பனை எத்தனை காலமாக எத்தனை ஆத்மாக்கள் வழியாக மானுடம் தேடிக்கொண்டிருக்கிறது. இந்தவரிகளை ஒரு கோபிகை பாடியிருக்க முடியும். ஜெயதேவரின் அஷ்டபதியில் அல்லது சைதன்யரின் பகுள் பாடல்களில் இவ்வரிகளை நாம் காண முடியும்.

“எது தேடப்படுகிறதோ அந்த அளவுக்கே பெரிதாகிறது தேடல். கடலை தேடும் தாகமும் முடிவின்மை கொண்டதே. இந்த மலர்வனத்தில் தனித்த இரவில் தன் அனைத்தையும் உதறியவளாக வந்து நின்று வந்து நின்று அவனுக்காக ஏங்கும் இக்காதலியின் காதல் அவனளவுக்கே பெரியது, அவனளவுக்கே மகத்தானது, அவனைப்போலவே அழிவற்றது” என்றார் நித்யா.

“இன்று நவம்பர் இருபத்துநான்காம் நாள். இன்று புனிதஜானுக்கான தினம் இது என்கிறது கத்தோலிக்க தேவாலயம். என் நண்பர் பௌலோஸ் மார் கிரிகரியோஸுக்கு அளிப்பதற்காக நான் இன்று புனித ஜானின் பதினைந்து பாடல்களை மலையாளத்துக்கு மொழியாக்கம் செய்தேன். உஸ்தாத் அதை வாசிக்கட்டும்.”

உஸ்தாதின் குரல் மிகவும் கனத்தது. அவரது முன்னோர்கள் எவரோ இந்துஸ்தானி பாடகர்கள். நித்யாவின் மலையாளம் சமஸ்கிருத ஆதிக்கம் கொண்டது. அவரது முன்னோர் சமஸ்கிருதபண்டிதர்கள் என்பதனால். சமஸ்கிருத உச்சரிப்பை உஸ்தாத் ஷௌகத் அலி அளவுக்கு துல்லியமாக குறைவானவர்களிடமே கண்டிருக்கிறேன். புனித ஜானின் காதல் அவரது குரல் வழியாக உருகி வழிய ஆரம்பித்தது.

வெளியே மழை ஓய்ந்துவிட்டது. லீலை முடிந்த மயக்கம்.

பகுதி 2

2. 1. கத்தோலிக்க மதம் பெண்ணுரிமை ஒரு கடிதம்

அன்புள்ள ஜெ,

“பெண்ணுரிமை பேசப்படும் மேலைநாட்டில் கத்தோலிக்கமதம் இன்றும் பெண்ணடிமைக்கருத்துகளின் தொகையாகவே உள்ளது.”

உங்கள் கட்டுரையில் ஒரு வரி இது. இதில் என்ன சொல்ல வர்றீங்க. கத்தோலிக்கம் பெண்ணடிமைத்தனத்தை போதித்து, அதன் அடிப்படையிலேயேதன் இயங்குகிறதுண்ணா? அது அதிக பட்ச claimணு தோணுது.

1. பெண்ணடிமைத்தனம் என்பது பெண்ணை அடிமையாக்கி ஆள்வது. ஆனால் பெண்ணுக்கு சில உரிமைகள் மறுக்கப்படுவது கொடிய பெண்ணடிமைத்தனம் என முடியுமா?
2. அந்த வரியில் கத்தோலிக்கம் பெண்ணடிமைத் தனத்தின் மேலேயே கட்டி எழுப்பப்பட்ட ஒரு நிறுவனம் போல ஒரு தோற்றம் இருக்குத் (“தொகையாகவே”). பெண்ணுக்கு சம உரிமைகள் வழங்காத நிறுவனமாக மேற்கில் கத்தோலிக்கம் இருக்கிறது எனச் சொல்லலாம் ஆனால் பெண்ணடிமைக் கருத்துக்களின் தொகையயகவே (தொகுப்பாகவே?) இருக்குதா?

இதை எழுதியதால் நான் தீவிர கத்தோலிக்கன் என எண்ணிவிட வேண்டாம் :) Far from it.

அன்புடன்
சிறில் அலெக்ஸ்

அன்புள்ள சிறில்,

ஒரு மதத்தின் கட்டுமானம் மூன்று அடிப்படைகளினால் ஆனது.

1. அதன் படிமக் கட்டுமானம் . அதாவது அதன் அடிப்படை மன உருவகங்கள், தொன்மங்கள், நம்பிக்கைகள் மற்றும் குறியீடுகள்.
2. அதன் தத்துவ தளம். அந்த படிமக் கட்டுமானத்தைக் கொண்டு பிரபஞ்ச இயக்கத்தை தர்க்க ரீதியாக விளக்கும் முயற்சி இது.
3. அதன் நடைமுறை. இது வழிபாட்டு முறை மற்றும் அன்றாட வாழ்க்கைமுறை என இரு தளம் கொண்டது. அம்மதம் அன்றாட நிகழ்வாக இந்த இருதளங்கள் வழியாகவே இயங்குகிறது.

இவை ஒன்றுடன் ஒன்று இணைந்தவையாகவே நமக்குத் தெரிகின்றன என்றாலும் பிரிக்க முடியாதவை அல்ல. இவை வெவ்வேறு காலகட்டத்தில் பிறந்து வளர்ந்தவையாக இருக்கலாம். இவற்றின் வளர்ச்சிப்போக்கும் தனித்தனியானதே. ஒரு மதத்தின் படிம கட்டுமானம் அது முளைத்த நிலத்தின் தொன்மையான வாழ்க்கைமுறையில் வேர்கொண்டிருக்கும்.

மதத்தில் வரும் வளர்ச்சிப்போக்குகளை கடைசியில் இருந்து

எதிர்த்திசையில் பார்க்க வேண்டும். மதத்தின் வழிபாட்டு முறை தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கும். உதாரணமாக கேரள ஆலயங்கள் எல்லாமே தாந்த்ரீக வழிபாட்டு முறை கொண்டவை. அவையெல்லாம் இந்த இருபத்தைந்து வருடங்களில் மெல்ல மெல்ல அர்ச்சனை வழிபாடு நோக்கி நகர்ந்திருப்பதைக் காண்கிறேன். இங்குள்ள நட்டார் சிறுதெய்வங்கள் அனைத்துமே ஆகம வழிபாட்டுக்குள் வந்த படியே உள்ளன. கத்தோலிக்க மதத்தை எடுத்துக் கொண்டால் பெந்தேகொஸ்தே சபையின் போட்டியை எதிர்கொள்ள அவர்களும் 'கரிஸ்மாட்டிக் செண்டர்' போன்ற அமைப்புகளை உருவாக்கி உபவாசஜெபம், எழுப்புதல் கூட்டம் போன்ற முறைகளை நோக்கி நகர்ந்திருக்கிறார்கள். அதேபோல வாழ்க்கைநெறிகளிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன

இன்னும் மெதுவான மாற்றம் தத்துவத்தில் நிகழ்கிறது. இப்போது நம் மதங்களில் நிகழ்வது பொதுமையாக்கும் போக்கு. சைவ,வணைவ மதங்கள் இணைந்து ஒரே மதத்தில் உள்ள கூறுகளாக ஆகின்றன. அதேபோல் கிறித்தவ சபைகளில் ஒரு பொது இறையியலுக்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

ஆனால் அடிப்படையான படிம தளத்தில் மிக மெல்ல நூற்றாண்டுகளாகத்தான் மாற்றம் நிகழ முடியும். பல்வேறுவகை படிமங்களின் உரையாடலுக்கு வாய்ப்புள்ள இந்துமதங்களில் இந்த மாற்றம் ஒப்புநோக்க மேலும் எளிதானது. இறுக்கமான கட்டுமானம் கொண்ட தீர்க்கதரிசி மதங்களில் அது மிக மிக அரிதாகவே நிகழ முடியும்.

*

ஒரு மதத்தின் இயல்பை அடிப்படைப் படிமங்களை வைத்து மதிப்பிடுவதே சிறந்ததாகும். கத்தோலிக்க மதம் பெண்ணடிமைத்தனம் மீது கட்டப்பட்டது என்ற என் கருத்து அப்படி உருவாக்கப்பட்டது. கிறித்தவ மதத்தின் அடிப்படைப் படிமங்களில் மிக முக்கியமானவை இரண்டு பெண்ணின் இரண்டாமிடத்தை வலுவாக நிறுவுகின்றன. ஒன்று ஆதாமின் விலா எலும்பில் இருந்து பெண் உருவானாள் என்பது. இரண்டு ஆதிபாவத்திற்கு பெண்ணின் சபலம் காரணமாக அமைந்தது என்பது.

இந்த அடிப்படைப் படிமத்தை எப்படி மதம் கடந்து செல்ல முடியும்? ஒன்று அதற்கு மாற்றாக பெண்சமத்துவத் தன்மை கொண்ட வேறு ஒரு அடிப்படைப் படிமம் முன்வைக்கப்படலாம். ஆனால் கிறித்தவ மதத்தில் அது சாத்தியமே அல்ல. இரண்டாம் வழி அந்த அடிப்படைப் படிமத்துக்கு வேறு வகையான விளக்கம் அளிக்கப்படலாம். அடிப்படைகளில் அழுத்தமான பிடிவாதம் கொண்ட கத்தோலிக்க மதம் அதை எளிதில் அனுமதிக்கப்போவதில்லை.கருக்கலைப்பு உரிமை, சொத்துரிமை போன்றவை நடைமுறை சார்ந்தவை. அவற்றை மாற்றுவதனால் மதத்தின் அடிப்படை மாறுபடுவதில்லை.

பொதுவாக பண்டைய மதங்கள் அனைத்துமே பெண்ணடிமைத்தன்மை கொண்டவையே. அதில் உச்சம் என சமண மதத்தையே சொல்ல வேண்டும். அதில் பெண்ணுக்கு வீடுபேறு அடையும் வாய்ப்பு கூட இல்லை. ஆனால் ஒரு மதத்தின் அடிப்படைப் படிமம் பெண்ணடிமைத்தனம் சாராததாக இருக்கும்பட்சத்தில், அதை மறு விளக்கமளிக்க வாய்ப்பு இருக்கும் பட்சத்தில், அது மறுபிறப்பு எடுத்து காலத்துக்கு ஏற்ற

மாற்றத்தை அடையலாம். அதற்கு கத்தோலிக்க மதத்தில் என்ன வாய்ப்பு என யோசிக்கலாம்.

ஜெ

அன்பு ஜெயமோகன் அவர்களுக்கு,

பெண்ணியம் குறித்த உங்கள் பதிவுக்கு, பதிலுக்கு நன்றி.

‘பெண்ணுரிமை பேசப்படும் மேலைநாட்டில் கத்தோலிக்கமதம் இன்றும் பெண்ணடிமைக்கருத்துகளின் தொகையாகவே உள்ளது.’

இது நீங்கள் முன்பு கேள்விபதில் ஒன்றில் எழுதியிருப்பது. கத்தோலிக்கம் (பைபிளில்) பெண்ணுக்கு இரண்டாம் இடம் தரப்பட்டுள்ளது எனும் உங்கள் பதிலில் எனக்கு ஒப்புதலே. ஆதாம் ஏவாளின் கதையிலிருந்தும் அதிலிருந்து பெறப்படும் பிந்தைய புரிதல்களிலிருந்தும் (1 Corinthians 11:9) இது தெளிவாகிறது. இதில் எந்தப் பிரச்சினையுமில்லை.

ஆனால் கத்தோலிக்கம் பெண்ணடிமைத்தனத்தின் தொகுப்பாக இன்றும் இருக்கிறதென்பதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. உங்கள் கூற்றில் எனது ஆச்சரியமும், கேள்வியும் மூன்று வார்த்தைகளை முன்வைத்தது.

1. இன்றும்
2. பெண்ணடிமைத்தனம்
3. தொகையாக (மொத்தமே பெண்ணடிமைத்தனத்தை முன்வைத்ததாக)

வெறும் semantics என விட்டுவிட இயலவில்லை. எனவே இது குறித்து என் கருத்துகள்.

என் பார்வையில் பெண்ணடிமைத்தனம் என்பது பல அடுக்குகளைக் கொண்டது. வெறும் தத்துவ நிலையிலேயே அது நின்று விடவில்லை. அதன் படிமங்கள் வேதாந்த சித்தாந்தங்களில் (அல்லது சமூக சித்தாந்தங்களில் துவங்கி) நடைமுறை வாழ்க்கையில் ஆணுக்கும் பெண்ணுக்கும், சமூகத்திற்கும் பெண்ணுக்குமான உறவுகளில் பெண்ணை இழிநிலைக்குத் (வெறும் இரண்டாம் நிலைக்கல்ல) தள்ளும்படி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அப்படி ஒரு ஒருங்கிணைந்த தாக்கத்தை கத்தோலிக்க மதம் இன்றும் ஏற்படுத்திக்கொண்டிருந்தால் அதை பெண்ணடிமைத்தனத்தின் தொகையாக ஏற்றுக்கொள்ளலாம்.

பெண்ணியம் என்பது ஒரு தத்துவார்த்த நிலைப்பாடு. அது பெண்ணடிமைத் தனத்தை எதிர்ப்பதோடு நின்றுவிடவில்லை, மாறாக மேலே சென்று ஆணும் பெண்ணும் சமம் என நிறுவ முயல்கிறது. கத்தோலிக்க இறையியலில் அதற்கு (தற்போது) இடமில்லை.

முதலில், கத்தோலிக்கத்தின் (கிறித்துவத்தின்) துவக்கம் இயேசுவில்தான். இயேசுவுக்கு முந்தைய வரலாறு மனித இனத்தின் பாவத்தின் வரலாறாகவும், இயேசுவை முன்னறிவிக்கும் வரலாறாகவும் பார்க்கப்படுகிறது.

மனித குலத்தின் பாவ வரலாறு என்பது ஆதாம் ஏவாளில் துவங்குகிறது என்பதில் சந்தேகமில்லை. இதில் பெண், வலுவானவளாயில்லாததால்,

சாத்தானால் ஏமாற்றப்படுகிறாள் என்கிற ஒரு ஆரம்பம் நிச்சயம் பெண்ணியத்துக்கு எதிரானதாய் பார்க்கப்படக்கூடிய ஒன்று. ஆனால் ஆதாம் ஏவாளின் கதையிலிருந்து கத்தோலிக்கம் பெற்றுக்கொள்வது பெண் அடிமைப்படுத்தப்படவேண்டும் எனும் கருத்தல்ல, மாறாக மனிதன் பாவச் சூழலில் பிறக்கிறான் எனும் அர்த்தமே. ஏனெனில் ஆதாம் ஏவாள் கதைக்குத் தொடர்ச்சியாக பழைய ஏற்பாடு சொல்லும் காயின், ஏபெல், நோவா, சோதம் கொமொரா எனும் கதைகள் (வரலாறுகள்) மனிதனின் பாவச் சூழலையும், அவன் கடவுளை விட்டு விலகிய தருணங்களையும் மீண்டும் மீண்டும் கடவுளின் இரக்கம் அல்லது கோபம் அவர்கள் மீது எப்படி செயல்பட்டது என்பதையும் காண்பித்து இறுதியாக இயேசுவில் பாவ மன்னிப்பிற்கான புதிய உடன்படிக்கையில் நிறைவேறுகிறது என்பதை நிறுவுகின்றன.

கத்தோலிக்கத்தில் பெண்ணின் இரண்டாம் இடம் நீங்கள் குறிப்பிட்ட படைப்பின் விவரிப்பிலிருந்து மட்டுமே பெறப்படுகிறது. ஆதாமின் விலா எலும்பிலிருந்து ஏவாள் பெறப்பட்டாள் என்பதை விட ஆதாமுக்குத் துணையாக அவள் ஏற்படுத்தப்பட்டாள் என்பதுவே அவளுக்கான இரண்டாமிடத்தை சுட்டுகிறது. இந்தப் படிமம் நீங்கள் குறிப்பிட்டதுபோல எல்லா தொன்மையான மதங்களிலும் உண்டு. அதாவது ஆண் முதலில் தோன்றினான் என்பதுவும் பின்னர் பெண் உருவாக்கப்பட்டாள் என்பதுவும். இந்து மதத்தில் ஆண் தெய்வம்(ங்கள்) முதலில் தோன்றி பின்னர் பெண் தெய்வங்களை உருவாக்கி வைக்கின்றனர். அதாவது தெய்வமாயிருப்பினும் பெண் இரண்டாமிடத்திலிருக்கிறாள்.

பெண்ணின் படைப்பு குறித்த ஆதியாகம வசனங்களைப் பார்ப்போம்.

ஆதியாகமம் (Genesis) 2: 18. “பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.”

இவ்வளவுதான் பெண்ணின் இரண்டாம் நிலையைச் சொல்வது. ஆதாமுக்குத் துணையாக, இரண்டாவதாக படைக்கப்பட்டவள் ஏவாள். கடவுள் மற்ற உயிர்களை இருபாலோடும் படைத்துவிட்டு ஆதாமை மட்டும் தனியாகப் படைத்து, பின் பெண்ணை அவனிடமிருந்து படைத்திருப்பதில் ஆணிய சூழ்ச்சி வெளியாகிறது என்றே கொள்ளலாம். மிக நீண்ட யூத பாரம்பரியத்தின் மரபு அது. கத்தோலிக்கத்தின் மரபும் கூட. ஆனால் கத்தோலிக்கம் இதை பெண்களுக்கெதிரான வாதமாய் பயன்படுத்தியதா? அதுவும் பெண்ணடிமைத்தனத்தின் தொகையாக இன்றும் செயல்படுகிறது எனக் கூறும் அளவுக்கு பயன்படுத்தியதா என்பதற்கு ஆதாரமே இல்லை.

அடுத்து அதே அதிகாரத்தில் பெண்ணை படைத்ததும் அதற்குப் பின்னான சில வசனங்களையும் படித்தால் பைபிள் சொல்லும் பெண்ணின் இரண்டாம் நிலை அத்தனை மோசமானதாயில்லை எனப் புரியும்.

21. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்.

22. தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். (இந்த இடத்தில் அவளை கடவுளின் பரிசாக எண்ணிப் புளங்காகிதம் அடையவும் வாய்ப்புண்டு.)

23. அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். (நீ என்னடா எனக்கு பேரு வைக்கிறது நாயே என இங்கே பெண்ணியம் பேசலாம்)

24. இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். (இங்கே பெண்ணியம் பேசுவது கடினமாகிறது.)

அந்த கடைசி வரியை கூர்ந்து கவனியுங்கள் 'அவர்கள் ஒரே சதையாயிருப்பார்கள்.' 'ஈருயிர் ஓருடல்.'

இந்த வசனங்கள் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன என்றால் பொதுவாக திருமணத்தை ஒட்டிய மதச் சடங்குகளில் பெண்ணடிமைத்தனம் பரவலாக வெளிப்படுவதை உணர முடியும். கத்தோலிக்க திருச்சபையில் நடத்தப்படும் ஒவ்வொரு திருமணத்தின் போதும் மேற்கண்ட வாசகம்தான் முதலாம் வாசகமாய் வாசிக்கப்படும். ஆனால் அதற்குப் பின்னான பிரசங்கத்தில் 'ஓருடல் ஈருயிர்' என்கிற வார்த்தைகளை உச்சரிக்காத சாமியாரே இல்லை. ஆக பெண் இரண்டாவதாக, துணையாளாக படைக்கப்பட்டாள் என்பது அவளுக்கெதிரான வாதமாகவோ அவளை அடிமைப்படுத்த முகாந்திரமாகவோ ஒருபோதும் பார்க்கப்படவில்லை.

கத்தோலிக்க திருமணத்தின்போது ஆணும் பெண்ணும் ஒரே வார்த்தைப்பாடுதான் (சத்தியப்பிரமாணம்) எடுத்துக் கொள்கிறார்கள், என்றால் எங்கிருக்கிறது பெண்ணடிமைத்தனம்? XYZ ஆகிய நான் ABC ஆகிய உன்னை கணவனாக/மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன். இன்பத்திலும் துன்பத்திலும் நோயிலும் சுகத்திலும் உனக்கு என்றும் பிரமாணிக்கமாயிருப்பேன் (Not exact words). இதுதான் இருவருமே எடுத்துக்கொள்ளும் சத்தியப் பிரமாணம்.

(இதில் பெண்ணியத்திற்கெதிரான பாயிண்டை சொல்லணும்னா பொதுவாக பெண் இந்த வார்த்தைப்பாட்டை (Oath/commitment) படிக்கும்போது 'உங்களை' ஏற்றுக்கொள்கிறேன் என்பாள், ஆணோ 'உன்னை' ஏற்றுக் கொள்கிறேன் என்பான். இது மரியாதை நிமித்தமானதாயும் இருக்கலாம். நம்மூரில் வயதுக்கும் மரியாதை உண்டே?)

ஆதியாகமத்தில் 3:20ல் இன்னொரு வசனம் பெண்ணின் நிலையை சொல்கிறது.

20. ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்.

ஏவாள் எனும் பெயருக்கு உயிர்வாழ்வது (To live – Verb) எனும் பொருள். பெண்ணை அடிமைப்படுத்தப்பட வேண்டியவளாய் குறிப்பிட வேண்டுமென்றால் அவளை உயிருள்ளவற்றிற்கெல்லாம் தாய் எனச்

சொல்வானேன்? அதுவும் அவள் இரண்டாமவள் எனச் சொல்லிய அதே புத்தகத்தில் (Genesis) அடுத்த அதிகாரத்தில் (சில வரிகளுக்குள்ளாலேயே). இது தர்க்க ரீதியாக பைபிளை இண்டர்பிரெட் செய்து எடுக்கப்பட்டதல்ல, பைபிளில் இருக்கும் நேரடியான செய்தி. ஆனால் பைபிளில் பெண்ணின் இரண்டாமிடம் உள்ளூர இருக்கும் செய்தி (it can be known only through interpretation.) வெளிப்படையாகத் தெரிந்தாலும் பெண் இரண்டாமவள் என்கிற வார்த்தைகள் அதில் இல்லை. ஆனால் வெளிப்படையாக உயிருள்ளவைக்கெல்லாம் அவள் தாயாகிறாள் எனச் சொல்லப்படுகிறது.

இந்த அடிப்படைப் படிமத்தை எப்படி மதம் கடந்து செல்ல முடியும்? ஒன்று அதற்கு மாற்றாக பெண்சமத்துவத் தன்மை கொண்ட வேறு ஒரு அடிப்படைப் படிமம் முன்வைக்கப்படலாம்.

உண்மை. பெண் ஆணுக்கு சமமானவள் என்பதை நிறுவ கத்தோலிக்கம் முன்வரப் போவதில்லை. ஏனெனில் பெண்ணுக்கும் ஆணுக்குமான ஏற்றத் தாழ்வு அவள் ஆணுக்குத் துணையாய், இரண்டாவதாய் படைக்கப்பட்டாள் என்கிறதிலேயே முடிந்து போகிறது. இதன் நீட்சியாக அவள் ஆன்மாவற்றவளென்றோ, பெண்களெல்லோரும் மட்டும் பாவிகள் என்றோ, அவளுக்கு மோட்சத்தில் இடமில்லை என்றோ, அவள் 'அடிமை'யாய் நடத்தப்பட வேண்டும் என்றோ கத்தோலிக்கம் போதிக்கவில்லை.

நிலைமை அதற்கு எதிரானது. பெண்ணால் ஏற்பட்ட பாவச் சூழல் அவளாலேயே முறியடிக்கப்படும் என்பதுவும் ஆதாம் ஏவாளின் கதையிலேயே சொல்லப்படுகிறது. ஆதாம் ஏவாள் விலக்கப்பட்ட கனியை உண்டபின் கடவுள் என்ன நடந்தது என விசாரித்துவிட்டு கனியை உண்ணத் தூண்டிய பாம்பை(சாத்தான்) கீழ்க்கண்டவாறு சபிக்கிறார்.

ஆதியாகமம் (Genesis) 3:

14. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப்பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டுமிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்;
15. உனக்கும் ஸ்திரீக்கும்(பெண்ணுக்கும்), உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.

இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் பெண் இயேசுவின் தாய் மரியாள். மாதாவின் சிற்பங்கள் பலவற்றில் காலின் கீழே ஒரு பாம்பு, வாயில் ஆப்பிளைக் கடித்தபடி இருப்பதை பார்த்திருக்கலாம். அந்த வடிவமைப்பு இந்தக் கருத்தை முன்வைத்ததே. பெண்ணால் ஏற்பட்ட பாவச் சூழல் பெண்ணாலேயே விடுவிக்கப்பட்டது.

ஏவாள் எனும் கன்னி கடவுளுக்கு கீழ்ப்படியவில்லை அதனால் மனிதனுக்குப் பாவமும் மரணமும் வந்தது, மரியாள் எனும் கன்னி கடவுளின் திட்டத்திற்கு கீழ்ப்படிந்தாள். அதனால் பாவ மன்னிப்பும் முடிவில்லா வாழ்வும் வந்தது, என்பதுதான் கத்தோலிக்க இறையியல் சிந்தனை. இதனாலேயே கத்தோலிக்கம் மரியாளுக்கு ஒரு சிறப்பிடம் தருகிறது. அவளின் சம்மதமின்றி மனிதருக்கு மீட்பு வந்திருக்காது. அவள்

ஏவாளின் வழி வந்த பாவத்திலிருந்து விடுவிக்கும் புதிய ஏவாளாகப் பார்க்கப்படுகிறாள்.

இது மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே கத்தோலிக்கம் எடுத்துக் கொண்ட நிலை. நமது நூற்றாண்டில் போப் பயஸ் ஙீஜஜ இவ்வாறு எழுதுகிறார், "மரியாள், கடவுளின் விருப்பத்தால், மீட்பின் செயல்பாட்டில் மீட்புக்கு காரணியான இயேசுவோடு இணைந்தார், ஏவாள் சாவின் காரணியான ஆதாமுடன் (பாவத்தில்) இணைந்ததுபோல."

(Pope Pius XII is responsible for the principle papal contributions on this theme. In the Encyclical, AD CAELI REGINAM. dated 11 Oct. 1954, he wrote: ""Mary, in the work of Redemption was by God's will, joined with Jesus Christ, the cause of salvation, in much the same way as Eve was joined with Adam. the cause of death. – Read here http://campus.udayton.edu/meditations/neweve.html

இதில் தெளிவாக ஆதாம் பாவத்தின் காரணியாகவும் இயேசு (புதிய ஆதாம்) மீட்பின் காரணியாகவும், ஏவாள் பாவத்தில் இணைந்த (joined) பெண்ணாகவும் மரியாள் மீட்பில் இணைந்த பெண்ணாகவும் பார்க்கப்படுகிறார்கள். இதையே இரண்டாம் வத்திக்கான் (இன்றைய கத்தோலிக்கத்தின் ஆணிவேர்) மறுமொழிகிறது.

பெண் இயற்கையிலேயே, பலமற்றவளாக, இரண்டாமிடம் பெறுகிறாள் எனும் (ஆணியவாத?) கொள்கையை ஏவாளின் 'இரண்டாம்' நிலைக்கு ஒப்பிடலாம். இது பெண்ணியத்துக்கு எதிரானதே (பெண்ணியம் ஆணும் பெண்ணும் அனைத்திலும் சமம் என வாதிடுவதாய்க் கொள்ளுகையில்). ஆயினும் இதை பெண்ணடிமைத்தனத்தின் ஊற்றாய் கத்தோலிக்கம் பயன்படுத்தியது எனவும், ஏவாளின் இரண்டாமிடத்தைக் முன்வைத்து அவள் கீழ்த்தரமாக நடத்தப்பட வேண்டும் என கத்தோலிக்கம் போதித்தது எனவும், கத்தோலிக்கம் (கிறித்துவம்) பெண்ணடிமைத்தனத்தின் தொகுப்பு எனவும் கூறவும் எந்த முகாந்திரமும் இல்லை. இதுதான் என்னுடைய வாதம்.

உங்கள் பதிவில் கீழ்க்கண்டதை இணைத்துள்ளீர்கள்...

"ஆனால் அடிப்படையான படிமத் தளத்தில் மிக மெல்ல நூற்றாண்டுகளாகத்தான் மாற்றம் நிகழ முடியும். பல்வேறுவகை படிமங்களின் உரையாடலுக்கு வாய்ப்புள்ள இந்துமதங்களில் இந்த மாற்றம் ஒப்புநோக்க மேலும் எளிதானது."

நீங்கள் எந்த இந்து மதத்தை முன்வைத்து இந்தக் கூற்றை சொல்கிறீர்கள் எனவும் சொல்லியிருக்கலாம். இந்துமதத்தின் அடிப்படை நம்பிக்கை இதுதான், இவைதான் என எந்தக் கட்டுக்கோப்புமில்லாத நிலையில். இந்தியாவில், இந்துமதம் எனத் தன்னை அழைக்காத எந்தமதத்திற்கும் அப்பால் இருக்கும் எல்லா ஆன்மிகத் தத்துவங்களும் இந்து தத்துவம் எனக் கொள்ளும் நிலையில் நீங்கள் சொல்வதுபோல எந்த ஒரு மாற்றத்தையும் இந்துமதம் மொத்தத்துக்குமாக அடைந்துவிட முடியாது. பெண் ஆணுக்கு சமமானவள் என ஒரு முடிவை இந்துமதம் (மொத்தமாக) அடைய விரும்புகிறது என வைத்துக் கொள்வோம். இது எப்படி சாத்தியமாகும்? கட்டுமானமே அற்றதாகக் கருதப்படும் (இதில் எனக்கு முழுவதுமாக உடன்பாடில்லை) இந்து மதத்தில் ஆன்மிகத்தின் அடிப்படையில் எப்படி

இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துவது? தத்துவங்களை, கொள்கைகளை அவை தரும் வாழ்க்கை நெறிகளை மொத்த மதத்திற்குமாய் அலசி ஆராய்ந்து முடிவுகளை, மாற்றங்களை எட்டும் ஒரு அமைப்பு இல்லாத ஒரு மதத்தில் எப்படி ஒட்டுமொத்த மாற்றங்களை உருவாக்க முடியும்?

அப்படியானால் இந்து மதத்தில் மாற்றங்களே நடைபெறவில்லையா எனக் கேட்கலாம். எனக்கு தெரிந்த வகையில் இந்துமதம் மொத்தத்துக்குமாய் நிகழ்ந்த இறையியல் ரீதியான மாற்றங்கள் என அதிகமில்லை. சிறுதெய்வங்களை பெருந்தெய்வங்களின் வடிவங்களாய் பொருத்தியதைத் தவிர வேறொரு இறையியல் மாற்றத்தையும் இந்துமதம் மொத்தமாகப் பெறவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. இந்துமதம் மொத்தத்திற்குமான சமூக சீர்திருத்த மாற்றங்கள் எதுவும் மத ரீதியாய் எழுந்ததாக எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிப்பு போன்ற மாற்றங்களில் சமூக மாற்றக் கூறுகளே அதிகம். இதில் ஆன்மிக நோக்கம் குறைவு. ஏனென்றால் சதி என்பதே ஒரு சமூகப் பழக்கம். ஆன்மிகப் பழக்கமல்ல என நான் கருதுகிறேன். அதாவது சதி என்பதை அங்கீகரிக்கப்பட்ட இந்து முறையாக ஏற்றுக்கொள்வதை விட ஒரு சமூக அவலமாகவே பார்க்க விரும்புகிறேன். 1. சதி இந்து மதம் முழுவதுமாய் பின்பற்றப்பட்டதல்ல, 2. இந்துமதத்தின் தொன்மங்கள் என நான் நினைக்கும் வேதங்களிலோ அல்லது பிற மத நூல்களிலோ சதி எனும் பழக்கத்திற்கு இடமிருப்பதாய் (எனக்கு) தெரியவில்லை. அது தொன்மம் முதல் இருக்கும் பழக்கமும் அல்ல. எனவே சதி ஒழிப்பு ஒரு ஆன்மிக முனைப்பல்ல மாறாக ஒரு சமூக முனைப்பே.

ஆக ஒரு ஒருங்கிணைந்த வடிவமைப்பைப் பெறாத, வேறுபட்ட (சில நேரங்களில் முற்றிலும் வேறுபட்ட) தொன்மங்களிலிருந்து ஊற்றெடுக்கும் வெவ்வேறு இந்து தத்துவ ஞான மரபுகளில் ஒருங்கிணைந்த மாற்றம் எதற்கும் இடமில்லை. அப்படி இருந்திருந்தால் இன்று இந்து மதத்தின் மீது வைக்கப்படும் எண்ணற்ற குற்றச்சாட்டுகளை சமூக நோக்கில் அலசி, ஆன்மிகம் வழியாக, தொன்மங்களை சீர்தூக்கிப் பார்த்து மாற்றியமைக்க முடியும். அப்படிச் செய்ய இயலாமல் தொன்மங்களில் சிக்கி நிற்கிறது. (இப்படி ஒரு மாற்றத்தை ஏற்கும் அமைப்போ சீர்திருத்தமோ வரும்வரை, இந்த நூற்றாண்டுக்கும் வரும் நூற்றாண்டுகளுக்குமாய் தன்னை பொருத்திக் கொள்ளாததுவரை அல்லேலூயாக் கூடங்கள் அதிகரிக்க வாய்ப்புகள் நிச்சயம் உள்ளன என்பது என் தாழ்மையான கருத்து.)

இந்துமதத்தின் பல கிளைகளில்/அங்கங்களில் ஆன்மிகத்தின் அடிப்படையில் மாற்றங்கள் நிச்சயமாய் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக உங்கள் எழுத்திலிருந்தே தெரியப்படும் நாராயண குரு, அய்யன் காளி போன்ற குருக்களின் ஆன்மிக வழியிலான சமூகப் பங்களிப்புகள். இவை இந்து மதம் மொத்தத்திற்குமானதல்ல. இந்துமதம் மாற்றங்களுக்கு ஏதுவானது, இங்கு மாற்றம் செய்வது எளிது என பொதுவாக நீங்கள் சொல்வது ஏற்க இயலாத வாதம். மாறாக இந்துமதத்தின் சில கிளைகளில் (தரிசனங்களில்?) இது எளிதில் சாத்தியமாகிறது என்றிருக்கலாம் (Another issue with semantics may be).

தொடர்ந்து நீங்கள்,“இறுக்கமான கட்டுமானம் கொண்ட தீர்க்கதரிசி

மதங்களில் அது மிக மிக அரிதாகவே நிகழ முடியும்" எனச் சொல்கிறீர்கள்.

இங்கே கத்தோலிக்கம் ஆபிரகாமிய, தீர்க்கதரிசன மதமாயிருந்தபோதும் மற்ற இரு மதங்களிலிருந்தும் (யூத, இஸ்லாம்) மாறுபட்டே உள்ளது. (மற்ற மதங்களைப் பற்றிய என் கருத்துகள் மேலோட்டமான தகவல்களை முன்வைத்தே எழுதுகிறேன் ஆழமான ஆராய்ச்சி எதுவும் நான் செய்யவில்லை – இந்து மதம் குறித்த குறிப்புகளுக்கும் இது பொருந்தும்).

கத்தோலிக்கம் இறைதூதர் (இங்கே இறைவன் அவரே (God himself) சொல்வதை வைத்துக்கொண்டு மட்டும் செயல்படும் மதம் அல்ல. கத்தோலிக்க திருச்சபை (church) தனக்கென பல உரிமைகளைக் கொண்டுள்ளது. அதாவது இயேசுவின் போதனைகளை (தூய ஆவியின் துணையோடு) மறு ஆய்வு செய்வதற்கும், புதிய அர்த்தங்களை உருவாக்குவதற்குமான அதிகாரம் திருச்சபைக்கு (சற்று மிகையாகவே) இருக்கிறது. Infallibility என்பது (இறைவனின் அருளால்) திருச்சபை தவறிழைக்க சாத்தியமே இல்லை என்கிறது. (எல்லா நேரங்களிலும் இந்த அதிகாரம் வழங்கப்படவில்லை. அதற்கென் கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டும்).

இந்த அடிப்படையிலேதான் உலகம் தட்டை எனும் நம்பிக்கை மாறியது (பைபிளின் விவரிப்பில் உலகம் தட்டையானது, சூரியன் உலகைச் சுற்றிவருகிறது), பரிணாமக் கொள்கை ஆன்மிக நோக்கில் (விலங்கிலிருந்து மனிதன் உருவாக இறைவன் காரணியாயிருந்தார்) ஏற்றுக்கொள்ளப்படுகிறது, ரெனேசான்ஸ், Protestant Reformation போன்ற புரட்சிகளுக்குப் பின் ஒவ்வொரு முறையும் திருச்சபை தன்னை புதுப்பித்துக்கொண்டது, பல மாற்றங்களுடன்.

இரண்டாம் வத்திகான் கவுன்சில் (19621965) தற்போதைய கத்தோலிக்கக் கொள்கைகள் பலவற்றையும் உருவாக்கிய முக்கிய நிகழ்வு. இதில் மாற்றியமைக்கப்பட்ட இறையியல் கொள்கைகளும், தத்துவங்களும், வழிபாட்டு முறைகளும், வாழ்வியல் கொள்கைகளும் பல. முதன் முதலாய் கத்தோலிக்க திருச்சபைக்கு வெளியேயும் மீட்பு உண்டு என அறிவித்தது (எல்லோருக்கும் இல்லை). இது திருச்சபைக்குள்ளேயே எதிர்ப்பலைகளை ஏற்படுத்திய முடிவாகும்.

திருச்சபை தன்னை மீண்டும் மீண்டும் புதுப்பித்துக் கொள்கிறது. மாற்றம் இங்கே எளிதாய் நடப்பதில்லை எனும் வாதம் அடிப்படையற்றது, இதற்கு மாறாக மாற்றங்களை எளிதில் மேற்கொள்ள வசதியான கட்டமைப்பை கொண்டது கத்தோலிக்கம். இப்படி ஒரு கட்டமைப்பை வேறு எந்த மதங்களிலும் நான் காணவில்லை. கிட்டத்தட்ட ஒரு ஜனநாயக நாட்டின் செயல்பாட்டிற்கு ஒத்தது இந்தக் கட்டமைப்பு (பொதுத் தேர்தலைத் தவிர).

அண்மையில் ஏற்பட்ட சில மாற்றங்களாக ஞானஸ்நானம் பெறாமல் இறந்து போன குழந்தைகளுக்காக (திரிசங்கு சொர்க்கம் போல) லிம்போ என ஒரு இடம் இருப்பதாக கத்தோலிக்க மதம் முன்பு சொல்லி வந்தது. லிம்போ என்பது இல்லை எனவும் அவர்கள் சொர்க்கத்துக்கே செல்வார்கள் எனவும் அண்மையில், தற்போதைய போப் அறிவித்தார். திருச்சபை முழுவதற்குமான மாற்றம். அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்றான சொர்க்கம் குறித்த மாற்றம்.

அமெரிக்காவில் பாலியல் கொடுமை செய்த பாதிரியார்களுக்கெதிராக திருச்சபையின் செயலின்மையை (அவர்கள் திருச்சபையால் க(த)ண்டிக்கப்படவோ, விலக்கிவைக்கப்படவோ, அல்லது சட்டத்தின் முன் திருச்சபையால் நிறுத்தப்படவோ இல்லை) ஆராய்ந்து இனிமேல் பாலியல் கொடுமை செய்வதாகத் தெரிந்தால் அந்த பாதிரியாரை விலக்கி வைக்கும் முடிவொன்றை திருச்சபை எடுத்துள்ளது. சமூக நோக்கிலான ஒரு முடிவு.

இறுக்கமான கட்டுமானத்துடன் இருப்பதாலேயே ஒரு அமைப்பு மாற்றத்திற்கு இசையாது என்பது சரியானதா அல்லது ஒருங்கிணைந்த மாற்றங்கள் நிகழ்த்தப்பட, ஒட்டு மொத்த முடிவுகள் எடுக்கப்பட அப்படி ஒரு கட்டுமானம் தேவை என்பது சரியானதா?

பெண்ணும் ஆணும் சரி நிகர் எனும் முடிவை திருச்சபை எடுக்க விரும்பினால் அதற்குத் தடை ஒன்றும் இருக்கப் போவதில்லை. ஆனால் அதற்கான அவசியம் எதுவுமே இல்லை. ஒரு மதக் கோட்பாடு அல்லது நம்பிக்கை பெண்ணை இரண்டாம் இடத்தில் வைத்துள்ளது என்பதைக் கொண்டு மட்டும் அது பெண்ணடிமைத் தனத்தின் தொகுப்பு மதம் என்று சொல்லிவிட முடியாது, மாறாக அப்படிப்பட்ட நம்பிக்கையிலிருந்து தன் மதத்தின் அங்கத்தினருக்கு பெண்ணைப் பற்றிய இழி போதனைகளை அது செய்யுமானால், அல்லது பெண்ணை இழிவு செய்யும் சடங்குகளையும் ஆன்மிக முயற்சிகளையும் அது பரவலாக்கியிருக்குமானால், தனி மனித, குடும்ப வாழ்வில் பெண்ணுக்கு சரி சமமான இடமில்லை என கட்டுப்பாடுகளை விதிக்குமானால் அந்த மதம் பெண்ணடிமைத்தனத்தின் தொகை எனச் சொல்லிவிட முடியும்.

கத்தோலிக்கம் ஒரு உயிரோட்டமுள்ள மதம் (lively, living எனப் பொருள் கொள்ளவும்) அதாவது தொன்மங்களைப் பின்பற்றி அது நின்றுவிடவில்லை. தொடர்ந்து தொன்மங்களை ஆராய்கிறது, அறிவியலோடு இசைய முயல்கிறது (அப்படி இல்லாத கறுத்த காலம் இன்றும் இல்லை). பின்நவீனத்துவ நோக்கில் படிக்கப்படும் பைபிள் கதைகள் ஏராளம். (அவை மீண்டும் பைபிளின் வேறொரு பரிமாணத்தை தொட்டுச் செல்வதாகவே இருந்தபோதும்).

உதாரணத்திற்கு இயேசு ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் ஐயாயிரம் பேருக்கு பகிர்ந்தளித்ததாக ஒரு புதுமை (Miracle) பைபிளில் சொல்லப்படுகிறது. இதை பின்நவீனத்துவப் பார்வையில் அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள் பலரிடமும் உணவு இருந்ததென்றும் இயேசு தன் சீடர்களிடமிருந்து உணவு வாங்கி பகிர்ந்தபோது அனைவரும் தங்கள் உணவைப் பகிர ஆரம்பித்ததாகவும் அதன் மூலம் எல்லோரும் பசி ஆற முடிந்ததாகவும் மறுவாசிப்பு செய்யப்படுகிறது. இயேசு புதுமையாக (மாயாஜால டைப் மிராக்கிள்) இதைச் செய்யாமல் மக்கள் மனதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறார். இதுவும் மிராக்கிள்தான். ஒரு சமூக மிராக்கிள். தனிப்பட்ட முறையில் நான் ஏற்றுக்கொள்ளும் இயேசுவும் இத்தகைய சமூக மிராக்கிள் செய்ய வல்லவரே. அந்த சமூக மிராக்கிள்தான் அவரது முக்கிய பணி. மற்றதெல்லாம் வெறும் காற்றில் உலவும் தத்துவங்கள் என ஒதுக்கி விட்டுவிடலாம்.

கத்தோலிக்கம் உயிரோட்டமானது என்பதை இன்னொரு கருத்தைக் கொண்டும் சொல்லலாம். பல மதப் புத்தகங்களோடு ஒப்பிடுகையில்

பைபிள் உள்ளடக்கத்தில் மிகச் சிறியது. இயேசுவின் படிப்பினைகளை மட்டும் எடுத்துக்கொண்டால் அவை சில பக்கங்களே. ஆனால் இந்த சில பக்கங்களின் அடிப்படையில் பல்வேறு கருத்துகளை திருச்சபை தினமும் உருவாக்குகிறது. சாமியாரின் பிரசங்கம் துவங்கி, பல பதிப்புக்கள் வழியாகவும் பல புதிய கருத்துகளை வெளியிட்டு வருகிறது. லட்சக்கணக்கான புத்தகங்கள், வெளியீடுகள் கருத்துப் பரிமாற்றங்கள் கத்தோலிக்க திருச்சபையின் சார்பில் நிகழ்கின்றன. இவை எவற்றிலேனும் பெண்ணடிமைக்கு ஆதரவான கருத்துகள் (பெண்ணியத்துக்கு எதிரான அல்ல) இருக்குமேயானால் கத்தோலிக்கம் இன்றும் பெண்ணடிமைத்தனத்தின் தொகையாக இருப்பதாக ஏற்றுக்கொள்ளலாம்.

அப்ப ஏன் பெண்கள் பாதிரியார்கள்போல பூசை செய்ய அனுமதி மறுக்கப்படுகிறது அல்லது கருக்கலைப்புக்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்கிற கேள்விகள் எழலாம்.

பெண்ணுக்கு இந்த உரிமைகள் மறுக்கப்படுவது நீங்கள் சொல்லும் ‘பெண்ணின் இரண்டாமிடத்தை’ முன்வைத்தல்ல, இந்தத் தடைகளுக்குப் பின்னிருப்பது ஏவாளின் பலவீனமும் அல்ல. மாறாக இவற்றிற்கு வேறு காரணங்களே முன்வைக்கப்படுகிறது.

கருக்கலைப்புக்கான உரிமை மறுக்கப்படுவது (கரு) உயிர் வாழ்வதற்கான உரிமையை அது பறிக்கிறது என்பதாலேயே. பெண் அடிமை என்பதால் அல்ல. (The Holy See continues to insist that no human right to abortion exists because it contradicts the human right to life. The human right to life is the basic human right: all others stem from it. Human life deserves respect in any circumstance. – Holy See's position at Beijing Conference on Women)

பெண்கள் பாதிரியாராக ஏன் இருக்கக் கூடாது? பாதிரியார் பட்டம் என்பது இயேசுவின் 12 அப்போஸ்தலர்களின் மரபில் வரும் பட்டம். இயேசுவின் சீடர்கள் எல்லோரும் ஆண்கள் என்பதாலேயே இந்தப் பட்டம் பெண்களுக்கு வழங்கப்படவில்லை. ஆனால் ஒரு பூசைக்கான ஆயத்தங்களிலும், பூசையின் செயல்பாடுகளிலும் ஒரு பாதிரியாரின் பங்கு 20% என்றே கணக்கிடப்படுகிறது. மீதமுள்ள எண்பது சதவீத நடவடிக்கையில் பெண்கள் கலந்துகொள்ளலாம். கத்தோலிக்கத்தின் மற்ற வழிபாட்டு முறைகளில் (நற்கருணை ஆராதனை தவிர்த்து) பெண்கள் தாராளமாய் முன்னின்று நடத்தலாம். கன்னியாஸ்திரிகள் பிரசங்கம் செய்யும் பூசைகளில் பங்கேற்றிருக்கிறேன், இப்போது கிட்டத்தட்ட அனைத்து கோயில்களிலும் கன்னியாஸ்திரிகள் (அமெரிக்காவில் திருமணமானவர்கள் கூட) நன்மை வழங்குவதற்கு அனுமதி உண்டு, பெண்கள் பைபிளை வாசிக்கலாம். சாதாரண, பாதிரியாரில்லாத ஒரு ஆண் என்னென்ன செய்யலாமோ அத்தனையும் கத்தோலிக்க சடங்குகளில் பெண் செய்யலாம். அசாதாரண சமயங்களில் பெண்களும் சாமான்யர்களும் ஞானஸ்நானம் வழங்கலாம், பாவ மன்னிப்பு வழங்கலாம்.

கத்தோலிக்கம் இன்றும் பெண்ணடிமைத்தனத்தின் தொகையாக உள்ளதா அல்லது கலாசாரச் சூழலில் எழும் பெண்ணடிமைத் தனத்தை எதிர்த்துப் போராடும் ஒரு சக்தியாக விளங்குகிறதா என்பதை பீஜிங்கில் நாலாவது உலக மகளிர் மாநாட்டில் போப் ஜான்பால் IIஇன் சார்பில் படிக்கப்பட்ட

http://www.un.org/esa/gopherdata/conf/fwcw/conf/gov/950905214652.txt படிப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். இதன் சுருக்கம் http://www.its.caltech.edu/nmcenter/womencp/beijing.html.

(இதே மாநாட்டில் அப்போதைய பாகிஸ்தான் பிரதமரின் அறிக்கை http:/www.un.org/esa/gopherdata/conf/fwcw/conf/gov/950904205603.txt.Interesting to read

இதுபோன்ற அதிகாரபூர்வமான, உலகப் பார்வைகொண்ட, பெண்ணுக்கு ஆதரவான ஆக்கச் செயலுக்கு உலக அளவில் அறைகூவல் விடுக்க 'இன்றும் பெண்ணடிமைத்தனத்தின் தொகையாக' இருக்கிற கத்தோலிக்க கிறித்துவத்தால் எப்படி சாத்தியமாகும்?

இன்னும் விவாதங்களை வெவ்வேறு வழிகளில் கொண்டு செல்லலாம். கத்தோலிக்கத்தின் கறுப்பு நாட்களிலிருந்து உதாரணங்களை எடுத்துச் சொல்லலாம். ஆயினும் இன்று, இன்றளவில் கத்தோலிக்கம் தன் போதனைகளில், செயல்பாட்டில் பெண்ணடிமைத்தனத்தை நிலைநிறுத்துகிறது என்பது மிக மிக மிகைப்படுத்தப்பட்ட ஒரு கூற்று.

அன்புடன்
சிறில் அலெக்ஸ்

2. 2. காமமும் கிறித்தவமும், ஒரு கடிதம்

ஜெ,

விக்டோரிய ஒழுக்கவியல் காமத்தை ஒடுக்கிவைத்த வெறும் வறட்டு ஒழுக்கவியல் அல்ல. அது இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் நவீன உலகத்தின் பல அடிப்படைகளை உருவாக்கியது. அது இன்றைய சமூகங்களில் இயல்பாகவே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்தியாவிலும் அது அவ்வாறே இயல்பாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் என நம்புகிறேன். அல்லது நம் இந்திய மரபிலும் அத்தகைய ஒழுக்க விதிகள் இருந்திருக்கும். அவற்றின் அடிப்படைகளிலும் காந்தியின் காம பரிசோதனைகள் நிராகரிக்கப்பட்டிருக்கலாம். திருமணத்திற்கப்பாற்பட்ட காம நடவடிக்கைகளை நம் இலக்கியங்கள் 'கள்ள ஒழுக்கங்கள்' என்றுதான் குறிப்பிடுகின்றன. 'கற்பு' நம் மரபின் பிரிக்க முடியாத ஒழுக்கக் கூறில்லையா?

"காந்தி கிறித்தவத்தில் இருந்து தன் புலனடக்கமுறைகளை எடுத்துக்கொண்டார். குற்றவுணர்ச்சியையே புலனடக்கத்துக்கான முக்கியமான கருவியாக அவர்கள் நினைக்கிறார்கள்" என்கிறிர்கள்.

கிறித்துவத்தில் புலன் ஒடுக்கம் இருக்கிறது, ஆனால் புலனடக்க 'முறை' என்று ஒன்றிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. குற்ற உணர்ச்சியை ஏற்படுத்துவதென்பது ஒரு முறையாகுமா? அது விதிகளை மீறும்போது தாமாகவே வந்துவிடுகிறது. மேலும் புலனடக்கத்தை மீறும்போது மட்டுமே குற்ற உணர்ச்சி ஏற்படுவதில்லை. ஆக அது ஒரு புலனடக்க 'முறை' அல்ல.

கிறித்துவ இறைப்பணியாளர்களுக்கு கிறித்துவம் சொல்லும் புலனடக்கம் இயேசுவையும் இறைப் பணியையும் முன்வைத்ததே. ஒரு அதி உன்னத சேவையை செய்ய முனைபவன் அதில் முழு கவனத்தையும் செயல்படுத்த வேண்டும் என்பதன் அடிப்படையில் அது உருவாகியது. இதையே காந்தியும் ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஏன் திருப்பணியாளர்கள் 'உலகக்' கவலைகளிலிருந்து விடுபட்டு இறைப் பணியில் ஈடுபடுவது அவசியம் என்பதை புனித பால் முதன் முதலில் குறிப்பிடுகிறார் (1 கொரிந்தியர் 7:7 – 8 , 32 – 35). இதுதான் கிறித்துவ பணியாளர்கள் பிரம்மச்சரியம் ஏற்பதன் அடிப்படை.

"காமத்தை ஆதிபாவம் என்று விலக்கும் கிறித்தவம் அதை சாத்தானின் ஆயுதம் என்கிறது."

முதலில் ஆதி பாவம் என்பதே காமம்தான் என கிறித்துவம் நம்பவில்லை. ஆதிபாவத்தின் விளைவாக மனிதன் காமம் எனும் 'சக்தியின்' வயப்பட்டான் என ஒரு சிந்தனை இருந்தது. ஆதி பாவம் ஒரு உடல் ரீதியான பாவம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கை எனலாம். அது காமம்தான் என நம்பிக்கை இல்லை. குறிப்பாக புனித அகஸ்டினின் இறையியல் இதைச் சொல்கிறது.

அகஸ்டின் ஆன்மாவையும் உடலையும் இருவேறாகப் பார்க்கிறார். ஆன்மாவும் உடலும் இணைந்து செயல்படும்போது அது பாவம் இல்லை. ஆனால் ஆன்மாவுக்கு எதிரான, வெறும் உடலை மகிழ்விக்கும்

செயல்களையே பாவம் என வரையறுக்கிறார் அகஸ்டின். விலக்கப்பட்ட கனியை ‘உண்பது’ என்பது ஆன்மாவுக்கு எதிரான உடல் இச்சையைத் தேடிய நிகழ்வாக அகஸ்டின் கருதுகிறார். இன்றைய கிறித்துவத்தின் பல அடிப்படை இறையியல் கோட்பாடுகளை உருவாக்கியவர் அகஸ்டின் என்பது குறிப்பிடத்தக்கது. ஆன்மாவின் இசைவோடு செய்யப்படுகிற காமம் தவறானதல்ல எனும் ‘வாதத்தை’ அகஸ்டின் முன்வைத்தார். அகஸ்டினின் காலத்தில் (4ஆம் நூற்றாண்டு) இதுபோன்ற விவாதங்கள் பல தரப்பிலிருந்தும் கிறித்துவத்திற்குள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. சொல்லப்போனால் இன்றுவரை அவை தொடர்கின்றன.

கிறித்துவம் காமத்தை எங்கே அங்கீகரிக்கிறதென்றால், திருமணத்தின் வழியாக. திருமணத்தின் வழியாக மட்டும். ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையேயான திருமணத்திற்குள்ளால் மட்டும். இதையும் புனித அகஸ்டினே வரையறுத்திருக்கிறார். அவர் திருமணத்தின் ஆசீர்வாதங்களாக மூன்றைச் சொல்கிறார். ஒன்று “மக்கட் பேறு, பரஸ்பர நம்பிக்கை, பிரிக்கமுடியாத ஒன்றிப்பு. திருமணத்தில் இணைய விரும்புபவனுக்கு இந்தக் கொடைகள் வழங்கப்படுவதாக.”

இதில் மக்கட்பேறு என்பது காமம் இல்லாமல் சாத்தியமில்லை. மக்கட் பேறு என்பது கடவுளால் மனிதனுக்கு வழங்கப்பட்ட கொடை மட்டுமல்ல கட்டளையுமாகும். பல்கிப் பெருகி இந்த பூமியின் பரப்பை நிரப்புங்கள் என்பது மனிதனைப் படைத்த உடனேயே கடவுள் அளித்த கட்டளையும், வாக்குறுதியும்.

அப்படியானால் கணவனும் மனைவியும் குழந்தை பேறுக்கன்றி வெறும் இன்பத்துக்காக உடலுறவு கொள்ளக் கூடாதா எனும் கேள்வி எழுகிறது. அதற்கான பதில் மூன்றாவது கொடையான ‘நிரந்தர ஒன்றிப்பில்’ உள்ளது. ஆணும் பெண்ணும் நிரந்தர இணைப்பில் நிலைக்க அவர்களுக்குள் அந்தரங்க காம உறவு தேவைப்படுவதை, அது நிரந்தர ஒன்றிப்பின் அடையாளமாகவும் கருவியாகவும் திகழ்வதை திருச்சபை ஏற்றுக்கொள்கிறது. இதை திருமணத்துக்கு முன்பான வகுப்பில் கத்தோலிக்க இளைஞர்களுக்கும் இளைஞிகளுக்கும் பாடமாக சொல்லித் தருகிறார்கள்.

கிறித்துவம் குருத்குவத்தையும் திருமணத்தையும் ஒரே தட்டில் வைத்துதான் பார்க்கிறது. இரண்டுமே அருட்சாதனங்களாகவே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதில் ஒன்றைவிட இன்னொன்று உயர்ந்ததல்ல.

மிகத் தெளிவாக கிறித்துவம் ‘முறையான’, திருமணத்துக்குட்பட்ட காமத்துக்கு எதிரானதல்ல என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. மேலும் திருச்சபை திருப்பணியாளர்களுக்கு பிரம்மச்சர்யத்தை பரிந்துரைப்பது அவர்களின் பணியின் முக்கியத்துவம் கருதியேயன்றி காமத்தின் இழிவால் அல்ல. கத்தோலிக்க திருச்சபைக்குள் சில கிளைகளில் குருக்கள் திருமணம் செய்ய அனுமதி உள்ளது. அண்மையில் சர்ச்சைக்குள்ளாகிய வத்திக்கானின் அறிவிப்பில் ஆங்கிலிக்கன் திருச்சபையிலிருந்து வந்து கத்தோலிக்கத்தில் இணைபவர்களுக்கு அவர்கள் வழக்கப்படியே திருமணத்துடனான குருத்துவம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அகஸ்டினின் இறையியல் மற்ற பிற தத்துவங்களையும் இறையியலைப் போலவே பலவிதமான உரையாடல்களையும் சாதகமான பாதகமான விவாதங்களையும் உருவாக்கியுள்ளது. ஆனால் நான் விளக்கியிருப்பது பரவலான கிறித்துவ நம்பிக்கை என கருதுகிறேன்.

என் தனிப்பட்ட அனுபவத்தில் காமத்தை ஒரு மாபெரும் சக்தியாகக் காண்கிறேன். அது இந்த பிரபஞ்சத்தை இயக்கும் சக்திகளில் ஒன்று என்பதில் சந்தேகமே இல்லை. காமத்தை ஒடுக்குவது ஒரு மகத்தான தியாகமாக தென்படலாம். ஆனால் அது இயற்கைக்கு, அதன் சக்திகளுக்கு எதிரான ஒரு மாபெரும் போர். அதனாலேயே அது மாபெரும் தியாகமாகவும் கருதப்படலாம். ஒருவகையில் தன் குறிக்கோளை அடைய விடாமல் தடுக்கும் தடையாகவே காமம் வந்து முடியலாம். தன் வாழ்நாள் முழுவதுமே ஒருவர் அதனோடு சண்டை போட்டுக்கொண்டே செலவழித்துவிடலாம். நான் அந்த முயற்சியில் ஈடுபட்டு தோற்றுப்போயிருக்கிறேன். அதுவும் அந்த இளம் வயதில். ஆனால் அது சிறந்த அனுபவமாக அமைந்தது என்பதில் சந்தேகமேயில்லை.

அன்புடன்
சிறில் அலெக்ஸ்

அன்புள்ள சிறில்,

முதலில் விக்டோரிய அணுகுமுறைக்கும் இந்தியாவில் இருந்த பொது ஒழுக்க நெறிக்கும் இடையே உள்ள வேறுபாட்டைச் சொல்லிவிடுகிறேன். இந்தியாவில் பொது ஒழுக்க நெறி என்பது இங்கிருந்த ஏராளமான பழங்குடிப்பண்பாடுகளில் இருந்து கிளைத்தது. ஆகவே அது சாதிக்கு ஒன்றாகவும் பிராந்தியத்திற்கு ஒன்றாகவும் இருந்தது. பின்னர் இந்தியாவின் ஆன்மிக வழிபாட்டு நம்பிக்கைகளை இணைத்த வைதிக மதம் அவற்றுக்கு ஒரு பொதுத்தன்மையை உருவாக்கியது. அவ்வாறாக இந்தியசமூகம் என்ற உருவம் திரண்டுவர ஆரம்பித்தது. இவ்வாறுதான் இந்து தர்ம சாஸ்திரங்கள் உருவாயின. தர்மசாஸ்திரங்கள் நூற்றுக்கணக்கில் உருவாயின. பின் அவை ஒன்றுடன் ஒன்று உரையாடி அவற்றுக்கிடையே பொது நெறிகள் கண்டடையப்பட்டன.

பின்னர் பௌத்த, சமண மதங்கள் உருவாகி வந்தன. அவை இந்தியாவெங்கும் சீரான அற நெறிகளை உருவாக்கின. இந்தியாவிலுள்ள முக்கியமான நீதிநூல்கள் பௌத்த, சமண மதப்பின்புலம் கொண்டவை. வைதீக நெறிகள் அரசாங்கம் வழியாகவும் ஆலயம் வழியாகவும் நிறுவப்பட்டபோது இவை கல்விச்சாலைகள் வழியாக நிறுவப்பட்டன. இன்று நாம் இந்தியாவில் காணும் ஒழுக்க நெறிகள் என்பவை இவ்வாறாக படிப்படியாக திரண்டு வந்தவையே. தர்ம சாஸ்திரங்களின் பரிணாமத்தை பி.வி.காணே அவரது புகழ்பெற்ற நூலில் விரிவாகபேசியிருக்கிறார்.

இந்த ஒழுக்க நெறிகளுக்கும் விக்டோரிய நெறிகளுக்கும் இடையே என்ன வேறுபாடு? விக்டோரிய ஒழுக்க நெறி முழுமுற்றான ஒழுக்க விதிகளை உருவாக்கியது. அதில் காமம் இடக்கரடக்கலாகவே இருக்க வேண்டும் என்றால் எந்நிலையிலும் அது அப்படித்தான். ஆனால் இந்திய ஒழுக்க நெறி அப்படிப்பட்டதல்ல. சாமானியம் – விசேஷம் (நடைமுறை, சிறப்புத்தளம்) என அது தன்னை இரண்டாகப் பிரித்துக்கொண்டது. சாமானியதளத்தில்,

அன்றாட தளத்தில் ஒன்று ஒழுக்கக் கேடாக, தடைசெய்யப்பட்டதாக இருக்கலாம். ஆனால் விசேஷ தளத்தில் அதற்கு சமூக அனுமதி உண்டு. கறாரான ஒழுக்கநெறி புழங்கிய சமூகங்களில் தாந்த்ரீகம் அனுமதிக்கப்பட்டது இவ்வாறுதான். கோயிலில் நிர்வாணச்சிலைகள் அங்கீகரிக்கப்பட்டது இவ்வாறுதான். காவியங்களில் காமம் அனுமதிக்கப்பட்டதும் இவ்வாறுதான்.

அதாவது விதிவிலக்குகளுக்கு, மீறல்களுக்கு ஓர் இடம்விட்டுத்தான் இந்திய நடைமுறை ஒழுக்கம் இருந்திருக்கிறது. மீறல்கள் என்பவை ஒரு சமூகத்தின் தீவிரமான சில தளங்களில் நடைபெறுகின்றன என்றும் அவற்றை தடைசெய்யமுடியாது என்றும் இந்திய ஒழுக்க மரபு கருதியது. இந்தியாவில் பல இடங்களில் தாந்த்ரீகர்களிடமிருந்து ஆலயங்கள் பக்திமார்க்கத்தினரால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தியாவில் எங்குமே தாந்த்ரீக மார்க்கிகள் தடைசெய்யப்பட்டு ஒழிக்கப்படடதில்லை. ஒருவேளை உதிரிச்சம்பவங்கள் சில இருக்கலாம். அதைத்தான் சிலப்பதிகாரம் முதல் நான் உதாரணம் காட்டியிருக்கிறேன். இப்போதுதான் இந்துத்துவர்கள் விக்டோரிய ஒழுக்க நெறிகளுடன் கிளம்பியிருக்கிறார்கள்.

விக்டோரிய ஒழுக்கவியல் தரப்படுத்தப்பட்ட ஒழுக்கநெறிக்கு எதிரான அனைத்தையுமே முற்றிலும் பிழையானதாகக் கண்டது. சமூக விலக்கு மூலம் அதை ஒடுக்க முயன்றது, அழிக்க முயன்றது. பிரிட்டனின் நிலத்தில் இருந்த எல்லா பாகன் சடங்குகளும் கோயில்களும் சிலைகளும் நூல்களும் மிச்சமே இல்லாமல் அழிக்கப்பட்டன. கிறித்தவ மரபில் கத்தோலிக்கர்களே அந்த அழிவுகளைச் செய்திருக்கிறார்கள் என்பது வரலாறு. ஆனால் கத்தோலிக்கமதம் அதன் பிரம்மாண்டம் காரணமாகவே பல்வேறு மீறல்களை அங்கீகரிக்கவும் சுவீகரிக்கவும் செய்தது. ஆனால் பிரிட்டனின் சீர்திருத்தக் கிறித்தவத்தின் அதி தூய்மைவாதம் கத்தோலிக்கம் அனுமதித்த விதிவிலக்குகளையே தடைசெய்யும் அளவுக்குச் சென்றது. கத்தோலிக்க தேவாலயத்துச் செரூபிக் சிலைகளையே அது உடைத்தது.

விக்டோரிய ஒழுக்கவியல்தான் டி.எச்.லாரன்ஸை சிறைக்கனுப்பியது. ஜேம்ஸ் ஜாய்ஸை பகிஷ்கரித்தது. ஐரோப்பாவின் கலை வளர்ச்சிக்கே அது எதிரானதாக ஆனபோது நூற்றாண்டுக்காலம் அதற்கு எதிராக மாபெரும் சிந்தனையாளர்களும் கலைஞர்களும் போராடியிருக்கிறார்கள்.

மெல்ல மெல்ல அது பின்வாங்கி இன்று சில தூய்மைவாதக் குழுக்களுக்குள் ஒலிப்பதாக உள்ளது. அதன் பங்களிப்பை விட அதன் அழிவுகளே அதிகம் என்றே நான் நினைக்கிறேன். அதற்கு டி.எச்.லாரன்ஸ் முதல் ரஸ்ஸல் வரை நான் நூற்றுக்கணக்கான பிரிட்டிஷ் சிந்தனையாளர்களை மேற்கோள் காட்ட முடியும். அது பிரிட்டனின் பண்பாட்டில் இருந்த பன்மைத்தன்மையை முற்றாகவே அழித்தது என்பதே வரலாறு காட்டுவது.

இந்தியாவில் விக்டோரிய ஒழுக்கவியல் கல்வி மூலம் புகட்டப்பட்டபோது இந்தியாவின் பன்மைத்தன்மையை மறுக்கும் போக்கு இங்கும் உருவாகியது. ஜெயதேவரின் அஷ்டபதியும் மீராபஜனும் ஆபாசம் என்று சொல்பவர்கள் உருவானார்கள். கஜுராகோ சிற்பங்களை களிமண் வைத்து

மூட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. சங்க இலக்கியங்கள் எல்லாம் ஆபாசக்குப்பை என்று புதுமைப்பித்தன் சொல்லியிருக்கிறார். கம்பன் ஆபாச இலக்கியம் என்றார் சி.என்.அண்ணாத்துரை. அதாவது நடைமுறை ஒழுக்கநெறியையே அனைத்துக்கும் உரியதாகச் சொல்லும் ஒரு மனநிலை இங்கே பரவியது. நம்முடைய கல்வியாளர்களில் அது மிக வலுவாக இருந்தது. காந்தியின் சோதனைகளை சாமானிய மனம் கொண்டவர்கள் தாங்களும் செய்வார்களா என்றால் செய்யமாட்டார்கள். ஆனால் அதை அருவருப்பூட்டும் ஆபாசமான ஒரு செயல்பாடாக எண்ண மாட்டார்கள். அவர்கள் ராமகிருஷ்ணரையோ அரவிந்தரையோ அப்படி எண்ணவுமில்லை. விக்டோரிய ஒழுக்கவியல் கொண்ட கல்வியாளர்களே அதைச் செய்தார்கள்.

கத்தோலிக்க அமைப்புக்குள் காமம் எவ்வாறு அணுகப்பட்டது என்பதை நான் வாசித்தறிந்ததை ஒட்டியே எழுதினேன். குறிப்பாக ரஸ்ஸல் விரிவாக எழுதியிருக்கிறார். காமம் சார்ந்த கத்தோலிக்கமதத்தின் கருத்துகள் பரிணாமம் அடைந்து வந்ததை ஹாவ்லக் எல்லிஸ் எழுதியிருக்கிறார். கத்தோலிக்க மதத்தில் ஒருகட்டத்தில் பாலின்பம் என்பது கூடுமானவரை தவிர்க்கப்படவேண்டிய பாவம் என்ற கருத்து அதிகாரபூர்வமாகவே இருந்திருக்கிறது. குழந்தைகளுக்காக அன்றி இன்பத்திற்காக உடலுறவு கொள்வது பாவம் என்றே நெடுங்காலம் கத்தோலிக்க மதம் சொன்னது. அந்த அடிப்படையிலேயே மிஷனரி பொசிஷன் என்று சொல்லப்படும் ஆண் மேலிருந்து உறவுகொள்ளும் முறை மட்டுமே கிறித்தவர்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டது. ஏன் மறைந்த போப்பாண்டவர் ஜான்பால் இன்பத்திற்காக உடலுறவு கொள்வது பிழை என்பதனாலேயே கருத்தடையை அங்கீகரிக்க மறுப்பதாகச் சொல்லியிருக்கிறார். நினைவிலிருந்து சொல்கிறேன். விவரங்களை நான் திரட்டிவிட முடியும்.

யேசுவை மணமகனாகவும் தன்னை மணமகளாகவும் முன்வைத்த ஸ்பெயினின் புனித ஜான் ஆஂப் கிராஸ் போன்றவர்கள் கத்தோலிக்க சபையால் சிறையிடப்பட்டு வதைக்கப்பட்டு பின் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மெல்ல மெல்ல கிறித்தவமதம் அவர்களையும் உள் வாங்கவேண்டியிருந்தது. கத்தோலிக்க மதத்தில் உறுதியான தூய்மைவாத கருத்து இல்லாமலிருந்திருக்கலாம். நெகிழ்தன்மையுடன் பலவற்றை அது உள்ளிழுத்திருக்கலாம். ஆனால் அதன் நீண்ட

ஆயிரமாண்டு வரலாற்றில் காமம் ஒரு பாவம் என்ற கருத்துதான் முக்கியமான மையக்கருத்தாக இருந்திருக்கிறது. அது மெல்லமெல்ல பிற கருத்துகளால் பின்னகர்த்தப்பட்டிருக்கிறது.

இவ்விஷயங்களை ஒரு பொது வாசகனின் புரிதலை ஒட்டியே சொல்கிறேன். இத்தளத்தில் முறையான கல்வி கொண்டவர் என்ற நிலையில் நீங்கள் திருத்தலாம்.

ஜெ

ஜெ,

ஜான் பால் ‘உடலின் இறையியல்’ எனும் தொகுப்பொன்றை எழுதியுள்ளார். அதில் திருமணத்தில் உடலுறவின் அவசியம் குறித்தும் இயற்கை கருத்தடை முறை குறித்தும் விரிவாக விவாதித்துள்ளார். இதில் உடலுறவின் முக்கிய பயன்களாக இரண்டைக் குறிப்பிடுகிறார். ஒன்று மக்கட்பேறு, இரண்டு ஆண் பெண்ணுக்கிடையேயான அன்பின் வெளிப்பாடு. இவை இரண்டும் இணைந்த உடலுறவு மட்டுமே அங்கீகரிக்கப்பட்டது. செயற்கை கருத்தடை சாதனங்களை பயன்படுத்துவது மக்கட்பேறை தவிர்த்த உடலுறவானதால் அதை கடவுளின் திட்டத்துக்கு எதிரான செயலாக வரையறுக்கிறது திருச்சபை. கடவுளின் ‘படைத்தல்’ திட்டத்துக்கு கீழ்ப்படிந்த உடலுறவே அங்கீகரிக்கப்பட்ட உடலுறவு.

இயற்கை கருத்தடை என்பது திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். அதாவது பெண் கருத்தரிக்க ஏதுவான நாட்களில் ஆண் பெண் உறவு கொள்வதை தவிர்ப்பது.

‘உடலின் இறையியல்’ கீழுள்ள சுட்டியில் முழுதாக வாசிக்க கிடைக்கிறது. அவர் பக்கம் பக்கமாகச் சொல்லிச் செல்லும் விளக்கங்களை ஒற்றை வரியில் சுருக்கிவிட்டிருக்கிறீர்கள். அது முழுமையான பார்வையாயில்லை. http://www.ewtn.com/library/PAPALDOC/JP2TBIND.HTM – GENERAL AUDIENCES: JOHN PAUL II'S THEOLOGY OF THE BODY

வெறும் உடல் இன்பத்தை மட்டும் தேடும் உடலுறவு நியாயமற்றது. ஆனால் தன் திருமண பந்தத்தை நிலைநிறுத்தும் பொருட்டு இறைவனின் படைத்தல் திட்டத்துக்கு கீழ்ப்படிந்து உடலுறவு கொண்டால் அங்கே நிகழ்வது வெறும் உடல் இன்பத்துக்கான உடலுறவல்ல. அது மகத்தான செயலாகிறது. கணவனும் மனைவியும் உறவு கொள்வதை கிட்டத்தட்ட கூடி ஜெபம் செய்வதைப் போன்றதொரு நிகழ்வாக திருச்சபை குறிப்பிடுகிறது. அது ஒரு ஆன்மிக நிகழ்வாக சித்தரிக்கப்படுகிறது. உடலின் வழி ஆன்மாவையும் இறைவனையும் உணரும் நிகழ்வாக ஜான் பால் அதை குறிப்பிடுகிறார். உடலுறவின் இலக்கு உடல் இன்பம் மட்டும் அல்ல அது தூய மனித அன்பின், இறை அன்பின் வெளிப்பாடு.

பின்குறிப்பு: நீங்கள் சொல்லியிருப்பது போல நான் கிறித்துவ இறையியலில் தேர்ச்சி பெற்றவன் அல்ல. நான் மிக ஆரம்பகட்டத்திலேயே செமினேரியை விட்டு வெளியேறி விட்டேன். அந்தனி டி மெலோ என்னை மிகவும் கவர்ந்த ஆன்மிக குருவானார். அவரைப்போலவே அமைப்புக்கப்பாற்பட்ட கிறித்துவையே நான் மிகவும் விரும்புகிறேன். ஆனால் அந்த கிறித்துவை இரண்டாயிரமாண்டுகள் தாண்டியும் எனக்கு கொண்டு வந்து சேர்க்க அந்த அமைப்பு தேவைப்படுகிறது. அமைப்பு என்றாலே அதன் வளையும் தன்மை குறைந்துவிடுகிறது. கூட அதிகாரமும் சேர்ந்து விட்டால் சர்வாதிகாரமாகவேகூட மாறிவிடுகிறது. கத்தோலிக்கத்தின் தற்போதைய ஜனநாயக வடிவத்தின் மீது எனக்கு நம்பிக்கை உண்டு.

மனிதனை விலங்கு நிலையிலிருந்து மேம்படுத்தி அவனை சுமுக சமூக வாழ்வுக்கு ஏற்றவனாக மாற்றும் எந்த வழியும் நல்ல மார்க்கமே என உறுதியாக நம்புகிறேன். கூட ஒரு ‘ஆமென்’ சேத்துக்கலாமா? :)

சிறில் அலெக்ஸ்

அன்புள்ள சிறில்

உங்களுடன் சேர்ந்து ஆமென் சொல்வதில் மகிழ்ச்சிதான்.

ஆம், அவ்வாறே ஆகுக.

ஜெ

2. 3. கிறித்தவ விஜயதசமி

தசரா விழா! பக்தியுடன் ‘எழுத்து கூதாஸா!’

கோட்டயம்: சின்னக்கைவிரலைப் பற்றிக்கொண்டு அரிசிப்பொரியும் வெள்ளைப்பூண்டும் பரப்பப்பட்ட தட்டத்தில் புனித பிதா கல்வியின் ‘ஈஸோ மரியம்’ என்று எழுதியபோது பிள்ளைகள் சிலர் சிரித்தார்கள், சிலர் சிணுங்கினார்கள்.

கோட்டயம் மறைமாவட்டம் ஏற்பாடு செய்திருந்த எழுத்து வழிபாட்டில் நேற்று ஆயிரத்துக்கும் மேலான ஆட்டுக்குட்டிகள் முதல் எழுத்தின் அப்பத்தை ருசித்தார்கள்.

கோட்டயம் செயிண்ட் பஸாலியோஸ் தேவாலயத்தில் காலை ஒன்பது மணிக்கு இந்த சடங்கு ஆரம்பித்தது.

சிலுவைப்பாட்டை வணங்கி அறிவுக்கு அதிபராகிய புனித செபாஸ்டியனோஸையும் பொருள் லாபத்துக்காக புனித பவுலையும் வணங்கி அவர்களின் படங்களுக்கு முன்னால் மெழுகுவத்தி கொளுத்தி மேஜர் ஆர்ச் பிஷப் பஸாலியோஸ் மார் கிளீமீஸ் கத்தோலிக்கா எழுத்துகூதாஸா சடங்கை நிறைவேற்றினார்.

கிறித்தவ மதத்தின் இந்த ஆசாரங்களை இன்று இந்தியாவெங்கும் விஜயதசமி என்ற பேரில் கொண்டாடுகிறார்கள், அது வரவேற்புக்குரியது என்று லதீத் அர்ப்பணம் செய்த புனித தந்தை வர்கீஸ் கூமந்தலா அவர்கள் சொன்னார்கள். கிறிஸ்துவுக்கு யகோவா ஞானம் அளித்த நாள்தான் இந்த புனித தினம் என்று அவர் சொன்னார். மிஸிகாராத்திரி என்ற சொல் தேய்ந்துதான் மகாசிவராத்திரியாக ஆகியது என்றும் கிறிஸ்து இரவு முழுக்க உறங்காமல் தன் சீடர்களிடம் பேசிக்கொண்டிருந்த நாளைத்தான் தூக்கமில்லாமல் இவ்வாறு கொண்டாடுகிறார்கள் என்றும் அவர் சொன்னார்.

மலையாள மனோரமா

இந்த கட்டுரையின் செய்திவெட்டு எனக்காக ஒரு வாசகரால் அனுப்பப் பட்டது. இதை எப்படி எடுத்துக்கொள்வது என்ற தொனியில் அவர் எழுதியிருந்தார்.

இதில் ஆச்சரியமாக ஒன்றும் இல்லை என்று நான் நினைக்கிறேன். தீபாவளிப் பண்டிகை சமணர்களாலும் இந்துக்களாலும் கொண்டாடப்படுகிறது, வெவ்வேறு காரணங்களுக்காக. எது காலத்தால் முந்தையது எது சரியானது என்று இன்று சொல்ல முடிவதில்லை. ஒவ்வொரு மதமும் தனக்கென ஒரு நம்பிக்கையை உருவாக்கிக்கொள்வது வழக்கம்தான்.

எனக்கு கேரளத்தில் வேரூன்றியிருக்கும் ஒரு பண்பாட்டு அம்சம், எழுத்தறிவித்தல், மத எல்லைகளை தாண்டி விரிவது ஒரு நல்ல விஷயமாகவே பட்டது. ஏற்கனவே ஓணம், கதகளி போன்றவற்றை அப்படி விரித்தெடுக்க முடிந்திருக்கிறது அங்கே. சிரியன் கிறித்தவர்கள் பிற

அனைவரை விடவும் இந்தியப் பண்பாட்டுக்கு நெருக்கமானவர்கள். இந்தியப்பண்பாட்டுக்கு பெரும் கொடைகளை வழங்கியவர்கள் என்ற வரலாறும் உண்டு.

ஜெ

2. 4. கிறித்தவ தசரா கடிதங்கள்

அன்புள்ள ஜெயமோகன்,

எனக்கு கேரளத்தில் வேரூன்றியிருக்கும் ஒரு பண்பாட்டு அம்சம், எழுத்தறிவித்தல், மத எல்லைகளை தாண்டி விரிவது ஒரு நல்ல விஷயமாகவே பட்டது.

நல்ல விஷயம் தான்... ஆனால் அதற்கு கிறித்தவ சாயம் பூசி, இல்லாத ஒரு கிறிஸ்துவ கதையை வேண்டுமென்றே உருவாக்கி ஏன் செய்யவேண்டும்? அது தான் கேள்வி. இந்துக்களில் கூட சிலர் கிறிஸ்துமஸ் கொண்டாடுகிறார்கள், ஆனால் தாங்கள் மதரீதியான குற்றவுணர்ச்சி இல்லாமல் உணர வேண்டும் என்ற குறுகிய காரணத்திற்காக இப்படிக் கதைகளை உருவாக்கி விட்டுக் கொண்டாடுவதில்லை என்பதைப் பாருங்கள் – இத்தனைக்கும் இந்து கலாசாரத்தில் இவற்றை உருவாக்குவது மிகமிக எளிது. 'கிறிஸ்து பிறந்த நாளாகவே இருக்கட்டும், ஐரோப்பிய சாண்டா கிளாஸே மான் தேரில் வந்து பரிசு கொடுக்கட்டும். அதை நான் அப்படியே கொண்டாடுவதால் என்ன குடிமுழுகிவிடும்?' என்றுதான் ஒரு சராசரி இந்து கேட்பான். சீன உணவை சாப்பிடுவதாலேயே தான் சீனனாகி விடுவதில்லை என்று அவனுக்குத் தெரியும்.

இந்த வித்தியாசம் எதை உணர்த்துகிறது?

இந்து மனதில் அடிப்படையிலேயே மற்ற மதங்களை, அவற்றின் கலாசாரங்களை unconditional ஆக மதிக்கும் பண்பு உள்ளது. அதனால் இந்த திருட்டு/திரிபு வேலைகளுக்கு அவசியம் இல்லை.

ஆனால் அடிப்படையில், கிறித்தவ மனதில் இந்து மதம் கீழானது, அதன் கலாசாரம், பண்டிகைகள், படிமங்கள், தொன்மம் எல்லாம் பொய்யானவை, மரியாதைக்குரியவை அல்ல என்ற கசப்பு உறைந்து இருக்கிறது – இது கிறித்தவ மதம் உருவாக்கி வளர்த்து விட்டது. அதனால், இந்து கலாசாரத்தின் ஒரு நல்ல அம்சத்தை அவர்கள் கடைப் பிடிக்கவேண்டுமானால் கூட, அதை வெட்கமில்லாமல் திருடி, கிறிஸ்துவ சாயம் பூசி மட்டுமே கொண்டாடியாக வேண்டும் என்ற நிலையில் இருக்கிறார்கள். இல்லையா? தங்கள் மதம் பற்றிய பாதுகாப்பின்மை, மூடிய எண்ணம் தான் அவர்களை இப்படிச் செய்யத் தூண்டுகிறது.

கேரளத்தில், எழுத்தாளர்கள், இலக்கியகர்த்தாக்கள், கலைஞர்கள் கையால் குழந்தைக்கு வித்யாரம்பம் செய்ய வேண்டும் என்ற கலாசாரம் வெகுவாகப் பரவி வருகிறது. எம்.டி.வாசுதேவன் நாயர் சொந்த ஊரில் விஜயதசமி நாளில் இதற்காகவே பெரும் கூட்டம் கூடுமாம். இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

நேற்று இந்தியன் எக்ஸ்பிரஸில் டிபி ராஜீவன் இது பற்றி எழுதியிருக்கிறார் –

When the Malayala Manorama asked me to be one of the gurus for their vidyarambham this year, I was hesitant to take it upon myself... What blessing must I give the toddlers after making them write "Hari Sree" ..... I asked the child his or her name, I was surprised to hear a Hindu name, then a Christian and the other a Muslim name. Religious, communal and class

consciousness didn't prevent parents from bringing their children to be initiated into the world of knowledge.

இதில் எல்லா மதக் குழந்தைகளும் வந்திருக்கிறார்கள். எல்லாரும் 'ஹரிஸ்ரீ' எழுதித் தான் தொடங்கியிருக்கிறார்கள். மத சுவர்களை மீறி ஞானத்தைப் போற்றும் இந்த மாதிரி நிகழ்ச்சியை வேண்டுமானால் பாராட்டலாம்.

ஆனால், வித்யாரம்பம் என்ற புனிதத்தை காப்பியடிக்கும் கிறித்தவ மதவெறி சடங்கு கண்டனத்திற்குரியது என்பதே என் எண்ணம். நீங்கள் பாராட்டியதற்கு சொல்லும் நியாயம் ஏற்கத்தக்கதாக இல்லை.

அன்புடன்,
ஜடாயு

அன்புள்ள ஜடாயு,

நீங்கள் முன் வைப்பது கொஞ்சம் பதற்றம் கொண்ட, ஒற்றைவேகம் கொண்ட, ஒரு தேசிய உருவகம். மன்னிக்கவும் எனக்கு அதில் நம்பிக்கை இல்லை. ஒரு சமூக மக்கள் மதவழிபாட்டு முறைகளுக்கு அப்பால் பண்பாட்டு ரீதியிலும் வரலாற்று ரீதியிலும் ஒரே திரள்தான் என உணரச்செய்யும் எதுவும் அவர்களுக்கு நலன்செய்யும், அவர்கள் சேர்ந்து வாழ உதவும் என்பதே என் எண்ணம். சேர்ந்து வாழ்வதே முதல் நோக்கம் என்றால் நான் சொல்வது எளிதில் புரியும். அடையாளத்தூய்மையை தக்கவைத்தால்போதும் சேர்ந்துவாழ்வது முக்கியமில்லை என்றால் இது புரியாது. எளிமையான இரு நிலைப்பாடுகள் மட்டுமே.

ஜெ

அன்பின் ஜெ.மோ,

எதை வைத்து அப்படி சொல்கிறீர்கள்? இந்துக்கள் கிறிஸ்துமஸ் கொண்டாடுவது குறித்து நான் எழுதியிருப்பதைப் பாருங்கள், அதில் அடையாளத் தூய்மை பற்றிய கருத்தாக்கம் எங்கே உள்ளது?

நான் கிறித்தவர்கள் வித்யாரம்பம் கொண்டாட வேண்டாம் என்றும் கூறவில்லையே... அதற்கு ஒரு கிறித்தவக் கதையைக் கண்டுபிடித்து, திரித்து பிரசாரம் செய்வதைத்தானே கண்டித்தேன் – இது போன்ற சின்னக் கட்டுக் கதைகள் பின்னர் பூதாகாரம் எடுத்து புனித தோமையர் விவகாரம் போன்று ஆகிவிடும் சாத்தியம் உள்ளது – அதனாலேயே அதனை எதிர்க்கிறேன்.

அந்த எக்ஸ்பிரஸ் கட்டுரையைப் பாருங்கள், அதில் எல்லா மத மக்களும் ஒன்று கூடி விஜயதசமியை அதன் இயல்பைத் திரிக்காமல் கொண்டாடியிருக்கிறார்களே.. “பண்பாட்டு ரீதியிலும் வரலாற்று ரீதியிலும் ஒரே திரள்தான் என உணரச்செய்ய” உகந்த வழி அதுதான் இல்லையா?

அன்புடன்,
ஜடாயு

அன்பின் ஜெயமோகன்,

தாங்கள் அண்மையில் எழுதியிருந்த விஜயதசமிஎழுத்து கூதாஸா கண்டேன். சமணபௌத்தவேத மரபுகளின் சடங்குசம்பிரதாயதெய்வ கொடுக்கல் வாங்கல்களையும் கிறித்தவ நிறுவனம் நடத்தும் பாரத சடங்குகளின் கிறித்தவமயமாக்கலையும் ஒன்றாக கருத முடியாது என்பதுதான் உண்மை.

இதில் இரண்டு வேறுபட்ட தன்மைகள் இருக்கின்றன. ஆங்காங்கே சைவசமண, சமணபௌத்த, சைவவைணவ மோதல்கள் நடந்து கொண்டிருந்த போதிலும், சமண மற்றும் பௌத்தத்தின் சில மிக உன்னதமான உச்சங்கள் வைதீக மரபு அரசர்களால் உருவாக்கப்பட்டவை. எல்லோரா குடைவரைகோயில்கள், அஜந்தா, நாலந்தா பல்கலைக்கழகம் என. ஏனெனில் இவற்றுக்கிடையே ஒருவித மரபார்ந்த ஒற்றுமை இருந்தது. எனவே இந்த பரிணாம வளர்ச்சியில் ஒரு உயிர்த்தன்மை இருந்தது. அது நிறுவன ரீதியாக மேலிருந்து திட்டமிட்டு உருவாக்கப்பட்டு மக்கள் மீது பிரசார உக்தியாக திணிக்கப்படவில்லை. (அத்தகைய போக்குகள் இருந்திருக்கலாம் ஆனால் அது மையத்தன்மை கொண்டவை அல்ல)

ஆனால் ஆபிரகாமிய மதங்களின் அடிப்படை இறையியலும் நிறுவன இயற்கையும் இத்தகைய உள்ளார்ந்த பரிணாமத்தை மக்கள் பண்பாட்டு பரிமாண வளர்ச்சியிலும் சரி, தனிப்பட்ட ஆன்மிக வளர்ச்சியிலும் சரி எடுத்துக்கொள்ளும் தன்மைக்கு புறம்பானவை. புகழ் பெற்ற சயின்ஸ் இதழில் லின் வைட் (ஜூனியர்) என்பவர் எழுதிய “நமது சூழலியல் பிரச்சினைகளின் வரலாற்று வேர்” எனும் கட்டுரையில் கிறித்தவம் பாகனிய சடங்குகளை உள்ளிழுத்தபோது நிகழ்ந்த ஒரு முக்கியமான மாற்றத்தைக் குறிப்பிடுகிறார். பாகனிய தெய்வங்கள் தன்னளவில் முழுமை பெற்று விளங்கின. ஆனால் கிறித்தவத்துக்குள் உள்ளிழுத்துக் கொள்ளப்படும்போது அவை தன் முழுமைத்தன்மையை இழந்து வானில் உறையும் தந்தை தெய்வத்துக்கு கீழே இருக்கும் சிறு இறைத்தூதராகவோ புனிதராகவோ மாற்றப்பட்டன.

நீங்கள் சொல்லியிருக்கும் நிகழ்ச்சிகளில் இதே கீழ்மைப்படுத்தும் தன்மை மிக தெளிவாகக் காட்டப்படுகிறது. நமது மரபில் முழுமையான பிரம்மத்துக்கு வடிவு கொடுக்கப்பட்ட பெண் தெய்வங்களுக்கு இணையாக வைக்கப்படுவது புனித செபாஸ்டியனும் புனித பவுலும். மகாசிவராத்திரிக்கு வக்கீஸ் கூமந்தலா சொன்ன விளக்கம் தெய்வநாயகத்துக்கே மயிர் கூச்செறிய செய்யும். இந்த பண்பாட்டுஅபகரிப்புக்கு இரண்டு பயன்கள் இருக்கின்றன. இது நம் பண்பாட்டிலிருந்து அதன் செழுமையிலிருந்து அன்னியப்பட்டதாக உணரும் கிறித்தவர்களுக்கு வடிகாலாக இருக்கும். (ஆனால் கத்தோலிக்க சபை அந்த அன்னியப்படுதலைக் குறித்து பெரிதாக கவலைப்பட்டதில்லை.) இரண்டாவதாக நம் பண்பாட்டின் அம்சங்களை கிறித்தவத்திலிருந்து வந்ததாக பிரசாரம் செய்யும் பெரும் திட்டத்தில் ஒரு பகுதியாக இருக்கும்.

அண்மைக்காலமாக மிக அதிக அளவில் விற்கப்படும் கிறித்தவ பிரசார இலக்கியங்களில் வேதங்கள் உபநிடதங்களில் யேசுவை கண்டுபிடிக்கும்

முயற்சி கன ஜோராக நடைபெற்று வருகிறது. உதாரணமாக 2002 முதல் 2009 க்குள் 1,40,000 பிரதிகள் விற்கப்பட்ட ஒரு கிறித்தவ பிரசார இலக்கியத்திலிருந்து ஒரு பகுதியை தருகிறேன்:

“எந்த தெய்வம் மனிதனுடைய பாவங்களைப் போக்கும்படியாக தன்னை இரத்தபலியாக கொடுத்தது என அவர் வேதங்களை தேடி அலசி ஆராய்ந்து கொண்டிருந்தபோது சாம வேதத்தில் காணப்பட்ட ஒரு மந்திரம் அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது – ‘லிவ்ஹ்யா கோப்தாராம் மஹக்யவ்வத்தினா கொரியன்த்தி ஹவ்யாயான பரியதாசீன்’. அதாவது அவதாரம் எடுக்கப் போகிறவர் ஒரு கன்னியின் வயிற்றில் பசுத்தொட்டிலில் பிறப்பார் என சாமவேதம் சாட்சி சொல்கிறது.”

இந்த ரீதியாக 108 பக்கங்கள் செல்கிறது இந்த பிரசார புத்தகம். இந்த பிரசார ஒளிநாடா 76,000 பிரதிகள் விற்பனையாகிறது. மகாசிவராத்திரி மிஸிகாராத்திரி யாக்குவது இதே ஏமாற்றுவேலையின் மற்றொரு பகுதிதானே. இனி எப்படி மிஸிகாராத்திரி மகாசிவராத்திரியாக இந்த அஞ்ஞானிகளால் மாற்றப்பட்டது என்பதில் ஆரியபார்ப்பன தந்திரம் தானே சைத்தானாகக் காட்டப்படும்? பெப்ஸி கோலா விற்பனைக்கு பரதநாட்டியத்தை பயன்படுத்துவதின் theological equivalents தான் இந்த பண்பாட்டு அபகரிப்புகள். ஒரு இறையியல் ஏகாதிபத்திய உக்தி.

இந்த உண்மையை உணர மிக எளிய வழி உண்மையான ஆன்மிக இணைப்பை குறித்து பேசுபவர்களை இதே சர்ச் என்ன செய்கிறது என பார்ப்பதுதான். ஆண்டனி டி மெல்லாவுக்கு நிகழ்ந்தது தெரிந்தது தானே. ஆனால் தாங்கள் உருவாக்கிய நிறுவனங்களிலிருந்தே வெளியேற்றப்பட்டு சிவன் கோயில் முன்னால் மாரடைப்பு ஏற்பட்டு வீழ்ந்து கிடந்த கத்தோலிக்க இறையியலாளர்கள் குறித்து அதிகமாக வெளியே தெரியாது. ஆனால் இவர்கள் நம் நினைவு கூர்தலுக்கும் உண்மையான ஆன்மிக உறவாடல்களுக்கும் உரியவர்கள். என்றாலும் இவர்கள் பேசப்பட மாட்டார்கள். வர்க்கீஸ் கூமந்தல்லாக்களே நம் ஊடக ஒளி வட்டங்கள் சோபிக்க நம் முன் நிறுத்தப்படுவார்கள்.

அரவிந்தன் நீலகண்டன்

அரவிந்தன்,

இந்த விஷயத்தைப்பற்றிய என்னுடைய கருத்துகளை நான் திட்டவட்டமாக ஏற்கனவே சொல்லிவிட்டேன்.

1. இன்று பல்வேறு திரிப்புகளுடன் சொல்லப்படும் மதமாற்ற பிரசாரத்துடன் சிரியன் கிறித்தவர்களை தொடர்புபடுத்த முடியாது. அவர்களுக்கு அந்த திட்டம் ஏதும் இல்லை.
2. அவர்கள் இந்தியாவில் கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்களாக இருக்கிறார்கள். இந்தியப் பண்பாட்டு மனநிலைகளை தங்கள் மத நம்பிக்கைக்குள் கொண்டுவந்தாகவேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது. குத்துவிளக்கு வரை அவ்வாறு உள்ளே சென்றதுதான்.
3. எந்த ஒரு மதமும் அதன் நம்பிக்கைக் கட்டுமானத்தின் உள்ளே நின்றபடிதான் புதிய விஷயங்களை எடுத்துக்கொள்ளும். அந்த

கட்டுமானத்தை அது உதறவேண்டும் என்றால் அது தன்னை அழித்துக்கொள்ளவேண்டும் என்றே பொருள்.

4. சிரியன் கிறித்தவர்களில் இந்து பேரறிஞர்கள் பலர் உண்டு. அவர்களெல்லாம் புறக்கணிக்கப்படவோ அழியவோ இல்லை. தங்கள் மதத்துக்குள்தான் வசதியாக வாழ்ந்தார்கள்.
5. இவ்வாறு உருவாகும் பண்பாட்டுப் பரிமாற்றத்தை தொடர்ந்தே ஒரு பொதுவான தளம் உருவாக முடியும். ஐயத்தின் கசப்பின் ஆரம்பத்தை இதற்குக் கொடுப்பது ஆரோக்கியமல்ல.

ஜெ

அன்பின் ஜெயமோகன்,

சிரியன் கிறித்தவர்கள் குறித்து நீங்கள் கூறுவது உண்மை. ஆனால் அவர்களில் ஒரு பகுதியினர் மலங்கரை கத்தோலிக்கர்களாக கத்தோலிக்க சர்ச் உள்ளிழுத்துக்கொண்டது. இது கத்தோலிக்க சர்ச்சின் ஒரு பகுதியே ஆகும். சிரியன் கிறித்தவர்களுக்கும் ஐரோப்பிய நிறுவன கிறிஸ்தவத்துக்குமான மோதல்கள், விட்டுக்கொடுத்தல்கள் ஆகியவையும் சில நேரங்களில் கத்தோலிக்க சர்ச்சை விட மேலதிகமாகவே சென்று தாமஸ்திராவிட கிறித்தவத்தை பிரசாரம் செய்வதும் நடந்து வருகின்றன.

ஒரு உதாரணமாக இன்றைக்கு மலங்கரை கத்தோலிக்க ஆலயங்களில் அங்கு வழக்கமாக இருக்கும் சிலுவை எடுக்கப்பட்டு சென்னை பரங்கிமலையில் உள்ள தாமஸ் சிலுவை வைக்கப்படுகிறது. சென்னையில் மலங்கரை சிரியன் கிறித்தவர்கள் தாமஸின் உடல் மற்றும் தாமஸ் சர்ச்சை தங்களிடம் ஒப்படைக்க கோரிக்கை வைக்கலாம் என்கிற பிரச்சினை எழுந்திருக்கிறது. இனிவரும் நாட்களில் யார் மிக அதிகமாக மிக தீவிரமாக தாமஸ் கதையாடலை பிரசாரம் செய்கிறார்கள் என்பதில் போட்டியும் எழலாம்.

நீங்கள் ஜான் சாமுவேலின் மாநாட்டு கட்டுரை சுருக்கங்களிலேயே பல சிரியன் கிறித்தவர்களை காணலாம். கத்தோலிக்க சர்ச்சுடனான மோதலில் தங்களது பழமையைக் காட்ட ஒரு முயற்சியாக தாமஸ் கதையை சிரியன் கிறித்தவர்கள் கையிலெடுத்தார்கள். இதனை கத்தோலிக்க சர்ச் கபளீகரம் செய்து அதனை ஒரு மதமாற்ற யுக்தியாக கையிலெடுத்துவிட்டது.

இந்நிலையில் மகாசிவராத்திரி என்பது மெஸியா ராத்திரிதான் என்று சொல்லும் ஆட்கள் விஜயதசமியை பவுலுக்கும் செபாஸ்டியனுக்கும் தொடர்பு படுத்தும்போது ஐயப்படாமல் இருப்பது எப்படி என்று நீங்களே சொல்லுங்கள், அதே நேரத்தில் குருட்டாம் போக்காக கிறித்தவம் என்பதற்காகவே அதை எதிர்க்கவில்லை என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

அநீ

அன்புள்ள அரவிந்தன்,

இன்று கேரளத்திலும் இந்தியாவெங்கும் கிறித்தவ மதத்தினருக்குள்

உருவாகி வரும் இந்திய நிராகரிப்புத் தீவிரப்போக்குகள் — உதாரணமாக பெந்தேகொஸ்தே சபை போன்றவை – அம்மக்களை வாசலை உள்ளிருந்து சாத்திக்கொள்ளக்கூடியவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட வஹாபிகள் இஸ்லாமியர்களை மாற்றுவதுபோலத்தான் இதுவும். அந்த போக்குக்கான மாற்று என்பதே கிறித்தம மையவழிபாட்டையும் நம்பிக்கையும் மாற்றிக்கொள்ளாமல் பண்பாட்டு உள்வாங்கல்களாக நிகழும் இம்மாதிரியான போக்குகள். இவை பிறமதத்தினரிடம் தங்களை தக்கவைத்துக்கொண்டே ஒத்துப்போவதற்கான ஒரு வெளியை கிறித்தவர்களுக்கு அளிக்கின்றன. உரையாடலுக்கு இடமளிக்கின்றன. சூ ஃபிசம் இஸ்லாமுக்கு அளிப்பதும் இதையே.

இதற்கும் தீவிர கிறித்தவ வெறிக்கும் இடையே உங்களுக்கு வேறுபாடு தெரியவில்லை என்றால் அது வருத்தத்துக்குரியதே. உரையாடவருகிறாய் என்றால் முதலில் உன்னுடைய மதநம்பிக்கையை விட்டுவிட்டு வா என்பது ஒரு வகை ஆதிக்கப்போக்கு. கிறித்தவம் மட்டுமல்ல இன்றுள்ள சமணமும் பௌத்தமும் சீக்கியமதமும் கூட இவ்வாறுதான் உரையாடல்வெளியை உருவாக்கிக் கொள்கின்றன. உதாரணமாக பௌத்த மதத்தில் சிவனும் விஷ்ணுவும் புத்தரின் பரிவாரதேவதைகள்தான்.

கசப்புகள் இருபக்கமும் தாழிட்டுக்கொள்வதில்தான் சென்று முடியும். அதன் இழப்பு இந்த தேசத்துக்கே.

ஜெ

அன்பின் ஜெயமோகன்,

நீங்கள் கூறிய விஷயங்களைக் குறித்து சிந்திக்கிறேன். சிவனும் விஷ்ணுவும் பரிவாரத்தேவதைகளாக்கப்பட்டதும் புத்தர் சமணத்தெய்வங்களும் ஹிந்து மரபுக்குள் ஈர்க்கப்பட்டதும் குறித்து கூறினீர்கள். உண்மைதான். இன்று அவை சமநிலை அடைந்துவிட்ட நிலையிலிருந்து நாம் பேசுகிறோம். ஆனால் இப்படி ஒன்றையொன்று மட்டம் தட்டும் நிலையில் விவாதமல்ல மோதல்களே ஏற்பட்டன.

இன்றைக்கும் சிவன் விஷ்ணுவின் உடலின் ஒரு பகுதி என்று சொல்லும் வைணவர்களையும் விஷ்ணுவை கீழான நிலையில் உள்ள சிறு தெய்வமாக காணும் சைவர்களையும் நாம் காண்கிறோம். அந்த நிலையை கடந்து வந்துள்ளோம். கிறித்தவமும் இதை செய்துள்ளது. இன்னமும் கொடூரமாக. பாகன் தெய்வங்கள் அழிக்கப்பட்டன. இஸ்லாம் இதைச் செய்துள்ளது. மத்திய ஆசியாவில் பல பௌத்த பீடங்கள் சூ ஃபி தர்காக்களாக மாற்றப்பட்டன.

ஆனால் இன்றைக்கும் இதுதான் உரையாடலுக்கான வெளியா? யேசுவை நாயன்மார்களில் ஒருவராக நாம் வைத்துக்கொள்ளலாமா? அல்லது சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் செயிண்ட் பவுலுக்கும் செயிண்ட் செபாஸ்டியனுக்குமான அந்தஸ்து கொடுத்து அவர்கள் வைத்துக்கொள்ளலாமா? ஒரு சிவன் கோவிலில் யேசுவை நாயன்மார்களில் ஒருவராக நிறுத்தி வைத்தால் அது மத உரையாடலுக்கு வழி வகுக்குமா அல்லது மதக்கலவரங்களுக்கா?

அல்லது ஞான கிறித்தவ கோயில் (Gnostic Temple of Jesus) என்று இந்துக்களில் ஒரு சாரார் கட்டி அதில் மகதலேன் அம்பா சமேதநாசரேதீசன் என கழுதை வாகனராக யேசுவை பிரதிஷ்டை செய்தால் மெசையாராத்திரிமகாசிவராத்திரி ஆனதைக் காட்டிலும் வரலாற்று யதார்த்தம் கொண்டதாகக் கூட இருக்கும். ஆனால் அது உரையாடலுக்கான வெளியை உருவாக்கும் என நினைக்கிறீர்களா? வேறுவிதமான உரையாடலுக்கு நாம் இன்னும் வளரவேயில்லையா?

ஆண்டனி டி மெல்லாவை நினைவுகூரவும். நிறைந்த சிரிப்பும் ஞானமும் கொண்ட எளிமையான அந்த யேசுசபை பாதிரியார் இறுதி வரையில் எத்தனையோ துன்பங்களுக்கு அப்பாலும் சபையிலிருந்து விலகவில்லை. இறுதிவரை கிறித்தவ அடிப்படைகளை விட்டுக்கொடுக்காமல் வாழ்ந்தவர்தாம். ஏன் லாரி பேக்கர் இந்திய பாரம்பரிய கட்டுமானத்தை மீட்டெடுத்து கிறித்தவ ஆலயங்களையே கட்டவில்லையா? அவரை நாம் போற்றி கொண்டாடவில்லையா? “நீங்கள் உங்கள் க்வாக்கர் நம்பிக்கைகளை விட்டால்தான் இந்திய பாரம்பரிய கட்டடக்கலைகளை பயன்படுத்தலாம்” என்று எவரும் சொல்லவில்லையே... அவரை நாம் அனைத்து இந்தியர்களுக்கும் உதாரணமாக அல்லவா காண்கிறோம்.

ஜோசப் கர்னீலியஸ் குமாரப்பா கிறித்தவத்தை கைவிட்டால்தான் காந்தியத்தை ஏற்கமுடியும் என எவரும் சொல்லவில்லையே. அவரை கிராம முன்னேற்றத்துக்கான மிகச்சிறந்த முன்னோடியாக பேசுவார்கள்.

ஆனால் அவர்களையெல்லாம் மறுதலித்த அல்லது முன்னிறுத்தாத ஒரு நிறுவன மதம் பழைய பரிவார தேவதையாக்கும் செயல்முறை மூலம் மத நல்லிணக்கத்தையும் மத உரையாடலுக்கான வழியையும் வைக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. இன்றைக்கு கடுமையான இந்திய எதிர்ப்புடன் வளர்ந்து வரும் பெந்தகோஸ்தே அலையில் இத்தகைய பண்பாட்டு முயற்சிகள் நல்லவை என சொல்கிறீர்கள். இருக்கலாம்.

அண்மையில் தசாவதாரம் என ஒரு கார்ட்டூன் படம் வெளியிடப்பட்டது அதில் புத்தரை விஷ்ணுவின் அவதாரமாக காட்டியதை நியோ பௌத்த அமைப்புகள் எதிர்த்தன. அதற்காக அந்தப் படத்தை தயாரித்தவர்கள் வருத்தம் தெரிவித்தார்கள். அகிம்சை சக்கரவர்த்தி அசோகர் ஜைனருக்கு பணிவிடை செய்பவராக புத்தரை காட்டியதற்காக ஜைன துறவிகளின் தலைக்கு இத்தனை பணம் என தலைவாங்கிய வரலாற்றை பெருமையுடன் தெரிவிக்கும் திவ்யவதனா எனும் பழமையான பௌத்த பௌராணீக நூல்.

நாம் இந்த இறையியல்அரசியல் சித்து விளையாட்டுக்களை தாண்டிய ஒரு உரையாடல் வெளியை ஏற்படுத்துவது அல்லவா நல்லது? அதற்கான இயல்பான இத்தகைய பின்விளைவுகளை உள்ளடக்காத வெளி கிறித்தவ இறையியலில் இல்லை என நினைக்கிறீர்களா? நான் அவ்வாறு கருதவில்லை. அல்லது பொதுப்புலத்தில் இதுதான் இந்திய மறுப்பு எவாஞ்சலிக்கல் கிறித்தவத்திலிருந்து சிரியன் கிறித்தவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள நல்ல உபாயம் மேலும் நல்ல முதல்படி என நினைக்கிறீர்களா? இருக்கலாம்.

இறுதியாக என்னுடைய கருத்துகள் வெறுப்பையோ

நம்பிக்கையின்மையையோ அடிப்படையாக முன்வைக்கவில்லை. நேர்மையான உரையாடலையும் பண்பாட்டு பகிர்வையுமே கிறித்தவர்களிடமிருந்து எதிர்நோக்குகிறது என்கிற குறைந்தபட்ச நம்பிக்கை சலுகையை எனக்கு வழங்குவீர்கள் என கருதுகிறேன். இவை என்னுடைய அச்சங்கள், ஐயங்கள்... இன்றைய சூழ்நிலை ஏற்படுத்தியுள்ள நியாயமான எச்சரிக்கை உணர்வே என்பதையும் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன்.

அரவிந்தன் நீலகண்டன்

மதிப்பிற்குரிய ஜெ,

அமாவாசை உபவாச ஜெபக்கூட்டங்கள் அனுசரிக்கப்படுவது கேள்விப்பட்டு இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

அன்போடு
ராஜசுந்தரராஜன்

அன்புள்ள ராஜ சுந்தர ராஜன்,

எதையாவது செய்து எல்லாரும் ஒரு கும்பல்தான் என்று உணர்ந்து சண்டைபோடாமல் இருந்தால் சரி.

ஜெ

அன்புள்ள ஜெ,

உங்கள் கட்டுரைகளில் பலசமயம் மிஷனரிகள் மீது நியாயமற்ற கசப்பை வெளிப்படுத்துகிறீர்கள் என்று தோன்றுவதுண்டு.

ஆனால் இந்த 'நகைச்சுவையை' வாசித்த பிற்பாடு நான் சொல்லிழந்து போய்விட்டேன். எங்கள் பிஷப்புகளுக்கும் பாதிரிமார்களுக்கும் வரலாற்றுணர்வே இல்லாமல் போய்விட்டனவா என்ன? 20 வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்ததை நினைவுகூர்ந்தேன். மயிலை ஆர்ச் பிஷப் அருளப்பா காலத்தில் ஒரு மோசடிக்காரர் அறிஞராக வேடம் போட்டுப்போய் திருவள்ளுவர் ஒரு கிறித்தவர் என்று நிரூபிப்பதாகச் சொல்லி பெரும் பணம் பெற்றுச்சென்றார்.

இவ்வாறு தங்களை வேடிக்கைக்கு ஆளாக்குவதன் மூலம் கிறித்தவ மதத்தலைவர்கள் எதை அடைய நினைக்கிறார்கள்?

Jas Diaz

அன்புள்ள Jas Diaz,

1. நான் மிஷனரிகள் மீது கசப்பு ஏதும் கொண்டவனல்ல. நான் எழுதும் எந்த ஒரு வரலாற்றுச் சித்திரத்திலும் அவர்களின் ஆரம்பகாலப்பெரும்பணியை பாராட்டுடன் குறிப்பிடாமல் மேலே சென்றதே இல்லை. ஒரு சிறு குறிப்பில்கூட. அவர்கள் கல்வி

மருத்துவம் ஆகிய இரண்டிலும் ஆற்றிய சேவைகள், இங்கே சமூகப்படிநிலைகளில் கீழே கிடந்த மக்களை அவர்கள் கைகொடுத்து ஏற்றிய விதம் இரண்டும் வரலாற்றின் பொன்னேடுகள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

ஆனால் மறுபக்கம் அவர்கள் இங்குள்ள பண்பாட்டையும் வரலாற்றையும் தங்கள் இனமேட்டிமைவாதம் மற்றும் மதவாத நோக்கிலேயே எழுதினார்கள். அவற்றை நம் வரலாற்றாய்வுக்கான நேரடியான ஆதாரங்களாகக் கொள்ளக் கூடாது, இதுவே நான் சொல்வது.

இது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. கிறித்தவத்தன்மை கொண்ட நாடுகளான அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, மெக்ஸிகோ, பிரேஸில் போன்ற நாடுகளில்கூட மிஷனரிகளின் எதிர்மறைக்கூறுகள் பலமடங்கு அழுத்தமாக பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் நான் ஆஸ்திரேலியா அமெரிக்கா இருநாடுகளிலும் செய்த பயணங்களில் அங்கே உள்ள பழங்குடிப் பண்பாடு குறித்த எந்த ஒரு ஆவணப்பதிவிலும், அருங்காட்சியகத்தில் உள்ள சிறிய குறிப்புகளில்கூட, அம்மக்களைப் பற்றி மிஷனரிகள் செய்த பதிவுகளில் உள்ள முன்நோக்கம் மற்றும் இழிவுபடுத்தும் தன்மையை தெளிவாக எடுத்துரைத்து, அதற்கு மாற்றாக உண்மையை குறித்து வைத்திருப்பதைக் கண்டேன். சில அருங்காட்சியகங்களில் ஓர் எச்சரிக்கை போல மிஷனரிகளின் கண்ணோட்டத்தில் உள்ள பிழைகளை தனியாகவே எழுதி வைத்திருக்கிறார்கள். பாடப்புத்தகங்களில் சேர்த்திருக்கிறார்கள். நம் நாட்டில் நாம் மிஷனரிகளை அவர்களின் சேவையைக் கொண்டே பார்க்கிறோம். நன்றி என்ற அம்சமே மேலோங்கி இருக்கிறது. அது இந்தியப் பண்பாட்டுக்கு உகந்ததுமாகும். ஆனால் வரலாற்றை ஆராயும்போது அது மேலோங்கியிருக்கக் கூடாது. அங்கே உண்மைக்கான தேட்டமே மேலோங்கியிருக்க வேண்டும். இதுவே என் தரப்பு. இது என் தரப்பு மட்டுமல்ல. விவேகானந்தர், காந்தி, எம்.என்.ராய், அம்பேத்கார், நேரு அனைவருமே இந்நிலைப்பாட்டையே எடுத்திருக்கிறார்கள். விரிவாக எழுதியும் இருக்கிறார்கள்.

2. சிரியன் கிறித்தவர்கள் மிஷனரிகள் அல்ல. அவர்கள் ஆயிரம் வருடபண்பாட்டுப் பாரம்பரியம் கொண்ட ஒரு கிறித்தவ மரபினர். அவர்கள் நெடுங்காலமாக இந்தியப் பண்பாட்டுக்கூறுகளை உள்ளிழுத்துக்கொண்டு, அதேசமயம் தங்கள் மத அடையாளத்தை இழக்காமல், இங்கே வாழ்கிறார்கள். இந்த இயல்பு காரணமாகத்தான் அவர்களுக்கும் பிறருக்கும் இடையே மனக்கசப்புகளோ மோதல்களோ இன்றுவரை உருவானதில்லை.

3. கிறித்தவ மதப்பரப்பு நோக்கத்துடன் செய்யப்படும் மோசடிகளை இதனுடன் சம்பந்தப்படுத்தலாகாது. அருளப்பா அவர்களின் முயற்சியைப் பற்றிச் சொன்னீர்கள். இப்போது அதே மயிலை சாந்தோம் சபை தெய்வநாயகம் என்பவரின் முயற்சியுடன் மேலும் விரிவான மோசடிகளை அரங்கேற்றி வருவது உங்களுக்கும் தெரிந்திருக்கும்.

ஜெ

அன்புள்ள ஜெயமோகன்,

கேரள சிரியன் கிறித்துவர்கள் திடீரென மிசிகா ராத்திரி கொண்டாட ஆரம்பித்துள்ளதை (கிறித்தவ தசரா; கடிதங்கள்) நீங்கள் வரவேற்றிருப்பது பெரும் குழப்பத்தையே ஏற்படுத்துகிறது. தெய்வநாயகத்தைப் போன்றதொரு மோசடியாகத்தான் நான் இதைக் காண்கிறேன். இந்திய கலாசார கூறுகள் பலவற்றையும் திருச்சபை எடுத்தாண்டிருக்கிறது. ஆர்வத்துடன் மக்களின் கலாசார விகிதங்களை கூர்ந்து கவனித்தும் அவற்றை உரிய வகையில் உட்கொண்டும் திருச்சபை புதிய ஆன்மிக வடிவங்களை மக்களின் தேவைக்கேற்ப அடைகிறது.

ஆனால் பாரம்பரியமாக இந்திய மரபில் இருந்துவரும் கல்விக்கான உயர் மதிப்பும் அதன் வெளிப்பாடான பக்தி முயற்சிகளும் கிறித்துவ முறைகளிலிருந்துதான் பிறந்து வந்தன என்பது சற்றும் உண்மையில்லாத ஒன்று என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இதில் ஜடாயு மற்றும் நண்பர் அநீயின் கருத்துகளில் எனக்கு எந்த மறுப்பும் இல்லை.

கலாசாரத்தை கையாளும் விதம் குறித்து திருச்சபைக்குள் நான்கு முக்கிய இயக்கங்கள் இருப்பதைக் காண இயலும். ஒன்று கலாசாரப்படுத்தலை ஆதரிக்கும் பாதிரியார்கள், அடுத்து அதை ஆதரிக்கும் பொதுமக்கள், இதன் எதிர் தரப்பான பாதிரியார்கள், பொதுமக்கள். சென்னை பங்கு ஒன்றில் பொங்கலுக்கு சிறப்பு பூஜை செய்த பாதிரியாரை பொதுமக்கள் அடித்து விரட்டிய கதையும் உண்டு. அதே சமயம் ஆயுத பூஜைக்கு சாமியாரை கூப்பிட்டு கடையை மந்திரிக்கும் பழக்கமுடையவர்களும் உண்டு.

இந்திய கலாசாரம் இன்றைக்கு சிலருக்கு குத்தகை விடப்பட்டுள்ள தோற்றம் இருப்பதாலேயே திருச்சபையை கலாசாரப்படுத்தும் விஷயத்தில் பல குழப்பங்களும் இருப்பதாக நான் காண்கிறேன். ஆனால் இந்திய முறையில் சர்ச்சில் பூசை செய்வது இந்திய திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிறது. மலர், தீபம் தூபம் என கலாசார மனத்துடன் வழிபாடுகள் நடைபெறுவது அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கேரள புனிதருக்கு பட்டம் தரும் விழாவில் ரோமில் இந்திய முறை வழிபாடுகள் நடந்தன என்பதுவும் குறிப்பிடத்தக்கது. மேலும் ஆடை அணிகலன்கள் துவங்கி திருமணச் சடங்குகள் வரையிலும் சர்ச்சுக்கு வெளியே நடக்கும் எந்த கலாசார நிகழ்வுகளையும் திருச்சபை கட்டுப்படுத்த முயன்றதாக எனக்குத் தெரிந்து இல்லை (சாதிக் கொடுமைகள் உட்பட). இந்த நான்கு குழுக்களுக்குமிடையிலான முரணியக்கத்தின் மத்தியில் திருச்சபையின் கலாசாரப்படுத்துதல் தொடர்ந்து நடந்துகொண்டும் குறைந்து கொண்டும் இருக்கிறது.

இதனிடையில் ஆந்தனி டி மெலோவை தன்பக்க ‘வேத சாட்சியாக்கும்’ அநீ (கிறித்தவ விஜயதசமி) என்ன சொல்ல வருகிறார் என முழுமையாகத் தெரியவில்லை. ஆந்தனி டி மெலோ திருச்சபையை கலாசாரப்படுத்த முயன்றவரல்ல. அவர் எந்த ஒரு ‘இந்து மத’ பக்தி முயற்சியையும் கிறித்துவத்தில் நுழைக்கவில்லை. தனக்கென சாதனா எனும் தியான வடிவத்தை உருவாக்கினார். அதை பிரபலப்படுத்தினார். ஆந்தனி டி

மெலோவின் முக்கிய தாக்கம் பௌத்தமே. புத்தரே அவரின் புத்தகங்களில் அதிகம் வெளிப்படும் ஆளுமை. அவரின் ஆன்மகுரு ஒரு பௌத்தர். இயேசுவை புத்தனாகவே காண்கிறார். எப்படி பௌத்தம் பக்தி மார்க்கத்தில் சென்று 'சீரழிந்ததோ' (degenerated) அதேபோலவே அவர் கிறித்துவத்தைக் கண்டார். இயேசுவின் கடவுள் தரிசனம் திருச்சபையில் சென்று சீரழிந்ததாகக் காண்கிறார் டி மெலோ.

'ஆந்தனி டி மெலோவுக்கு நேர்ந்தது தெரியும்தானே எனச் சொல்லி உடனேயே சிவன் கோயில் முன் விழுந்து இறந்த கத்தோலிக்கரைக் குறித்துச் சொல்வதனால் ஒரு குழப்பம். ஆந்தனி டி மெலோ 1987ல் நியூயார்க் நகரில் இறந்தார். அவரது புத்தகங்களை ஆராய்ந்த (1998ல்) கத்தோலிக்க திருச்சபை அவற்றை தற்காலிகமாக தடை செய்தது. 'கத்தோலிக்க நம்பிக்கைகளை விட்டு படிப்படியாக விலகிச் செல்வதனால்..' என தடைக்கான காரணம் சொல்லப்பட்டுள்ளது. நான் இதில் மிக முக்கியமாகக் காண்பது இரண்டு விஷயங்கள். ஒன்று ஆந்தனி கடைசி வரைக்கும் ஒரு இயேசு சபை பாதிரியாராகத்தான் வாழ்ந்தார். மறைந்தார். இரண்டாவதாக திருச்சபை அவரின் புத்தகங்களை கத்தோலிக்க நம்பிக்கைக்கு அப்பாற்பட்டது எனச் சொல்லியதேயன்றி அதை முற்றிலும் நிராகரிக்கப்படவேண்டிய ஒரு பாகனிய, சாத்தானிய படைப்பாக முத்திரை குத்திவிடவுமில்லை. இன்றும் அவரின் புத்தகங்கள் கத்தோலிக்க, கிறித்துவ மையங்களில் வாங்கக் கிடைக்கின்றன. 'இவை கத்தோலிக்க திருச்சபையின் நம்பிக்கைகளை ஒட்டியவை அல்ல' எனும் எச்சரிக்கையோடு. ("The books of Father Anthony de Mello were written in a multireligious context to help the followers of other religions, agnostics and atheists in their spiritual search, and they were not intended by the author as manuals of instruction of the Catholic faithful in Christian doctrine or dogma.') நான் ஆந்தனி டி மெலோவை படிக்க ஆரம்பித்தது செமினரியில் என்றால் அநீ நம்புவாரா எனத் தெரியவில்லை.

ஆந்தனி டி மெலோ மதம் ஒரு வழிகாட்டி மட்டுமே என்றார். கடவுள் அனுபவம் தனிமனிதனது என்றார். வழிகாட்டிப்பலகையை பிடித்துக்கொண்டு இலக்கை அடைந்துவிட்டேன் எனக் குதிக்காதே என்கிறார். ஞானி நிலவைக் காண்பிக்கிறான் முட்டாள் விரலை மட்டுமே பார்க்கிறான் என்றார். திருச்சட்டங்களைக் கொண்டு மெசியாவையே கொன்றுவிடுகிறார்கள் என்று சொல்கிறார். இவையெல்லாம் திருச்சபையின் ஆன்மிகப்பணியை, பாத்திரத்தை (Role), கணிசமாகக் குறைத்து விடுவதை திருச்சபை நிச்சயம் உணர்ந்திருக்கும். இதுவே ஆந்தனி டி மெலோ விலக்கப்பட முக்கியமான காரணமாய் நான் காண்கிறேன். டி மெலோ இதை பெரிதும் விரும்பியிருப்பார் என்றே எனக்குத் தோன்றுகிறது. திருச்சபையின் பின்னால் சென்று தன் தெரிவுகளை அடகு வைத்திருப்பாரென்றால் அவர் சொல்லும் ஒன்றிலும் அர்த்தமில்லை.

கத்தோலிக்கம் மட்டுமல்ல இந்து மதம் கூட சிறு மதங்களை உள்வாங்கி பிரமாண்டமானதுதான். உங்கள் விஷ்ணுபுரத்தில் இதை முன்வைத்துள்ளீர்கள் என்று நியாபகம். 'மாடனுக்கு சர்க்கரைப் பொங்கல் படைப்பதுவும்' பாகன் அடையாளங்களை உள்வாங்குவதற்கும் என்ன பெரிய வித்தியாசம்? வரலாற்றில் கிறித்துவம் மட்டுமல்ல இன்னும் எத்தனையோ தரப்புக்கள் கலாசாரக் கொலைகள் புரிந்துள்ளன இந்து பக்தி

இயக்கம் உட்பட. சமணம் இந்துமதத்தை அழித்தது என்றால், மீண்டெழுந்த பக்தி இயக்கம் சமணத்தை அழித்தது எனலாமே? அவற்றை அப்படிக் காண வேண்டியதும் இல்லை. அவை மானுடத்தின் வளர்சிதை மாற்றங்கள்தான். கிறித்துவம் தன் அரசியல் பலத்தை பயன்படுத்தியது உண்மையே. இதுவும் இந்தியாவிலும் நடைபெற்றிருக்கும் என்பதே எனதெண்ணம். (எனக்கு இது குறித்து தெரிந்த வரலாறு தசாவதாரம் படத்திலிருந்துதான் என்பதை தாழ்மையுடன் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்)

கலாசாரப்படுத்துதல் குறித்த ஆய்வு புத்தகம் ஒன்று மறைந்த போப்புக்கு ஆசியாவிலிருந்து அனுப்பப்பட்டது. சீனா, வட, தென் இந்தியா, இலங்கை என ஆசிய நாடுகளின் கலாசாரங்களை திருச்சபை எடுத்தாள்வது குறித்தான ஆய்வு அது. அதை பிழைதிருத்தும் அரிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஒருவர் ஜென் முறைகளை உள்வாங்குவது குறித்து, இன்னொருவர் சில இந்திய கலாசார பழக்கங்களைக் குறித்து என கட்டுரைகள் அதில் இருந்தன. ஆனால் என் செவிட்டில் அறைந்தது இலங்கை பாதிரியார் எழுதியிருந்த கட்டுரைதான்.

அவர் அதில் முக்கியமான கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார். ஏன் நாம் இந்த கலாசாரப்படுத்தலை செய்ய வேண்டும். அதனால் சடங்குகளை மேன்மைப்படுத்த முடியுமேயன்றி வேறென்ன பலன்? இருக்கும் சடங்குகளால் என்ன நேர்ந்திருக்கிறது? சர்ச்சில் முதியவர்களுக்கு எழுந்து இடம் கொடுக்கும் பண்போ, அல்லது சர்ச்சில் கூடுபவர்களுக்கிடையே நட்புணர்வோ, அல்லது முகம் தெரியாதவருக்கு நட்போ, வியாபாரத்தில் நேர்மையோ, சாதி பாகுபாடில்லாமல் பழகுவதோ போன்ற அடிப்படை மனிதப்பண்புகளை வளர்ப்பதை நாம் முன்னெடுக்க வேண்டுமேயன்றி வெறுமனே கலாசாரப் பழக்கங்களையல்ல என அந்த ஆய்வையே மறுதலித்து எழுதியிருந்தார் அவர். கிட்டத்தட்ட டி மெலோவின் குரல். இத்தகையதொரு திருச்சபையைத்தான் அவர் கனவுகாண்கிறார். ஆனால் அது மிகவும் கடினமானதொரு விஷயம் அப்படி ஒரு மதம் நீடித்து நிற்பதும் பரவலாகுவதும் இயலாத காரியம். அடிப்படையில் இந்துமதம் அப்படி இருந்தது என்றும் பின்னர் அது பக்தி மார்க்கமானபின்னரே நீடித்து நிலைத்து பரந்துபட்டது என்றும் நீங்கள் சொன்னது நியாபகம்.

திருச்சபை இரண்டாம் வட்டிக்கான் மூலம் தன் கதவுகளை சாதாரணர்களுக்குத் திறந்துவிட்டது. ஆனால் அதற்கும் பல காலம் முன்னரே பல சாமியார்களும் அந்த முயற்சிகளில் ஈடுபட்டிருப்பார்கள் என்றே நினைக்கிறேன். பலரையும் திருச்சபை கண்டித்திருக்கும், தடை செய்திருக்கும். ஆனால் இறுதியில் அது அதிகாரபூர்வமாக ஒன்றுகூடி விவாதித்து கிட்டத்தட்ட ஒரு புதிய திருச்சபையை உருவாக்கியது. அந்த நம்பிக்கை எனக்கு கத்தோலிக்க திருச்சபை மீது எப்போதும் உண்டு.

கிறித்துவர்கள் எடுத்தாள வேண்டியது இந்தியாவின் சடங்குகளை அல்ல. (அதைச் செய்வதில் எனக்கு ஒரு மறுப்பும் இல்லை) மாறாக அதன் பின்னிருக்கும் தத்துவ தரிசனங்களையே.

அன்புடன்
சிறில் அலெக்ஸ்

அன்புள்ள சிறில்,

உங்கள் கருத்துகளை நான் முழுக்க முழுக்க ஏற்கிறேன். அவற்றின் சாராம்சம் நான் சொல்ல விரும்பும் விஷயங்களைப்போலவே இருக்கிறது. சடங்குகளுக்கும் ஆன்மிகமான மலர்ச்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. கிறித்துவ ஆன்மிகம் என்பது தன்னை இன்மைவரை தாழ்த்திக்கொள்ளும் எளிமை, இறைச்சமர்ப்பணம், எளியோர் சேவை ஆகிய மூன்றிலேயே இருக்கிறது. இவற்றில் முதல் இரண்டும் மிக அந்தரங்கமானவை. மூன்றாவதை திறம்படச்செய்வதற்கு அமைப்பு தேவை என்ற அளவிலேயே சபை கூட தேவையாகிறது. ஆகவே கிறித்தவ ஆன்மிகத்துக்கும் சடங்குகளுக்கும் இடையேயான உறவு என்பது முரண்பாடுள்ளதே, எந்தச்சடங்கும்.

கிறித்தவ ஆன்மிகம் இந்தியாவின் சமண, பௌத்த பாரம்பரியத்துடனும் பக்தி இயக்கப் பாரம்பரியத்துடனும் ஆக்கபூர்வமான ஓர் உரையாடலை மேற்கொள்ள முடியும். அப்படி செய்த ஒருவராகவே நான் ஜோச.ஃப் டி மெல்லோவை பார்க்கிறேன். அதிகம்பேருக்குத் தெரியாத மேலும் பலர் உள்ளனர். மறைந்த ஜோச.ஃப் புலிக்குந்நேல் (மலையாள எழுத்தாளர் ஸகரியாவின் மாமா) அவர்களில் ஒருவர்.

சடங்குகளை நான் வரவேற்பது அவை அன்றாட வாழ்க்கையின் தளத்தில், சாமானிய மக்களின் தளத்தில், குறியீட்டுரீ தியாக சில விளைவுகளை உருவாக்குகின்றன என்பதனாலேயே. இன்று கிறித்தவம் என்பதை இந்திய மையஓட்டத்தில் இருந்து பிரித்து தனிமைப்படுத்தும் பெந்தகொஸ்தே போன்ற இயக்கங்கள் மிக வலுவடைந்துவரும் சூழலில் இத்தகைய செயல்பாடுகள் பொதுவான பண்பாட்டுடனான ஓர் உணர்வுரீ தியான உறவை உருவாக்குகின்றன. காரணம் அவை குறியீட்டு ரீ தியானவை.

அவற்றுக்கும் தெய்வ நாயகத்துக்கும் உள்ள வேறுபாடு, ஏற்கனவே நான் சொன்னதுதான். தெய்வநாயகம் அவர் சொல்வதை அவரது விசுவாசிகளுக்குள் இறங்கிச் சொல்பவரல்ல. அதன் மூலம் தன் மதத்தை அவர் இந்தியத்தன்மை கொண்டதாக மாற்றவே இல்லை. அதை 'தூய்மையாக' வைத்திருக்க விரும்பும் ஒரு சீர்திருத்த கிறித்தவர் அவர். அவரது தேவாலயத்தில் அவர் சொல்லும் 'தாமஸ் கிறித்தவ' மதங்களின் நூல்களான தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றில் இருந்து செய்யுட்களை சொல்லி வழிபடவேண்டும் என்று ஓர் இயக்கத்தை அவர் ஆரம்பிக்கலாமே. முடியுமா?

அவர் அந்தத் திரிபை இந்துக்களிடம் வந்து சொல்கிறார். இதன்மூலம் இந்துக்களின் மதங்களையும், தமிழ்ப்பண்பாட்டையும் சிறுமைப்படுத்துகிறார். சிந்திக்கத் தெரியாத கூட்டம் என்றும் கிறித்தவம் இல்லையேல் இவர்களிடம் எதுவுமே இருக்கமுடியாது என்றும் நம்மிடம் சொல்கிறார். வரலாற்றை அழிக்கிறார். அது ஒரு மதமாற்ற மோசடியன்றி வேறல்ல.

மாறாக சிரியன் கிறித்தவர்கள் இங்கே தங்கள் வழிபாட்டை மாற்றிக்கொள்கிறார்கள். தங்கள் சொந்த விளக்கம் ஒன்றை உருவாக்கிக் கொள்கிறார்கள். ஏற்கனவே அவர்களிடம் இதைப்போல உருவம் மாற்றப்பட்ட எத்தனையோ இந்தியச் சடங்குகள் உள்ளன. அவர்களுக்கென தனியான குத்துவிளக்குகூட உள்ளது. இந்த சடங்குமாற்றத்தால் என்ன நடக்கிறது என்பதற்கு அவர்களின் வரலாறே உதாரணம். அவர்களுக்கும்

இந்துக்களுக்கும் இடையே பத்து நூற்றாண்டுகளில் எப்போதுமே மதப்பூசல் உருவானதில்லை. மோசடி மதமாற்றங்களில் அவர்கள் ஈடுபட்டதும் இல்லை.

அவர்களின் நெகிழ்தன்மை காரணமாகவே இந்துக்களின் நூல்களைக் கற்பதற்கும் அவர்களுக்குத் தடை இருந்ததில்லை. வெட்டம் மாணி, ராவ்பகதூர் செறியான் போன்ற இந்துப்பேரறிஞர்கள் அவர்களில் உருவானார்கள். இந்த உள்வாங்கல் காரணமாக கலை, இலக்கியம், வரலாறு போன்ற துறைகளில் அவர்களால் பெரும் சாதனைகளை படைக்க முடிந்திருக்கிறது. இந்தியப் பண்பாட்டில் சிரியன் கிறித்தவர்கள் அல்லாத கிறித்தவர்களின் பங்களிப்பு என்பது அனேகமாக பூஜ்யம் என்பதை பலர் அறிவதில்லை. விதிவிலக்காக இருப்பவர்கள் மிகச்சில கத்தோலிக்கர்கள் மட்டுமே — தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் போல.

ஏன் என்றால் பிற கிறித்தவர்கள் தங்கள் கிறித்தவ நம்பிக்கை காரணமாக தங்களை துண்டித்துக்கொள்வதனால் பொதுப்பண்பாட்டைப்பற்றியும் வரலாற்றைப்பற்றியும் அவர்களின் அறிதல் பரிதாபகரமானதாக இருக்கிறது. ஒரு தமிழர் கிறித்தவர் என்பதனால் கம்பனையும் ஆண்டாளையும் வாசிக்கும் மனநிலை அமைவதில்லை, புதுமைப்பித்தனின் கயிற்றரவு அல்லது கபாடபுரத்தை அவரால் வாசித்துணர முடியவில்லை என்றால் தமிழிலக்கியத்துடன் அவரது உறவு என்னவாக இருக்கும்? இன்றைய கிறித்தவர்களில் பெரும்பாலானவர்கள் அவ்வாறுதான் இருக்கிறார்கள்.

1991ல் பேராசிரியர் ஜேசுதாசன் மார்த்தாண்டம் கிறித்தவ தேவாலயம் ஒன்றில் கிறிஸ்துமஸ் இசைநிகழ்ச்சிக்கு வீணை கொண்டு சென்றபோது பெரிய பிரச்சினை ஆகியிருக்கிறது என்று அவர் என்னிடம் சொன்னார். கித்தார், பியானோ, கீபோர்டு போன்றவையே கிறித்தவ வாத்தியங்கள், வீணை இந்து வாத்தியம் என்று அவர்கள் சொன்னார்கள் என்று சிரித்தார். இன்றும் இங்குள்ள சீர்திருத்த கிறித்தவ சபைகளில் இது சாத்தியமே இல்லை. பேராசிரியர் முறைப்படி தமிழிசை கற்றவர், கம்பனில் தோய்ந்தவர். அவருடைய ஞானத்துக்கு தேவாலயத்தில் இடமில்லை. இவ்வாறுதான் இன்றைய கிறித்தவம் உருக்கொள்கிறது.

அந்த சுய விலக்கத்துக்கு எதிரான எதுவும் வரவேற்கத்தக்கதே. ஆனால் அது அவர்களில் நிகழும் மாற்றமாக இருக்கவேண்டும், தங்களை அப்படியே இறுக்கிக் கொண்டு பிறர் வரலாற்றை திரிக்க முயலும் மோசடிக்கும் இதற்கும் தொடர்பில்லை.

ஜெ

அன்பின் சிறில் அலெக்ஸ்,

தங்கள் தீபாவளி வாழ்த்துக்களுக்கு நன்றி. இப்போதுதான் பார்த்தேன். ஆண்டனி டி மெல்லாவை நீங்கள் இறையியல் கல்லூரியில் படித்ததையும் நான் அறிவேன். போனதடவை சந்தித்தபோது நீங்கள்தான் சொன்னீர்கள் என்று நினைக்கிறேன். இதில் சந்தேகப்பட என்ன இருக்கிறது? (கிறித்துவம், இந்து மரபு) இறுதியாக கத்தோலிக்க சபை ஒரு ஒற்றைப் பாறாங்கல் அல்ல என்பதையும் அறிவேன். ஒரு பத்துபதினைந்து

ஆண்டுகளுக்கு முன்னர் அவ்வாறு நினைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு பெரும் மானுட அமைப்பும் ஒற்றைப் பாறாங்கல்லாக நூற்றாண்டுகளுக்கு செயல்பட முடியாது. ஆனால் எந்த அமைப்பிலும் காலங்களூடாக ஒரு மைய நீரோட்டமும் எதிர் நீரோட்டங்களும் இருக்கின்றன. இதில் ஆண்டனி டிமெல்லாவின் திசை எது என்பது முக்கியமான ஒன்று.

கிறித்தவத்தை அதன் மேம்போக்கான சடங்குகளுக்கு இந்திய சூழல் பெயர்களை அளிப்பதும், அதன் உள்ளார்ந்த ஆன்மிகக்குறியீட்டை அழித்து அங்கே கிறித்தவ இறையியலை புகுத்துவதும் உரையாடல் அல்ல என நான் நினைக்கிறேன். இதைத்தானே பௌத்தம் ஹிந்து மதக் கடவுளருக்கு தெற்காசிய தேசங்களில் செய்தது, இதைத்தானே சைவவைணவ வைதீகங்கள் பௌத்த சமண தெய்வங்களுக்கு செய்தன எனும் வாதம் எத்தனை சரியானது? முதலாவதாக இந்த இரண்டு இயக்கங்களின் இணைத்தன்மைகளும் கேள்விக்குரியன. இரண்டாவதாக இது ஒன்றையொன்று செரித்து வளர்தலே அன்றி உரையாடல் அல்ல. சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த இந்த இயங்குமுறைதான் நம் இன்றைய உரையாடலுக்கும் வரைதிட்டமாக இருக்குமென்றால் அது சரியானதல்ல.

எனவேதான் நான் ஆண்டனி டி மெல்லாவை முன்வைக்கிறேன்.

எப்படி ஒரு மதத்தின் ஆன்மிகத்தேடலாளன் தன் முகத்தையும் தான் பிறந்த மதத்தையும் இழக்காமலே பிற மதத்தின் சிறந்த அமசங்களை தன் ஆன்மிகத்தேடலுக்கு உள்வாங்க முடியும் என அவர் காட்டுகிறார். இதுதான் நாம் வந்தடைந்துள்ள இந்தியப்பண்பாட்டின் அடிநாதமாகவும் விளங்குகிறது என நான் கருதுகிறேன். ஒரு கிறித்தவர் இந்தியப்பண்பாட்டு அம்சங்களை தமது வழிபாட்டில் பயன்படுத்த விளைந்தால் அதனை தடுக்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை. அப்படி தடுக்க நினைப்பது ஒரு கீழ்மையான எண்ணமும் கூட.

ஆனால் கத்தோலிக்க சபை ‘பெரிய நாயகி’ எனும் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில் அம்பாளின் பெயரை திருவிதாங்கூரில் கன்னிமேரிக்கு வைக்கும்போது அது எவ்வளவு மடத்தனமாக இருக்கிறது. ஒன்று: பெரியநாயகி என்பது இறைவனின் சக்தி அம்சம். ஆனால் மேரி கிறித்தவ இறையியலில் இறைவனின் சக்தி அல்ல. நாயகி அல்ல. இறைவனுக்கு கீழான நிலையில் இருக்கும் புனிதர்கள் எனும் அடுக்கில் உள்ளவள். இத்தகைய பெயர் வைத்தல்கள் ஏறக்குறைய பெப்ஸிகோக் கம்பெனிகளின் பிராந்திய பண்பாட்டு விளம்பரங்களிலிருந்து வேறானவை அல்ல. இதைத்தான் பண்பாட்டுத் திருட்டு என்று சொல்லுவேன்.

மாடனுக்கு சக்கரைப் பொங்கல் படைப்பதற்கும் பாகன் கூறுகளை கிறித்தவம் உள்ளிழுத்தமைக்கும் என்ன வேறுபாடு என கேட்கிறீர்கள். நிச்சயமாக ஆழமான வேறுபாடுகள் இருக்கின்றன. சுடலை மாடன் சுடலைமாடனாக இருந்தபடியே பிரபஞ்சமெங்கும் வியாபிக்கும் பிரம்மத்தின் அம்சமாக திகழ முடியும். பாகனியத்திலிருந்து உள் வாங்கப்பட்ட கடவுளர் கிறித்தவத்தில் அதிகப்படியாக புனிதர்களாக மட்டுமே இருக்க முடியும். இந்த முக்கியமான வேறுபாட்டை சுட்டிக்காட்டவே லின் வைட் ஜூனியரின் பிரசித்தி பெற்ற கட்டுரையைக்

குறிப்பிட்டேன். ஆனால் இந்த கொடுக்கல் வாங்கல்களை மீறிய ஆன்மிக மரபுகளிடையிலான உரையாடலே மதங்கள் கடந்த மானுடம் தழுவிய பன்மை அழிப்பில்லாத ஆன்மிகத்துக்கு நம்மை அழைத்துச்செல்லும். இத்தகைய உரையாடலையே சுவாமி விவேகானந்தரும் காந்தியும் முன்வைத்தனர். ஆண்டனி டி மெல்லாவையும் குமரப்பாவையும் இதே மரபின் நீட்சியாகவே நான் காண்கிறேன்.

நான் ஏன் ஆண்டனி டி மெல்லாவை முன்வைக்கிறேன் என்று வினவும் நீங்களே அதற்கான பதிலையும் இறுதியில் சொல்லியிருக்கிறீர்கள்: “கிறித்துவர்கள் எடுத்தாள வேண்டியது இந்தியாவின் சடங்குகளை அல்ல. (அதைச் செய்வதில் எனக்கு ஒரு மறுப்பும் இல்லை) மாறாக அதன் பின்னிருக்கும் தத்துவ தரிசனங்களையே.” இதைவிட அழகாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் இந்த விஷயத்தை நான் சொல்லியிருக்க முடியாது. நன்றி. ஆண்டனி டி மெல்லாவைப் பொறுத்தவரையில் நிச்சயமாக அவரை என்னைவிட நன்றாக நீங்கள் அறிவீர்கள் என்பதில் ஐயமில்லை. இருந்தபோதிலும் அவரை வாசித்ததில் நான் அடைந்த சில புரிதல்களை முன்வைக்கிறேன்.

ஒன்று, அவரது பிரசித்தி பெற்ற அவரது புகழுக்கு காரணமாகியிருந்த ""Sadhana a way to God" இந்நூலின் முன்னுரையில் அவர் ஹிந்து துறவியையும் அவரது மூச்சுப்பயிற்சிக்கான தத்துவத்தையும் கூறி "the exercises I propose in this book are very much in line with the approach of that Hindu guru whom I have never met or hear of since" என்கிறார். எந்த ஒரு புத்த துறவி குறித்தும் அவர் குறிப்பிடவில்லை. ஆனால் அது முக்கியமானதுமல்ல. ஹிந்து துறவிக்கு பதிலாக அந்த இடத்தில் விபாசனா முறையை கற்றுக்கொடுத்த ஒரு பௌத்த துறவி இருந்திருந்தாலும் அது அந்நூலின் உள்ளீட்டுக்கும் மத எல்லைகளை கடந்து அது முன்வைக்கும் ஆன்மிகத்துக்கும் எவ்வித வேறுபாட்டையும் ஏற்படுத்தியிருக்காது.

இரண்டு. நான் ஆண்டனி டிமெல்லாவை ‘வேத சாட்சியாக’ அழைக்கவில்லை. இன்னும் சொன்னால் ஜெயமோகனின் அதே இணைய பக்கத்தில் அவர் இறுதி வரை தனது சபைக்குள்ளேயேதான் இருந்தார் என்பதை தெரிவித்திருக்கிறேன். அதே பக்கத்தில் சிறிது கீழே பார்த்தால் அந்தப் பக்கத்தில் எனது இறுதிக் கடிதத்தில் இப்படி குறிப்பிட்டிருக்கிறேன்: “ஆண்டனி டி மெல்லாவை நினைவுகூரவும்.. நிறைந்த சிரிப்பும் ஞானமும் கொண்ட எளிமையான அந்த யேசுசபை பாதிரியார் இறுதி வரையில் எத்தனையோ துன்பங்களுக்கு அப்பாலும் சபையிலிருந்து விலகவில்லை. இறுதிவரை கிறித்தவ அடிப்படைகளை விட்டுக்கொடுக்காமல் வாழ்ந்தவர்தாம்.”

மூன்று, ஆம் சிறில் அலெக்ஸ், இன்றைய போப்பாக திகழும் கார்டினல் ராட்சிங்கர் அன்றைய போப்பான போப் இரண்டாம் ஜான் பால் கொடுத்த அதிகாரத்தின் அடிப்படையில் 1998ல் வெளியிட்ட தணிக்கை அறிக்கையில் "With the present Notification, in order to protect the good of the Christian faithful, this Congregation declares that the abovementioned positions are incompatible with the Catholic faith and can cause grave harm." என்றுதான் குறிப்பிட்டாரே ஒழிய “முற்றிலும் நிராகரிக்கப்படவேண்டிய ஒரு பாகனிய, சாத்தானிய படைப்பாக” அவற்றை குறிப்பிடவில்லை. மேலே கூறிய வாசகங்களை சிறிதே வாசித்து பாருங்கள். “கத்தோலிக்க விசுவாசத்தின் நன்மைக்காக”

“கத்தோலிக்க விசுவாசத்துடன் ஒத்துப் போகாததும் பெரும் தீங்கை உருவாக்கும் தன்மை கொண்டதுமாகத்தான்” டி மெல்லாவின் படைப்புகள் குறித்த அறிக்கை இன்றைக்கும் வத்திகானின் அதிகார பூர்வ அறிவிப்பாக இருக்கிறதே அன்றி “பாகனிய சைத்தானிய படைப்பாக” அவை சொல்லப்படவில்லை. ஏனெனில் நாம் வாழும் நூற்றாண்டுக்கு ஏற்ற பதங்களைத்தான் கத்தோலிக்க சபை பயன்படுத்த முடியுமல்லவா? “சைத்தானிய” என்று சொல்ல முடியாது “நன்மையை பாதுகாக்க” “பெரும் தீங்கை உருவாக்கக் கூடிய” என்றுதான் சொல்ல முடியும். காலத்தின் கட்டாயம். ஆனால் சிறில், நிச்சயமாக நீங்கள் மென்மைப்படுத்தி சொல்லியிருப்பது போல “கத்தோலிக்க நம்பிக்கைக்கு அப்பாற்பட்டது” (beyond Catholic faith) என சொல்லவில்லை. இன்றைக்கும் அந்த முழு அறிக்கையும் வத்திகான் இணையதளத்தில் உள்ளது: நீங்களே சென்று வாசித்துக்கொள்ளலாம்.
(http://www.vatican.va/roman_curia/congregations/cfaith/documents/rc_con_cfaith_doc_1998062

நான்கு: இது கத்தோலிக்க சபையின் உள் நிகழும் ஒரு முக்கியமான முரணியக்கத்தைக் காட்டுகிறது. கிறித்தவ மதத்தில் நிகழும் விஷயங்களை அவதானித்து வரும் ஒரு ஹிந்து என்கிற முறையில் எனக்கு இந்த விஷயம் முக்கியமானது. போப் இரண்டாம் ஜான் பால் மிக அதிகமான அளவில் புனிதப்பட்டங்களை கொடுத்தவர் அல்லது அதற்கு முந்தைய நிலைக்கு கத்தோலிக்க முக்கியஸ்தர்களை உயர்த்தியவர் என்றே பலரும் அவரை அறிவார்கள். ஆனால் அவரும் அன்று அவருக்கு முக்கிய வலது கையாக திகழ்ந்த கார்டினல் ராட்ஸிங்கரும் மிக அதிக அளவில் கத்தோலிக்க இறையியலாளர்களை குறிப்பாக சமயப்பன்மை பிறசமயங்களுடன் உரையாடல் என செயல்பட்ட பலரை கண்டனம், சபை நீக்கம், அல்லது நூல்களை விலக்குதல் ஆகியவற்றை செயல்படுத்தினார்கள் என்பது மிகவும் வெளியில் தெரியாத விஷயம். இவ்விரு பெருந்தகைகளின் தலைமையின் கீழ் Congregation for the Doctrine of the Faith எனும் பழமையான அமைப்பு புத்துயிர் பெற்றது. Jacques Poheir, Hans Kung, Charles Curran, திஸா பாலசூரியா, எனும் வரிசையில் இறந்த பின் தோண்டியெடுத்து தடைப்படுத்தப்பட்டவராக ஆண்டனி டி மெல்லா. இதில் Hans Kung குறித்து தனியாக குறிப்பிடவேண்டும். சமயங்களுக்கிடையேயான உரையாடலை மிகவும் முக்கியமாக வலியுறுத்தியவர் அவர். Congregation for the Doctrine of the Faith என நவீனப்பெயர் சூட்டப்படும் முன்னால் இந்த அமைப்புக்கு ஒரு பெயர் இருந்தது. என்ன தெரியுமா? Supreme Sacred Congregation of the Roman and Universal Inquisition.

ஐந்து: நான் எழுதியது: “ஆண்டனி டி மெல்லாவுக்கு நிகழ்ந்தது தெரிந்ததுதானே. ஆனால் தாங்கள் உருவாக்கிய நிறுவனங்களிலிருந்தே வெளியேற்றப்பட்டு சிவன் கோயில் முன்னால் மாரடைப்பு ஏற்பட்டு வீழ்ந்து கிடந்த கத்தோலிக்க இறையியலாளர்கள் குறித்து அதிகமாக வெளியே தெரியாது.” உத்தரகாசியில் சிவன் கோயில் முன்னால் மாரடைப்பால் வீழ்ந்து பிறகு பத்து மாதங்களுக்கும் குறைவாக ஜீவித்திருந்த அந்தத் துறவியின் பெயர் Henri le Saux என்கிற அபிஷிக்தானந்தா. இந்திய மதங்களின் வெளி அமைப்புகளை கிறித்தவமயமாக்க பூரண கிறித்தவ நம்பிக்கையுடனும் ஹிந்து தத்துவங்கள் குறைபாடுடைய கிறிஸ்துவில் மட்டுமே

பூரணமடையக்கூடியவை எனும் நிச்சயத்துடனும் களம் இறங்கியவர் அவர். பல ஹிந்து புனித இடங்களில் எவரும் அறியாமல் ஹிந்து துறவி வேடம் பூண்டு சென்று “ஹோலி மாஸ்” நடத்தியவர். ஒரு கிறித்தவ ரமணரை உருவாக்கும் புராஜெக்ட் கூட கைவசம் இருக்கிறது. ஆனால் அவரை அறியாமலே அவர் அத்வைத அனுபவத்துக்காக ஏங்க ஆரம்பிக்கிறார். தம் வாழ்வின் இறுதிக்கட்டத்துக்கு நகர்ந்து கொண்டிருக்கும் அவர் ஒரு முக்கியமான கேள்வியை சென்றடைகிறார்: “முடிவில்லாத அந்த ஒன்றை ஒரே ஒரு ஒற்றை வெளிப்படுத்துதலில் நாம் அடக்கிக்கொள்ள முடியுமா?” இறுதியாக அவரால் அடக்க முடியாத ஒரு விஷயம் அவரிலிருந்து வெளிவருகிறது. “எவன் தன் சுயானுபவத்தில் ஆத்மாவை அனுபவிக்கிறானோ அவனுக்கு கிறிஸ்துவின் மீது நம்பிக்கையோ, சபையோ, பிரார்த்தனையோ தேவையில்லை.” சுத்த அத்வைத நிலையை அடையத் தடையாக அமையும் நாமரூபங்களில் அவர் சர்ச்சையும் யேசுவையும் கூட சேர்க்க தயங்கவில்லை. ஆனால் இறுதி வரை அவர் கிறித்தவ சபையின் சடங்குகளை கைவிடவில்லை. அவரது அத்வைத அனுபவத்தை சீதாராம் கோயல் கடுமையாக விமர்சித்திருக்கிறார். பரிதாபத்துக்குரிய சுய ஏமாற்று என்றுகூட சொல்லியிருக்கிறார். சுவாமி சிதானந்தர் அவரது அத்வைத அனுபவம் உண்மையான அனுபவமே என்கிறார். ஆனால் இன்றைய திருச்சி சாந்திவனத்தில் அபிஷிக்தானந்தா அல்ல, எவ்வித ஆன்மிக நாட்டமும் இல்லாமல் முழுக்க முழுக்க கிறித்தவமற்றும் மேற்கத்திய உயர்வு மனப்பான்மையுடன் செயல்பட்டவரும் ஓரளவு அவருடன் மோதியவருமான மறைந்த Bede Griffiths தான் முக்கிய ஆளுமையாக மதிக்கப்படுகிறார்.

அடிப்படையில் நம் எண்ணங்களில் நேர் எதிரான கருத்தாக்கங்கள் இல்லை என்றே நினைக்கிறேன்.

அரவிந்தன் நீலகண்டன்

அன்புள்ள அரவிந்தன்,

நான் எழுதிய முதல் கடிதத்தில் சொன்ன சிலவற்றையே மீண்டும் கோடிட்டு காட்ட வேண்டியதுள்ளது என நினைக்கிறேன்.

1. கத்தோலிக்க திருச்சபை கலாசாரமயமாக்கலின் எதிரி அல்ல. ஆனால் கலாசாரமயமாக்கலோ அல்லது கத்தோலிக்கத்தின் பெயரில் நடத்தப்படும் வேறெந்தவொரு ஆன்மிக முயற்சியுமோ இயேசுவின் போதனைகளுக்கோ அல்லது திருச்சபையின் நம்பிக்கைகளுக்கோ பாதகமானதாக விளங்குமானால் அதை திருச்சபை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. இதை எந்த மதமும் ஏற்றுக்கொள்ளாது.

உங்களின் முக்கிய உதாரணமான டி மெலோவுக்குச் செல்வோம். நீங்கள் அனுப்பியிருந்த கடிதத்தை மீண்டும் ஒருமுறை படிக்கவும். குறிப்பாக அந்த முதல் பத்தியை.

His works, which almost always take the form of brief stories, contain some valid elements of oriental wisdom. These can be helpful in achieving selfmastery, in breaking the bonds and feelings that keep us from being free, and in approaching with serenity the various vicissitudes of

life. Especially in his early writings, Father de Mello, while revealing the influence of Buddhist and Taoist spiritual currents, remained within the lines of Christian spirituality. In these books, he treats the different kinds of prayer: petition, intercession and praise, as well as contemplation of the mysteries of the life of Christ, etc.

“டிமெலோவின் எழுத்து ‘கிழக்கின் ஞானத்தின் சில நியாயமான கூறுகளைக் கொண்டுள்ளது’. அவை சுய மேம்பாட்டையும், விடுதலையுணர்வையும், சமநிலையுடன் வாழ்வின் பல்வேறு சவால்களையும் சந்திக்கும் திறனையும் தரக்கூடியவை.”

இப்படிச் சொல்லும் ஒரு கடிதம் பிற ஞானங்களை ஏற்றுக் கொள்ளாததும் inquisitionக்கு இணையானதுமாய் உங்களால் வர்ணிக்கப்படுவது நியாயமானதல்ல. தாவோயிசத்தின், பௌத்தத்தின் உட்கூறுகளை கிறித்துவ நம்பிக்கையின் எல்லைக்குள் பொருத்திக் கொள்வதை இங்கு யாரும் எதிர்க்கவில்லை. அது வரவேற்கப்படுகிறது. டி மெலோ பல இடங்களில் எல்லைகளை விட்டு விலகித்தான் செல்கிறார். இவை அந்தக் கடிதத்திலேயே பட்டியலிடப்படுகின்றன.

நீங்கள் அந்தக் கடிதத்தில் இல்லாத வார்த்தைகளை அதில் நுழைக்கப் பார்க்கிறீர்கள். அந்தக் கடிதத்திலுள்ளவை இந்த நூற்றாண்டுகளுக்கான வார்த்தைகள்தாம். பழைய நூற்றாண்டுகளின் வார்த்தைகளைக் கொண்டு அதை மீள்வாசிப்பது சரியானதுதானா? அதுதான் உரையாடலுக்கு களம்மைக்குமா? நீங்கள் உங்கள் தேவைக்கேற்ப பழைய நூற்றாண்டு விஷயங்களை இன்குயிசிஷன், பாகனீய அழிப்பு எனக் கையாளுகிறீர்கள். ஆனால் நான் அதே கூறுகளை இந்து மதத்தில் சுட்டிக்காட்டும்போது நீங்கள் அதெல்லாம் பழசு என்கிறீர்கள்.

தன் நம்பிக்கைக்கு பாதகமான, நம்பிக்கையை விட்டு விலகி மற்றொரு புதிய நம்பிக்கையாகவே நிற்கும் இன்னொரு நம்பிக்கையை கத்தோலிக்கம் ஏற்றுக்கொள்ள வேண்டியதே இல்லை. எந்த மதமும் அப்படி ஒன்றை ஏற்றுக்கொள்வதில்லை.

2. ஆந்தனி டி மெலோ உயிரோடிருக்கையில் அவர் துன்புறுத்தப்பட்டார் என்பதுபோல ஒரு தோற்றத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். எந்த ஆதாரமும் அற்ற குற்றச்சாட்டு இது. அவரின் இறப்புக்கு 10 ஆண்டுகளுக்குப் பின்னரே டிமெலோவின் ஆன்மிகம் குறித்த நீங்கள் குறிப்பிட்ட அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. டி மெலோ உயிரோடிருந்தவரை ஒரு மாபெரும் ‘கத்தோலிக்க’ ஞானியாக கொண்டாடப்பட்டார். இந்தியாவில் மட்டுமல்ல அமெரிக்காவிலும், ஸ்பெயினிலும்கூட..

3. போன கடிதத்தில் நான் குறிப்பிட்ட ஒன்றை முழுமையாகச் சொல்லாமல் விட்டுவிட்டேன். இலங்கைப் பாதிரியார் கலாசாரப்படுத்தலுக்கு மறுப்புக் கட்டுரை எழுதியிருந்தார் என்றேனே அவர் கிறித்துவ மதிப்பீடுகளில் நம் மக்களை வளர்ப்பதில் நாம் முழுக்கவனமும் செலுத்தவேண்டும் என்பதையே வலியுறுத்துகிறார். கிறித்துவம் ஒன்றும் வறண்ட உயிரற்ற ஆன்மிகமல்ல முதலில் நம் மக்கள் அதையே உணர்ந்து கொள்ளாதபோது வேறெந்த கலாசாரத்தை அவர்களுக்கு உணர்த்துவது என்பது அவரின் பக்கம்.

உங்களின் தற்போதைய கடிதத்துக்கு வருவோம்.

“கிறித்தவத்தை அதன் மேம்போக்கான சடங்குகளுக்கு இந்திய சூழல் பெயர்களை அளிப்பதும், அதன் உள்ளார்ந்த ஆன்மிகக்குறியீட்டை அழித்து அங்கே கிறித்தவ இறையியலை புகுத்துவதும் உரையாடல் அல்ல என நான் நினைக்கிறேன்.”

“ஒரு கிறித்தவர் இந்தியப்பண்பாட்டு அம்சங்களை தமது வழிபாட்டில் பயன்படுத்த விளைந்தால் அதனை தடுக்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை. அப்படி தடுக்க நினைப்பது ஒரு கீழ்மையான எண்ணமும் கூட.”

எந்த ஒரு மதச் சடங்கின் பின்னாலும் இரு ஓட்டங்கள் இருக்கின்றன. ஒன்று வேதாந்தம் இன்னொன்று தத்துவம். வேதாந்தம் கடவுளை, கடவுளரை, கடவுள் நம்பிக்கையை அந்தச் சடங்கோடு சம்பந்தப்படுத்துகிறது. தத்துவம் மனிதனை , மனிதத்தை, மரபை கலாசாரத்தை அந்தச் சடங்கோடு தொடர்புபடுத்துகிறது.

சரஸ்வதி பூஜையை எடுத்துக்கொள்வோம். அதன் இறையியலில் சரஸ்வதி கல்வியே தெய்வ வடிவானவளாக நிற்கிறாள். அதன் தத்துவம் கல்வி மனிதனுக்கு வழிபடத் தகுந்த அளவுக்கு முக்கியமானது என உணரச் செய்வது. தீபாவளியை எடுத்துக்கொள்வோம். இந்தியாவின் பல்வேறு இடங்களில் பல்வேறு காரணங்களுக்காக தீபாவளி கொண்டாடப்படுகிறது. நரகாசுரன் மறைவுக்காக, இராமன் வெற்றியுடன் திரும்பியமைக்காக, மகாவீரர் ஞானம் பெற்ற தினமாக சீக்கியர்களுக்கு ஒரு காரணம், நேபாளில் பௌத்தர்கள் கூட தீபாவளியை கொண்டாடுகிறார்கள். இந்த மாபெரும் இந்திய கலாசார நிகழ்வுக்குப் பின்னணியில் பல இறையியல்கள் உள்ளன. ஆனால் அங்கே இருப்பது ஒரே மானுட தத்துவம்தான்... அது தர்மத்தின் வெற்றியை, ஞானத்தின் வெற்றியை, இருளின் மீது ஒளி கொண்ட வெற்றியை கொண்டாடுகிறது. இந்த தத்துவ தரிசனங்களையே கிறித்துவர்கள் எடுத்தாள வேண்டும் என்கிறேன். இதற்கு யாரும் மறுப்பு சொல்லவே முடியாது. நீங்களே சொல்வதுபோல இதை மறுப்பது கீழான எண்ணமும்கூட.

தீபாவளி என்பது இயேசு லூசிபரை வென்ற நாள் என கத்தோலிக்க திருச்சபை கொண்டாடலாம். ஆனால் அதைத்தான் இந்தியாவில் தீபாவளி எனக் கொண்டாடிவருகிறார்கள் எனச் சொல்லுமேயானால் அது மிக மிக தவறானது. தற்போதைய சிரியன் கிறித்துவர் விவகாரத்தில் கிறித்துவச் சடங்குமுறைதான் இந்துக்களால் விஜயதசமியாகக் கொண்டாடப்படுகிறது எனக் கூறியிருப்பது ஆதாரமற்றது, கண்டிக்கத்தக்கது.

பெரியவர்களை மதிப்பது நமது கலாசாரத்தின் முக்கிய கூறு. ஒரு நல்ல காரியத்தை துவங்கும் முன்பு இந்துக்கள் பெரியவர்களின் ஆசியை நாடுகிறார்கள். இது செயல்படுத்தப்படும் விதம் பல்வேறாக உள்ளது. பிராமணர்கள் சாஷ்டாங்கமாக விழுகிறார்கள். கிறித்துவர்கள் முழங்காலிட்டு நிற்க பெரியவர்கள் வந்து அவர்கள் நெற்றியில் சிலுவை அடையாளமிடுகிறார்கள். அடிப்படை மானுட சிந்தனை, தத்துவம் ஒரேமாதிரியாயிருக்க அதன் செயல்படுத்தும் வடிவங்கள் மாறியிருப்பதைக் காணலாம்.

இது போன்ற கலாசாரமயமாக்கலை கத்தோலிக்க கிறித்துவர்கள் சிரத்தையுடன் செய்துவருகிறார்கள். பல பிரிவினை சகோதர கிறித்துவர்களும் (ப்ராட்டஸ்டான்ட்) இதை வன்மையாக எதிர்க்கிறார்கள், ஏன் பல கத்தோலிக்கர்களுமே சில பழக்கங்களை பின்பற்றுவதை எதிர்க்கிறார்கள். இவை இன்றோ நேற்றோ ஏதோ ஒரு சாமியாரின் இராக்கனவில் உதித்துவந்த மதமாற்ற யுக்திகள் அல்ல. பல காலங்களாய் நம் இந்திய கலாசாரத்தின் விழுமியங்களாக நம் மக்களின் வாழ்க்கைமுறையில் ஒட்டி வந்தவைதான். தட்டிப்பறிக்கவும் விட்டுக்கொடுக்கவும் இது யார் வீட்டு சொத்தொன்றும் அல்லவே?

புது வருடத்தன்று நள்ளிரவில் கோவிலுக்கு செல்வது எனக்குத் தெரிந்தமட்டும் ஒரு கிறித்துவப் பழக்கமாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது சென்னையில் மட்டுமேனும் இந்துக்கள் பலரும் நள்ளிரவு கோவிலுக்குச் செல்கிறார்கள். இல்லை இல்லை இது கிறித்துவ கலாசாரத்தை hijack செய்யும் வேலை என யாரும் கூறிவிட முடியாது.

இந்துக்களும் கிறிஸ்துமஸ் கொண்டாடுகின்றனர் என்பதை பலமுறை உயர்வாகச் சொல்லியிருக்கிறீர்கள். நல்ல விஷயம்தான். ஆனால் அப்படி கிறிஸ்துமஸ் கொண்டாடும் இந்து தான் வணங்கும் பல்லாயிரம் தெய்வங்களில் ஒன்றாகத்தான் இயேசுவைக் காண்கிறானேயன்றி அவன் இஸ்ரேயலின் மரபில் வந்து உலகையே இரட்சிக்க வந்த மெசியா இயேசுவின் பிறப்பைத்தான் கொண்டாடுகிறான் என்று சொல்லிவிட முடியுமா. அதில் அவன் காணும் இறையியல் ஒரு கிறித்துவன் காணும் இறையியலை விட முற்றிலும் வேறானது.

பெரிய நாயகி என்பது ஒரு காரணப் பெயர். அது உணர்த்துவது பெண்ணின் கடவுள் வடிவமென்று எதை வைத்துச் சொல்வது? மரியாள் வெறும் புனிதை மட்டுமல்ல அவளுக்கு கத்தோலிக்க கிறித்துவத்தில் மிகச் சிறப்பான இடம் ஒன்று உள்ளது. அவள் ‘மீட்பின் வரலாற்றின் நாயகியே’. அவளுக்கு ஆயிரம் பெயர்கள் உள்ளன. பெரிய நாயகி என்பது மிகச்சாதாரண பெயர். Queen of love, Queen of mercy, Queen of peace, Queen of angels, Queen of patriarchs and prophets, Queen of apostles and martyrs, Queen of confessors and virgins, Queen of all saints, Queen conceived without original sin, Queen assumed into heaven, Queen of all the earth, Queen of heaven, Queen of the universe. இன்னும் எத்தனையோ பெயர்கள், ப்ராட்டஸ்டண்டுகள் வெறுத்தோடுமளவுக்கு மரியாளுக்கு கத்தோலிக்க கிறித்துவ இறையியலில் இடமுள்ளது என்றால் ‘பெரிய நாயகி’ எனும் பெயர் எம்மாத்திரம்?

கலாசாரம் எடுத்தாளப்படும்போது அதன் பழைய வடிவிலேயே, அப்படியே எடுத்தாளப்படவேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள். அது தேவையில்லை என்பதற்கு இந்து மதமே மாபெரும் சான்று. இந்திய கலாசாரத்தின் பன்முகத் தன்மையை வியந்தேற்றும் நீங்கள் அதை மாற்று மதத்தினர் உட்கொண்டு கையாளும்போது சந்தேகத்தோடே அணுகுகிறீர்கள். அதை தாராளமனதுடனும் பெருந்தன்மையுடனும் அணுகிவிடவில்லை என்பதே உண்மை. அதுவே சரியானதும்கூட. இல்லையென்றால் தெய்வநாயகம் போன்றோர்களை கட்டுக்குள் வைத்திருப்பது கடினம். இந்த வருடம் முதல் திருப்பதியில் கிறிஸ்துமஸுக்கு சிறப்பு பூஜை நடத்தப்படுமானால் நானும் அதை சந்தேகத்தோடுதான் பார்ப்பேன்.

’பெரிய நாயகி’ பெயர்சூட்டுதலை கத்தோலிக்க திருச்சபை மதம்மாற்றும் ஒரு மோசடி நோக்கில் செய்வதாக நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் மரியாளுக்கு சேலை கட்டுவது கொடிமரங்களைச் சுற்றிவருவது, முழங்காலில் சுற்றிவருவது, சபரி மலைக்கு செல்வது போலவே வேளாங்கண்ணிக்கு மாலையிடுவது, உப்பு மிளகு தருவது, கையில் கயிறு கட்டுவது போன்ற பல கலாசார உள்வாங்கல்கள் பொதுமக்களால் தாமாகவே உருவாக்கப்படுகின்றன நடைபெறுகின்றன. முன்பே குறிப்பிட்டதைப்போல கிறித்துவ நம்பிக்கைகளின் எல்லைகளுக்குள் இவை நின்றுவிட்டால் போதுமானது அதை யாரும் எதிர்ப்பதில்லை. அப்படித்தான் உருவாகின்றன இவற்றில் பலவும்.

சுடலை மாடன் இன்னும் தெய்வம்தானே என்கிறீர்கள். உண்மைதான். நல்லதுதான். மாடன் வலுவான உதாரணம் இல்லைதான். ஜெயமோகனின் மாடன் மோட்சத்தைவைத்தே அந்த உதாரணத்தை கையெடுத்தேன். ஆனால் விஷ்ணுபுரத்தில் இந்து மதம் எப்படி சிறுதெய்வங்களை நேரடியாக பழங்குடியினரின் பெருந்தெய்வங்களாகவே மாற்றியது என்பதைச் சொல்லியிருக்கிறார் ஜெ. என்னோடுடனான தனிப்பட்ட உரையாடலிலும் அவர் அப்படி குறிப்பிட்டது நினைவில் உள்ளது. ஒரே கடவுளுக்கு இத்தனை வடிவமும் கதைகளும் வரலாறும் உருவானது இத்தகைய உள்வாங்கலால்தான் நடந்திருக்க இயலுமில்லையா? அந்த பழங்குடி தெய்வங்கள் யாரென்றே இன்று தெரியாமல் போனதில்லையா? ஆக மாடன் தற்போதைக்கு தப்பித்தார் எனக் கொள்ளலாமா?

சொன்னதையே திரும்ப திரும்பா சொல்வதுபோலத் தோற்றமளிக்கிறது... இருப்பினும்.

தனது நம்பிக்கை வட்டத்துக்குள் நடக்கும் எந்தவொரு கலாசாரமயமாக்கலையும் கத்தோலிக்க திருச்சபை எதிர்ப்பதில்லை. சொல்லப்போனால் அதை தேடிச் சென்று உள்வாங்குகிறது. இது மதமாற்ற நோக்கில் என நீங்கள் நம்புகிறீர்கள். இது கலாசார நோக்கில் என்று நான் நினைக்கிறேன். நம் இருவருக்குள்ளும் இந்த அடிப்படை வித்தியாசம் இருப்பதால்தான் இந்த உரையாடலே என நினைக்கிறேன்.

2. மதச்சடங்குகளுக்குள் இரு வேறு ஓட்டங்கள் உள்ளன. ஒன்று மதம் சார்ந்தது, இறை சார்ந்தது இன்னொன்று மானுடம் சார்ந்தது. இந்த மானுடம் சார்ந்த தத்துவ தரிசனத்தையே நான் கலாசாரம் என்கிறேன். மற்றவை யாவும் குறியீடுகளேயன்றி வேறில்லை. இந்த மானுட தத்துவ தரிசனத்தைக் காட்டும் வேறொரு குறியீட்டை உருவாக்க யாருக்கும் தடை இல்லை. இந்துமதமே இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

தீபாவளிக்கு சாமி கும்பிட வேண்டும் என நம்பிக்கை இருக்கிறதென்றால் அவரவர் அவரவர் சாமியைத்தான் கும்பிடுகிறார்கள். தீபாவளிக்கு கடவுளை வழிபட வேண்டும் என்பது ஒரு மானுட தரிசனம். ஐயப்பனையோ, முருகனையோ, வினாயகரையோ சிவனையோ கிருஷ்ணனையோ வழிபடுதல் வெவ்வேறு குறியீடுகள். இதில் என்னது மட்டுமே உயர்ந்ததென்றோ, முதன்மையானதென்றோ மற்றவை இழிவானதென்றோ கொண்டாட யாருக்கும் உரிமையில்லை.

3. கலாசாரமயமாக்கலை திருச்சபை ஒரு தந்திரச் செயலாக நடத்திவருகிறது என நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்கள். நான் அது இயல்பான

ஒன்றாய் அனுமதிக்கப்படுகிறது எனச் சொல்கிறேன்.

நான் கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரபூர்வ குரல் அல்ல. இங்கே நான் முன்வைக்கும் எல்லா கருத்துகளும் எனது சொந்தக் கருத்துகளே என்பதை தெளிவுபடுத்த வேண்டியது என் கடமை என நினைக்கிறேன்.

உரையாடலுக்கான களம் மதங்களுக்கிடையே தேவையில்லை என நினைக்கிறேன். மானுடர்கள் உரையாடினால் போதுமானது. மதங்களின் உரையாடல் ஒரு பொய்யான தளத்திலேயே நடைபெற இயலும். மதங்கள் ஒன்றை ஒன்று சகித்துக் கொள்ளலாமே அன்றி நம்பிக்கை என வந்தபின்பு மதித்து வரவேற்று உரையாட அங்கே ஒன்றுமேயில்லை. நாம் தொடர்ந்து உரையாடுவதில் எனக்கு மகிழ்ச்சியே.

அன்புடன்
சிறில்

அன்பின் சிறில் அலெக்ஸ்,

முதலில் பெரியநாயகி விஷயத்தை முடித்துவிடுகிறேன். நாயகி என்பது மணப்பெண் என பொருள்படும். இறைவனின் மணவாட்டியாக மேரியை கத்தோலிக்க மரபு முன்வைப்பதில்லை. தமிழ்நாட்டில் முக்கிய தலங்களான திருவண்ணாமலை (தேவிகாபுரம் கனககிரீஸ்வரர் கோயில்), தஞ்சாவூர் (புராதனவனேஸ்வரர் கோயில்), பழனி (உபகோயில்), சீர்காழி (தோணியப்பரர் இங்கே பெரியநாயகி சமேதராக காட்சி அளிக்கிறார்) காஞ்சி, திருஆப்பாடி(பால் உகந்த ஈஸ்வரர், பெரியநாயகி) ஆகிய இடங்களில் சிவனின் துணைவியாக காலங்காலமாக தமிழர்கள் பெரியநாயகியை வழிபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இப்பெயரை கத்தோலிக்க தாய் புனிதருக்கு பயன்படுத்துவது எத்தனை அபத்தமானது என்பது தெரிந்திருக்கும் என நம்புகிறேன். கத்தோலிக்க மக்கள் இத்தகைய முயற்சியில் ஈடுபடும் அளவுக்கு பண்பாட்டு பிரக்ஞை இல்லாதவர்கள் என நான் கருதவில்லை. இது கீழிருந்து பரிணமித்து எழும் மக்கள் பண்பாட்டு இயக்கமும் இல்லை. திருவிதாங்கோட்டிலோ அல்லது புளியாள் கிராமத்திலோ மேரிக்கு பெரியநாயகி என அபத்தமாக பெயர் சூட்டியது மக்களாக இருக்கமுடியாது. அரைகுறையாக inculturation குறித்து படித்து அதனை பயன்படுத்த துடித்த இறையியல் போதகர்களாகவும் அருளப்பர் போன்ற பிஷப்புகளுமாகவே இருக்கவேண்டும்.

சபையை இறைவனின் மணவாட்டியாக முன்வைப்பதும் கூட ஒரு ஆணிய பக்தி மார்க்க மரபுகள் சார்ந்த அடங்கி நடக்கும் மணவாட்டியாகத்தான் என்பதை இங்கே நினைவுபடுத்தலாம். (வைணவத்திலும் சில சைவ பக்தி நிலைகளிலும் போல) ஆனால் சிவசக்தி மண உறவு அத்தனைக்காட்டிலும் தொன்மையான ஆதாரமான ஒரு ஆண்பெண் உறவினைக் காட்டுவதாகும். அதற்கு கிறித்தவ இறையியலில் இன்றைய தேதியில் இடம் இருக்கிறதா அல்லது விவிலிய பெண்ணியத்தில் இடம் இருக்கிறதா என்பது கேள்விக்குரியதே ஆகும். “இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம் அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினன் ஆகையினால் இவளே கடவுளர் யாவர்க்கும்

மேலை" என்று சொல்லும் நிலைக்கு மேற்கத்திய இறையியல் வளர இன்னும் சில நூற்றாண்டுகளாவது பிடிக்கும். அதற்கு பல டி மெல்லாக்கள் கண்டனங்கள் பெற வேண்டி இருக்கும்.

இரண்டாவதாக மேரி – 'சிறு தெய்வங்கள்' இத்யாதி குறித்து. முதலில் இந்த "சிறுதெய்வங்கள்" என்ற கோட்பாடே தவறானதென கருதுகிறேன். வட்டார தெய்வங்கள் என்பது சரியாக இருக்குமென நினைக்கிறேன். அடுத்து இந்த வட்டார தெய்வங்கள் வழிபாட்டுடனான உறவாடுதலானது இந்து பண்பாட்டில் கிறித்தவ இறையியலைக் காட்டிலும் அதிக நெகிழ்ச்சியும் குறைவான அல்லது முழுமையாக இல்லாத வன்முறையைக் கொண்டதாக அமைந்துள்ளது என்பதையும் காண்கிறேன். ஏனெனில் இந்திய பெண் தெய்வங்கள் ஏறக்குறைய அனைத்து அதீத மானுட உணர்ச்சிகளையும் முன்வைத்து அதிமானுட அல்லது இறை நிலையை அடைகிறார்கள்.

ஆனால் மேரியை பொறுத்தவரையில் அவர் மூலம் கத்தோலிக்கச்சபை முன்வைப்பது ஒரே ஒரு உணர்ச்சியையே. அது கீழ்ப்படிதல். யூத ஏவாளின் கிளர்ச்சிக்கு எதிர்மறையாக கச்சிதமாக வைக்கப்படும் ஒரு பெண் பிம்பம் மேரி. நீங்களே இதை சொல்லியிருக்கிறீர்கள். பூமி சார்ந்த ஆன்மிகத்தின் குறியீடான சர்ப்பத்தின் ஏவலால் ஏவாளின் கிளர்ச்சியால் அடங்க மறுத்தமையால் ஏற்படும் ஆதிபாவத்துக்கு கழுவாயாக ஒரு யூத கன்னிப்பெண் "இதோ உம் அடிமை" என வான் உறையும் ஆண் தெய்வத்தின் ஆண் குழந்தைக்காக ஆண் தேவதூதன் முன் மண்டியிடும் பிம்பம். ஆனால் இந்த பிம்பத்தினை முன்வைத்து செயல்படுத்தப்படும் கத்தோலிக்க இறையியலில் மேரி பெரும்பாலும் சகித்துக்கொள்ளப்படும் பெண் புனிதராகவே இருக்கிறார்.

மேரி என்றாலே வெறுத்தோடுவதற்கு நீங்கள் புரோட்டஸ்டண்டுகள் வரை செல்லவேண்டாம். சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டின் ஒரு புகழ்பெற்ற கத்தோலிக்க இறையியல் கல்லூரியில் ஒரு இறையியலாளர் அடித்த ஜோக் இது: "யூத ஆலயத்துக்கு சென்று திரும்பும் போது யேசுவை காணவில்லை என்றவுடன் அவரது பெற்றோர்கள் என்ன செய்தார்கள்" என்று அவர் கேட்டாராம். அதற்கு ஒரு கிராமத்து மாணவன் எழுந்து சொன்னானாம், "அய்யா அவர்கள் ஆரோக்கியமாதா கெபியில் விளக்கேற்றி யேசு கிடைக்க பிரார்த்தனை செய்தார்கள்" என்று. இந்த அளவு நம் மக்கள் முட்டாள்களாக இருக்கிறார்கள்' என்றார். கடவுளை விட நம்மக்கள் பக்தனுக்கு மரியாதை கொடுக்கிறார்கள்.

இதே விஷயத்தை இன்னொரு விதமாக இராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்லுகிறார்: "கடவுளான இராமருக்கு கடலை கடக்க பாலம் தேவைப்பட்டது. ஆனால் அவரது பக்தரான அனுமானுக்கு இராமநாமத்தை சொல்லியபடியே கடக்க முடிந்தது." கடவுள் என்கிற external reality யை விட பக்தி அல்லது பக்தியின் குறியீடாக விளங்கும் மானுடத்தின் internal reality க்கு அதிகம் மதிப்பு கொடுக்கும் இந்திய மனதின் போக்கு கத்தோலிக்கத்துக்கு பிரச்சினையாகத்தான் இருக்கிறது. ஆனால் பாரத பிரக்ஞையில் இந்த tension ராமஆஞ்சநேய யுத்தம் என்கிற கதையாடலாக மாற்றப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய கதையாடல்கள் நாட்டார் வழக்கு யேசு கதைகள் ஐரோப்பாவில் இருக்கின்றன என நான் அறிவேன்.

உதாரணமாக இத்தாலிய நாட்டுப்புறக் கதையான யேசுவுக்கு உணவளித்த ஒரு சூதாடியின் கதை. ஆனால் அவற்றுக்கு என்றைக்குமே சபை அங்கீகாரம் கிடைக்காது விளிம்பு நிலைகளில் மட்டுமே வழங்கப்பட்டு அழியும் யாராவது அதீத ஆர்வம் கொண்டு அதை பதிவு செய்து வைத்தால் ஏதாவது ஒரு இடத்தில் பதிவாகி காத்திருக்கும். இங்கு அவ்வாறல்ல. இதைத்தான் கத்தோலிக்கம் உள்வாங்க வேண்டும் என நான் கருதுகிறேன். (அப்படிக் கருத நான் யாரென கேட்கலாம். நானே அதைக் கேட்டுக்கொள்ளவும் செய்கிறேன்.)

மூன்றாவதாக ஆண்டனி டி மெல்லா தனது வாழ்க்கைக் காலத்தில் நிறுவன சபையால் கஷ்டப்பட்டாரா இல்லையா என்பதற்குள் நான் போக விரும்பவில்லை. அவரது சாதனா நிலையம் பூனாவிலின் முக்கிய இறையியல் கல்லூரியிலிருந்து மற்றொரு நகருக்கு மாற்றப்பட்டதும், அவரது கல்லறையிலிருந்து பெயர்ப்பலகை அகற்றப்பட்டதுமெல்லாம் நிர்வாக குளறுபடிகள் அல்லது நமது அரசியல்வாதிகள் அதிகாரிகள் மாற்றங்கள் குறித்து சொல்வது போல "வழக்கமான நிர்வாக செயல்பாடுகள்" என்பதாகவே இருக்கும் என நம்பவே ஆசைப்படுகிறேன்.

மற்றபடி நீங்கள் டி மெல்லாவின் மறைவுக்குப்பின்னர் அவரை கண்டனம் செய்யும் அறிக்கையின் தொடக்க நல் வார்த்தைகளை வைத்து அக்கடிதத்தை எடை போடுவது சரியல்ல என நினைக்கிறேன். பொதுவாகவே 'பெரிய மனிதர்கள்' யாரையாவது வேலையை விட்டு நீக்கும் முன்னால் அல்லது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு முன்னால் இப்படித்தான் ஆரம்பிப்பார்கள் "நீங்க நல்லவருதான்... நீங்க நல்லது நினைச்சுதான் செஞ்சிருப்பீங்கன்னு தெரியும்.... ஆனால்...." எனவே அந்த கடிதம் முழுவதையும் படியுங்கள். போகப் போக அதில் ஏறும் கடுமையையும் இறுதியில் அது கொடுக்கும் தீர்ப்பையும் பாருங்கள்...

"a progressive distancing from the essential contents of the Christian faith" என்பது மிகவும் மென்மையாக ஆரம்பிக்கும் கண்டனம் பிறகு இப்படி போகிறது, "This radical apophaticism leads even to a denial that the Bible contains valid statements about God. The words of Scripture are indications which serve only to lead a person to silence. In other passages, the judgment on sacred religious texts, not excluding the Bible, becomes even more severe: they are said to prevent people from following their own common sense and cause them to become obtuse and cruel. Religions, including Christianity, are one of the major obstacles to the discovery of truth."

பிறகு இப்படி முடிகிறது, "With the present Notification, in order to protect the good of the Christian faithful, this Congregation declares that the abovementioned positions are incompatible with the Catholic faith and can cause grave harm." மேலும் இந்தக் கடிதத்தை வெளியிட்டுள்ள Congregation for the doctrione of the faith உள்ளபடியே 1907 க்கு முன்னால் Congregation for Universal Inquisition என்றுதான் அழைக்கப்பட்டது (இதனை கத்தோலிக்க இணையதளங்களிலேயே நீங்கள் உறுதி செய்துகொள்ளலாம்: http://www.catholichierarchy.org/diocese/dxcdf.html)

இறுதியாக நம்பிக்கைகளை சகித்துக்கொள்ளத்தான் முடியுமா சிறில்? அவை நம்பிக்கைகளாகவும்தான் இருக்க வேண்டுமா? ஒரு சிறிய உண்மைக்கு எதிரானது ஒரு பொய்யாக இருக்க முடியும் ஆனால் ஒரு பெரிய உண்மைக்கு எதிர்ப்பதம் மற்றொரு பெரிய உண்மை என்றார்

நெய்ல்ஸ் போர், நுண்ணலகு இயற்பியல் காட்டும் பிரபஞ்ச தரிசனம் குறித்து பேசும்போது. இன்றைக்கு இறை நம்பிக்கைகளை தாண்டி தத்துவதரிசனங்களோடு பேசும் தன்மை நம் மதங்கள் அனைத்துக்கும் வந்துவிட்டன என நான் கருதுகிறேன்.

ஜேகேயோ ஓஷோவோ அல்லது டி மெல்லாவோ நாம் மதம் உதிர்ந்த ஆன்மிகத்தை பகிர்ந்து கொள்ள முடியும்தான். துரதிர்ஷ்டவசமாக சில குறுகிய மனமும் அதிகார பசியும் கொண்டவர்களால் நாம் உஷாராக இருக்க வேண்டியது அவசியம்தான். கத்தோலிக்க இன்க்விசிஷனோ அல்லது மனு ஸ்மிருதியோ அல்லது கல்லாலடிக்கும் ஷரியத்தோ மீண்டும் எழுந்து வராமல் இருக்க அந்த விழிப்புணர்வு அவசியம்தான். ஆனால் அவற்றை மீறி சகிப்புத்தன்மை அல்லது பரஸ்பர மரியாதையை நாம் நம்பிக் கொண்டிருக்கும் பன்மை தரிசனங்களின் மீது காட்ட முடியும்.

அன்புடன
அரவிந்தன் நீலகண்டன்

அன்புள்ள அரவிந்தன்,

உங்களுக்கு கிறித்துவ இறையியல் உவப்பானதாயில்லை. அது தட்டையானதாகவும், பெண்ணை அடிமை செய்வதாயும், பன்முகத்தன்மையே இல்லாததாயும் தெரிகிறது. மரியாளை விண்ணரசியாகக் கொண்டாடுகிறார்கள் எனச் சொன்னாலும் அவள் பெண்ணின் கீழ்ப்படிதலைத்தான் முன்வைக்கிறாள் என்கிறீர்கள். அவள் கீழ்ப்படிந்தது கடவுளுக்குத்தான் கணவனுக்கல்ல என நான் சொன்னால் உடனே ‘ஆண்’ கடவுளுக்குத்தான் எனச் சொல்வீர்கள். அதற்கு சாதகமானதொரு இந்து மரபை எடுத்துக் காட்டுவீர்கள். பெண்ணை தெய்வத்துக்கெல்லாம் தாயெனப் பாடும் ஒரு பாடலை சுட்டிக் காண்பிப்பீர்கள். பெண்ணை அடிமை எனச் சொல்லும் வேத வரியொன்றை நான் சுட்டிக்காட்டினால் இன்னொரு விளக்கம் தருவீர்கள்.

முன்பு நான் ‘புற்றில் வாழ் அரவும் அஞ்சேன்’ சிவனை வணங்காதவர்களை நிந்திக்கிறதே எனச் சொன்னதற்கு அது பக்தியின் வெளிப்பாடு என்றீர்கள் ஆனால் இன்று இன்னொரு செய்யுளை எடுத்துக்கொண்டு அது இந்து இறையியல் என்கிறீர்கள். இதை மறுக்கும் இன்னொரு செய்யுளை, சிவனே எல்லாவற்றிற்கும் தலையானவன் என்கிற இறையியலை இந்துமதத்தில் நிச்சயம் காண இயலும். இவை வெறும் முரணியக்கங்களல்ல, ஒரு காலத்தில் முரட்டு இயக்கங்களாயும் இருந்திருக்கின்றன. இன்றும் இந்த முரணியக்கங்கள் தங்களை இந்து எனும் குடையின் கீழ் கொண்டு இயங்குகின்றனவேயன்றி அவற்றினூடாக நீங்கள் கிறித்துவத்தோடு நடத்த விரும்புகிற ‘உரையாடல்’ நடந்து கொண்டிருக்கிறதா, சாத்தியமா தெரியவில்லை. அந்த முரட்டு வரலாற்றை வெளியில் சொல்வதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இன்று உண்டு. உங்கள் தரப்பு எப்படியோ தெரியவில்லை.

உங்களுக்கு திருச்சபையின் பணியாட்கள் மீதும் நல்ல மதிப்பு இல்லை. இதனால் அவர்களை எப்போதும் சதிகாரர்களாகவும் மதமாற்றுபவர்களாகவும் காண்பீர்கள். அவர்கள் எந்த நூற்றாண்டின் வார்த்தைகளைச் சொன்னாலும் கறுத்த காலங்களுடனேயே

ஒப்பிடுவீர்கள். அதற்கான நியாயங்களை உங்களுக்கு கற்பித்துள்ளீர்கள்.

இவற்றையெல்லாம் தாண்டியும் உரையாடலை நிகழ்த்தலாம் என்கிறீர்கள்.

முதலில் பெரிய நாயகி என்பது பெண்ணின் தெய்வ வடிவம், ஆகவே மேரிக்குப் பொருந்தாது என்றீர்கள். இப்போது அது மணவாட்டியை குறிக்கிறது அதனால் பொருந்தாது என்கிறீர்கள்.

இந்து இறையியல் என ஒரு ஒற்றைப் பரிமாண இறையியல் ஒன்று இல்லை. இந்து இறையியலில் இருப்பது நெகிழ்தன்மையல்ல. அது பன்முகத்தன்மை மட்டுமே. இரண்டுக்கும் வித்தியாசம் உள்ளது என நினைக்கிறேன். ஒரு ஒற்றைப் பரிமாண இறையியல் நெகிழ்ந்து தருமேயானால் அதை நெகிழ்தன்மையுடையது எனலாம். இந்த பன்முகத்தரப்பைக் கொண்டு அதன் பன்முக ஆதாரங்களிலிருந்து நல்லவற்றை மட்டும் பிரித்தெடுத்து ஒற்றைப்பரிமாணத்தில் மட்டுமே இயங்குவதாய் நீங்கள் நம்பும் ஒரு இறையியலை பல்வேறு குறைகளை குறிப்பிட்டு குறைத்துப் பேசுவது எளிதல்லவா?

நாம் ஒவ்வொன்றாகப் பேசிக்கொண்டே போகலாம். ஆனால் நம் நம்பிக்கைகள் வெவ்வேறானவை. அதைத் தாண்டிச் சென்று விவாதிப்பது கடினம். எனவேதான் நாம் நம்பிக்கை சார்ந்த உரையாடல்களை தவிர்ப்பதே நல்லது என நம்புகிறேன்.

ஆனால் என் தரப்பு ஜெயமோகனின் தரப்பை ஒத்துச் செல்கிறது, அதுவே இந்த மண்ணின் மரபானதொரு தரப்பு என நம்புகிறேன். அது யார் எந்த வழியை தேர்ந்தெடுத்தாலும் அது அமைதியின் வழியாக, மக்களின் நலன் பேணும் வழியாக இருந்தாலே போதும் என நினைக்கிறது. அந்த மரபு ஒன்றே பல தெய்வங்களை வழிபடுபவர்களையும் சகோதரர்களாக்குகிறது.

அந்த மரபினூடேயே கிறித்துவம் ‘அதிக வன்முறையின்றி’ இந்த மண்ணில் காலூன்றியிருக்கும். அந்த மரபை நோக்கிச் செல்லும் கிறித்துவ இணைப்பு முயற்சிகளை நான் வரவேற்கிறேன். அவை அதிகம் நிகழ வேண்டும் என நினைக்கிறேன். அந்த முயற்சிகள் நல்லெண்ணங்களோடு நடைபெற வேண்டும் என்று வேண்டுகிறேன். அப்படி நல்லெண்ணமற்ற எந்த முயற்சியையும் உங்களோடு சேர்ந்து எதிர்க்கிறேன்.

சிறில்

அன்புள்ள சிறில், அரவிந்தன்,

உங்களுடைய இவ்விவாதத்தில் நான் சொல்லவேண்டியதை முன்னரே சொல்லிவிட்டிருக்கிறேன் என்றே எண்ணுகிறேன். இங்கே மதங்கள் இருக்கின்றன, கோடிக்கணக்கானபேர் அவற்றை நம்புகிறார்கள். அவற்றையே தங்கள் வாழ்க்கையின் சாரமாகவும் சுய அடையாளமாகவும் கருதுகிறார்கள். இந்நிலையில் கேள்வி, யார் இங்கே இருப்பது அல்லது யார் மேலே இருப்பது என்பதல்ல. அது சாத்தியமே அல்ல. அது வன்முறை, அவ்வன்முறையை நினைப்பவர்களுக்கும் அழிவைத் தரக்கூடியது.

ஆகவே இங்கே உள்ள கேள்வி அத்தனை சுய அடையாள உருவாக்கம், அமைப்புசார்ந்த இறுக்கம், கொள்கைகள் சார்ந்த பிடிவாதம்,

பிறனுருவாக்கம், அதன் விளைவான ஐயம் ஆகியவற்றுக்கு அப்பால் ஏதாவது உரையாடல் சாத்தியமா என்பதே. ஆகவே எந்தவகையான உரையாடலும் நல்லதே. அது ஓர் பரஸ்பர புரிதலை உருவாக்குகிறது.

உரையாடலுக்கு இன்னின்ன நிபந்தனைகள் உண்டு என்று சொல்வது முரட்டுத்தனமான பிடிவாதத்தையும் ஐயத்தையுமே காட்டுகிறது.

ஒருமதம், அதன் உறுதியான நம்பிக்கைக் கட்டமைப்பையும் தொன்மச்சங்கிலியையும் மீறி, அல்லது உதறி, உரையாடலுக்கு வரும் என்று எதிர்பார்ப்பதையே முரட்டுத்தனம் என்கிறேன். எந்த ஒரு புதிய விஷயத்தையும் தன்னுடைய தொன்மச்சங்கிலிக்குள் இணைத்துக்கொள்வதென்பது எந்த மதமும் செய்வதே. தன் மதத்தின் இறுக்கத்தை நெகிழ்த்தி பிற மதம் ஒன்றின் நம்பிக்கைகளை, தொன்மங்களை, ஆசாரங்களை ஆராய ஒரு மதம் முயல்வதேகூட ஒரு பெரிய விஷயமாக மாறிவிட்டிருக்கிறது இன்று.

இருபது நூற்றாண்டுகளுக்கு முன் புத்தஜாதகக் கதைகள் உருவானபோது புத்தரின் அவதாரங்களாக ராமனும் கிருஷ்ணனும் உள்ளிழுக்கப்பட்டார்கள். ஆனால் அச்செயல்மூலமே வேதமரபை எதிர்த்த பௌத்தம் வேதமரபின் தத்துவ உச்சமாக இருந்த வேதாந்தத்துடன் ஓர் உரையாடலுக்கு முன்வந்தது. அதன் விளைவாகவே அதற்குள் யோகாசார பௌத்த மரபுகள் உருவாயின. பின்னர் அந்த யோகாசார ஞானமரபை தான் எடுத்துக்கொண்டு சங்கரர் வேதாந்தத்தை அத்வைதமாக ஆக்கினார்.

புத்த ஜாதகக் கதைகளை பௌத்தர்களில் தேரவாதிகள் ‘மலம்’ என்று நிராகரித்தனர். சங்கரரை வைதிகர்கள் ‘மாறுவேட பௌத்தன்’ என்று நிராகரித்தனர். மதத்தின் இறுக்கமான அமைப்புக்குள் நிற்பவர்களின் எதிர்வினை எப்போதுமே அப்படிப்பட்டதுதான்.

சைவமோ வைணவமோ எல்லாக்காலத்திலும் நெகிழ்தன்மை கொண்டவையாக இருந்ததில்லை. அவற்றின் அமைப்பும் மிக இறுக்கமாகவே இருந்தது. ‘பரசமய கோளரி’ என்றுதான் சம்பந்தர் போற்றப்பட்டார். எவையெல்லாம் புறச்சமயம் என்று பட்டியலிட்டு அவற்றை ஒதுக்கி தங்களை ‘பாதுகாத்துக்கொள்ளவே’ சைவம் முயன்றது. வைணவமும் அப்படித்தான்.

இன்றுகூட சைவ வைணவ மதங்களின் மையத்தில் ஒரு பகுதி அதே இறுக்கத்துடன்தான் இருக்கிறார்கள். உதாரணமாக நெல்லை ஆ.ஈசுவரமூர்த்திப்பிள்ளை எழுதிய கட்டுரைகளைக் காணலாம். அது சைவ அடிப்படைவாதம். ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம் போன்ற இதழ்களைப் பார்த்தால் வைணவ அடிப்படைவாதத்தைக் காணலாம்.

பதிமூன்றாம் நூற்றாண்டில் நாயக்கர்களின் காலகட்டத்தில்தான் சைவ வைணவ உரையாடல் நாம் இன்று காணும் அளவில் ஆரம்பமாகியது. சைவக்கோயிலில் வைணவத்தையும் வைணவக்கோயிலில் சைவத்தையும் அவர்கள்தான் குடியிருத்தினார்கள். மத உரையாடலை அவர்கள் அதிகாரம் மூலம் கட்டாயப்படுத்தினார்கள். அப்போதுகூட அது எளிதாக நிகழவில்லை.

உதாரணமாக சிவபெருமானின் அடியையும் முடியையும் காண விஷ்ணுவும் பிரம்மாவும் சென்றார்கள், இருவராலும்

காணமுடியவில்லை, விஷ்ணு தோற்றுப்போய் திரும்பிவந்தார் என்ற சைவக்கதை (திருவண்ணாமலைபுராணம்) வைணவர்களுக்கு எப்படி ஏற்புடையதாக இருந்திருக்கும்? பெரும்பாலான வைணவக் கதைகளில் அசுரர்களை அழிக்க முடியாமல் சிவபெருமான் ஓடிவந்து விஷ்ணுவிடம் முறையிடுகிறார். சைவர்கள் எப்படி அதை ஏற்பார்கள்?

ஆனால் காலப்போக்கில் உரையாடல் சாத்தியமாகியது. இன்றும் சைவமும் வைணவமும் இரண்டாகவே உள்ளன என்றாலும் கசப்புகள் இல்லை. இப்படித்தான் உரையாடல் நடக்க முடியும். அந்த உரையாடலை வைணவச்சதி என்றே ஈசுவரமூர்த்திப்பிள்ளை சொல்கிறார். சைவச்சதி என்றே பிரதிவாதி பயங்கரம் அண்ணாங்கராச்சாரியார் சொல்கிறார். ஆனால் அதையும் மீறி உரையாடல் நடந்தது.

வரலாற்றின் தருணங்களும் வாய்ப்புகளும் எப்படியோ அதைச் சார்ந்தே உரையாடல் நடக்க முடியும். இப்படித்தான் உரையாடல் நடக்க வேண்டும், இதுதான் உரையாடல், பிற எதையுமே நிராகரிப்பேன் என்பதும் முரட்டுத்தனமே. அரவிந்தனின் மனநிலையை நான் முழுமையாகவே நிராகரிக்கிறேன். அது அவரது அச்சங்கள், மனச்சிக்கல்களை மட்டுமே பெரிதும் சார்ந்திருக்கிறது. மறுபக்கம் தன் கட்டமைப்பில் எந்த மாற்றத்துக்கும் தயாராக இல்லாமல் பிறரது நம்பிக்கை தொன்மம் வரலாறு ஆகியவற்றை 'திருத்த' முயலும் போக்கை ஆக்ரமிப்பாக மட்டுமே பார்க்கிறேன். இதுவே என் நிலைப்பாடு.

அந்த சாத்தியத்தின் மீதான நம்பிக்கையை மட்டுமே நான் என் எழுத்துக்கள் வழியாக முன்வைக்கிறேன்.

ஜெ

அன்பின் ஜெயமோகன்,

என்னை நீங்கள் நிராகரிப்பதில் எனக்கு பிரச்சினையில்லை. ஆனால் என் தரப்பினை தெளிவாக்க விரும்புகிறேன். நான் இந்த விவாத இழை முழுக்க உரையாடலுக்கு எவ்வித முன் நிபந்தனையும் வைக்கவில்லை.

எனக்கு நீங்கள் எதை உரையாடல் என சொல்கிறீர்கள் என்பது குழப்பமாக இருக்கிறது. உதாரணமாக திருவண்ணாமலை புராணமோ அல்லது சிவனை விஷ்ணு பக்தராக காட்டும் வைணவக் கதைகளோ பாடல்களோ சைவவைணவ உரையாடலின் ஒரு பகுதியாக இருந்திருக்க முடியாதல்லவா? இன்றைய சைவவைணவ சமரசத்தன்மையை உருவாக்கிய தளம் எது? "அரியும் சிவனும் ஒண்ணு" என்பது போன்ற வழக்கு மொழிகளை ஏற்படுத்தியது எது? அது அதிகாரம் சார்ந்த ஒன்றாக இருந்திருக்க முடியாதல்லவா?

அந்தப் புள்ளியிலிருந்தே ஹிந்துகிறித்தவ உரையாடல் நடைபெறுவது நல்லதென நினைக்கிறேன். சாந்தி வனத்தில் ஹிந்து கத்தோலிக்க உரையாடலை மிகக் கவனமாக பல பத்தாண்டுகள் அவதானித்த Wayne Teasdale எனும் கத்தோலிக்க இறையியலாளர் கூறுவதை பாருங்கள்:

Jim. What about the Hindu side of the ChristianHindu dialogue. How interested are Hindus in this dialogue?

Wayne. We have had so much frustration with Hindus. They are not committed to dialogue. Some are fascinated with it, but they always see it in the Hindu context that Hinduism embraces everything. Hinduism can hijack Christianity and obliterate differences.

Jim. Do you think a genuine Indian Catholic Church is going to develop?

Wayne. Yes, I think so. I think it is happening. The Catholic Church in India has a siege mentality against Hinduism, and is conservative. Christianity in its traditional form is European. It is not universal in its expression. Only 2% of Asia is Christian. The institutional form of Christianity is unintelligible to the oriental mind. There has to be this inculturation process which has to happen. That is my hope and my expectation.

என் தரப்பு எளிமையானது. போலி வரலாற்றுருவாக்கங்கள் இல்லாமல் மதங்கள் கடந்த ஆன்மிக வெளியிலிருந்தே உரையாடல்களை உருவாக்க முடியும். போலி வரலாற்றுருவாக்கங்களும், பண்பாட்டு அபகரிப்புகளும் மனக்கசப்பையும் ஐய உணர்வையுமே உருவாக்கும். அவை உரையாடல்கள் அல்ல. அவை உரையாடலுக்கான வெளியையும் உருவாக்குவதில்லை. இவ்வாறு கூறுவது முன்நிபந்தனையோ முரட்டுத்தனமோ அல்ல.

அரவிந்தன் நீலகண்டன்

பகுதி 3

3. 1. தமிழர்களுக்கு சிந்திக்கச் சொல்லித் தந்த புனித தாமஸ்

இந்தியத் துணைக்கண்டத்தில் மனித இனம் உருவானது குமரிக்கண்டம் என்னும் லெமூரியாவில். இங்கே பழங்குடிகள் வாழ்ந்துவந்தார்கள். இவர்கள் பேசிய மொழி தமிழ். இவர்கள் கல்லையும் மண்ணையும் வழிபடுவதுபோன்ற மதப்பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்தார்கள். குமரிக்கண்டத்தில் இருந்து இவர்கள் வடக்கே பரவி வடக்கே உள்ள பிராகிருதம் போன்ற பண்படாத மொழிகளை உருவாக்கினார்கள். சிந்துசமவெளிநாகரிகம் அவர்களால் உருவாக்கப்பட்டதுதான். இவர்கள் சிவன் அல்லது பசுபதி போன்ற கடவுள்களை வழிபட்டார்கள். பண்பாட்டுவளர்ச்சி இல்லாத ஒரு வாழ்க்கை இங்கே நிலவியது. இக்காலத்தில் தமிழர்களின் ஆன்மவியல் (soulology) வளர்ச்சியுறாத நிலையில் காணப்பட்டது.

இந்நிலையில் வடக்கில் இருந்து வந்த சமணர்களும் பௌத்தர்களும் தமிழர்களின் நிலத்தைக் கைப்பற்றி ஆண்டார்கள். தமிழர்களின் சிந்தனையையும் அவர்கள் அழித்தார்கள். அவர்கள் கடவுளை உணரக்கூடிய ஞானம் இல்லாதவர்கள். இவர்களால் தமிழர்களின் ஆன்மவியல் முழுமையாக அழிந்தது. இக்காலகட்டத்தில் வடக்கே இருந்து வந்த அன்னியர்களான ஆரியர்கள் தமிழர்களின் பண்பாட்டை அழித்து அவர்களை சாதிகளாகப் பிரித்து அவர்களை அடிமையாக்கி சுரண்டினார்கள்.

இந்நிலையில் கிறிஸ்துவின் சீடரான புனித தோமையர் (தாமஸ்) இந்தியாவுக்கு வந்துசேர்ந்தார். இவர் மேலைக்கடற்கரைக்கு வந்து அங்கிருந்து கீழைக்கடற்கரைக்கு வருகை தந்தார். அவர் கிறித்தவ ஆன்மவியலை தமிழர்களுக்கு கற்றுத்தந்தார். தமிழர்களின் தொன்மையான ஆன்மவியலில் கிறித்தவத்தின் இறைச்செய்திகள் சில உள்ளன என்பதைக் கண்டுபிடித்து அதன் வெளிச்சத்தில் அவர் தமிழ்கிறித்தவ ஆன்மவியலை உருவாக்கினார்.

அதை அரைகுறையாக புரிந்துகொண்டவர்களால் அந்த தத்துவ சிந்தனைகள் திரிக்கப்பட்டன. இவ்வாறு திரிபுபட்ட கிறித்தவமே சைவம், வைணவம் என்ற இருபெரு மதங்களாக உருவெடுத்தது. இதுவே பக்தி இயக்கம் ஆகும். இந்த பக்தி இயக்கமானது பௌத்தர்களையும் சமணர்களையும் துரத்தியது.

புனித தோமையர் பிராமணர்களால் கொல்லப்பட்டார். அவர் கற்பித்த தமிழ்கிறித்தவச் சிந்தனைகள் பிராமணர்களால் மேலும் திரிக்கப்பட்டன. அவ்வாறாக சைவத்தையும் வைணவத்தையும் பிராமணர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆதிக்கிறித்தவ சிந்தனைகளை அவர்கள் தங்களுடைய சிந்தனைகளாக மாற்றிக் கொண்டார்கள். இதன்பொருட்டு அவர்கள் சமஸ்கிருதம் என்ற மொழியை உருவாக்கினார்கள். இந்த மொழியில் வேதங்கள் உபநிடதங்கள் போன்ற நூல்களை எழுதிக்கொண்டார்கள். அவற்றில் உள்ள ஞானம் கிறித்தவ ஞானமே என்று வெளியே தெரியாமல் இருப்பதற்காக அவற்றை யாரும் கற்கக் கூடாது என்று சொன்னார்கள். சாதிப்பிரிவினைகளை நிலைநிறுத்திய அன்னியர்களான பிராமணர்கள் தமிழர்களை இந்தியா முழுக்க அடிமையாக்கி வைத்திருந்தார்கள்.

தமிழர் ஆன்மவியலின் மிகச்சிறந்த நூல் சிவஞானபோதம் ஆகும். இது புனித தாமஸால் கொண்டுவரப்பட்ட ஆதி கிறித்தவ சிந்தனைகளின் சற்று குறைபட்ட வடிவம். இன்று இந்துக்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் உண்மையில் ஆதி கிறித்தவர்களே. இந்து என்ற ஒரு மதம் இல்லை. அப்படி ஒருமதம் இருப்பதாக எந்த ஒரு அறிஞருமே சொன்னதில்லை. அது ஆரிய பிராமணர்கள் சாதிபேதங்களை உருவாக்கும்பொருட்டு உருவாக்கிய பொய். ஆகவே சைவம் வைணவம் என்ற இரு மதங்களைச் சேர்ந்த இந்துக்களை ஆதிகிறித்தவர்கள் அல்லது தாமஸ்கிறிஸ்டியன்ஸ் என்றுதான் சொல்லவேண்டும்.

சிந்துவெளியில் உள்ள நினைவுக்கல் வழிபாடானது பைபிள் கூறும் பெத்தேல் வழிபாடே ஆகும். கல்லில் எண்ணெய் ஊற்றி வழிபடுவது கிறித்தவத்தில் இருந்து வந்தது. பெத்தேலில் யாக்கோபால் நினைவுக்கல்லின் மேல் எண்ணெய் ஊற்றப்பட்டதை நினைவுகூரும் வகையில் 'எண்ணெய் ஊற்றப்பட்டவர்' என்ற அர்த்தம் வரும் சொல்லாகிய கிறிஸ்து என்பதால்தான் யேசு அறியப்படுகிறார். அந்த வழிபாட்டை நாம் திராவிட (தமிழ்) வழிபாட்டில் காண்கிறோம். ஆகவே திராவிட சமயம் என்பது கிறித்தவமே.

இயேசுகிறிஸ்து சாவைக்கொடுக்கும் சாத்தானை வென்று உயிர்த்தெழுந்து சாவின்மீது அடைந்த வெற்றியைத்தான் சற்றே உருமாறிய வடிவத்தில் சுடுகாட்டில் முயலகன் மீது சிவன் ஏறி ஆடும் நடனத்தில் காண்கிறோம். பெத்தேலின் நினைவுக்கல்லின் நினைவால் கிறிஸ்து 'உயிருள்ள கல்' என்று சொல்லப்பட்டார். அதிலிருந்து சிவலிங்க வழிபாடு தோன்றியிருக்கலாம். சிவலிங்க வழிபாட்டிலிருந்து சிவகுடும்ப வழிபாடு உருவானது. இது திருக்குடும்பம் என்ற கிறித்தவ கருத்தாக்கத்தின் விளைவேயாகும். பிதா சிவன் ஆகவும் சக்தி பரிசுத்த ஆவி ஆகவும் யேசு முருகன் ஆகவும் உருமாற்றம் பெற்றார்கள்.

கிறித்தவத்தில் மகனாக அவதரித்த கடவுளுக்கு நான்கு குணங்கள் உள்ளன. சாத்தானை வென்றநிலை சூரனை வென்றநிலையாக மாற்றம் செய்யப்பட்டது. இறந்து உயிர்த்தெழுந்த நிலை தலைவெட்டப்பட்ட பிள்ளையாராக ஆகியது. உலகைப் படைத்த நிலை பிரம்மனாக ஆகியது. உலகின் ஒளியாக இருக்கும் நிலை மலைமீது ஒளியாக தெரியும் ஐயப்பனாக மாறியது. புனித தாமஸால் முன்வைக்கப்பட்ட ஆதிகிறித்தவ சிந்தனைகள் இவை என்று தெரியாதபடி பிராமணர்களால் இவை புராணங்களாக ஆக்கப்பட்டன.

இவ்வாறு சிவ வழிபாட்டில் பலதெய்வக் கோட்பாடு ஆரியர்களான பிராமண அன்னியர்களால் உருவாக்கப்பட்டது. அதை மீண்டும் தூய கிறித்தவ அடிப்படைகளின்படி திருத்தி ஓரு தெய்வக் கோட்பாட்டை நோக்கிக் கொண்டுவர எழுதப்பட்ட நூலே சிவஞானபோதம் ஆகும். திருமந்திரம் 'அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்' என்று சொல்வது புனித தாமஸால் முன்வைக்கப்பட்ட இந்த தூய கிறித்தவ கருத்தையே. அன்பு என்பது கிறித்தவக் கருத்து.

தாமஸ் கிறித்தவத்தின் செல்வாக்கினால் பௌத்தத்தில் மகாயானம் என்ற பிரிவு உருவானது. இதன் பிறகே பௌத்தத்தில் தத்துவ சிந்தனைகள் உருவாயின. புத்தரை யேசுவைப்போன்ற ஒரு கடவுளாக ஆக்கினார்கள்.

புத்த மைத்ரேயர் என்ற கடவுள் உருவாக்கப்பட்டார். அவர் யேசுவைப்போன்றே ஊழி முடிவில் பிறந்து வருவார் என்று சொல்லப்பட்டது. மகாயான பௌத்தத்தில் இருந்துதான் பௌத்த தத்துவங்கள் உருவாக்கி சீனாவுக்கு சென்றன. ஜென் பௌத்தம் அவ்வாறுதான் உருவாயிற்று.

அதேபோல தாமஸ்கிறித்தவத்தின் செல்வாக்கினால் சமணத்தில் சுவேதாம்பரம் என்ற பிரிவு உருவாகியது. இதன் பின்னரே சமண மதத்திலும் தத்துவ சிந்தனை உருவாகியது. சமணர்கள் கிறித்துவ தீர்க்கதரிசிகளைப் பின்பற்றி தங்கள் தீர்த்தங்கரர்களை கற்பனைசெய்து அவர்களை வழிபட ஆரம்பித்தார்கள்.

கிறித்தவத்தில் இருந்து நான்கு அடிப்படைக் கோட்பாடுகள் தாமஸால் தமிழர் ஆன்மவியலுக்குக் கொடுக்கப்பட்டன. மூவொருமைக் கோட்பாடு, (கடவுள் மூன்றாக இருப்பது) அவதாரக் கோட்பாடு (கடவுள் பிறப்பது), பாவமன்னிப்பு கோட்பாடு, (கடவுளிடம் சரண் அடைந்து பாவத்தைக் களைவது), பலி நிறைவேற்றக் கோட்பாடு (யேசு பலியாகிவிட்டார். ஆகவே இனி உயிர்பலி தேவையில்லை என்ற கோட்பாடு), பக்திவழி விடுதலைக் கோட்பாடு. இவற்றையே நாம் பக்தி இயக்கத்தின் சைவ வைணவ மதங்களில் காண்கிறோம். பக்தி இயக்கம் வழியாக இந்தியா முழுக்க இவை பரவி இப்போது இந்து மதமாக அறியப்படுகின்றன.

வேதங்களில் ஆரியர்கள் கிறித்தவக் கோட்பாடுகளை திருடி எழுதிவைத்திருக்கிறார்கள். பிரஜாபதி என்று வேதங்கள் சொல்வது கிறிஸ்துவையே.

திருக்குறள் தாமஸ் கற்பித்த ஆதிகிறித்தவக் கருத்துகளை முன்வைக்கும் ஒரு முழுமையான கிறித்தவ நூல் ஆகும். திருக்குறளின் பாயிரம் கிறித்தவர்களின் விசுவாசப் பிரமாணமே. அதேபோல சிவஞானபோதமும் ஒரு பற்றுறுதிப்பிரமாணமே.

இவ்வாறு இந்தியசிந்தனைகள் அனைத்தையுமே உருவாக்கிய தாமஸ் பற்றி இந்திய நூல்களில் எதிலுமே எந்தக் குறிப்பும் இல்லை. காரணம் ஆரிய பிராமணர்களின் சதியே.

பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து தூய கிறித்தவம் இந்தியாவுக்கு வந்தது. இந்த முழுமையான கிறித்தவத்தின் அடிப்படையில் திரிபு நிலையில் உள்ள தமிழர்களின் ஆன்மவியலை நாம் திருத்தியமைக்க வேண்டும்.

•

இக்கருத்துகளை நாம் டாக்டர் தேவகலா எம்.ஏ எம்.ஃபில் பி.எச்.டி எழுதிய ‘இந்தியா தோமாவழி திராவிடக் கிறித்தவ நாடே’ என்ற தமிழ் நூலில் தெளிவாகவும் விரிவாகவும் காண்கிறோம். இது தமிழ் கிறித்தவ ஊழியருக்கான சுருக்கக் கையேடு. இது ஆய்வாளர் தெய்வநாயகம் அவர்களால் செய்யப்பட்ட ஆய்வுமுடிவுகளை ஊழியர்களுக்குக் கொண்டுசெல்லும்பொருட்டு அவரது மகளால் உருவாக்கப்பட்டது.

கிட்டத்தட்ட ஒரு அதிகாரபூர்வ கையேடு இது. சென்னை மயிலை கத்தோலிக்கப் பொறுப்புப் பேராயர் டாக்டர் லாரன்ஸ் பயஸ் அவர்கள் இதற்கு அளித்த முன்னுரையில் ‘இந்தியா தோமாவழி கிறித்தவ நாடே

என்பதை டாக்டர் தெய்வநாயகம் ஆணித்தரமாக நிலைநாட்டியிருக்கிறார்' என்று சொல்லி 'சைவர் வைணவர் அனைவரும் மறைமுகக் கிறித்தவர்களே' என்று சொல்கிறார். இந்தக் கருத்தை பிரசாரம் செய்வதற்கான பயிற்சி வகுப்புகள் மயிலை தாமஸ் ஆலயத்தில் நிகழும் என்றும் அதில் பங்குபெறுவோருக்கு வாழ்த்துக்கள் என்றும் சொல்கிறார்.

இந்திய சுவிசேஷத் திருச்சபை பேராயர் டாக்டர் எஸ்றா சற்குணம், சி.எஸ்.ஐ. சென்னை திருமண்டல பேராயர் அம்மா மறைதிரு ஜோன் தேவசகாயம் அவர்கள், சென்னை அப்போஸ்தல தலைமை போதகர் பாஸ்டர் எம்.கே.சாம் சுந்தரம் அவர்கள், குருகுல் லுத்தரன் இறையியல் கல்லூரி முதல்வர் மறைதிரு மாணி சாக்கோ அவர்கள் ஆகியோர் இந்நூலின் 'நிரூபிக்கப்பட்ட' கருத்துகளை வழிமொழிந்து இந்திய சிந்தனைகள் அனைத்துமே தாமஸிடமிருந்து உருவானவையே என்று சொல்கிறார்கள்.

ஆரியர்கள் என்று ஒரு இனம் இல்லை என்று டாக்டர் தேவகலா அவர்கள் சொல்கிறார்கள். இந்தியா மீது படைஎடுத்து வந்த பாரசீகர், கிரேக்கர், சகர், குஷானர், ஹுணர் ஆகியோர் கிபி ஏழாம் நூற்றாண்டில் மௌண்ட் அபு என்ற இடத்தில் கூடி அப்போது இருந்த திராவிட அரசனான ஹர்ஷவர்தனனைக் கொன்று ஆட்சியைப் பிடித்தார்கள். அவர்கள் தாங்கள் வெள்ளை நிறத்தில் இருந்தமையால் தங்களை ஆரியர் என்று சொல்லிக் கொண்டார்கள். அவர்கள் உருவாக்கிய நீதியே மனுநீதி.

மனுநீதியின்படி ஆரியர் உயர்வானவர்கள். திராவிடர்கள் அவர்களுக்கு அடிமைகள். அப்படி அடிமையாக திராவிடர்கள் இருக்க வேண்டுமென்று கூறுவதே இந்துத்துவம் ஆகும் என்கிறார் டாக்டர் தேவகலா. இந்தக்கருத்தை வலியுறுத்துபவர்கள் பிராமணர்கள்.

பழந்தமிழ் இலக்கியங்கள் பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலியவை கிபி இரண்டாம் நூற்றாண்டில் ,அதாவது தாமஸ் வந்தபின் நூறுவருடம் கழித்து உருவானவை என்று டாக்டர் தேவகலா சொல்கிறார்கள். பழந்தமிழ் இலக்கியங்களில் ஆதன்அவ்வை என்று சொல்லப்படுகிறவர்கள் ஆதாம் ஏவாள்தான் என்கிறார். தமிழ்ச் சொல்லாகிய அன்பு என்பதில் கிறித்தவத்துக்கே உரிய அன்பு என்ற நற்குணத்தின் சில பண்புக்கூறுகள் காணப்படுகின்றன என்பதை ஒரு முக்கிய ஆதாரமாக தேவகலா குறிப்பிடுகிறார். ஏறத்தாழ 300 பக்க அளவுள்ள இந்த நூல் இத்தகைய விரிவான ஆய்வுகளை முன்வைக்கிறது.

•

இது ஒரு தனிநபரின் ஆய்வோ, அல்லது சிறு குழுவின் கருத்துகளோ அல்ல. இதற்கு தமிழகத்தின் செல்வாக்குள்ள எல்லா கிறித்தவ சபைகளும் வெளிப்படையான ஆதரவை தெரிவித்திருக்கின்றன என்பதைக் கண்டோம். சென்ற பத்து வருடங்களில் இக்கருத்தை பிரசாரம் செய்யும் ஏராளமான ஆங்கில தமிழ் நூல்கள் வெளியாகியிருக்கின்றன. பலநூறு துண்டுப்பிரசுரங்கள் வெளியாகி கிறித்தவ ஆலயங்களில் வினியோகம் செய்யப்பட்டுள்ளன. தமிழகக் கிறித்தவர்களில் உயர்கல்வி கற்றவர்கள் பழந்தமிழ் ஆய்வுசெய்தவர்கள் உட்பட பெரும்பாலானவர்கள் இந்தக் கோட்பாட்டை ஒரு நிரூபிக்கப்பட்ட வரலாற்று உண்மை என்றே எண்ணுகிறார்கள். உதாரணமாக குமரிமாவட்டத்தின் பிரபல

அறிவுஜீவியும் நவீன இலக்கிய வாசகருமான பேராசிரியர் ஜேம்ஸ் ஆர் டேனியல் இக்கருத்தை ஒரு நூலில் வழிமொழிகிறார்! கிறித்தவப் பள்ளிகளில் இந்த வரலாற்றை அதிகாரபூர்வமற்ற வகையில் சொல்லியும் கொடுக்கிறார்கள்.

இந்த நூல்களை முழுக்க எனக்கு திரட்டி அளித்தவர் தக்கலையைச் சேர்ந்த லுத்தரன் சபையைச் சேர்ந்த கிறித்தவ ஊழியர் ஒருவர். நான் இவற்றைப் படித்தால் என்னுடைய வரலாற்றுப் பார்வையே மாறிவிடும் என்று சொன்னார். ஆனால் நான் படிக்க மாட்டேன் என்று சவால் விட்டார். படிப்பேன் என்று அவருக்கு உறுதி அளித்தேன். அவர் எனக்கு அளித்த பிற நூல்கள் இவை:

1. India is a Christian Nation By. M.Sunder Yesuvadian [a] M.S.Mankad. (Published by Anaryan Publications, Indian Anarya Samaj Trust, 16A, Chidambara Nathan Street, Ramavarma puram. Nagercoil 629001) இந்நூலுக்கும் முக்கியமான எல்லா கிறித்தவ திருச்சபை தலைவர்களும் முழுமையான ஆசியுரை வழங்கியிருக்கிறார்கள்.
2. Hindu Religion is the offshoot of St.Thoma & Dravidian Christianity By Dr.Devakala (Meypporul Publications 278, Konnur High Road, Ayanapuram, Chennai 600023)
3. Love Hindus. By M.Christopher MA LLB, Beniah Kallukatti, Kuzhithurai K K dist Tamilnadu 629163
4. தமிழர் சமயத்தை விடுவிக்கப்போவது யார்? பேராசிரியர் முனைவர் மு.தெய்வநாயகம் எம் ஏ.பி எச் டி (மெய்ப்பொருள் அச்சகம், 278, கொன்னூர் ஹைரோடு, அயனாவரம், சென்னை 600023)

மற்றும் பத்து துண்டுபிரசுரங்கள். பெரும்பாலும் ஒரே ஆதாரங்கள் ஒரே வரிகளினால் ஆனவை இவை. இந்நூல்களின் பின்னட்டைகளில் ஏராளமான பிற நூல்களைப்பற்றிய தகவல்கள் உள்ளன.

•

பேராசிரியர் ஜேசுதாசன் இந்தக் கருத்தமைவின் முக்கியமான தொடக்கப்புள்ளி. எஸ்.வையாபுரிப்பிள்ளை வழிவந்தவரான ஜேசுதாசனுக்கு பைபிளிலும் கம்பராமாயணத்திலும் இணையான ஈடுபாடு உண்டு. தமிழிலக்கியம் சார்ந்த வையாபுரிப்பிள்ளையின் காலக்கணக்குகளை பெரிதும் ஏற்றுக் கொண்டவர் அவர். பேராசிரியர் தமிழிலக்கிய வரலாறு ஒன்றை ஆரம்பகாலத்தில் எழுதினார். பின்னர் அவரது முதியவயதில் அவரது உதவியுடன் ஹெப்ஸிபா ஜேசுதாசன் அந்த தமிழிலக்கிய வரலாற்றை ஆங்கிலத்தில் மூன்றுபாகங்களாக விரிவாக எழுதினார்.

அந்த தமிழிலக்கிய வரலாற்றின் பெயர் ''Count Down From Solomon' அந்நூலின் தலைப்பைப்பற்றிச் சொல்லும்போது தமிழிலக்கியம் பற்றிய ஆகப்பழைய குறிப்பு சாலமோனின் பாடல்களில் வருகிறது என்பதனால் அந்த தலைப்பை வைத்ததாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். பேராசிரியரின் நூலில் தாமஸ் இந்தியாவுக்கு வந்ததாகச் சொல்லப்படும் நம்பிக்கையை ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார். அத்துடன் தமிழின் சிறந்த இலக்கியங்களில், குறிப்பாக திருக்குறளிலும் ஆழ்வார்பாடல்களிலும் உள்ள அறம் அன்பு

பற்றிய தரிசனங்கள் கிறித்தவ விழுமியங்களுடன் ஒத்திசைந்து போகின்றன என்று சொல்லியிருக்கிறார். இது அவருடைய நோக்கில் இலக்கியத்தின் உச்சங்கள் இயல்பாகவே உயரிய மானுடவிழுமியங்களைச் சார்ந்து இருக்கும் என்பதன் வெளிப்பாடே.

இந்நூல்களை பேராசிரியர் ஜி.ஜான் சாமுவேல் வெளியிட்டார். அவர் அப்போது சென்னை ஆசியவியல் நிறுவனத்தின் தலைமைப்பொறுப்பில் இருந்தார். கடைசிக்காலத்தில் ஹெப்சிபா ஜேசுதாசன் இந்தியாவில் சிந்தனைகளை கிறித்தவம்தான் கொண்டு வந்தது என்று வாதிட ஆரம்பித்தார். அன்பு, பண்பு, அறம் போன்ற விழுமியங்கள் தமிழிலக்கியத்தில் உள்ளன, அவை சாத்தானால் ஆட்சி செய்யப்பட்ட தமிழ்நாட்டு பழங்குடி மனதில் உருவாக வாய்ப்பில்லை என்பது அவரது தர்க்க முறை.

ஜான்சாமுவேல் இங்கிருந்து ஆரம்பிக்கிறார். 2003ல் ‘தமிழகம் வந்த தூய தோமா’ என்ற நூலை அவர் எழுதினார். இந்தியச் சிந்தனைகள் அனைத்துமே தமிழகம் வந்த தோமஸால் உருவாக்கப்பட்டவையே என்று அதில் வாதிடுகிறார். (ஹோம் லேண்ட் பதிப்பகம். 23, திருமலைநகர் இணைப்பு, பெருங்குடி, சென்னை 600096)

இந்தக் கருத்தை ஜான்சாமுவேல் மற்றும் தெய்வநாயகம் இருவரும் வெற்றிகரமாக அமெரிக்க இவாஞ்சலிஸ்டுகளுக்கு கொடுத்து ஏற்கச்செய்தனர். பொதுவாகவே மதப்பரப்புதலுக்கு உள்ளாக்கப்படும் நாடுகளின் வரலாற்றை முழுமையாக மாற்றி எழுதுவது கிறித்தவ மரபு. அந்த மாற்றப்பட்ட வரலாற்றை அம்மக்களை ஏற்கச்செய்யும்போதுதான் மதமாற்றம் நிரந்தரமாகும் என்று எண்ணுகிறார்கள்.

இந்த வரலாற்று மறு உருவாக்கத்தில் பொதுவாக இரு கூறுகள் செயல்படும். இவற்றை மிகமேலோட்டமாக சமகால ஆப்ரிக்க ஆசிய வரலாறுகளை அணுகினாலே காணமுடியும். ஒன்று, அந்நாடுகளில் பண்பாடு, சிந்தனை, மெய்யியல் எதுவும் பூர்வீகமாக இருந்ததில்லை, கிறித்தவம் மூலமே அவை கொண்டுவரப்பட்டன என்று நிறுவுவது. மதம்மாறியவர்கள் அந்த அப்பழைய காலத்தை ‘இருண்டகாலம்’ என்று சொல்லத்தலைப்படுவார்கள்.

இரண்டு, அந்த தேசத்தை இரு பெரும் இனப்பிரிவுகளாகப் பிரித்து அதில் ஒன்று இன்னொன்றை முழுமையாக அடக்கி ஆண்டது, அந்த நாட்டின் அனைத்து இழிவுகளுக்கும் அந்த அடக்கியாண்ட இனம்தான் காரணம் என்று நிறுவுவது. பலநாடுகளில் அப்படி குறிப்பிடப்படும் இரு இனங்களிலும் மக்கள் தங்களை மாற்றிக்கொள்ளக்கூட உரிமை இருக்கும்! உதாரணம் ரவாண்டாவின் டுட்சிஹுடு இனங்கள். நைஜீரியா, சியரா லியோன் போல ஆப்ரிக்க நாடுகள் ஒவ்வொன்றிலும் மாற்றமே இல்லாமல் இதே வரலாற்றுப்பணியை கிறித்தவ மதப்பரப்பாளர்கள் கடைப்பிடித்திருப்பதைக் காணலாம். அந்த வெறுப்புகள் பெரும் இனக்கலவரங்களாக வெடித்து ரத்த ஆற்றை ஓடவிட்டுக்கொண்டிருக்கின்றன.

ஜான்சாமுவேல்தெய்வநாயகம் உருவாக்கிய இந்த வரலாற்று உருவகம் இவ்விரு அம்சங்களையும் தெளிவாகவே கொண்டிருப்பதைக் காணலாம். தமிழகத்தில் திராவிட இயக்கம் ஆரிய வெறுப்பை கால்டுவெல்லில்

இருந்து கண்டெடுத்து முன்வைத்தது. அது தமிழகத்தில் புதிதல்ல என்றாலும் இந்நூல்களில் காணப்படும் அப்பட்டமான உக்கிரமான வெறுப்பு பீதியூட்டுகிறது. ஆரியர்களையும் பிராமணர்களையும் கிட்டத்தட்ட ரத்தவெறிகொண்ட பேய்களைப்போல சித்தரிக்கின்றன இந்த நூல்கள். இரண்டாவதாக இந்தியாவில் உள்ள அனைத்துச் சிந்தனைகளையும் கிறித்தவமே கொண்டுவந்தது என்று வாதிடுகின்றன.

ஆகவே இந்தக் கருதுகோள் ஏற்கப்பட்டது. பெரும் நிதியுதவியுடன் ‘இந்தியாவில் ஆதி கிறித்தவம்’ என்ற தலைப்பில் முதல் சர்வதேச கருத்தரங்கு ஜான்சாமுவேலை முதன்மை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு தெய்வநாயகம் மற்றும் தேவகலா ஆகியோர் முக்கியபங்காற்ற 2005 ல் நியூயார்க் நகரில் நடத்தப்பட்டது. நியூயார்க்கில் மதப்பரப்பு நிறுவனம் ஒன்றின் தலைவரான டாக்டர் சுந்தர் தேவப்பிரசாத் அதற்கான அமெரிக்க தொடர்பாளர்.

கருத்தரங்க மலரில் ஆர்ச் பிஷப் ஆ.ஃப் காண்டர்பரியின் வாழ்த்துச்செய்தி உள்ளது. செனட்டர் ஹிலாரி கிளிண்டனின் வாழ்த்துச்செய்தி, ஹெலென் மார்ஷல், பரோ ஆ.ஃப் குயீன்ஸ் நியூயார்க் அவர்களின் வாழ்த்துச்செய்தி, நியூயார்க் மேயரின் வாழ்த்துச்செய்தி, கவர்னர் ஜார்ஜ் படாகியின் வாழ்த்துச்செய்தி ஆகியவை உள்ளன. ஹிலாரி கிளிண்டன் நேரில்வந்து பங்கெடுத்தார். வழக்கம்போல இந்தியாவின் முக்கியமான எல்லா கிறித்தவ திருச்சபையில் இருந்தும் வாழ்த்துச்செய்திகள் உள்ளன. மலபார் சர்ச்சின் ஆர்ச் பிஷப், சிரியன் மலங்கர திருச்சபை ஆர்ச் பிஷப், சி.எஸ்.ஐ பேராயத்தின் ஆயரின் வாழ்த்துச்செய்தி போன்றவை உள்ளன.

அத்துடன் தமிழக முதல்வர் மு.கருணாநிதி அவர்களின் வாழ்த்துச்செய்தியும் உள்ளது. தமிழக கிறித்தவத்தின் இருபது நூற்றாண்டுப்பழமையில் பெருமைகொள்வதாக சொல்லும் முதல்வர் அது ஒரு மிக அறிவார்ந்த நிகழ்வாக இருக்கும் என்று வாழ்த்துகிறார்.

மாநாட்டின் நோக்கம் முதலிலேயே ஜான் சாமுவேலால் தெளிவுறச் சொல்லப்பட்டுவிடுகிறது. தாமஸ்கிறித்தவமே இந்துமதம் என்றும் அதை ஆரியபிராமணர் அழித்தார்கள் என்பதும்தான் அது. தாமஸ் பற்றிய ஒரு துதியுடன் மலர் ஆரம்பிக்கிறது. குடுமி வைத்து பூணூல் போட்டு அரைநிர்வாணமாக தோன்றும் கொடூரமான ஒரு பிராமணன் காவி உடை அணிந்து முழந்தாளிட்டு ஜெபம்செய்யும் தாமஸை பின்னாலிருந்து ஈட்டியால் குத்திக்கொல்லும் வண்ணச்சித்திரம் கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் சைவசித்தாந்தம் இந்துமதம் போன்ற தலைப்புகளில் மீண்டும் மீண்டும் தெய்வநாயகமும் தேவகலாவும் கட்டுரைகள் சமர்ப்பித்திருப்பதைக் காணலாம். அத்துடன் பெரும்பாலான கட்டுரைகள் ஒரே குழுவினரால் உருவாக்கப்பட்டவைபோல ஒரேவகையான திரிப்புகள் ஒரேவகையான சொற்றொடர்கள் மையக்கருத்துகளுடன் காணப்படுகின்றன.

இந்த மாநாட்டில் ஹெப்ஸிபா ஜேசுதாசன் "Early Christianity in Tamil Nadu" என்ற தலைப்பில் ஒரு ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்திருக்கிறார். அதில் தமிழின் எல்லா பண்டைய இலக்கியங்களும் கிறித்தவ தாக்கத்தால் உருவானவையே என்று அவர் வாதிட்டிருக்கிறார்.

இரண்டாவது சர்வதேசக் கருத்தரங்கு ஜான் சாமுவேலை தலைமையாகக் கொண்டு ஜனவரி 2007ல் சென்னையில் நடைபெற்றிருக்கிறது. இதற்கு குடியரசுத்தலைவர் அப்துல் கலாம் வாழ்த்துரை வழங்கியிருக்கிறார். ஆர்ச் பிஷப் மயிலைசென்னை ஏ.எம்.சின்னப்பா தொடங்கி ஏறத்தாழ எல்லா சபைத்தலைவர்களும் ஆசியுரை வழங்கியிருக்கிறார்கள். முதல் கருத்தரங்கு பெரும் வெற்றிபெற்று இந்தியவரலாற்றைப்பற்றிய மறுக்க முடியாத கருத்துகளை நிறுவிவிட்டது என்று சொல்லும் ஜான் சாமுவேல் அதை மேலும் விரிவுபடுத்தவே இந்தக் கருத்தரங்கு என்று குறிப்பிடுகிறார்.

டி.தயானந்தன் ஃப்ரான்ஸிஸ், எஸ்ரா சற்குணம், ஹெப்ஸிபா ஜேசுதாசன் போல தமிழில் பரவலாக அறியப்படும் கிறித்தவ சிந்தனையாளர்கள் அனேகமாக அனைவருமே இந்த அரங்கில் கருத்துகளை முன்வைத்திருப்பதைக் காணமுடிகிறது. எல்லா கருத்துகளும் ஒரே சாரம் கொண்டவை. ஹெப்ஸிபா கம்பராமாயணம் கிறித்தவ சாரம் கொண்ட நூல் என்கிறார்.

இப்போது இந்த கருத்தரங்குகளின் நீட்சியாக 'தமிழர் சமய உலக முதல் மாநாடு' 2008 ஆகஸ்டு 14 முதல் 17 வரை சென்னை மயிலை உயர் மறைமாவட்ட அருட்பணி மையத்தில் (ரோஸரி சர்ச் சாலை சாந்தோம், சென்னை 600004) நடக்கவிருக்கிறது. மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் பேராயர் முனைவர் எ.எம்.சின்னப்பா (சென்னை மயிலை கத்தோலிக்க பேராயம். சாந்தோம். சென்னை) முனைவர் மு.தெய்வநாயகம் நிறுவனர் உலக தமிழர் ஆன்மவியல் இயக்கம் சென்னை. துணைஆயர் முனைவர் லாரன்ஸ் பயஸ், முனைவர் தெ.தேவகலா அமைப்பாளர் உலகத்தமிழர் ஆன்மவியல் இயக்கம்.

இவ்வரங்கின் கோஷமாக முன்வைக்கப்படுவதை அதன் அறிவிப்பு இதழில் காண முடிகிறது. 'ஒவ்வொருவரும் தன்மான உணர்வுடன் பிறப்பால் ஏற்ற தாழ்வு கற்பிக்கும் இந்துத்துவாவின் பிடியில் இருக்கும் இந்து மதத்தைச் சார்ந்தவனாக தன்னைக் கூறாமல் தான் தமிழர் சமயத்தைச் சேர்ந்தவன் என்று அறிவித்து இந்துத்துவாவின் பிடியில் இருந்து விடுபட்டு தன்னுடைய பழைய சிறப்பு நிலைக்கு திரும்ப வேண்டும்.'

அழைப்பிதழின் அட்டையில் உலக உருண்டைக்கு மேல் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வரியும் 'ஒன்றேகுலம் ஒருவனே தேவன்' என்ற வரியும் கொடுக்கப்பட்டுள்ளன. அழைப்பிதழிலேயே மாநாட்டில் பேசுபொருட்கள் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. தமிழர் சமயம் என்பது தோமாகிறித்தவமே என்பதுதான் அது.

இந்த மாநாட்டுக்குப் பின் ஏறத்தாழ 100 கோடி ரூபாய் செலவில் தாமஸ் இந்தியா வந்தது, வாழ்ந்தது பற்றி ஒரு ஆங்கிலதமிழ் திரைப்படம் எடுக்கப்போவதாகவும் அதில் ரஜினிகாந்த், கமலஹாசன் உட்பட முக்கிய நடிகர்களை நடிக்கவைக்கப்போவதாகவும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

•

தத்துவ வரலாற்றுப் பரிச்சயமே இல்லாமல், மிக எளிமையான தர்க்கங்களுடன், கிட்டத்தட்ட கிறுக்குத்தனமாக உருவாக்கப்பட்டுள்ள

இந்த கருத்தமைப்பு குறித்து ஏன் இத்தனை எழுதவேண்டும் என்றால் இதன் பின்னணியில் உள்ள பணம் மற்றும் அமைப்புபலம்தான். ஜான்சாமுவேல் மற்றும் தெய்வநாயகம் மூளையில் உதித்த இந்தக் கரு இப்போது பலகோடி ரூபாய் புரட்டும் சக்தியுடைய ஒன்றாக ஆகிவிட்டிருக்கிறது. தமிழ் அறிவுஜீவிகளில் பணத்துக்காகப் பேசாதவர்கள் மிகச்சிலரே.

இப்போதே அ.மார்க்ஸ் இந்தக் கருத்தரங்கில் பேசவிருப்பதாக எனக்கு இவ்விதழ்களை அளித்தவர் சொன்னார். அ.மார்க்ஸ் அவ்வளவு எளிதாக தன்னை முன்னிறுத்திக்கொள்ள மாட்டார் என்றே எண்ணுகிறேன். ஆனால் அவரையும் தமிழில் புகழ்பெற்ற அறிவுஜீவிகளான எஸ்.வி.ராஜதுரை, தொ.பரமசிவன், ஞானி, தமிழவன், குமரிமைந்தன் போன்றவர்களையும் சாதாரணமாக இந்த அமைப்பு திரட்டிவிட முடியும். அவர்களை உள்ளே இழுக்கவேண்டிய இடைவெளிகளை இந்தக் கருத்தமைப்பு அதற்கான தந்திரங்களுடன் உள்ளே விட்டிருக்கிறது. ஏற்கனவே தமிழ்ச்சூழலில் பிரபலமாக உள்ள கருத்துகளை எடுத்து சற்றே திரித்து தோமா வரை கொண்டுசெல்வது இதன் வழி.

உதாரணமாக இந்திய சிந்தனை முழுக்கவே குமரிக்கண்டத்தில் இருந்து வந்தது என்ற கருத்து குமரிமைந்தனுக்கோ ஞானிக்கோ உவப்பானதுதான். தமிழர்களின் சிந்தனையை ஆரியர் அழித்தார்கள் என்றோ இந்துஞானம் என்ற ஒன்று இல்லை என்றோ சொன்னால் தொ.பரமசிவம் அதை ஏற்றுப்பேசுவார்தான். அவர்களை உள்ளிழுக்கும்படி ஒரு பொதுவான தலைப்பில் ஓர் அரங்கை உருவாக்கி அதில் அவர்கள் தங்கள் இடத்தைமட்டும் பேசிவிட்டுச்செல்ல செய்தால் போதும். இயல்பாக அடுத்தபடிக்கு தெய்வநாயகமும் ஜான்சாமுவேலும் நகர்ந்தால் இவர்கள் பேசாமலிருப்பார்கள்.

மெல்லமெல்ல இது ஒரு வலுவான தரப்பாக ஆகும். உதாரணமாக சமீபத்தில் ஒரு பேட்டியில் கமல்ஹாசன் சொன்னார். ‘திருவள்ளுவரை சிலர் சமணர் என்றகிறார்கள், சிலர் சைவர் என்கிறார்கள், சிலர் கிறித்தவர் என்கிறார்கள்...’ என்று. 1970 களில் ஆர்ச்பிஷப் அருளப்பா காலத்தில் மோசடியாக செப்பேடு ஒன்று உருவாக்கப்பட்டு திருக்குறள் ஒரு கிறித்தவ நூல் என்று சொல்லப்பட்டது. பின்பு அது மோசடி என்று நிரூபிக்கப்பட்டது. ஆர்ச் பிஷப் மன்னிப்பு கோரினார். இன்று அது இயல்பான ஒரு வரலாற்று ஊகமாக ஆகிவிட்டிருப்பதை பாருங்கள்.

அதேபோல இந்திய மெய்ஞானம் முழுக்கமுழுக்க கிறித்தவர்களால், இல்லை தன்னந்தனியாக வந்த ஒரே ஒரு கிறித்தவரால், (தாமஸ் தனியாகவே வந்தார் என்கிறார் தெய்வநாயகம்) கொண்டுவரப்பட்டது என்பதும் தமிழ் வரலாறு பற்றிய பல கோட்பாடுகளில் ஒன்றாக ஆகிவிடும். மெல்ல பாடப்புத்தகங்களில் இணைக்கவும் படும். அதை மறுப்பவர்கள் இந்துத்துவர்கள், பார்ப்பனியர்கள், சாதியவாதிகள் என்றெல்லாம் முத்திரைகுத்தி வசைபாட ஆரம்பித்தால் ஐயங்கள்கூட மெல்ல இல்லாமலாகும்.

•

உண்மையில் தாமஸ் இந்தியா வந்தாரா? வந்திருக்கலாம். ஆனால் ஓரளவேனும் பொருட்படுத்தும்படியான வரலாற்று ஆதாரம் ஏதும் இல்லை என்பதே உண்மை. இன்றுவரை அவரது வருகை அது ஒரு

மதநம்பிக்கையாகவே உள்ளது. தாமஸ் பற்றி பொதுவாகவே அதிகம் தெரியாது. மிகவிரிவான கிறித்தவ ஆய்வுகள் நிகழ்ந்த மேலைச்சூழலில் அவரைப்பற்றி கத்தோலிக்க கலைக்களஞ்சியமே மிகக் குறைவான தகவல்களையே அளிக்கிறது.

பிற்காலத்தில் உருவான ஆக்டா தோமா என்ற சிறு நூலில் சில குறிப்புகள் உள்ளன. அதில் இருந்து அறியக்கூடியவை இவை. தாமஸ் கீழைநாட்டுக்கு மதத்தை பரப்புவதற்காக கிளம்பினார். அலக்ஸாண்டிரியாவுக்கு வந்தார். ‘காப்டிக்’ திருச்சபையை நிறுவினார். அவர் ஆப்கானிஸ்தான் (காந்தாரம்) வழியாக இந்தியாவுக்கு நுழைந்தார். அதுவே இயல்பான பாதையாகும். அவர் அங்கே ஒரு மன்னனை மதம் மாற்றினார். கொல்லப்பட்டார். அவரது சடலம் மீண்டும் எடேஸாவுக்குக் கொண்டுபோகப்பட்டது. இதுவே நமக்குக் கிடைக்கும் தகவல். இதுகூட மிகப்பிற்காலத்தில் எழுதப்பட்ட ஒன்று.

ஆக்டா தோமா தான் தாமஸ் பற்றிய ஒரே ஆதாரம். அதில் தாமஸ், மிஸ்தாய் நாட்டின் மன்னனின் மனைவி டெரிஷியாவையும் மகன் வாசனையும் மதம் மாற்றினார். மன்னனால் சிறைபிடிக்கப்பட்டு கொல்லப்பட்டார். எப்போது இந்தக்கதை தாமஸ் பிராமணனால் கொல்லப்பட்டார் என்று மாறியது? ஏன்? இன்று எல்லா இடத்திலும் குடுமி வைத்த ஸ்மார்த்த பிராமணன் பிரார்த்தனை செய்யும் தாமஸை பின்னாலிருந்து குத்திக்கொல்லும் சித்திரமாக வரைந்து வைக்கப்பட்டுள்ளது!

நாணய ஆய்வுகளின் படி தாமஸ் வட இந்தியாவுக்கு வந்திருக்கலாமென சில ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். தென்னிந்தியா வந்தமைக்கு எந்த விதமான புறவய ஆதாரமும் இல்லை. அவர் இந்தியா வந்தார் என்ற நம்பிக்கை ஐரோப்பாவில் இருந்திருக்கிறது. பிற்காலத்தில் வாஸ்கோடகாமா முதலியோர் இந்தியா வந்தபோது இங்கே உள்ள கிறித்தவர்களைக் காண விழைந்திருக்கிறார்கள். இங்கே மலபார் கடற்கரையில் ஒரு சிறு கிறித்தவ சமூகம் இருந்தது. அவர்களை, அவர்கள் தாமஸ்கிறித்தவர்களாக அடையாளம் கண்டார்கள்.

ஆனால் அது பாரசீக வணிகர்களால் ஆன ஒரு சிறிய கிறித்தவக் குழுதான். தாமஸ் என்று அவர்கள் சொல்வது ஏழாம் நூற்றாண்டில் மதமாற்றக் குழு ஒன்றை கொண்டுவந்த ‘கானா தோமா’ வையே என்று சில ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். அதற்கான வாய்ப்புகளே அதிகம். ஏனென்றால் இன்றும் உள்ள மார்த்தோமா கிறித்தவர்களின் சபையும் பண்பாடும் பெரிதும் அராபியச் சாயல்கொண்டது. காப்டிக் சாயலே அதில் இல்லை. அவர்களின் போப் பாரசீகத்தில் பதவி ஏற்றார் என்று பண்டைக்கால குறிப்புகள் சொல்கின்றன (Cosmas Indicopleustes). ஆனால் அவர்கள் தாமஸால் மதமாற்றம் செய்யப்பட்டவர்கள் என்று சொல்லப்படவில்லை.

பதினேழாம் நூற்றாண்டுக்குப் பின் தோமா கிறித்தவர்கள் தாங்கள் யேசுவின் சீடரான தாமஸால் மதமாற்றம் செய்யப்பட்டவர்கள் என்று நம்ப ஆரம்பித்தார்கள். சொல்லப்போனால் ரோமாபுரி கிறித்தவர்களான போர்ச்சுக்கல்காரர்களை எதிர்த்து தங்கள் தனித்தன்மையை தக்கவைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதனால் அந்நிலைப்பாட்டை அவர்கள் ஏற்றார்கள் என்று சொல்லலாம். மிகப் பிற்காலத்தைச் சேர்ந்த சில தேவாலயங்களை தாமஸால்

உருவாக்கப்பட்டவை என்று அடையாளம் சொல்வது அவர்களின் வழக்கம்.

சென்னைக்கு அருகே உள்ள புனித தோமையர் மலை தாமஸ் இருந்த இடமாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. தாமஸ் அங்கே கற்சிலுவை ஒன்றை உருவாக்கினார் என்று சொல்லி சில கல்வெட்டுகளைக் காட்டுகிறார்கள். தாமஸின் காலத்தில் கிறித்தவ மதத்தில் சிலுவை வழிபாடு வேரூன்றவில்லை என்றும் புனித தோமையர் மலையில் உள்ள சிலுவையில் உள்ள எழுத்துக்கள் மிகவும் காலத்தால் பிந்தியவை என்றும் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். அவ்வெழுத்துக்கள் இன்றுவரை அதிகாரபூர்வ புறவய ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. தாமஸ் தெற்கு அமெரிக்க நாடுகளுக்குச் சென்றதாகக்கூட நம்பிக்கை உள்ளது.

தாமஸின் இந்திய வருகையை பற்றி மேலைநாட்டு ஆய்வாளர்களில் பெரும்பாலானவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. அதை ஒரு மதநம்பிக்கை என்று மட்டுமே கொள்கிறார்கள். பெரும்பாலான மதநம்பிக்கைகள் காலத்தால் பலவாறாக உருமாற்றப்பட்டவை. மொழியில் எவ்வகையிலோ இருந்துகொண்டிருப்பவை.

இந்திய நிலப்பகுதியில் வெளிநாட்டவர்கள் சரித்திரகாலம் முன்பே வந்துகொண்டுதான் இருக்கிறார்கள். கிரேக்கர்களும் ரோமர்களும் வந்திருக்கிறார்கள். அபிசீனியர்களும் அரேபியர்களும் வந்திருக்கிறார்கள். அவர்களின் சிந்தனைகள் இந்தியாவில் எந்த அளவுக்கு பாதிப்பைச் செலுத்தியிருக்கும்? இந்திய நூல்களைப் பார்க்கும்போது புறச்சிந்தனைகளின் பாதிப்பை பெரும்பாலும் காணமுடிவதில்லை. யவனர்கள் தமிழ்நாட்டில் காவலர்களாகவும் வணிகர்களாகவும் சகஜமாகப் புழங்கியிருக்கிறார்கள். ஆனால் சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில் என எவரது சிந்தனைகளையும் நாம் தமிழிலக்கியத்தில் காணமுடியாது. மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டால் ஒழிய.

இதையே சீன சிந்தனைகளுக்கும் சொல்லலாம். நமக்கும் சீனாவுக்குமான உறவு என்பது மிகமிக தொன்மையானது. சீனப்பொருட்கள் இங்கே மிக விரிவாகப் பரவின. நம்முடைய தச்சு சாஸ்திரத்தின் சீனப்பாதிப்பு மிக விரிவானது. இருந்தும் சீனச் சிந்தனைகள் நம் இலக்கியங்களில் துளியேனும் காணப்படுவதில்லை. உரையாசிரியர் குறிப்புகளில்கூட ஒரு பெயர் இல்லை. ஏன், நமது பண்டைய மொழியில் கிரேக்க, லத்தீன், அராமிக், சீனச் சொற்கள்கூட இல்லை. மீண்டும் மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு தேவை.

ஏன்? இரு ஊகங்களைச் செய்யலாம். ஒன்று இங்கே சிந்தனையில் ஒருவகை செவ்வியல்தன்மை நிலவியது. செவ்வியல் எப்போதும் தன்னைத்தானே மீண்டும் மீண்டும் நிகழ்த்திக் கொண்டிருக்கும். நுட்பமான வித்தியாசங்களை உருவாக்குவதில் மட்டுமே கவனம் செலுத்தும். தமிழிலக்கிய வாசகன் எளிதில் இதைக் கண்டடையலாம். இந்த அம்சம் புறப்பாதிப்பை முழுமையாக உதாசீனம் செய்யும்.

இரண்டு, மலையாள வரலாற்றாசிரியர் பி.கே.பாலகிருஷ்ணன் செய்யும் ஊகம். அதாவது நம் நாட்டுக்கு வந்த அன்னியர் கடலோரங்களில் தனிச்சமூகமாக வாழ்ந்துசென்றனர். அவர்களுக்கும் நம் சமூகத்தின்

மையத்துக்கும் எந்தவிதமான உரையாடலும் நிகழவில்லை. இப்போதுகூட கடற்கரை நம் மையப்பண்பாட்டில் இருந்து மிக ஒதுங்கியதாகவே உள்ளது.

இதற்கு பி.கே.பாலகிருஷ்ணன் ஒரு சான்று சொல்கிறார். (ஜாதி வியவஸ்தையும் கேரள சரித்ரமும்) அரேபியரும் கிரேக்கரும் ஒரே காலகட்டத்தில் மேற்குக் கடற்கரைக்கு வந்து சென்றார்கள். பலநூறு வருடம். கிரேக்கர்கள் நல்லமிளகை கேரளத்தில் கோழிக்கோட்டில் வாங்கினார்கள். போகும் வழியில் அரேபியாவில் இருந்து சுக்கு வாங்கினார்கள். அதை ஒரு அரேபியப்பாலைவன வேர் என்றே பலநூற்றாண்டுக்காலம் அவர்கள் நம்பினார்கள். ஆனால் அரேபியர்கள் சற்று கீழே கொல்லத்தில் இருந்து சுக்கு வாங்கிக்கொண்டு சென்றுதான் தங்கள் நாட்டில் வைத்து விற்றார்கள்.

அந்த அளவுக்கு அன்றைய உரையாடல் இருந்திருக்கிறது. கிரேக்கர்கள் தங்களுக்கு நல்லமிளகை விற்றவர்களிடம் பேசியே இருந்திருக்கமாட்டார்கள். நம் மரபை வைத்துப் பார்த்தால் அந்த வணிகத்தை நடத்த ஒரு தனி சாதி உருவாகியிருக்கும். அவர்கள் அதைச் செய்வார்கள். மற்றவர்களுக்கு தொடர்பே இருக்காது. ஆகவேதான் ஆயிரம் வருடம் கிரேக்கர் வந்து போன மலையாளச்சூழலில் ஒரு சிறு கிரேக்க தடையம் கூட கிடையாது, மொழியில் பண்பாட்டில். இப்படித்தான் நம்முடைய பண்பாடும் இருந்துள்ளது.

தாமஸ் வந்திருந்தால்கூட கடற்கரையோரம் மிகச்சிறிய ஒரு சமூகத்தை உருவாக்குவதுடன் அவரது பணி முடிந்திருக்கும். அவரது காலம் வரலாற்றுத் தொடக்க காலம். அவருக்குப் பின்பு, சாலைகளும் தொடர்புகளும் பலமடங்கு பெருகியபின், வந்த புனித சவேரியார் பல காலம் தமிழ் மண்ணில் வாழ்ந்திருக்கிறார். அவருக்கு தமிழிலக்கியத்தில் சிந்தனையில் பண்பாட்டில் உள்ள பங்களிப்பு என்ன? பைபிளின்படி தாமஸ் தத்துவம் கற்றவர் அல்ல. ஆனால் சவேரியார் ஒரு தத்துவஞானி. சவேரியாரின் பணி கடலோரங்களில் தொடங்கி அங்கேயே முடிந்தது. அவரது பெயர்கூட நம் இலக்கியங்களில் இல்லை.

அதேபோல முகமது நபிக்குப்பின் நெடுங்காலம் முஸ்லிம்கள் இந்தியாவுக்கு வந்து கொண்டிருந்தார்கள். ஆனால் பதிமூன்றாம் நூற்றாண்டில் அவர்கள் வட இந்தியாவிலிருந்து படையெடுப்பது வரை அவர்களின் பாதிப்பு தமிழ்ச் சிந்தனையில் மிகமிகக் குறைவே.

இந்த தர்க்கமெல்லாம் தெய்வநாயகம் போன்றவர்களின் கண்மூடித்தனமான பிரசார வேகம் முன் ஒன்றும் செய்யமுடியாது. ஆயினும் இதுவே சிந்திக்கும் பழக்கம் உடையவர்களுக்கான பதில். நாளை அவர்களின் மேடை ஏறி முழங்கப்போகும் தமிழ் திராவிட அறிவுஜீவிகளுக்கும் இதுவே விளக்கம்.

•

கிறித்தவ மரபில் தாமஸ் முக்கியமானவர் அல்ல. ஏனென்றால் அவர் கிறிஸ்துவை ஐயப்பட்டவர். இருந்தும் ஏன் அவரை திடீரென மீட்டெடுக்கிறார்கள்?

இந்திய பாரம்பரியம் கிறித்தவம் வருவதற்கு முன்பு சிந்தனையற்ற

இருண்டகாலம் கொண்டிருந்தது என்று சொல்வதற்கு தடையாக உள்ளவை இங்குள்ள பேரிலக்கியங்கள். அவற்றை மறைப்பது கடினம். ஆகவே அவற்றின் காலத்தை பின்னுக்குத்தள்ளி கிறித்தவத்தின் வருகையை முன்னுக்குக் கொண்டுசெல்கிறார்கள். அதற்கு தாமஸ் தேவையாகிறார்.

தாமஸின் சுவிசேஷம் என்று ஒன்று எகிப்தில் நாக் ஹமாதியில் கிடைத்துள்ளது. (விவிலியத்தின் முகங்கள் – ஓர் அறிமுகம்) பாப்பிரஸ் சுவடிகளில் எழுதப்பட்ட அந்தச்சுவடி கார்பன் டேட்டிங் முறைப்படி கிபி இரண்டாம் நூற்றாண்டுக்கு முந்தியதுதான் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. தாமஸ் எகிப்தில் வாழ்ந்தார் என்ற வரலாற்றுடனும் காப்டிக் சர்ச்சை நிறுவினார் என்ற வரலாற்றுடனும் அந்த விஷயம் பெருமளவு ஒத்துப்போகிறது. ஆய்வாளர் நடுவே அச்சுவடி ஒரு வரலாற்று ஆவணமாகவே கருதப்படுகிறது.

அந்த சுவிசேஷத்தில் (மறைக்கப்பட்ட பைபிள் : தோமையர் எழுதிய சுவிசேஷம்) தாமஸ் யேசுவை ஒரு தேவனாக, கடவுளின் மகனாக முன்வைக்கவில்லை. மாறாக ஒரு ஞானகுருவாக முன்வைக்கிறார். கிறிஸ்து வானத்தில் உள்ள சொர்க்கத்தைப்பற்றி பேசுபவராக வரவில்லை, மண்ணில் உள்ள சொர்க்கத்தைப்பற்றி பேசுபவராக வருகிறார். பைபிளின் அதிகாரபூர்வ வரிகளில் இருப்பதைவிட ஆழமும் கவித்துவமும் கொண்டவையாக அவ்வரிகள் உள்ளன. நாக் ஹமாதியிலும் செங்கடல் பகுதிகளிலும் கிடைத்த பல பைபிள் வடிவங்களை வலுவான தொல்பொருள் சான்று இருந்த போதிலும்கூட கத்தோலிக்கத் திருச்சபை நிராகரித்துவிட்டது. ஆனால் எந்த உறுதியான ஆதாரமும் இல்லாமல் இந்தியப் பண்பாடே தாமஸ் என்ற தனிநபரால் உருவாக்கப்பட்டது என்று நிறுவ முயல்கிறது.

மதநம்பிக்கையை பேண எவருக்கும் உரிமை உள்ளது. தன் மதநம்பிக்கையை பரப்புவது ஒருவரது பிறப்புரிமை. அதிலும் இஸ்லாமிய கிறித்தவ மதங்களில் அது புனித கடமையும்கூட. மதச்சார்பின்மை இந்தியமண்ணில் அதன் வீச்சை ஒருபோதும் இழக்கலாகாது என்று விரும்புகிறேன். ஆகவே மதமாற்றமும் ஒரு இந்தியனின் பிறப்புரிமையே. முன்பு ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் மதமாற்றத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதை எதிர்த்து நடந்த கூட்டத்தில் நான் விரிவாகவே இதைப் பேசியிருக்கிறேன். (மதமாற்ற தடைச்சட்டமும் ஜனநாயகமும்)

ஆனால் வரலாற்றுத்திரிபுகள், வெறுப்புப் பிரசாரங்கள் மூலம் அதைச்செய்ய நினைப்பது மிக ஆபத்தான போக்கு. கிறிஸ்து மனிதனாக வந்த இறைகுமாரன் என்ற உறுதியான நம்பிக்கை இவர்களுக்கு இருக்கும்பட்சத்தில் அந்த ஒரே வரியை சொல்லியே இவர்கள் தங்கள் மதத்தை பரப்பலாமே?

அதற்கும் அப்பால் சென்று கிறிஸ்துவின் சொற்களில் வெளிப்படும் மானுடநீதிக்கும் எளியவர்மீதான கருணைக்குமான குரலை இவர்கள் கேட்டிருந்தார்கள் என்றால் கிறிஸ்துவை முன்வைப்பதற்கு இத்தனை பொய்களைச் சொல்ல கூச மாட்டார்களா? தியாகத்தின் சிலுவையுடன் கிறிஸ்து வரட்டும், கள்ளநோட்டு எந்திரத்துடன் வரவேண்டாம்.

3. 2. தாமஸ் : கடிதங்கள்

அன்புள்ள ஜெயமோகன்,

கிறித்தவ மதமாற்ற இயந்திரம் இந்திய வரலாற்றில் நிகழ்த்தும் ஊடுருவலைப் பற்றிய உங்கள் கட்டுரை என்னை மிகவும் வருத்தத்துக்கு உள்ளாக்கியது. ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் எண்பதுகோடி முழுமூடர்களின் நாடு என்று நம்மைப்பற்றி நமக்கே கற்பிக்கிறார்கள். யோசித்துப் பாருங்கள், இங்குள்ள சிந்தனைகள் எல்லாமே திராவிடர்களால் உருவாக்கப்பட்டது. அந்த திராவிடர்கள் ஆரியர்களான பிராமணர்களிடம் தங்கள் சிந்தனைகள் அனைத்தையுமே இழந்து பரிதாபமாக சீரழிந்து முட்டாள்களாக ஆயிரம் வருடங்களாக வாழ்கிறார்கள். தாமஸ் வந்து அவர்களுக்கு கொஞ்சம் ஞானத்தை அளிக்கிறார். அதைக்கூட இந்த மூடத்தமிழர்களால் பேணிக்கொள்ள முடியவில்லை. அவர்கள் மேலும் மேலும் சீரழிந்து அசட்டுக்கும்பலாகவே வாழ்கிறார்கள். ஆரியர்கள் அவர்களை அடிமைகளாக ஆக்கியதற்கு அடிபணிந்து அவர்கள் சொன்னதை எல்லாம் நம்பி அவர்கள் கற்பித்த வரலாற்றையே தங்கள் வரலாறாக ஏற்றுக் கொண்டு வாழ்கிறார்கள். அவர்களை மீட்க மிஷனரிகள் வந்தார்கள். எப்பேற்பட்ட கதை. இது ஆரியர்களை இழிவுபடுத்தவில்லை. உண்மையில் தமிழர்களைபுழுவிலும் கேவலமானவர்களாகக் காட்டுகிறது. சிந்தனைத்திறனும் போர்த்திறனும் இல்லாத அசடுகளாக, தாங்கள் கற்றவற்றைக்கூட பிறர் திரிக்க அனுமதிக்கும் அறிவிலிகளாக காட்டுகிறது. எத்தனை ஆணவமும், தமிழ் மக்களைப் பற்றிய கேவலமான மதிப்பீடும் இருந்தால் இத்தகைய ஒரு கோட்பாட்டை சொல்லி தமிழ்நாட்டிலேயே மாநாடு கூட்டுவார்கள்! அந்த மாநாட்டுக்கு நம்முடைய தமிழ் அறிஞர்கள் எல்லாம் சென்று அமர்ந்து பேசுவார்கள். நினைக்கும்போது கண்ணீரே வருகிறது. நூற்றாண்டுகளாக நாம் உருவாக்கிய தத்துவம், ஆன்மிகம், கலைகள், இலக்கியங்கள் எல்லாமே பொய்யா? நமக்கு சுயசிந்தனையே இல்லையா? நாம் வெறும் அற்பப்பிறவிகள் தானா? இதைக்கேட்கவா திருக்குறளையும் கம்பராமாயணத்தையும் திருமுறைகளையும் உருவாக்கி நமக்களித்துச் சென்றார்கள் நம் மூதாதையர். நெஞ்சு கொதிக்கிறது. நன்றாக இருக்கட்டும். ஆதிக்க வெள்ளையர்கள் அளித்த சிறு தொகைகளை வாங்கி சொந்த மண்ணையும் மக்களையும் களங்கப்படுத்தும் அந்த மாமனிதர்கள் பிள்ளை குட்டிகளுடன் நீடூழி வாழட்டும்.

ஆடலரசு
சென்னை

ஜெயமோகன்,

“யூரோப்பியர்கள் முதலில் இங்கே வந்தபோது எங்களிடம் நிலமும், அவர்களிடம் பைபிளும் இருந்தது. கண்களை மூடி ஆண்டவனிடம் பிரார்த்திக்க எங்களுக்கு அவர்கள் கற்பித்தார்கள். நாங்கள் எங்கள் கண்களை திறந்தபோது எங்கள் நிலங்கள் அவர்களுடையதாக இருந்தன; எங்களிடம் எஞ்சியது பைபிள். – ஒரு ஆப்பிரிக்க பாதிரியார்.”

பணம் என்பது தேவைகளை நிறைவேற்ற, உருவாக்க பிறந்த ஒரு வஸ்து. தேவைகள் இல்லாவிட்டால் அந்த வஸ்துவின் தோற்றமும் பயன்பாடும் அர்த்தமற்றதாகிவிடும். பொருளாதாரத்தில் குறைந்த பரிச்சயம் உள்ளவர்களுக்குக்கூட தெரியும் உண்மை இது.

ஆனால், ட்ரில்லியன் டாலர்களில் மதம் பரப்புவதற்காக இந்த நாட்டில் பணம் கொட்டப்படுவது எந்தத் தேவைகளை நிறைவேற்றுவதன் பொருட்டு என்று கேள்வி எழுப்பப்படவேண்டும். எதற்காக இந்த முதலீடுகளும், மாநாடுகளும், படப்பிடிப்புகளும், பாடத்திட்டங்களும், என்கிற கேள்விகளுக்கு உங்களது கட்டுரை பதிலளிக்கிறது.

ஆப்பிரிக்காபோல ஆசியாவையும் மாற்ற.

ஆப்பிரிக்காவை சுரண்டி வளர்ந்தவர்களாகவும், வளர்பவர்களாகவும் உள்ள செல்வச் செழிப்பு நாடுகள் இந்தியாவின் வளங்களையும், இந்தியர்களான நம்மையும் சுரண்டவே இந்த முதலீடுகளும், மாநாடுகளும், படப்பிடிப்புகளும், பாடத்திட்டங்களும்.

ஆரியர் திராவிடர், கிருத்துவர்பாகன்கள், இஸ்லாமியர் – கா:ஃபிர்கள், ஹுடுக்கள் – டுட்ஸிக்கள், பார்ப்பனர் – சூத்திரர், உள்ளவர்இல்லாதவர், தாழ்த்தப்பட்டவர் – உயர்த்தப்பட்டவர் என்று குழு குழுவாய் பிரிந்து அடித்துக்கொண்டு சாகும் மனிதர்கள் நிறுவனப்படுத்தப்பட்ட மதங்களின் விளைவே.

உலகில் அனைத்து இயற்கை வளங்களும் நிறைந்த ஆப்பிரிக்கக் கண்டத்தில் குடிக்க நீர்கூட இல்லாமல் மூத்திரத்தையும், இலைதழைகளையும் உண்டு உயிர்வாழ்பவர்களாக மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஆபிரகாமிய மதவாதங்கள், கற்பனையாக உருவாக்கப்பட்ட இனவாதத்தின் அடிப்படையில் ஒருவர்மேல் ஒருவர் வெறுப்புகொள்ள வைத்து சகிக்க முடியாத கொடூரங்களை நிறைவேற்றி வருகின்றன.

ஒவ்வொரு வளமான நாட்டிலும் கற்பனையான இனங்களை கண்டுபிடித்து, தங்களது கல்வித்திட்டங்கள் மற்றும் கல்விநிலையங்கள் மூலமாக இனப் பிரிவினைவாதத்தைப் பரப்பி, வன்முறையை நிலைநிறுத்துவதாக இருப்பது மதவாதம்.

இறைவனின் சாம்ராஜ்ஜியத்தையோ அல்லது உண்மையான ராமராஜ்ஜிய/கம்யூனிஸ/கேப்பிட்டலிஸ சுவனத்தையோ இந்த மண்ணில் கொண்டுவர உழைக்கும் இந்த மதவாதத்தின் நபிமார்கள். பூசாரிகள்.

அதனால் விளையும் மதவெறி. அதை கண்டுகொள்ளாமல் விடும் மனிதர்கள். பிணங்கள். அவலம்.

இதுகுறித்து எதுவும் அறிய, அறிவிக்க விரும்பாது தங்கள் வாழ்க்கையை உயர்த்திக்கொள்ளும் புத்திசாலிகள். இந்த அவலத்தை வெளியே சொல்லி ஏளனத்திற்கும், முத்திரை குத்துதலுக்கும் உள்ளாகும் முட்டாள்கள்.

பரவுவது ஆக்கிரமிப்பின் தாமஸும், அடங்கச் சொல்லும் தாமஸும்.

உலகம் எப்போதும் இப்படித்தான் இருந்ததா? இப்படித்தான் இருக்குமா? இதில் நானும், என் மனைவியும், குழந்தைகளும், நண்பர்களும், அன்பர்களும் என்ன ஆவோம்?

மனித வெடிகுண்டுகளாகவோ, அல்லது அவர்களால் பலியிடப்படுபவர்களாகவோ ஆக்கப்பட்டு நடுத்தெருவில் உடல்சிதறி சாவதுதான் எங்கள் விதியா?

பள்ளி சென்றிருக்கும் என் குழந்தை நலமாய் வீடு வந்து சேருவாளா? இன்று பிழைத்தால் நாளை?

இந்துத்துவவாதமும், கிருத்துவ, இஸ்லாமிய பயங்கரவாதங்களும் மோதிக்கொள்ளும் இந்தச் சூழலில் இந்தக் கேள்விகள் எங்களைப் போன்ற சாதாரண மனிதர்களிடம் பயத்தை உண்டாக்குகின்றன. குஜராத், அமர்நாத் கலவரங்கள். கோயம்புத்தூர், பெங்களூர் குண்டு வெடிப்புகள். மதுரை தென்காசி கொலைகள். நீதியையும், சட்டத்தையும் மதிக்காத அரசியல்வாதிகள். விளைவு? இனப்படுகொலைகள்.

உலகில் மிகக்கொடூரமான இனப்படுகொலையாக வரலாற்றில் இடம்பெறுவது ஹூடு – டுட்ஸி இனக்கலவரம். இதே இனவாதம் இந்தியாவில் ஆரிய – திராவிட இனவாதமாகக் காட்டப்படுகிறது. வேறு பெயர்கள். அதே இனவெறி.

இந்தியாவிலும் சரி, ஆப்பிரிக்காவிலும் சரி – இல்லாத இன வெறுப்பை கண்டுபிடித்து, வன்முறையை வளர்த்து அதில் வளம் காண்பதாக கிருத்துவம் விளங்குகிறது. ஹூடு – டுட்ஸி இனக்கலவரம் இதையே மீண்டும் நிறுவுகிறது.

இருப்பினும் இந்தியர் ஆப்பிரிக்கர்களைப் போல தோல் போர்த்திய எலும்புகளாய் ஆகாமல் தப்பிப் பிழைத்திருப்பது எதனால்?

இந்திய ஞான மரபினால். இந்த ஞான மரபே சுதந்திர வேட்கையையும், தனிமனித விடுதலையையும், கலையுணர்வையும் தூண்டுகிறது. அதனால்தான் இதை அழிக்க மதவெறி முயலுகிறது. நேரடியாக அழிக்க முடியாதபோது மறைமுகமாக அரவணைத்து நெருக்கி அழிக்கப் பார்க்கிறது. உங்களிடம் இருக்கும் ஞான மரபு எங்களிடம் இருந்தே வந்தது என்று தங்களின் பெருமையையும், கேட்பவரிடம் கீழ்மையையும் ஏற்படுத்துகிறது.

இதையொத்த மதவாதமே சூடானில் இஸ்லாமியர்களால் வன்முறையை பரப்புகிறது. சூடான் நாடே, இரண்டு வேறு நிலப்பகுதிகளாக மதத்தின் அடிப்படையில் பிரிந்து அடித்துக்கொள்ளுகின்றது.

இந்த மதவெறியை அனுமதிப்பதால் அல்லது கண்டுகொள்ளாமல் போவதால் பஞ்சத்தாலும் வறுமையாலும் அழிந்துபோன மக்கள்கூட்டத்தைச் சேர்ந்தவனாக மாறுவதுதான் என் குடும்பத்திற்கு எஞ்சும். ஆப்பிரிக்க மக்களுக்கு நடப்பதுபோல.

இதை நான் எழுதிக்கொண்டிருக்கும், நீங்கள் படித்துக்கொண்டிருக்கும் இந்த தருணத்தில் லட்சக்கணக்கான மனிதர்கள் மலத்திலும் கேவலமான உயிர்தரித்தலில் இருந்து தப்பிக்க மரணத்தை வரவேற்று காத்திருக்கிறார்கள். மரணத்தை அடுத்த வினாடி தழுவ இருக்கும் குழந்தையின் உடலை ருசித்துத் தின்ன கழுகுகள் காத்திருக்கின்றன.

இத்தகைய காட்சி ஒன்றை படம் பிடித்து அதற்காக புலிட்ஸர் ப்ரைஸும் பெற்ற கெவின் கார்ட்டர் இந்த வறுமையின் கொடூரத்தைத் தாங்க

முடியாமல் தற்கொலை செய்துகொண்டார். (http://en.wikipedia.org/wiki/Kevin_Carter).

கலைஞர்களால் வன்முறையை தாங்கிக்கொள்ள முடியாது. அவர்கள் இயற்கையின் மென்மையில் தங்களை இழந்தவர்கள். கலைஞர்கள் மௌனமான புரட்சியாளர்களாக மாறுவது வன்முறையை உலகிற்கு அறிவிக்கும் இந்த தருணத்தில்தான்.

அவர்களாலேயே மனிதம் பிழைக்கிறது. அதனால்தான் கலைஞர்களை மனிதம் மதிக்கிறது. அவர்களே வன்முறையின் கொடூரத்தை குறித்து உலகிற்கு முதலில் அறிவிக்கிறார்கள். எச்சரிக்கிறார்கள். இந்தக் கட்டுரையின் மூலம் நீங்களும் அதையே செய்துள்ளீர்கள்.

உங்களது இந்தக் கட்டுரை என் மகள் பள்ளியிலிருந்து பத்திரமாய் திரும்ப ஒரு வாய்ப்பு இருக்கிறது என்கிற நம்பிக்கையை எனக்கு தருகிறது.

நம்பிக்கையுடன்,

ஆனந்த கணேஷ், வை

அன்புள்ள ஜெயமோகன்,

இன்று குமரிக்கண்ட ஆராய்ச்சிகள் மொழி மற்றும் மத தீவிர அமைப்புகள் மூலம் மட்டுமே முன்வைக்கப்படுகின்றன. நீரடி , கடலடி நிஜ ஆராய்ச்சிகளைப் பற்றி யாருக்கும் அக்கறை இல்லை. அவை திரித்துக் கூறப்படுகின்றன.

மத சக்திகள், குறிப்பாக இந்துத்துவ, இஸ்லாமிய, கிறித்துவ சக்திகளின் பண வீச்சு அளவிட முடியாதது.

வறுமையால் வாடும் ஒரு மனித உயிரை விட தங்கள் கடவுளின் சேவை என இவர்கள் கருதும் மகா மூட காரியங்களுக்கு தொகையளிப்பதற்கு மனிதகுலமனைத்துமே தயாராக உள்ளது. ஒருமணிக்கூர் தொலைக்காட்சி சாட்டிலைட் ஒளிபரப்பிற்கு 70000 ஆகும் (சரியான தகவல் தெரிந்தால் தேவலாம்) என அறியும்போது இவர்கள் எப்படி இத்தனை கிறித்துவ சேனல்களை மிக சாதாரணமாக ஒளிபரப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை யோசித்துப்பார்க்க வேண்டும். எந்த மதக் குழுவும் ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல. இந்து மதமும் இந்தப் போட்டியில் தன் அசுர பலத்தை காண்பித்துக்கொண்டுதான் இருக்கிறது.

இதில் மார்க்ஸ் வந்தால் என்ன, குமரி மைந்தன் வந்தால் என்ன. எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை.

அன்புடன்
ஆனந்த்

எழுத்தாளருக்கு

புனித தாமஸ் அப்போஸ்தலரின் தூய வரலாற்றை புளுகு என்று நீங்கள் எழுதியிருப்பதைப் படித்தேன். பார்ப்பனியப்பிதற்றல்களை உண்மை என்று நினைக்கும் உங்களுக்கு உண்மையான தேவனின் செய்தியும் அதன்

மெய்யான அப்போஸ்தலரின் வருகையும் பொய்யாகத்தான் தோன்றும். உங்களுடைய மனதில் பார்ப்பனிய நஞ்சும் பார்ப்பனிய மலமும் இறுகி கெட்டியாகி இருக்கிறது. நீங்கள் மனம்திரும்பி யேசுவை பிரார்த்தனை செய்தாலன்றி உங்களைப் போன்றவர்களுக்கு நித்யமான நரகமே காத்திருக்கிறது. சிலுவையின் முன் மண்டியிட்டு உங்கள் பாவங்களைச் சொல்லி அழுவதே உங்களுக்கு வழியாகும். மெய்யான தேவனின் நற்செய்தியால் உருவானது தமிழ் திராவிடச் சிந்தனைகள் என்பதை இனிமேல் உலகமே உணரத்தான் போகிறது. நீங்களும் உணரத்தான் போகிறீர்கள். அப்போது நீங்களும் உங்கள் சந்ததிகளும் துக்கப்படுவீர்கள். கிறிஸ்துவின் மெய்யான ஞானத்தை பழித்தவர்களுக்கு மரணமும் ரோகமும் சகல தீங்குகளும் வரும் என்பது கண்கூடு. அதை ஆறுமாசத்துக்குள் நீங்கள் உணர்வீர்கள். உலகமும் அறியப்போகிறது. எச்சரிக்கை. தோமாகிறித்துவ மறைஞானத்தை அழித்து பார்ப்பன பிணந்தின்னிக் கும்பல் சவைத்துப் போட்ட எச்சிலைத்தான் நீங்கள் திருப்பி எடுத்து தின்றுகொண்டிருக்கிறீர்கள். இந்து மதம் என்பது தோமாகிறித்தவ மதத்தின் பிணம்தான். இதை நீங்கள் உணரவேண்டும். உங்கள் மனதில் உள்ள பார்ப்பனிய மலமும் பாவத்தின் நாற்றமும் அழிந்து உங்கள் மனதில் கிறிஸ்துவின் ஒளி பிறக்க வேண்டும் என்று ஏசப்பாவை பிரார்த்தனை செய்கிறேன்.

(இதைப்போல 32 மின்னஞ்சல்கள் வந்துள்ளன. கிட்டத்தட்ட அனைத்துமே எனக்கு நோய், மரணம், குடும்பத்தினருக்கு கெடுதல்கள் ஆகியவை நிகழ வேண்டும் என்று பிரார்த்தனை செய்கின்றன.)

ஜெ

அன்புள்ள ஜெயமோகன்,

இப்போதுதான் தாமஸ் பற்றிய உங்கள் கட்டுரையை படித்து முடித்தேன். நீங்கள் போப்பாண்டவரே தாமஸ் தென் இந்தியாவுக்கு வந்ததை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற தகவலை குறிப்பிட மறந்துவிட்டீர்கள்.

> http://www.rediff.com/news/2006/nov/22pope.htm
>
> ‘தியாகத்தின் சிலுவையுடன் கிறிஸ்து வரட்டும், கள்ளநோட்டு எந்திரத்துடன் வரவேண்டாம்.’

உண்மைதான். நான் கிறிஸ்துவை ‘ஊழியர்களை’ விட நன்றாக புரிந்துகொண்ட பல கிறித்தவர்கள் அல்லாதவர்களை கண்டிருக்கிறேன். மனித வரலாற்றிலேயே மிக அதிகமாக தெரியவந்த, அதேசமயம் மிக அதிகமாக தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட மனிதர் கிறிஸ்துவாகத்தான் இருக்க வேண்டும். கீதையைப்போலவே பைபிளும் அதிகமான பலதரப்பட்ட அர்த்தங்களை உருவாக்கக் கூடியது. மானுட இனத்தின் பிற மாபெரும் நூல்களைப்போலவே மதத்தை தாண்டி வாசிக்கமுடியுமென்றால் மேலும் உள்ளொளியை அளிக்கக்கூடியது.

சிறில் அலெக்ஸ்

வாசகர்களுக்கு,

எனக்கு வந்த பலவகையான கடிதங்களுக்கு நான் எழுதிய பதிலில் உள்ள சாரத்தை மீண்டும் தொகுத்து எழுதி கீழே கொடுத்திருக்கிறேன்.

ஜெ

இக்கடிதங்களில் உள்ள ஆதங்கம் கோபம் வருத்தம்
ஆகியவற்றை கவனத்தில் கொள்கிறேன்.

நான் இந்திய கிறித்தவ மதப்பரப்பு நிறுவனங்களின் செயல்பாடுகளை கவனத்துக்குக் கொண்டுவர எண்ணினேன். அதனால்தான் அக்கட்டுரை. வரலாற்றை திரிப்பதும் மோசடிசெய்வதுமல்ல ஆன்மிகச் செயல்பாடு. அது கிறிஸ்துவின் உண்மையான செய்தியை மக்களிடம் கொண்டுசெல்வதே. எத்தனை முறை திரித்தாலும் அழியாத ஒரு அக்கினி கிறிஸ்துவின் சொற்களில் உள்ளது என்றே நான் எண்ணுகிறேன். அது எளிமையே மகத்தானது என்றும், மனிதன் சகிப்பதன்மூலம் தன்னை மேலெடுத்துக்கொள்ளலாம் என்றும் நம்மிடம் சொல்கிறது. தன் நெஞ்சோடு கைசேர்த்து கிறிஸ்துவை அறியும் ஒரு எளிய கிறித்தவனை நேசிக்கவும், அவனுடன் சேர்ந்து கிறிஸ்துவிடம் பிரார்த்தனை செய்யவும் என்னாலும் முடியும் என்றே எண்ணுகிறேன்.

நான் வணங்கும் அந்த கிறிஸ்து தல்ஸ்தோயின், தஸ்தயேவ்ஸ்கியின் கிறிஸ்து. என் இணையதளத்தில் அந்த கிறிஸ்துவை நோக்கிச்செல்லும் ஆயிரம் வழிகளை ஒரு வாசகன் காணலாம். என் ஆசிரியர் நித்ய சைதன்ய யதி எனக்கு அளித்த கிறிஸ்து. அந்த கிறிஸ்து ஒரு மாபெரும் ஆன்ம ஞானி. எல்லா ஆன்ம ஞானிகளையும்போலவே தன்னை பலியாக்கி ஞானத்தை முன்வைத்தவர்.

அந்த கிறிஸ்து இந்தியாவுக்கு தேவை என்றே எண்ணுகிறேன். அந்த கிறிஸ்துவால் தொட்டெழுப்பப்பட்ட பற்பல மகத்தான ஆத்மாக்களை நான் அறிவேன். அவர்களின் மாபெரும் தியாகங்களையும் அறிவேன். அவர்களுக்கு இந்த நாடு நன்றிக்கடன்பட்டிருக்கிறது.

இந்த ஆதிக்கவாதிகளின் அரைகுறை முயற்சிகளை வைத்து கிறிஸ்துவை மதிப்பிட்டு விடக்கூடாது என்று மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். அப்படிச்செய்ய முயலும் மதவாத நோக்குகளை முழுமையாகவே இக்கணம் நிராகரிக்கிறேன். இந்த அமைப்பு மனிதர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள தூரம் என்பது கற்பனைக்கு அப்பாற்பட்டது. மிக எளிமையான ஆதிக்க அரசியல் மட்டும்தான் இது. ஒவ்வொரு நாளும் மண்டியிட்டு கண்மூடி இவர்கள் பிரார்த்தனைசெய்வது கிறிஸ்துவிடமல்ல, கையில் சாட்டை ஏந்திய ஏகாதிபத்தியத்திடம்தான்.

ஜெயமோகன்
ஆகஸ்டு 13, 2008

3. 3. தாமஸ் : மேலும் கடிதங்கள்

அன்புள்ள ஜெயமோகன்,

தாமஸ் வருகையைப்பற்றிய உங்கள் கட்டுரையையும் அதற்கு வந்த எதிர்வினைகளையும் படித்தேன். எனக்கு ஆச்சரியம் ஏதும் ஏற்படவில்லை. ஏனென்றால் இது உலகம் முழுக்க கிறித்தவ மதப்பரப்புனர்களால் (இவாஞ்சலிஸ்டுகள்) செய்யப்பட்டு வருவதுதான். அதை நீங்களே சொல்லிவிட்டீர்கள்.

பொதுவாக அவர்கள் இரு தேசத்தை கையிலெடுக்க முயலும்போது அத்தேசத்தின் பண்பாட்டு உள்விவகாரங்களை ஆழமாக கவனிக்கிறார்கள். பழைய சேசுசபை கடிதங்களில் இதற்கான ஆழமான முயற்சிகள் இருப்பதைக் காணலாம். அதன்பின்னர் அங்கே நட்புசக்தி பகைசக்தி என்று இரு வகைகளைக் கண்டுகொள்கிறார்கள். நட்புசக்திகளுக்கு ஆதரவான தொனியில் பகைச்சக்திகளை முழுமையான எதிர்களாக சித்தரித்து வரலாறுகளை உருவாக்குகிறார்கள். உடனடியாக ஒரு பெரும் கூட்டத்தின் உனர்ச்சிபூர்வமான ஆதரவு கிடைத்துவிடுகிறது.

ஒரு இனம் இன்னொரு இனத்தை முழுக்க அழித்து அடிமைப்படுத்தி அனைத்து துயரங்களுக்கும் காரணமாக இருந்துள்ளது என்று வரலாறுகளை உருவாக்குவார்கள். இந்தப் பிரிவினையை எப்போதுமே பிறப்பு அடிப்படையில்தான் நிகழ்த்துவார்கள். மொழி போன்ற மாறுதன்மை உடைய அடையாளங்களின் அடிப்படையில் செய்ய மாட்டார்கள். டுட்சி – ஹுடு இனப்பிரிவினை இவ்வாறு உருவாக்கப்பட்டதே. இவ்வாறு ஆப்ரிக்கா முழுக்க எல்லா நாடுகளிலும் இனப்பிரிவினைகளைச் செய்திருக்கிறார்கள். இன்று ரவாண்டா முதலிய நாடுகளில் ஒழுகும் குருதி இவ்வாறு தொடங்கப்பட்டதேயாகும். இந்தப் போர்கள் இன்றுவரை ஐரோப்பிய நாடுகளுக்கு ஆயுதச்சந்தைகளை உருவாக்கி பெரும் செல்வத்தை ஈட்டித்தருகின்றன.

எங்கும் எப்போதும் கிறித்தவ அன்பு என்பது போதிக்கப்பட்டதில்லை. முழுக்கமுழுக்க வெறுப்புப் பிரசாரத்தின் அடிப்படையிலேயே அனைத்தும் நிகழ்ந்தன என்பது மேலைநாட்டிலேயே பலநூறு ஆய்வுகளால் நிரூபிக்கப்பட்ட வரலாறு. அவற்றுக்கு எதிரான மனசாட்சிக்குரல் இன்று ஐரோப்பாவில் எழ ஆரம்பித்துள்ளது. இன்னும் சில வருடங்களில் கத்தோலிக்க சபை மன்னிப்பு கோரத்தான் போகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் இழிவுபடுத்தப்பட்டு புண்படுத்தப்பட்ட ஆப்ரிக்காவை நினைவுகூர வேண்டும் என்றும் அவர்களைப்பற்றி நாம் கொண்டுள்ள தவறான பிம்பங்களுக்காக வெட்கப்படவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ஆப்ரிக்கர்களின் வரலாறு மதப்பரப்புநர்களால் திரிக்கப்பட்டது. அவர்கள் வெறும் காட்டுமிராண்டிகளாகவும் மனிதமிருகங்களாகவும் உலகின் முன் காட்டப்பட்டார்கள். ஆப்ரிக்கா கண்டுபிடிக்கப்பட்டது என்றும் அது இருண்ட கண்டம் என்றும்தான் நாம் இன்றும் நம் பாடநூல்களில் படிக்கிறோம்.

ஏராளமான பயணக்கட்டுரைகள், நாவல்கள், திரைப்படங்கள் வழியாக ஆப்ரிக்க மக்கள் பற்றிய இச்சித்திரம் கட்டமைக்கப்பட்டது. உயிருடன்

மனிதனைப்பிடித்து பானையில்போட்டு வேகவைத்து தின்னும் ஆப்ரிக்கப் பழங்குடிகளைப்பற்றிய எத்தனை சினிமாக்களை நாம் கண்டிருப்போம். அவர்கள் அப்படிப்பட்டவர்கள்தாமா, யார் அந்த சித்திரங்களை உருவாக்கினார்கள் என்று சிந்தித்திருக்கிறோமா? 'டார்ஜானை'யும் '.:.பான்ற'த்தையும் உருவாக்கியவர்களின் மனநிலையை பற்றி ஆராய்ந்திருக்கிறோமா?

'புண்படுத்தப்பட்ட கண்டம்' என்றுதான் ஆப்ரிக்காவைச் சொல்லவேண்டும். 1980 களுக்குப் பிறகு மிகமிகத் தாமதமாகவே ஆப்ரிக்கா தன்னை மெல்லமெல்ல கண்டடைய ஆரம்பித்திருக்கிறது. ஆப்ரிக்காவைப்பற்றி நம்மிடம் உள்ள அதே மனப்பிம்பம் தான் நம்மைப்பற்றி ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உருவாக்கப்பட்டுள்ளது. பாம்பையும் யானையையும் எருமையையும் பசுவையும் கும்பிடக்/கூடிய, சிந்தனைத் திறனும் இல்லாத, அசுத்தமான, பண்படாத மக்கள் என்று, தாமஸ் என்ற தனிமனிதர் இந்தியப்பண்பாட்டையும் சிந்தனைகளையும் உருவாக்கினார் என்று சொல்லும்போது அதை எப்படி ஹிலாரி கிளிண்டனோ மற்றவர்களோ நம்புகிறார்கள்? காரணம் இதுதான்.

சமீபகாலமாக இந்திய பேரிலக்கியங்கள் எளிதில் கிடைக்கின்றன. அவற்றைப்பற்றிய எளிய அறிமுகம் சராசரி வெள்ளையனுக்குக் கிடைக்கிறது. .:.ப்ரிஜோ காப்ராவின் 'தாவோ ஆ.:.ப் .:.பிசிக்ஸ்' போன்ற பிரபல நூல்கள் இதற்கு முக்கியமான காரணம். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பெருகிவரும் ஏராளமான யோகா பள்ளிகள் இன்னொரு காரணம். ஆகவே ஐரோப்பிய மதப்பரப்புநர்கள் உருவாக்கியதே இந்தியப்பண்பாடு என்று இனிமேல் சொல்ல முடியாது. ஆகவே தாமஸை கண்டெடுக்கிறார்கள். அனைத்து நூல்களும் வெளியே இருந்து வந்த பாதிப்பின் விளைவே என்றும் 'திரிக்கப்பட்ட கிறித்தவ ஞானம்தான் அவை' என்றும் சொல்ல முயல்கிறார்கள். இதற்காக பெரும் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் இந்த வேலை நடைபெறுகிறது.

இந்த கருத்தியல் ஆதிக்கத்தை மதப்பரப்புநர்கள் ஒருபோதும் விவாதங்கள் மூலம் செய்வதில்லை. தீவிரமான ஒட்டுமொத்தமான உலகுதழுவிய சலியாத நெடுங்காலப் பிரசாரம் மூலமே செய்வார்கள். 'நட்பு'சக்திகளை தங்களுடன் சேர்த்துக் கொள்வார்கள். அப்படி அவர்கள் சேர்த்துக்கொள்ளக்கூடிய எளிய இலக்கு இங்குள்ள தமிழாய்வாளர்கள்தான். தாழ்வு மனப்பான்மை காரணமாக இந்தியாவே தமிழர்களால் உருவாக்கப்பட்டது என்று இவர்கள் சொல்கிறார்கள். ஆமாம், அந்தத் தமிழர்களுக்கு தாமஸ்தான் சொல்லிக்கொடுத்தார் என்றால் ஒப்புக்கொள்வார்கள். ஆகவேதான் இந்த வியூகம் வகுக்கப்பட்டுள்ளது.

இன்றைய சூழலில் நாம் என்ன செய்ய முடியும்? பொதுவாக நாம் எதுவுமே செய்வதில்லை. நமக்குள் சண்டைபோடுவோம். செய்யவேண்டுமென்றால் உடனடியாகச் செய்யவேண்டியது ஒன்று உண்டு. இன்று கிறித்தவ மதம்பரப்பிய (இவாஞ்சலிசம்) செயல்பாடுகளுக்கு எதிராகப் பேசக்கூடிய ஏராளமான பிரபலமான இணையதளங்கள் உண்டு. ஆய்வுக்குழுக்கள் உண்டு. அவற்றுக்கு இந்த மோசடிகளைப்பற்றி எழுதலாம். ஏன், நீங்கள் எழுதிய கட்டுரையைக்கூட மொழியாக்கம் செய்யலாம். தொடர்ச்சியாக இந்த மோசடிகளை வெளிப்படுத்தியபடியே இருக்கலாம்.

செல்வக்குமார்
சென்னை
(தமிழாக்கம்)

அன்புள்ள ஜெயமோகன்,

உங்கள் கட்டுரை படிந்தேன். இது குறித்து சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன்.

1. நீங்கள் ஜெகத் கஸ்பார் என்ற பெயரை விட்டுவிட்டீர்கள். இன்றைய தாமஸ்கிறித்தவப் பிரசார திட்டத்திற்கு ஒரு முக்கியமான முனையில் அவரும் இருக்கிறார் என்று ஐயப்படவேண்டியுள்ளது. இந்த அரசுக்கு மிக நெருக்கமானவர். பெரும் பணம் அவரிடம் இருக்கிறது. கனிமொழியுடன் இணைந்து சென்னை சங்கமம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துகிறார்.
இளையராஜா இசையமைத்த 'திருவாசகம்' முழுக்கமுழுக்க இந்த 'தாமஸ்கிறித்தவ' கருத்துப்பிரசாரத்துக்காக உருவாக்கப்பட்டதே. அது தமிழ்நாட்டில் பிரசாரம் செய்யப்படவில்லை. ஆனால் அமெரிக்க மதம்பரப்பு நிறுவனங்களில் அது திரும்பத்திரும்ப சைவம் என்பது திரிக்கப்பட்ட கிறித்தவமே என்ற கூற்றுக்கு ஆதாரமாக முன்வைக்கப்படுகிறது. அதற்குரிய பாடல்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக ஆங்கில மொழிபெயர்ப்பு பைபிள் மொழியில் செய்யப்பட்டுள்ளது. காஸ்பல் இசை அதற்கு போடப்பட்டுள்ளது.
2. தமிழ்நாட்டில் எல்லா பல்கலைகளிலும் ஒரு 'கிறித்தவ ஆய்வு மையம்' (செயர்) அமைக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆசியவியல் நிறுவனத்தில் அமைக்கப்பட்டுவிட்டது. சமீபத்தில் துணைவேந்தர் சிந்தியா பாண்டியன் (பீட்டர் ஹென்றி பாண்டியனின் மனைவி) முயற்சியால் மனோன்மணியம் பல்கலையில் அது அமைந்துள்ளது. எல்லா இடங்களிலும் தோமாகிறித்தவ கருத்துக்கான ஆய்வுகள் தொடங்கப்படவுள்ளன.

ஜெ. சிவசுப்ரமணியம்
நெல்லை
(மொழியாக்கம்)

ஜெயமோகன்,

உங்கள் கட்டுரையில் தாமஸ் பிராமணர்களால் கொல்லப்பட்டது பற்றிய கிறித்தவப்பிரசாரத்தின் பொய்யை சுட்டிக் காட்டியிருந்தீர்கள். இந்தப்பொய் மிகச்சமீபமாக முக்கால் நூற்றாண்டுக்குள் புனையப்பட்டதாகும். அதாவது பிராமண எதிர்ப்பு அரசியல் தமிழ்நாட்டில் உருவான பிறகு.

இந்தப் பிரசாரத்தின் அபாயத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாகவே கிறித்தவ பிரசாரகர்கள் அவர்கள் மதம் மாற்றச்சென்ற மக்கள் மிகவும் காட்டுமிராண்டிகள் என்று காட்டுவார்கள். அவர்களிடம் யேசுவைப்பற்றிச் சொல்லப்போய் கடுமையான துயரங்களை அவர்களின் அப்போஸ்தலர்களும் புனிதர்களும் அடைந்ததாகச் சொல்வார்கள்,

அதைப்பற்றிய கொடூரமான கதைகளை புனைவார்கள். அந்தப் புனிதர்களின் படங்களை வைத்து வழிபடுவார்கள்.

ஆனால் இந்தியா வந்த கிறித்தவ மதப்பிரசாரகர்கள் முழுக்க முழுக்க மரியாதையாக நடத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எளிய மக்களால் மரியாதையாக நடத்தப்பட்டிருக்கிறார்கள். வீரமாமுனிவர், கால்டுவெல், சீகன்பால்கு, ரிங்கல் தௌபே போன்று எல்லாருமே மக்களால் மதிக்கவே பட்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்கள் இம்மக்கள் வழிபடும் கோயில்களை அவமதித்திருக்கிறார்கள். சாமிகளை உடைக்க முற்பட்டிருக்கிறார்கள். இழிவுசெய்து பேசியும் இருக்கிறார்கள். இதை அவர்களே விரிவாக பதிவும் செய்திருக்கிறார்கள். எவருமே அவற்றை வாசிக்கலாம். ‘இந்திய மக்கள் மரியாதையாக நடத்துகிறார்கள், சொன்னால் கேட்டுக்கொள்கிறார்கள், கிறித்தவ மதக்கருத்துகளை மட்டும் ஏற்றுக்கொள்வதில்லை’ என்றே இவர்கள் எழுதுகிறார்கள்.

இந்தியாவில் கிறித்தவ மதபோதகர்கள் பல்லாயிரம்பேர் வந்து பல வருடம் பணியாற்றியபோதும் கொல்லப்பட்டவர்கள் மிகமிகக் குறைவே. அதுவும் கூட உள்ளூர் அரசியலில் ஈடுபட்டமையினால்தான். அவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இந்தியாவை பெரும்பாலும் இழிவான மொழியில் வர்ணித்த சேசுசபை பாதிரிமார்களின் கடிதங்களில் எங்குமே இங்கே தாக்குதல்கள் நிகழ்ந்ததாக இல்லை.

ஆனால் சவேரியார் போன்ற புனிதர்கள் இந்தியாவில் கோவா இன்குவிசிஷன் போன்ற கொடூரமான சித்திரவதைக் காலங்களை உருவாக்கியிருக்கிறார்கள். பல்லாயிரம்பேர் வதைக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள். பல்லாயிரம்பேர் கோவாவை விட்டு ஓடினார்கள். இன்று மேற்குக் கடற்கரை முழுக்க சிதறி வாழும் கொங்கணிகள் அப்போதைய அடக்குமுறையின் சாட்சிகள். கிறித்தவ ஆவணங்களில் இருந்தே இன்குவிசிஷன் பற்றிய தகவல்கள் எடுத்து விரிவாக வெளியிடப்பட்டுள்ளன.

ஆகவேதான் புராண காலத்துக்குப் போய் வராத தாமஸை பிரார்த்தனை வேளையில் பிராமணர் பின்னாலிருந்து குத்திக் கொன்றார்கள் என்று ஒரு கொடூரமான கதையை உருவாக்குகிறார்கள். அந்தப் பிராமணர் பின்னர் ஒரு சுவிசேஷகரைக்கூட கொல்லவில்லை! பிராமண அதிகாரம் மூத்து நின்ற நாயக்கர் ஆட்சியில்கூட அப்படிச் செய்யவில்லை! என்ன ஆச்சரியம்!

இந்த தாமஸ் கொலை கட்டுக்கதை பலகோடி ரூபாய்செலவில் உலகம் முழுக்க கொண்டுசெல்லப்படும். திரைப்படம் மூலம் நமக்கே சொல்லித்தந்து நம் மக்களே நம்புவார்கள். விளைவாக இந்தியாவும் சுவிசேஷகர்களை கொடுமைப்படுத்திய காட்டுமிராண்டி நாடுதான் என்று சித்தரிக்கப்படும்.

பிராமணனைத்தானே சொல்கிறார்கள், சொல்லட்டும் என்று நினைக்கும் நம்முடைய அறிவுஜீவிகள் இதன் மூலம் தமிழகம் களங்கப்படுத்தப்படுவதை உணர்வதில்லை. வந்தாரை வரவேற்ற தமிழ்ப்பண்பாடு கேவலப்படுத்தப்படுவதை புரிந்து கொள்வதில்லை. காரணம் கண்மூடித்தனமான வெறுப்பு. இதுதான் அறியாமையின் கொடுமை என்பது!

சாரநாதன்
சென்னை
(மொழியாக்கம்)

3. 4. தாமஸ் கடிதங்கள் மீண்டும்

அன்புள்ள ஜெயமோகன்,

தமிழகத்தை ஒரு மிகப்பெரிய கிறித்தவ மதமாற்றக் களமாக்கி, மேய்ப்பரின் சாம்ராஜ்யத்தில் ஒரு அடிமை ஆடாக மாற்ற வேண்டும் என்ற நீண்டகாலத் திட்டத்துடன் கிறித்தவ மிஷனரி அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அந்த மாபெரும் திட்டத்தின் முக்கியமான ஒரு கண்ணியைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறீர்கள். மிக்க நன்றி.

இந்தத் தகவல்களை முதன்முறையாக படிக்கும் தமிழர்கள் கண்டிப்பாக பெரும் அதிர்ச்சிக்கு ஆளாவார்கள் என்பதில் ஐயமில்லை. தாங்கள் குறிப்பிட்டிருக்கும் தகவல்களை வைத்துப் பார்க்கையில், தமிழகத்தின் பெரும்பாலான கிறித்தவ அமைப்புகள் கடும் அடிப்படைவாதிகளாலும், மதமாற்ற வெறியர்களாலும் நிரம்பியுள்ளன என்பது கண்கூடு. இந்த மிகப் பெரிய கலாசார அழிப்பு, வரலாற்றுத் திரிப்பு புரட்டு பற்றி அவற்றில் ஒரு அமைப்பு கூட எந்தவித விமர்சனத்தையும், என் முணுமுணுப்பையும் கூட தெரிவிக்காமல் இருப்பது மற்றும் இதற்கு ஆதரவும், பெருமளவில் பண உதவியும் செய்வது மிகவும் கவலையளிக்கும் செய்தி. தமிழகத்தின் ஜிகாதி தீவிரவாதக் குழுக்களில் கூட இப்படி ஒரு ஒருமித்த, ஒற்றைப் படைப் போக்கு காணக் கிடைப்பதில்லை.

ஆப்ரிக்காவில், தென் அமெரிக்காவில், வட அமெரிக்க பூர்வகுடிகளிடத்தில் கிறித்தவ மிஷனரிகள் நிகழ்த்திய கொடூரங்கள், ஆக்கிரமிப்புகள் பற்றிய விவரணங்கள் தமிழ்ச்சூழலில் பரவலாக அறியப்படாதவை. ஏன், ஆசிய நாடுகளின் காலனியாதிக்க ஆக்கிரமிப்பில் மிஷனரிகளின் பெரும்பங்கு பற்றிக் கூட இங்கு விரிவான பதிவுகள் இல்லை. (சமீபத்தில் திண்ணை இதழில் அபூர்வமாக ஆசியாவின் காலனிய வரலாறும், கிறித்தவ மிஷனரிகளும் என்று ஒரு விரிவான, குறிப்பிடத்தக்க வரலாற்றுக் கட்டுரை வந்திருந்தது). இங்கு ஊடகம் மிகப் பெரிய அளவில் நிறுவன கிறித்தவத்தின் கைகளிலோ அல்லது கட்டுப்பாட்டிலோ உள்ளது. இந்தச் சூழலில் தங்களது இந்தக் கட்டுரை மிகவும் முக்கியமானதாகிறது.

அறிவுஜீவிகள் ஒரு குறிப்பிட்ட தளத்தில் சில தேர்ந்தெடுத்த விஷயங்களுக்கு மட்டுமே குரல் கொடுப்பதாக எண்ணிக்கொண்டு, மதமாற்றப் பிரசாரகர்கள் அதை வைத்து எப்படி தங்கள் அடுத்த கட்ட சதிவலையைப் பின்னுகிறார்கள் என்பது பற்றி கண்டுகொள்ளாமல் இருப்பது பற்றி நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். துரதிர்ஷ்டவசமாக இது அனைத்துத் துறைகளிலும் நிகழ்கிறது – திருவாசக இசை ஆல்பத்தை இசைஞானி இளையராஜா மூலம் வெளியிட்டு அதை ஒரு 'கிறித்தவ ஆன்மிக அனுபவமாக' ப்ரொஜெக்ட் செய்ய எண்ணியிருந்த அமைப்பின் உள்நோக்கத்தை ராஜா கண்டுகொண்டு அதைக் கடுமையாக எதிர்த்த விஷயம் பின்னர் தெரியவந்தது. கலாக்ஷேத்ரா போன்ற ஒரு பாரம்பரியம் மிக்க கலை நிறுவனத்தின் தலைவராக திட்டமிட்டு பொறுப்பேற்கும் கிறிஸ்தவர் லீலா சாம்சன், அங்கு தொடக்க காலம் தொட்டு இருந்துவரும் நடராஜர் மற்றும் இந்து தெய்வங்களின் திருவுருவை தடாலடியாக நீக்குகிறார். நிறுவனத்தின் சின்னத்தை மாற்றுகிறார். கோயில்களிலேயே பிறந்து வளர்ந்த தெய்வீக நடனக் கலையான பரதநாட்டியத்தை ஒரு

‘இந்துமத நிகழ்ச்சியில்’ மாணவர்கள் கலந்து கொண்டு ஆடக்கூடாது என்று தடை விதிக்கிறார். தாண்டவம், லாஸ்யம், சிருங்காரம் என்பவை தரும் பாவத்தை (bhavam) விட சிலுவையில் செத்துப்போவதை நடனம் மூலம் விளக்குவது தான் பெரிய ரசானுபவம் என்கிறார்... இதெல்லாம் எதற்காக? “பரத நாட்டியம் ஒரு திராவிட, தோமா கிறித்தவ நடனம்” என்று சில கலை வல்லுநர்கள் உலக அளவில் ஆய்வுரை வாசித்து அதில் சான்றாகக் காண்பிக்கத்தானோ? தங்கள் கட்டுரையைப் படித்தபின் இத்தகைய சந்தேகங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

புனித தாமஸ் இந்தியா வரவில்லை என்று போப்பாண்டவரே கூறிவிட்டதாக தங்களுக்கு எழுதிய கடிதத்தில் சிறில் அலெக்ஸ் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அது பாதிக் கதை மட்டுமே. போப்பின் கருத்துக்கு இந்தியாவில் கடும் எதிர்ப்பு எழுந்தது. பின்னர் தான் நிகழ்த்திய அதிகாரபூர்வ உரையில் ஒரு சொல்லை இடமாற்றி “இந்த ஊகத்திற்கும் பொருந்துமாறு” தனது உரையை மாற்றிவிட்டார் போப்! உண்மைக்கும், நேர்மைக்கும் இந்த மதநிறுவனங்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு இதில் புலனாகிறது. கண்டிப்பாக காஷ்மீரிலும், பாகிஸ்தானிலும் இப்போது தாமஸ் அங்கு வருகை புரிந்த மகோன்னதத்தைப் பற்றிய சரித்திரங்கள் ஆரம்பித்திருக்கும்!

“..அந்த கிறிஸ்து ஒரு மாபெரும் ஆன்ம ஞானி. எல்லா ஆன்ம ஞானிகளையும்போலவே தன்னை பலியாக்கி ஞானத்தை முன்வைத்தவர்” என்று நீங்கள் குறிப்பிடும் கிறிஸ்துவை ‘ஒரே சத்திய வழி’யை உலகெங்கும் வெறிகொண்டு பரப்ப விரும்பும் எந்த கிறிஸ்தவராலும் உணரமுடியாது. கிறிஸ்து என்ற கருத்துருவாக்கத்தை ஒரு ஆக்கிரமிப்புக்கான சாதனமாகவே ஆக்கி விட்டிருப்பவர்கள் இவர்கள் (Jesus Christ: An Artifice for Aggression என்று சீதாராம் கோயல் இதுபற்றி ஒரு நூலே எழுதியிருக்கிறார்). மாறாக “அன்பு காண் மரியா மக்தலேனா ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து” என்று பாடிய பாரதி போன்று ஒரு இந்து மெய்ஞானப் பார்வையினால் மட்டுமே கிறிஸ்துவை அந்த நோக்கில் பார்க்க முடியும். அந்த கிறிஸ்து “உலகின் பாவங்களுக்காக” சிலுவையில் ரத்தம் சிந்தியிருக்க வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை, அவரது சாவு அல்ல, வாழ்வின் செய்தியே போதும்... (மறைந்த ராமகிருஷ்ண மடத் துறவி சுவாமி ரங்கநாதானந்தரின் இது பற்றிய அழகிய மேற்கோள் புனித தோமையர் பற்றிய எனது பழைய பதிவு ஒன்றில், கடைசியில்).

அன்புடன்,
ஜடாயு

அன்புள்ள ஜெயமோகன் அவர்களுக்கு...

தங்களது தமிழர்களுக்கு சிந்திக்க சொல்லித்தந்த புனித தாமஸ் கட்டுரையைப் படித்தேன்.

தேர்தலில் தோற்கும் ஒவ்வொரு முறையும் கருணாநிதி தமிழர்களை பார்த்து சொல்லும் ஒரு வசனம்.. “தமிழர்கள் சோற்றால் அடித்த பிண்டங்கள்” என. இப்போதும் ஒட்டுமொத்த தமிழினமே அப்படித்தான் இருக்கிறதோ எனத்தோன்றுகிறது.

கிறித்துவ மிஷனரிகளின் ஒரே குறிக்கோள் மதம் மாற்றம் மட்டுமே. அதன் மூல எண்ணிக்கையைப் பெருக்கவேண்டும். அதற்காக என்னவும் செய்யத்தயங்க மாட்டார்கள். நீங்கள் உங்கள் கட்டுரையில் குறிப்பிடும் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்கும்போது திருத்துபவனுக்கு அல்லது திறனாய்வு செய்பவனுக்குத் தெரியாதா இந்தக் கட்டுரை என்ன சொல்ல வருகிறது என?

பிராமண வெறுப்பின் உச்சத்தில் தமிழகம் முதலிலும் பின்னர் மற்ற மாநிலங்களும் மிஷனரிகளின் பிடியில் வந்து ஒருவருக்கொருவர் சண்டையிட்டு ரத்தம் சிந்தும் நாளுக்காய் இவர்கள் காத்திருக்கிறார்கள். எத்தனையோ இடர்ப்பாடுகளை சந்தித்த இந்துமதம் இதனையும் செரித்து ஏப்பம் விடும்.

மதச்சார்பின்மை என்றாலே இந்து மத வெறுப்பு மட்டுமே என இருக்கும் அரசியல்வாதிகளும், ஊடகவியலாளர்களும், எழுத்தாளர்களும் இருக்கும்போது நியாயத்தை எந்த மடாதிபதியும் சொல்லமுடியாத தெளிவுடன் சொல்லி இருக்கும் உங்களுக்கு தர்மம் உண்மை துணை இருக்கட்டும்.

உங்களை கிறித்தவ மிஷனரிகளின் கைக்கூலி என நினைத்துக்கொண்டிருக்கும் கூட்டத்திற்கு பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை. இருப்பினும் நீங்கள் இந்துவாய்த்தான் இருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து அபாண்டங்கள் சொல்வதை நிறுத்தட்டும்.

அன்புடன்
ஜெயக்குமார்

3. 5. தாமஸ் : குமரிமைந்தனின் கடிதம்

தமிழர்களுக்கு சிந்திக்கக் கற்றுக் கொடுத்த தாமசு என்ற வரைவைப் படித்தேன். 80களிலேயே திரு.தெய்வநாயகம் அவர்கள் திராவிட சமயம் இதழுடன் என்னை வந்து சந்தித்தார். அவருடைய நோக்கம் மதமாற்றம்தான் என்பதைப் புரிந்துகொண்டு அவருடன் தொடர்பை நான் ஊக்கவில்லை.

அடுத்து சில ஆண்டுகளில் மதுரை இறையியல் கல்லூரியிலிருந்து ஒரு அழைப்பு வந்தது. சங்க இலக்கியம் பற்றிய ஒரு கருத்தாடல் குறித்து என்று நினைவு. அதில் நிகழ்ச்சிக் குறிப்பில் தொல்காப்பியம் தோன்றிய காலம் கி.பி.எட்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர் இருக்கக் கூடும் என்று ஓர் அடிக்குறிப்பு இருந்தது. நான் சென்றிருந்தேன். 'பரட்டை' என்ற புனைபெயர் வைத்திருந்த கிறித்துவத் 'தந்தை' தியாபலசு அப்பாவு அமர்வை நெறிப்படுத்தினார். எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் உள்ள சில சொற்கள் தொல்காப்பியத்தில் வருவதால் தொல்காப்பியம் அதற்குப் பின் தோன்றியிருக்கலாம் என்று ஒரு கருத்தை அவர் முன்வைத்தார். அதை மறுக்கவோ எந்த உணர்ச்சிகளையும் வெளிக்காட்டவோ இல்லை மற்றவர்கள். நான் அதே சொற்களை இன்றும் ஆவண எழுத்தர்கள் பயன்படுத்துகின்றனர் என்று சுட்டிக் காட்டி அவர்களது நோக்கத்தின் மீது ஐயம் கொண்டு கடுமையாகப் பேசினேன். அதுதான் அவர்கள் முதலும் முடிவுமாக என்னை அழைத்தது. அன்று என்னோடு கலந்து கொண்டவர்களில் பேரா.ஆ.சிவசுப்பிரமணியன், பேரா.அக்கினிபுத்திரன் – இப்போது கனல்மைந்தன், பேரா.க.ப.அறவாணன் – பின்னாள் துணைவேந்தர் ஆகியோரை நினைவிருக்கிறது. அனைவரும் இறையியல் கல்லூரியுடன் நீண்ட தொடர்புடையவர்களாகத் தோன்றினர். க.ப. அறவாணன் மிக உரிமையோடு வசதிகளைக் கேட்டுப் பெற்றார்.

அங்கிருக்கும்போது இளைஞரான ஒரு 'திருத்தந்தை'யுடன் பேசினேன். அவர்கள் அங்கு சீருடையில் இல்லை. யேசு தன்னை சிலுவையில் அறைந்த பின் ?தந்தையே இவர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்று அறியாமல் செய்கிறார்கள், அவர்களை மன்னித்தருளுங்கள்? என்று கூறியதாக வரும் புதிய ஏற்பாட்டை எழுதியவர் அந்த நேரத்தில் யேசுவுடன் இருந்தவரில்லை. அவரிடம் அப்போது இருந்தவர் இன்னொருவர். அவர் எழுதிய புதிய ஏற்பாட்டில் இந்தக் கூற்று இல்லை. இந்தக் கூற்று எப்படி உண்மையாக இருக்கும் என்று நான் கேட்டபோது புதிய ஏற்பாட்டை எழுதியவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கண்ணோட்டத்தைக் கொண்டவர்கள் என்று கூறி ஒப்பேற்றினர். நல்ல திறமையானவர்களைப் பொறுக்கி நன்றாகப் பயிற்றுவித்திருக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டேன்.

1996ல் நாகர்கோவிலில் அலெக்சந்திரா அச்சகச் சாலையில் இருந்து மனித நேய மன்றம் என்ற அமைப்பின் பெயரில் கொடிக்கால் சேக் அப்துல்லா என்பவர் தொலைபேசியில் பேசினார். அதன்படி 'தமிழகத்தில் ஆரியமும் வகுப்புவாதமும்' என்ற பொருள் பற்றிப் பேச அழைத்தனர். றா.சோகன்னா என்பவர் மடல் எழுதினார். பேரா.வே.தி.செல்லம் தலைமை. 24396 அன்று கிறித்துவக் கல்லூரிச் சாலையும் தொலைபேசி நிலையத்திலிருந்து

நகரவை அலுவலகம் செல்லும் சந்தும் சந்திக்கும் இடத்தில் தெற்கே கிழக்குப் பக்கம் இருக்கும் ஒரு கட்டட மாடியில் நிகழ்ச்சி நடந்தது.

‘வரலாற்றில் ஆரிய இனம் என்ற ஒன்று இடம் பெற்றிருப்பது தவறானது. வேதங்களும் தொன்மங்களும் தமிழர்களுக்குரியவை. சாதிகளை உருவாக்கியவர்களும் தமிழர்களே. கற்பனையான ஆரியர்கள் மீது பழியைப் போட்டு நாம் தப்பித்துக் கொள்ள முடியாது. சாதிச் சிக்கலுக்கு நாம்தான் தீர்வு காண வேண்டும்’ என்று நான் பேசினேன். எடுத்துக்கொண்ட தலைப்பில் நான் பேசவில்லை என்று கூச்சல் போட்டார்கள். ஆரியம் பற்றிப் பேசச் சொன்னீர்கள் பேசினேன், வகுப்புவாதம் பற்றிப் பேசச் சொன்னீர்கள் பேசினேன்; வகுப்புவாதம் என்பது மதம் குறித்ததாக இருக்கலாம், சாதி குறித்ததாக இருக்கலாம், அல்லது பொருளியல் வகுப்புகள் குறித்ததாக இருக்கலாம்; நான் சாதிகளை எடுத்துக்கொண்டு பேசினேன்; நீங்கள் நினைப்பதையே பேசவேண்டுமென்ற கட்டாயம் எனக்கில்லை என்று நான் கூறினேன். கூச்சல் குழப்பத்துடன் நிகழ்ச்சி முடிந்தது. அழைத்தவர்கள் ஒரு தேநீர் கூட எனக்குக் கொடுக்கவில்லை. இவர்களின் நோக்கமும் மதமாற்றம்தான்.

தமிழார்வலர்கள், தமிழ்த் தேசியர்கள் எனப்படுவோரின் அழைப்புகளுக்குச் சென்று பேசும்போது என் கருத்துகளை கூறத் தொடங்கியவுடனேயே சீட்டு வரும். என்னைப் பேசவிடவில்லை என்பதைக் கூட்டத்தாருக்குப் புரிய வைத்துவிட்டு இறங்குவேன்.

ஆக, இறையியல் கல்லூரியில் நடைபெற்ற அந்நிகழ்ச்சி ஒரு நீண்டகாலத் திட்டத்தின் முதல் அடி என்று தெரிகிறது.

நண்பர் செயமோகன் கட்டுரையில் என் பெயரும் இடம் பெற்றுள்ளதால் இச்செய்திகளை இங்கு குறிப்பிடுகிறேன்.

இனி கட்டுரை குறிப்பிடும் கிறித்துவத்தினுள் நுழைவோம்.

1970களில் ஐரோப்பாவிலுள்ள மிகப் பெரும்பாலான கன்னெய் வழங்கு நிலைகளும் (Petrol Bunks) அரேபியர்களின் கைகளில் இருந்தன. அங்கு வருவோருக்கு குரானின் மொழிபெயர்ப்புகளை வழங்கினர். அது 14கோடி எண்ணிக்கை என்று படித்த நினைவு. பொதுவாக குரானை மொழிபெயர்க்க வேதிய (வைதிக) முகம்மதியம் இசைவதில்லை. அகமதியா என்ற பிரிவினர் அதைச் செய்கின்றனர். அகமதியாப் பிரிவை வேதிய முகம்மதியர் ஏற்றுக்கொள்வதில்லை. அகமதியாப் பிரிவினர்களது விளக்கம் என்னவென்றால் இறைவன் முதலில் அருளிய திருச்செய்தி அவரே விடுத்த பெருவெள்ளத்தில் அழிந்துவிட்டது. அதை நினைவில் வைத்திருந்தவர்கள் கூறியதுதான் எழுதி வைக்கப்பட்டுள்ளது, அதுவும் கிரேக்க மொழியில். இறைவன் கூறிய மூலமொழியான அராமியத்தில் அதன் மூல வடிவில் அது இல்லை. எனவே ஆண்டவன் இன்னொரு முறை முகம்மது நபிக்கு திருவாக்கருளினார். எழுதப் படிக்கத் தெரியாத நபி அவர்கள் அதைச் சொல்ல பிறர் எழுதி வைத்தனர் என்ற விளக்கத்தை இந்த அகமதியா குழுவினர் கூறுகின்றனர். ஏற்கனவே ஒரு முறை கடவுள் திருவாக்கருளியதை மீண்டும் ஒருமுறை முகம்மது நபிக்கு திருவாக்கு அருளியது ஏன் என்பதற்கான விடை இது.

இதற்கு மறுமொழி என்ன? சாக்கடல் சுவடிகள் (Dead Sea Scrolls) என்ற நூல்

இதற்கு விடை தருகிறது. சோர்தான் ஆற்றின் கரையில் குன்றுகள் நிறைந்த பகுதியில் ஒரு குன்றில் ஓர் ஆள் உள் நுழையும் அளவுக்கு ஓட்டை, நிலமட்டத்திலிருந்து ஓர் ஆளளவு உயரத்தில். உள்ளே நுழைந்தால் சிறிது சிறிதாக அகன்று உள்ளே பரந்து விரிந்த ஒரு குகை உள்ளது. ஆடுமேய்க்கும் சிறுவர்கள் அதனுள் நுழைந்து கொள்கலன்கள் முதலிய பயன்பாட்டுப் பொருட்களை எடுத்து வருவார்களாம். இதைக் கண்ட தொல்லாய்வாளர்கள் உள்ளே நுழைந்து பார்த்தபோது அது ஒரு புத்த மடம் என்று கண்டார்களாம். அங்கே யேசுவின் உடலைச் சுற்றி வைத்திருந்த துணியைக் கண்டனராம். அதில் அவரது திருவுருவத் தோற்றம் பதிந்திருந்ததாம். இந்தத் துணியைப் பற்றி ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன் தாளிகைகளில் செய்திகள் வந்தன. யேசு இளமைக் காலத்தில் சில ஆண்டுகள் காணாமல் போயிருப்பார். அவர் இங்குதான் தங்கி இருந்தார் என்று தொல்லியலாளர்கள் முடிவு செய்தனர்.

அந்த மடத்துக்குள் துணிகளில் எழுதிய பழைய ஏற்பாட்டைக் கண்டெடுத்தனராம். அது அராமிய மொழியில் இருந்ததாம். அதில் இருந்தவற்றையும் இப்போதைய பழைய ஏற்பாட்டில் இருப்பவற்றையும் ஒப்புக்காட்டி நடப்பில் இருக்கும் பழைய ஏற்பாட்டில் பிழை ஏதுமில்லை என்று நிறுவ முயன்றுள்ளது அந்த நூல். ஆண்டவர் செய்ததாக முகம்மதியர்கள் முன்வைக்கும் மிகப் பெரிய ‘பிழைதிருத்தம்’ இதுதான். அதாவது பழைய ஏற்பாட்டின்படி கடவுள் மரணமில்லாதவனாக மனிதனைப் படைத்தார். ஆனால் சாத்தன் அறிவுக் கனியைக் காட்டி மனிதனை உண்ணவைத்து அவனை மரணம் அடைபவனாக ஆக்கிவிட்டான். இந்த வகையில் கடவுள் பேயன் எனக் கிறித்துவத்தில் பொருள்படும் சாத்தனிடம் தோற்றுப் போனார் என்றாகிறதல்லவா? இதை மறுத்துத்தான் கடவுள் ‘பிழை திருத்தி’ முகம்மது நபியிடம் திருவாக்கு அருளுகிறார், தான் மனிதனை மரணம் அடைபவனாகவே படைத்ததாக, அதாவது தான் பேயனிடம் தோற்கவில்லை என்று.

ஆக, எந்த புத்தம் தமிழர்களிடம் வளர்ச்சியுறாத, செயமோகன் குறிப்புப்படி பண்டிதர் தேவகலா கூறியுள்ள தமிழர்களின் ஆன்மவியலை அழித்த, கடவுளை உணரக்கூடிய ஞானம் இல்லாத, புத்தர்களிடம் இருந்துதான் தன் கொள்கைகளை யேசு வடித்துக்கொண்டார் என்று சாக்கடல் சுவடிகள் கூறுகின்றன.

மேற்கின் வரலாற்றிலும் புனைவு இலக்கியங்களிலும் கிழக்கின் ‘ஆன்மவியல்’ ஆற்றியுள்ள பங்கு பற்றிய மேற்கத்திய பதிவுகள் முகாமையானவை. எகிப்திலிருந்து துரத்தப்பட்ட மோசே ‘கிழக்கே’ சென்றுதான் தன் ‘ஞானத்தை’ வளர்த்துத் தம் ‘மக்களை’ மீட்க வந்தார் என்று பழைய ஏற்பாடு கூறுகிறது. யேசு கிழக்கில் உள்ள புத்த மடத்திலிருந்துதான் தன்னுடைய ஞானத்தைப் பெற்றார் என்று சாக்கடல் சுவடிகள் குறிக்கின்றன.

19 ஆம் நூற்றாண்டில் மேரி கரொல்லி என்ற இத்தாலியப் பெண் எழுத்தாளர் எழுதி ஆங்கிலத்தில் Vendetta (பழிக்குப்பழி) என்ற பெயரில் பெயர்க்கப்பட்ட புதினத்தின் கதைத் தலைவன் தனக்கு இரண்டகம் செய்த மனைவியையும் நண்பனையும் பழி வாங்குவதற்காகக் ‘கிழக்கி’ல் சென்று மந்திரம், தந்திரம், மருத்துவம் கற்று வந்தான் என்று கூறப்பட்டுள்ளது. அதே போல் அலெக்சாண்டர் டூமா என்ற புகழ் பெற்ற பிரெஞ்சு புதின

ஆசிரியர் எழுதிய Count – de mont cristo (மாண்டு கிரித்தோவின் மன்னன்) புதினத்தின் கதைத் தலைவனும் தனக்குத் தீங்கிழைத்தவர்களைப் பழிவாங்குவதற்காக ‘கிழக்கே’ தான் செல்கிறான் மந்திரம், தந்திரம், மருத்துவம் கற்க. ஆக, மோசேயும் யேசுவும் இந்தியர்களிடமிருந்து கற்ற மந்திரம், தந்திரம் போன்றவற்றை வைத்து இறும்பூதுகள் (அற்புதங்கள்) செய்து காட்டித்தான் இன்று கடவுள் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இராமலிங்க அடிகளார் வெண்கலத்தைத் தங்கமாக்கிக் காட்டி அதனைக் கிணற்றில் வீசிவிட்டு, அது வெறும் மாயை என்றாராம். அதாவது அது வெறும் செப்பிடு வித்தை அதாவது குறளி வித்தை. தெருவில் செய்து காட்டி நாம் வீசும் காசை வைத்து வயிறு வளர்க்கிறானே அதேதான். வள்ளலார் செய்ததும் அதுதான், இரமண ‘மகரிஷி’ செய்ததும் அதுதான். புட்டபர்த்தி சாயிபாபா செய்வது அதுகூட இல்லை, வெறும் கண்கட்டி வித்தை, அதாவது ‘கைவேலை’, அதாவது தந்திரம்.

நமக்குத் தெரிய மோசேயோ யேசுவோ அரிட்டாட்டில் போன்று மெய்யியல் (தத்துவம்) எதையும் கூறியதாகத் தெரியவில்லை. மோசே இறைவனின் ஆணைகளைச் சொல்லி மிரட்டுவார், கேட்காதவர் ஐயத்துக்குரிய வகையில் மாண்டு போவார். மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை சட்ட வடிவில் வழங்கியுள்ளார். தொன்ம வடிவில் ஒரு வரலாற்றை எழுதியுள்ளனர். எகிப்து அரண்மனை நூலகத்தில் தான் படித்த நூல்களிலிருந்து அறிந்துகொண்டவற்றை வைத்து அவர் எழுதினார் என்று எரிக் வான் டெனிக்கன் (Eric Von Denicken) கூறுவார். யேசு நிறைய கதை கூறியுள்ளார். அவற்றில் அவரது கோட்பாடுகள் மறைந்துள்ளன. இப்படிப்பட்ட ஒரு சூழலில் இருந்து வந்த தோமா, பெரும் கல்வியோ, மெய்யியல் சிந்தனையோ இல்லாத தோமா தன் வெற்று டப்பாவிலிருந்து நீர் ஊற்றி தமிழர்களை ஆன்மவியலில் குளிப்பாட்டித் தூய்மை செய்தார் என்று சொல்வதற்கு நிறைய துணிவு வேண்டும், பாராட்டலாம். நெஞ்சமூத்தம், கொழுப்பு என்ற சொற்களை நாகரிகம் கருதித் தவிர்க்கிறோம்.

இடைச் செருகலாக ஒரு செய்தி; என் தந்தை இளமையில் நண்பர்களோடு மருத்துவாழ் மலைக்குச் சென்றிருந்தாராம். அங்கும் நாம் மேலே கூறியது போல மலையில் ஓர் ஓட்டை இருந்ததாம். அவர் அதனுள் ஏறி நுழைந்தாராம். உள்ளே செல்லச் செல்ல ஓட்டை அகன்றதாம். அதற்குள் வெளியே இருந்த அவரது நண்பர்கள் அவரது காலைப் பிடித்து இழுத்து வெளியேற்றி விட்டனராம். நான் சிறுவனாக இருந்தபோது அவர் எனக்குச் சொன்ன செய்தி இது. இப்போதும் மருத்துவாழ் மலையில் குகைகளுக்குள் சித்தர்கள் சாவில்லாத, பசி இல்லாத வாழ்வைத் தரும் பச்சிலைகளை உண்டு வாழ்கின்றனர் என்று சிலருக்கு நம்பிக்கை உள்ளதே. இன்றிருக்கும் வசதிகளைப் பயன்படுத்தி அத்தகைய ஓட்டைகளுக்குள் மின்விளக்கையும் புகைப்படக் கருவியையும் செலுத்தி உள்ளே என்னதான் இருக்கிறது என்று பார்த்தால் என்ன?

சமணத்தையும் கொஞ்சம் பார்த்துவிடுவோம். அம்மணமாக ஊர் நடுவே சுற்றித் திரிந்த அநாகரிகர்களும் தங்கள் மயிரைத் தாங்களே பிடுங்கிக்கொண்ட மனநோயாளிகளுமான சமணர்களும்தாம் தமிழர்களுக்கு நாகரிகம் சொல்லித் தந்தார்கள் என்று ஐராவதம் மகாதேவன்களும் க.ப.அறவாணன், தொ.பரமசிவம் உட்பட இந்தியப்

பல்கலைக் கழகக் கட்டமைப்பு மட்டுமல்ல இந்தியப் பனியா அரசும் நிறுவியே தீர்வது என்று வரிந்துகட்டிக்கொண்டு களத்திலுள்ளனர். அதற்காக அவர்கள் எதையும் செய்யத் துணிந்து நிற்கின்றனர். அந்த ஒரே நோக்கத்துடன் இந்திய வரலாற்றை ஆரியர் நுழைவு என்ற புனைகதைக்கேற்ப, கி.மு.2500க்கு அப்பாலும் தமிழக வரலாற்றை மகாவீரர் காலத்துக்குப் பின்னால் வருமாறு கி.மு.400க்கு அப்பாலும் போகவிடாமல் தடுத்துப் பார்க்கின்றனர். வெளிநாட்டு, உள்நாட்டுக் கழுகுகளுக்கும் வல்லூறுகளுக்கும் ஓநாய்களுக்கும் இன்று தமிழகமே ஒரே இலக்கு. இந்த உண்மையைப் புரிந்துகொண்டு வீணான தப்பெண்ணங்களையும் கவைக்குதவாத கற்பனைகளையும் உண்மை எனும் எரியும் நெருப்பில் வீசிச் சுட்டெரித்துவிட்டு அந்தக் கழுகுகளையும் வல்லூறுகளையும் ஓநாய்களையும் அடித்துத் துரத்தித் தமிழகத்தை மீட்க உண்மை நாட்டமும் தமிழகத்தின் மீதும் தமிழ் மீதும் தமிழக மக்கள் மீதும் அன்பும் கொண்ட தோழர்களை அறைகூவி அழைக்க வேண்டிய காலம் இது.

இப்பொழுது நாம் நண்பர் செயமோகனிடம் கொஞ்சம் பேச வேண்டும். இந்திய ஆன்மவியலையும் மெய்யியல்களையும் பற்றி அவர் மிக அழுத்தமாகப் பேசுகிறார். மெய்யியல்கள் எனப்படுபவை, அதை முன்வைத்தவர்கள் காலத்துக் குமுக நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக அச்சூழலுக்கு ஏற்றவாறு இயற்கை, குமுகம், மனித சிந்தனை, கடவுள் ஆகியவை பற்றிய ஒரு விளக்கமாகும். எடுத்துக்காட்டாக பத்தி இயக்கக் காலத்தில் சிவன் தன்னை அங்கிருந்து அழைத்தான் இங்கிருந்து அழைத்தான் என்று கோயில்களை நிறுவி அங்கெல்லாம் எந்த சாதியினராக இருந்தாலும் பூசாரி ஆக்கி சிவப் பார்ப்பனர்களை உருவாக்கி மக்களையும் ஒருங்கிணைத்து புத்த, சமண சமயங்களால் பார்ப்பனியத்துக்கு வந்த அறைகூவலை எதிர்கொண்டாயிற்று. இறைவன் மெய்யியலுக்கு அடங்காதவன், அவனைத் தஞ்சமடைவதே அடியவனுக்கு உய்தி என்பது போல் அரசனது அதிகாரத்தைக் கேள்வி கேட்க முடியாது அவனுக்கு அடிபணிவதே நல்வாழ்வுக்கு வழி என்று ஆட்சியாளர்களின் துணையையும் பெற்றாயிற்று. இப்போது இந்த எழுச்சியில் மங்கிக் கிடந்த பழைய பார்ப்பனர்களை மீட்பிக்க வேண்டுமே. வந்தார் சங்கரர். ஞானம்தான் உய்திக்கு வழி, வேள்விப் பார்ப்பனர்கள்தான் உண்மையில் உயர்ந்தவர்கள் என்று சுமார்த்தப் பார்ப்பானை சிவப் பார்ப்பானுக்கும் மாலியப் பார்ப்பானுக்கும் மேலே தூக்கி வைத்துவிட்டுப் போய்விட்டார்.

எல்லோரும் ஒரே வகையான உயிராதன்களால் ஆனவர்கள். ஆனால் மனிதர்களிடையில் உள்ள வேறுபாடுகள் வெறும் மாயை, உருவெளித்தோற்றம். அதனால் சாதி, வருண வேறுபாடுகளைப் பற்றிக் கவலைகொள்ள வேண்டியதில்லை என்று சமத்துவமும் கூறி அதே சங்கரர் சாதியத்தையும் நிலைநிறுத்தியாயிற்று. இதுதானய்யா மெய்யியலில் உள்ள அரசியல். சங்கரரின் இந்த நுட்பத்தை அறியாமல் அல்லது அறிந்தும் அறியாதது போல் நடித்து சங்கரர் சாதிகளின் சமத்துவம் பேசினார் என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

சான்றுக்கு இன்னொன்று:

கோயில் நிலங்களில் பயிரிட்டு வந்த உழுகுடிகளான பள்ளர்களும் பறையர்களும் வாரம் அளப்பதை நிறுத்தி நிலங்களைத் தங்கள்

சொந்தமாக்கி இருந்தனர், 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தது போல். மண்ணாங்கட்டி, பரட்டை, பிச்சை என்று பெயர் வைக்க உரிமையானவர்களைத் தலைவன் தலைவியாக்கி தலைவனுக்கு அவ்வூர் தெய்வத்தின் பெயரையும் தலைவிக்கு அம்மனின் பெயரையும் வைத்து பள்ளுப் பாடல்களைப் பாடி கோயிலுக்கு வாரம் அளக்கும் சிறப்பை அழகுறப் பாடியும் பார்த்தனர். காரியம் ஒன்றும் நடக்கவில்லை. அவர்களை வழிக்குக் கொண்டுவர இராமானுசர் அவர்களுக்குத் திருக்குலத்தார் என்று பெயர் வைத்தார் (காந்தி வைத்த அரிசனங்கள் என்பதும் முஹம்மதியத்தில் லெப்பை என்பதும் இதே பொருள் கொண்டவைதாம் என்பதைக் கவனிக்க). அவர்களுக்கு சமஸ்கிருதமும் வேதங்களும் கற்பித்தார். பூணூல் கட்டி கோயில் கருவறைக்குள் நுழைய வைத்துப் பூசகர்களாக்கினார். நிலங்கள் மீண்டும் கோயில்களின் கட்டுப்பாட்டில் வந்தன.

இராமானுசரின் கோட்பாட்டுக்கு பூனைக் கோட்பாடு என்று பெயர். பூனை தன் குட்டியைத் தூக்கிச் சென்று பாதுகாப்பது போல் இறைவன் உண்மையான அடியவரை அணைத்துக் கொள்வான் என்பது. எவனொருவன் இறைவன் மீது அன்பு செலுத்துகிறானோ அவனை இறைவன் சாதி வேறுபாடின்றித் தன்னுடன் சேர்த்துக்கொள்வான் என்பது அவரது நெறி.

கோயில்களுக்கு வந்த சிக்கல் தீர்ந்தது. அடுத்து வேதாந்த தேசிகர் வந்தார். அவர் ஒரு குரங்குக் கோட்பாட்டை முன்வைத்தார். குரங்குக் குட்டி தாயை இறுகப் பற்றிக்கொள்வது போல் அடியவர் இறைவனைப் பற்றிக்கொள்ள வேண்டும். எந்த சாதியைச் சேர்ந்த அடியவரையும் பார்ப்பனனாகப் பிறப்பித்தே இறைவன் தன்னிடம் சேர்த்துக்கொள்வார் என்றார். இவர் வடித்த கோட்பாட்டின்படி பழைய பார்ப்பனர் வடகலை. புதிய பார்ப்பனர்கள் தென்கலை.

இன்னும் ஒன்று, இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்தது:

சிவன் கோயில் சொத்தை ஏமாற்றி உண்பவரது குலமே அழிந்துபோகும் என்று மாலியர்கள் ஒரு பரப்பல் நிகழ்த்தினர். அத்துடன் தன்மான இயக்கத்தின் கடவுள் மீதான தாக்குதல் வேறு. இதை எதிர்கொள்ள ஊரெல்லாம் சைவ சபைகளை வலுவாக்கினர் சிவனிய வேளாளர்கள். புலால் உண்ணாதவர் அனைவருமே சிவனியர்தாம் என்று எல்லாச் சாதியினரையும் இழுத்துப்போட்டுக் கொண்டனர். அப்புறம் தன்மான இயக்கம் தளர்வுற்றது. ஒதுக்கீடு போன்ற சூழ்நிலைகளால் பார்ப்பனர்களுடன் வேளாளர்களின் உறவு நெருக்கமானது. அதாவது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அச்சுறுத்திய நெருக்கடி விலகிப்போய்விட்டது. இப்போது திடீரென்று 1980களில் மரபுவழியில் புலால் உண்ணாதவரே உண்மையான சிவனியர் என்று அந்தத் தலைமுறையில் புலால் உண்ணாதவர்களாயிருந்து உறுப்பினர்களானவர்களை வெளியேற்றினர். வெளியேறியவர்கள் சைவ சித்தாந்த சபை என்று தொடங்கினர். ஆனால் அது நிலைக்கவில்லை. தேவை நிறைவேறிவிட்டதால் சைவ சபையும் முன்போல் ஊக்கமாகச் செயற்படவில்லை.

இனி தமிழர்கள் குமரிக் கண்டத்தில் வடித்த மெய்யியலைப் பார்ப்போம்.

அதுதான் மூல புத்தக் கோட்பாடு. புத்தம் என்றால் புதியது என்று பொருள்படும். அறிவு ஒவ்வொன்றும் புதியதுதானே. அதனால் அறிவு புத்தம் என்றும் புத்தி என்றும் கூறப்படும். புத்தனை அறிவன் என்கிறோம்.

மூலப் புத்த மெய்யியல் மார்க்சிய இயங்கியலை ஒத்தது.

1. இயற்கை, மனிதன் என்ற அனைத்தும் அழியத் தக்கது – மாறத்தக்கது அதனால் மாயை எனப்படும். அது பொய்த் தோற்றமல்ல, மாற்றம். மாற்றம் என்பது ஒன்று அழிந்து இன்னொன்று தோன்றுவது. இடைவிடாத மாற்றம் எப்போதும் நிகழ்கிறது.
2. ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு. அதை வினைப்பயன் என்கிறோம். முன்பு செய்த செயல்களுக்கான விளைவுகளைப் பின்னால் நுகர வேண்டும். எனவே சரியான செயல்களை, அதாவது தீய விளைவுகளைத் தராத, நல்ல விளைவுகளையே தரும் செயல்களைச் செய்ய வேண்டும்.
3. நாம் விரும்பும் விளைவுகளை எய்த வேண்டுமென்றால் சரி எது, தவறு எது என்று புரிந்துகொண்டு அதைச் செய்ய வேண்டும். அவ்வாறு புரிந்து கொள்ளுவதற்கான கோட்பாடு அறிதல் கோட்பாடாகும். அறிதல் என்பது ஐம்பூதங்கள், ஐம்பொறிகள், ஐம்புலன்கள் வழியாக அறியப்பட்டு மனதில் பகுத்தாயப்பட்டு உய்த்தறிவையும் பயன்படுத்தி உண்மைகளை அடைவது; உண்மைகளைப் பிழை இல்லாமல் அடைய விருப்பு, வெறுப்பு, ஐயம், திரிபு ஆகியவற்றை அகற்ற வேண்டும் என்பனவாகும்.
4. ஆன்மா என்ற ஒன்று கிடையாது.

கௌதம புத்தருக்கும் இந்த மெய்யியலுக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆசையை ஒழிக்க வேண்டும் என்ற பெயரில் திருவோட்டை எடுத்து சங்க உறுப்பினர்கள் கையில் கொடுத்து இரத்தலே ஒரு மதிப்பு மிக்க செயல்பாடு என்ற இழிந்த கருத்தியலை உருவாக்கியவர் கௌதம புத்தர் என்பது எம் கருத்து. பாரதியார் கூட அவ்வாறே கருதியதாகத் தெரிகிறது.

புத்தத்தின் வினை – விளைவுக் கோட்பாடு தனி மனிதர்களுக்கு எப்போதும் பொருந்தும் என்று கூற முடியாது. ஒருவர் செய்வதன் விளைவு இன்னொருவருக்கும் சென்று சேரக்கூடும். ஏற்றத்தாழ்வுள்ள ஒரு குமுகத்தில் கீழ் நிலையிலுள்ளோரது உழைப்பின் பயன் மேல்நிலையில் உள்ளோரை அடையும். மேல் நிலையில் உள்ளோரின் கொடுஞ்செயல்களின் விளைவுகள் கீழ் நிலையில் உள்ளோரை அடையும். அதே வேளையில் ஒட்டுமொத்தமான நற்செயல்கள் அல்லது தவறுகளுக்கான விளைவுகள் வரும் தலைமுறைகளைச் சென்றடையும், இன்றைய புவி வெப்பமாதல் போல். இங்கு ஆன்மா தேவையில்லை. வரும் தலைமுறைகள் இப்போதைய மனிதர்களின் மறுபிறவிதானே! அவர்கள் வானத்திலிருந்து குதித்துவிடவில்லையே! முன் தலைமுறையினரின் உயிரின், உடலின் தொடர்ச்சிதானே!

புத்தத்தைத் தொடர்ந்து வந்த கபிலனின் சாங்கிய மெய்யியல் ஒரு பேராதனையும் (பரமான்மா) எண்ணற்ற ஆதன்களையும் படைத்தது. ஆதன்கள் ஐம்பூதங்களால் கவரப்பட்டு உயிர்களாகின்றன. அவற்றின்

வினைகளாகிய செயல்களால் ஆதன்கள் கறைபடுகின்றன. அக்கறையைப் போக்கிக்கொள்ள அவை மீண்டும் மீண்டும் பிறக்கின்றன. நன்மை செய்தாலும் தீமைசெய்தாலும் மறுபிறவி தவிர்க்க முடியாது. தவிர்க்க வேண்டுமாயின் உணர்வு, உணர்ச்சியற்ற மனிதப் பிறவியாகப் பிறக்க வேண்டும். தப்பளையன், பித்துக்குளி என்றெல்லாம் கூறுகிறோமே அவர்கள்தாம் கறைகள் நீங்கிப் பேராதனை அடையத்தக்க மிக உயர்ந்த பிறவிகள். இந்த பித்தர் நிலையைப் பயிற்சியாலும் எய்த முடியும். அதற்கு யோகம் என்று பெயர். ஏதோவொன்றின் மீது, கடவுள் என்று வைத்துக் கொள்ளுங்களேன், கவனத்தை ஒருமுகப்படுத்தினால் செயலற்ற நிலையை நீங்கள் எய்த முடியும். அதன் மூலம் நீங்கள் கடவுள் நிலைக்கு உயர்ந்துவிடலாம் என்று கூறுகிறது சாங்கிய மெய்யியல். ‘இந்து’ சமயத்தின் சாபக்கேடான வருண அமைப்புக்கு வழிகோலியவன் இந்தக் கபிலனே. நான்கு நிறங்கள் உள்ளவர்களாக மக்களின் வாழ்நிலைக்கேற்ப அமைந்த உடல் நிறங்களைக் கொண்டு மனிதர்களை வகுத்தவன் அவனே.

அவனைத் தொடர்ந்தவன் பதஞ்சலி. யோக சூத்திரம் என்ற நூலை யாத்து பல்வேறு வகையான யோகப் பயிற்சிகளையும் தன்னிலை மறப்பு அல்லது மெய்ம்மறைப்புகளையும் வகுத்தளித்தான். மெய்ம்மறப்புகளுக்கு எளிய வழி ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு உங்கள் மூச்சை மட்டும் கவனமாக எண்ணுங்கள் போதும். உண்மையில் மெய்ம்மறப்புப் பயிற்சி கடினமானது. இதற்கு மூல ஆசிரியர்கள் கபிலனோ பதஞ்சலியோ அல்லர். உண்மையில் மூலக் குடிகளின் பூசாரிகளும் குழுத் தலைவர்களுமான சாமன்களே இவர்கள். இவர்கள் மெய்ம்மறப்பை எய்த கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டனர். நம் தொன்மங்களில் கூறப்படும் முனிவர்கள் தவம் இயற்றுவதற்கு மேற்கொண்டவையாகக் கூறப்படும் வழிமுறைகள் இந்தச் சாமன்கள் கடைப்பிடித்தவையே. உண்மையில் இந்தச் சாமன்கள்தாம் அந்த முனிவர்கள். உயிர் பிரிவது போன்ற கடும்பயிற்சிக்குப் பின் ஒரு சாமனுக்குரிய தகுதிகளைப் பெற்று மீள்வது மறுபிறப்பு போன்றது என்று மாந்தநூலார் கூறுகின்றனர். பார்ப்பனர்களை இருபிறப்பாளர் என்று கூறுவது இந்த சாமன்களின் எய்தல்களை அடையாமலே அவர்கள் செய்த ஓர் ஏமாற்றாகும்.

இந்தப் பயிற்சிகளின் விளைவாக அவர்கள் பிற மனிதர்களின் உள்மனதில் தங்கள் உள்மனதை ஊடுருவி அவர்களது சிந்தனைகளையும் செயல்களையும் தம் கட்டுக்குள் கொண்டுவர முடியும்.

இப்னாட்டிசம் எனப்படும் மெய்ம்மறப்பியத்தைப் பயன்படுத்தி அவர்களது நோய்களைக் குணப்படுத்தவும் முடியும். நோய்களையோ வேறு தீங்குகளையோ உண்டாக்கவும் முடியும். உண்மையான மருத்துவமும் அவர்கள் கற்றிருந்தார்கள். நாம் கூறும் சித்தர்கள் போன்றவர்கள் இவர்கள் என்று கூறலாம். அவர்களைக் கண்டு மக்கள் அஞ்சி கட்டுப்பட்டு இருந்தார்கள். இவர்களைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொண்டால் நம் தொன்மங்களில் புதைந்து கிடக்கும் எண்ணற்ற வரலாற்றுச் சுவடுகளைத் தோண்டி எடுக்க முடியும்.

கழக(சங்க)ப் பாடல் ஒன்றில் ‘பாணர், துடியர், பறையர், கடம்பர் அன்றி வேறு குடிகள் இல்லை’ என்று வருகிறது. குமரிக்கண்ட மக்கள் இன்றைய தமிழகத்தில் குடியேறியபோது இங்கு இருந்த நான்கு வகை மக்களின் தலைவர்களாகிய சாமன் பூசாரிகளே இவர்கள். சாமன்களின் ஓர்

அடையாளம் அவர்களிடம் ஓர் இசைக் கருவி இருப்பதுதான். தாங்கள் மெய்ம்மறக்கவும் எதிராளியை மெய்ம்மறக்கச் செய்யவும் இந்த இசைக்கருவிகள் பயன்படுகின்றன. இன்றும் குறி சொல்வோரும் குறளிவித்தை செய்வோரும் உடுக்கு, மேளம் போன்றவற்றைப் பயன்படுத்துவதைக் காணலாம். இங்கு யாழ், துடி (உடுக்கை), பறை முதலியவற்றை இனம்காண முடிகிறது. கடம்பர்களின் இசைக் கருவி யாதென்று தெரியவில்லை.

இப்படிப்பட்டவர்களிடம் இருந்து மெய்ம்மறைப்புக் கலையைக் கற்றுக்கொண்ட மோசேயும் யேசுவும் மேற்குலகில் கடவுள்களாகப் பிறப்பெடுத்துள்ளார்கள் என்பது உறுதி. சாமன்களைப் பற்றிய செய்திகளுக்கு Masks of Gods vol.I, Primitive mythology by Joseph Campbell என்ற நூலைப் படிக்கலாம்.

இவ்வாறு ஒரு முழுமையான ஒட்டுண்ணி மெய்யியலை உருவாக்கிய கபிலனைப் பின்பற்றி, மனம் ஒருநிலைப்படுவதற்கு,

சிவனை வைத்துக் கொண்டால் அது சிவனியம்

மாலை வைத்துக் கொண்டால் அது மாலியம்

சத்தியை வைத்துக் கொண்டால் அது சாத்தம்

குமரனை வைத்துக்கொண்டால் அது குமாரம்

பிள்ளையாரை வைத்துக்கொண்டால் அது கணபதியம்

பேய்களை வைத்துக் கொண்டால் அது பைசாசம்

தனி மனிதர்களைச் சார்ந்ததாக புத்தத்தை விளக்கியபோது ஆன்மாவும் மறுபிறப்பும் இல்லாமல் விளக்க முடியாமல் போனதால் புத்தர் 500க்கு மேல் பிறவிகள் எடுத்து உழல வேண்டியதாயிற்று.

இனி, மத நம்பிக்கைகளைப் பரப்புவதைப் பற்றிப் பார்ப்போம். மதங்களின் உருவாக்கம் ஏதோவொரு மக்கள் குழுவின் நலனுக்காகத்தான் நடைபெறுகிறது. சமணத்தின் பெயரில் அயல் வாணிகர்கள் தமிழகத்தைச் சுரண்டியதை எதிர்த்து தமிழ்நாட்டு வாணிகர்களின் பின்னணியில் எழுந்தது சிவனிய எழுச்சி. இது முற்போக்கானது. குத்தகை உழவர்களை மயக்கி ஏமாற்றி அவர்களின் உழைப்பைச் சுரண்டுவதற்காக உருவானது இராமானுசரின் இயக்கம். இது பிற்போக்குத் தன்மையானது. ஒடுக்கப்பட்ட மக்களை கோயிலினுள் கொண்டு சென்றது பெயரளவில் முற்போக்கானது. இந்த இரு நேர்வுகளிலும் கூட சில காலம் சென்று அதிலுள்ள முற்போக்குக் கூறுகளை அகற்றியதைப் பார்த்தோம். அதைப் போலத்தான் புத்தம், சமணம் போன்றவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

இந்தியாவில் தோன்றிய புத்தம் இன்று பொருளியல் வல்லரசு சப்பான், அதற்கு அடுத்த வல்லரசாகிய சீனம் ஆகியவற்றின் ஒற்றமைப்பாக இந்தியாவிலுள்ள சாதி முரண்பாடுகளைப் பயன்படுத்திக்கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களை அந்த அரசுகள் தம் பால் இழுக்கப் பயன்பட்டு வருகிறது. சிங்களரின் புத்தமும்தான்.

உரோமைப் பேரரசின் மேலாளுமையை எதிர்த்துத் தன் பொதுவாழ்வைத் தொடங்கிய யேசு உள்நாட்டு முரண்பாடுகளுள் சிக்கி தன்

தேசத்தாராலேயே தண்டனை அடைந்தார். அங்கிருந்து வெளியேறி உரோமில் நிலைபெற்று விட்ட அந்தச் சமயம் நான்கு நூற்றாண்டுகளுக்குப் பின் உரோமைப் பேரரசால் அரச மதமாக ஏற்கப்பட்டது. அந்த அரசு யேசுவைக் கொன்றவர்கள் என்று குற்றம் சாட்டி யூதர்கள் மேல் அவர் பெயரில் அமைந்த சமயத்தின் பெயரால் படையெடுத்து எந்த யூத குல மக்களுக்காக யேசு தன் இன்னுயிரை இழந்தாரோ அதே யூத குடிகளைப் பதினாறு நூற்றாண்டுகள் நாடற்றவர்களாக உலகெல்லாம் பரந்து எந்த மக்கள் குழுவும் பட்டறியாத இன்னல்களைத் துய்க்க வைத்தது. இவை எல்லாம் சமயம் என்பதன் நூற்றுக்கு நூறு அரசியல் தன்மையைக் காட்டுகிறது.

மதம் என்ற சொல் மதித்தல் என்ற பொருளில் மெய்யியலை – கோட்பாட்டைக் குறிக்கும். சமயம் என்பது ஒரு அரசியல் கட்டமைப்பு ஆகும். அதற்கும் கடவுளுக்கும் எந்த உறவும் கிடையாது. மனிதர்களையும் சமயங்களையும் படைத்த கடவுள் ஒரேயொருவர்தான் என்றால் மதங்கள் கடவுளின் படைப்புகள் என்றால் மதங்களுக்குள் இந்த மெய்யியல் வேறுபாடுகள் ஏன்?

உலகில் இன்று வரை அரசியலின் பெயரால் நடைபெற்ற போர்களில் பாய்ந்த குருதியை விட சமயப் போர்களாலும் மதக் கலவரங்களாலும் பாய்ந்தோடிய குருதி பல மடங்கு அல்லவா? அது ஏன்? கடவுளா காரணம்? மதங்கள் கடவுளின் படைப்பாக இருந்திருந்தால் இது போன்ற குருதி வெள்ளம் ஓடியிருக்காதே! எனவே சமயப் பரப்பல் பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குற்றமற்ற மெய்யியல் கோட்பாடு என்றோ நம்பிக்கைகளின் வெறும் தொகுப்பு என்றோ மெத்தனமாக இருந்துவிடக் கூடாது. அயல் மதங்களின் நுழைவு எப்போதுமே அதன் பின்னால் அயல் ஆட்சியைக் கொண்டுவரும் என்பது பன்னூறு ஆண்டுகால இந்தியப் பட்டறிவு. இது பற்றிய தெளிவு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. தொல்காப்பியம் பல்வேறு காலகட்டங்களில் உள்ள நிலைமைகளை ஒன்றன் மீது ஒன்றாகக் கொண்டுள்ள ஒரு படைப்பு. பொருளதிகாரத்தில் வருணன், இந்திரன், திருமால், முருகன், கொற்றவை ஆகிய ஐந்து தெய்வங்களைக் கொண்ட(ஐந்து தெய்வங்கள் ‘மேவிய’) ஐந்து நிலப்பகுதிகளை அவ்வவற்றுக்குரிய தலைவர்கள் ஆண்டு வந்த, பூசாரியராட்சி (Theocracy) காலத்துக்கு உரியதாக இனம்காணத்தக்க ஒரு நூற்பா உள்ளது.

மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய

முல்லை முதலாச் சொல்லிய முறையாற்

பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்

இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே... தொல்.பொருள், 3

இதற்குப் பொழிப்புரையாக, தேவரது பூசை முதலாயினவும் மக்களும் முறைமை தப்பியவழி தப்பாது அறம் நிறுத்தல் காரணமாகவும் பொருளாக்குதல் காரணமாகவும் பிரிவு உளதாம் என்றவாறு:

– (இளம்பூரணம், கழக வெளியீடு எண் 629, 1967 பக். 3132)

இதில் கூறப்படுவது அரசு சார்ந்தோர் உள்நாட்டு மக்களிடை ‘சமய

ஒழுங்கை’ நிலைநாட்டவும் வரி தண்டுவதற்காகவும் தம் இருப்பிடத்திலிருந்து நீங்கும் பிரிவுகள் அதாவது செலவுகள் (பயணங்கள்) பற்றி.

அத்தகைய நிலப்பகுதிகளில் எங்காவது அயல் வழிபாடு நுழைவதாகத் தெரிந்தால் ஆட்சித் தலைவனும் அவனைச் சார்ந்தவர்களும் உடனடியாகச் சென்று அதனைச் சீர்செய்து வந்தனர் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

எண்ணத் தொலையாத பழங்காலத்தில் நம் முன்னோர்கள் தங்கள் எல்லைப் பாதுகாப்பு பற்றியும் வழிபடும் தெய்வம் குறித்த அரசியல் பற்றியும் எவ்வளவு தெளிவாகவும் விழிப்பாகவும் இருந்திருக்கிறார்கள் என்று அறியும்போது ஒரு புறம் பெருமையாகவும் இன்று தமிழகத்து மீனவர்களில் 400 பேருக்கு மேல் இலங்கை அரசு சுட்டு வீழ்த்தியும் இந்திய அரசு அதைக் கண்டிக்காமல் அதற்குத் துணை போவதுடன் தன் பங்குக்குத் தானும் சிலரைச் சுட்டுக் கொன்றுள்ளதைக் கண்டு இன்னொரு புறம் வெட்கமாகவும் இருக்கிறது. அதே போல் கிறித்துவத் துறவி சவேரியார் தமிழகக் கடற்கரையில் மதமாற்றம் செய்தபோது அவ்வாறு மதம் மாறியவர்கள் ‘போர்த்துக்கீசிய மன்னனுடைய குடிமக்களாக மாறி, அவனுடைய ஆணைக்கு உட்பட வேண்டுமென்றும் இவர்கள் அப்படி உட்படுவார்களாயின் முஸ்லீம் கொடுமைகளினின்றும் இவர்களைத் தாம் பாதுகாத்து வருவதாயும் கூறி பாதிரிகள் இவர்களுக்கு ஆசை காட்டினார்கள்? எவ்வளவு இழிவு? இங்கு யாரைக் குற்றம் சொல்வது? கடற்கரை மக்களைக் கொடுமைப்படுத்திய முகம்மதியர்களையா? அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறேன் என மதமாற்ற வந்த அயலவனையா? அல்லது இந்த நாட்டை, அதன் எல்லையை, அங்குள்ள மக்களைப் பாதுகாக்கத் துப்பில்லாத நம் ஆட்சியாளர்களையா? அல்லது அந்த ஆட்சியாளரை அண்டி வாழ்ந்து தத்தம் குழுக்களுக்கு மக்களை முற்றிலும் அடிமையாக வைத்திருப்பதற்காகத் தங்கள் ஆட்சியாளர்களைத் தங்கள் விருப்பம்போல் மாற்றிக்கொள்ளத் தயங்காத தாய் மதத்து உயர்குடியினரையா? இந்த நிகழ்வில் வெளிப்படுவது மெய்யியல்களின் மோதலா? மத நம்பிக்கைகளின் போட்டியா? இது பச்சையான அரசியல் இல்லையா?

மாலிக் காபூருடன் வீரபாண்டியன் போரிட்ட களத்தில் அவன் படையில் இருந்த 20,000 முகமதியப் படை வீரர்கள் நடுவில் எதிரிகள் பக்கம் ஓடி வீரபாண்டியனைத் தோற்கடித்தது நம்பிக்கைகளின் மோதலா அல்லது தாய்மண்ணுக்கு எதிராகச் செய்த நம்பிக்கை இரண்டக அரசியலா? அதே போல் விசயநகரப் பேரரசு இராமராயன் தலைமையில் ஐந்து சுல்தான்களுக்கு எதிராகப் போரிட்டபோது அவன் படைத்தலைவர்களாயிருந்த இரு முகம்மதியர்கள் தங்கள் கீழ்ப் பணியாற்றிய எண்பதினாயிரம் படை வீரர்களுடன் கட்சி மாறியது கடவுள் நம்பிக்கையா’ மத நம்பிக்கையா, அரசியலா, என்னவென்று அழைப்பது?

அந்த ஐந்து சுல்தான்களில் இரண்டு பேர் பார்ப்பனர்களாக இருந்து மதம் மாறியோர் என்பது உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் ஆண்ட பாதுஷாக்களும் சுல்தான்களும் தங்கள் அரசுகளை ஏற்றுக்கொள்ளக் கேட்டு வெவ்வேறு காலங்களில் ஆப்கானிஸ்தான்,

ஈரான், அரேபிய அல்லது துருக்கியின் முகம்மதிய மன்னர்களின் வாயில்களில் பரிசுப் பொருட்களுடன் விடுத்த தூதுவர்கள் காத்துக்கிடந்தது அரசியல் இல்லையா? இந்த இழிவைப் பொறுத்துக்கொள்ள முடியாத அக்பர் வழிபாட்டுக்காக அயல்நாடு செல்வதைத் தடுக்கும் நோக்குடன் மெக்கா செல்வதற்குத் தடை விதித்ததுடன் உள்நாட்டுச் சமயம் ஒன்று வேண்டும் என்று தீன் இலாகி என்று ஒரு சமயத்தை வடித்ததும் அரசியல்தானே!

சப்பானியர்கள் அயலவரை எப்போதுமே ஐயக் கண்கொண்டு பார்ப்பவர்கள். அங்கும் முதலில் போர்ச்சுக்கீசியர்களே மதமாற்றத்துக்காகச் சென்றனர். 1545ல் சவேரியார் இரண்டு துணைவர் (சேசு சபையினர்)களுடன் சென்று 1000 பேரை மதமாற்றியுள்ளார். ஒரு தலைமுறையில் சபையினரின் எண்ணிக்கை 70 ஆகவும் மதம் மாறியவர்களின் எண்ணிக்கை 1% இலக்கமாகவும் உயர்ந்துள்ளது. மதம் மாறியவர்கள் சப்பானியப் பேரரசுக்கு எதிராக போப்புக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். நாகசாகியின் உள்ளூர் தலைவனைக் கொண்டு புத்த குருக்களை விரட்டி கோயில்களை அழித்துள்ளனர். 1597இல் இடையோசி எனும் சப்பானிய ஆளுனன் 20 நாட்கள் எச்சரிக்கை கொடுத்து அனைத்து விடையூழிய (மிசனரி) நடவடிக்கைகளையும் தடைசெய்துள்ளான்.

அடுத்து பதவிக்கு வந்த இயெயேசு 1614இல் கிறித்துவர்களுக்கு நாட்டை விட்டு வெளியேறும்படி அல்லது தாய் மதத்துக்கு திரும்பும் படி ஆணையிட்டான். 1616ல் அவன் இறந்ததும் கிறித்துவர்கள் தாக்கப்பட்டனர், சிமாபிரா என்ற தீவக்குறைக்கு(தீபகற்பம்)த் தப்பிச் சென்று கோட்டை கட்டி வாழ்ந்த 37,000 பேரில் 105 பேர் தவிர அனைவரையும் 1638ல் அவனது பேரன் இயெமெட்சு கொன்றான்.

இதில் எதுவுமே கடவுள் அல்லது மெய்யியல் குறித்த நிகழ்வு இல்லை. முழுக்க முழுக்க அரசியலே. முதலில் மதம் பரப்பலுக்காகச் செல்வோம். அடுத்து வாணிகம் செய்வோம். மூன்றாவதாக நாட்டைப் பிடிப்போம் என்ற ஒரு போர்த்துக்கீசிய மாலுமியின் கூற்றை வில் டூரான்று பதிவு செய்துள்ளார்.

தமிழகத்திலும் கிறித்துவர்கள் தொடக்க காலங்களில் தாய்மதக் கோயில்களை இடித்து, கொள்ளையடித்து வெறியாடியுள்ளனர். அரசர்களும் அவர்களை அடக்கியுள்ளனர். ஆனால் பார்ப்பனர்களுக்கும் அரசர்களுக்கும் நடைபெற்ற இடையறாத மேலாளுமைப் போட்டியால் அரசர்கள் பிற சமயத்தாரை ஊக்கியே வந்துள்ளனர். பிற சமயங்களால் ஆதாயம் இருக்கும், அதிகாரம் கிடைக்கும் என்றிருந்தால் பார்ப்பனர்களும் மதம் மாறியிருக்கின்றனர். நாகூர் தர்காவில் பூசகர்களாக இருப்பவர்கள் முகம்மதியத்துக்கு மாறிய ஐயங்கார்களின் வழி வந்தவர்கள் என்று மீனாட்சிபுரம் மதம் மாற்றக் காலத்தில் ஒரு முகம்மதிய நண்பர் எனக்குக் கூறினார். அவர்கள் தங்கள் பழைய தொடர்புகளை இன்றும் தொடர்கின்றனர் என்றார். தம் சொத்துகளைக் காத்துக் கொள்வதற்காக சிவனிய வெள்ளாளர்கள் பெருமளவில் முகமதியத்துக்கு மாறியுள்ளனர். தங்கள் பக்கத்துக்கு வலிமை சேர்ப்பதற்காகவே தாழ்த்தப்பட்ட மக்களைப் பின்னர் இவர்கள் மதம் மாற்றியுள்ளனர். அங்கும் அவர்கள் இந்நிலக்கிழார்களுக்கு அடிமைகளாகவே உள்ளனர்.

இடங்கைச் சாதியினராக ஒடுக்கப்பட்ட கைவினைஞர்களும் வாணிகர்களும் நெசவாளர்களும் பெருமளவில் முகம்மதியத்துக்கு மாறியுள்ளனர்.

குமுக ஒடுக்குமுறை மட்டும் மதமாற்றத்தை ஊக்கவில்லை. வறுமையும்தான். குமுக ஒடுக்கல் என்பதே குமுகச் செல்வத்தில் அம்மக்களுக்குரிய பங்கை மறுப்பதை நோக்கமாகக் கொண்டதுதானே? நம் சமயக் கட்டமைப்பும் நடைமுறைகளும் மேலடுக்கினரின் தேவைகளுக்குப் போக எஞ்சியவற்றை அழிப்பதாகவே உள்ளன. ஆகமக் கோயில்களில் அழிமதியாகும், மக்களுக்கு இன்றியமையாத உணவுப் பொருட்களின் பட்டியலைப் பார்த்தாலே தெரியும். அத்துடன் ஆகமக் கோயில்கள் பார்ப்பனர்களுக்கும் தேவரடியார்க்கும் கருவறை, அரசர், அதிகாரிகள், உள்ளூர் ஆட்சியாளர் ஆகியோருக்கு மண்டபங்கள், வாணிகர்களுக்கு உள்சுற்று, உழவர், உழைப்பாளர்களுக்கு வெளிச்சுற்று, அவர்கள் கருவறையைப் பார்க்க முடியாதபடி (நந்தி, கருடன் போன்ற) கடவுளின் ஊர்தி, கொடிமரம், பலிபீடம் ஆகியவை மறைக்கும். இந்த மக்களின் உழைப்பில் கிடைக்கும் பொருட்களைத்தான் கோயில்களில் அழிக்கிறார்கள்.

இன்று ஊர்ப்புறங்களில் ஆண்டுக்கு இரண்டு முறை ஆளுக்கு ஆயிரம் உரூபாய்கள் வரை கட்டாயமாக வரி தண்டி கோயில் கொடை நடத்துகிறோம் என்ற பெயரில் கேளிக்கை நடத்துகிறார்கள் ஊரிலுள்ள இளைஞர்கள். வறிய மக்கள் எதிர்த்துப் பேசினால் ஊரை விட்டு விலக்கி வைத்துவிடுவதாக மிரட்டுகிறார்கள். இவ்வாறு ஓரம் கட்டப்பட்ட மக்கள் மதமாற்றக்காரர்களின் எதிர்ப்பில்லா இலக்காகிவிடுகிறார்கள்.

நம் மக்களிடம் திரளும் பணம் மூலதனமாக மாறி நம் நாட்டின் பொருளியல் வளர்ச்சியை ஊக்குவிப்பது அரசால் எண்ணற்ற வழிகளில் திட்டமிட்டுத் தடுக்கப்படுகிறது. பனியாக்கள் ஆகிய மார்வாரிகளும் குசராத்திகளும் பார்சிகளும் மட்டுமே தொழில்களில் முதலிட முடிகிறது. ஆட்சியாளர்கள் இந்த 60 ஆண்டுக் காலத்தில் அள்ளிக் குவித்த ஊழல் கள்ளப்பணம், நேரடி அயல் முதலீடாக, இங்கு பாய்கிறது. உள்நாட்டு மக்கள் நேர்மையாக ஈட்டிய பணம் வரம்புமீறிய வருமான வரியின் மிரட்டுதலுக்கு அஞ்சி கறுப்புப் பணம் என்னும் பொல்லாப் பெயர் பெற்றுப் பதுங்கிக் கிடக்கிறது. பரவலான வளர்ச்சி தடுக்கப்பட்டுள்ளதால் மக்களிடம் தேங்கிக் கிடக்கும் இந்தப் பணம் தங்களுக்குப் போட்டியாக, தங்களைக் கேள்வி கேட்கும் அரசியலாக வளர்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே மதப் பூசல்கள் உருவாக்கப்படுகின்றன. அயல் பணத்துடன் கிறித்துவ, முகம்மதிய சமயம் செயல்படுகிறதென்றால் பனியாக்களின் பணம் இரா.சே.ச. – தேசிய நற்பணி மன்றம் – ஆர்.எஸ்.எஸ்.ஐயும் பிற இந்துவெறி அமைப்புகளையும் வளர்த்துவிட்டுள்ளது. இதனால் பெருமளவு மக்களின் பணம் கோயில் கட்டுவதிலும் கொடை விழாக்கள் நடத்துவதிலும் போட்டி போட்டு வீணாக்கப்படுகிறது.

இவ்வாறு குமுகப் பணம் வீணாகிப் போகும் சூழலில் வறுமையுற்றுவிட்ட மக்களின் முன் பணத்துடன் நுழையும் கிறித்துவம் முன்வைக்கும் திரு. தெய்வநாயகம் உருவாக்கிய வரலாற்றை அம்மக்கள் கேள்வி முறையின்றி ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இதை எதிர்கொள்ள வேண்டுமாயின் இரு வழிகளில் நாம் செயற்பட வேண்டும். தாய் மதத்தை, அதன் அடிப்படையை மாற்றியமைக்க வேண்டும். கோயிலில் அனைத்து மக்களுக்கும் சமமான மதிப்பு கிடைக்குமாறு அதன் வடிவமைப்பை மாற்ற வேண்டும். அதாவது இன்றைய கோயில்களின் வடிவமைப்பையே மாற்றி அமைக்க வேண்டும். வருணமுறையை மனிதநேயமற்ற ஒன்று என்று ஒதுக்க வேண்டும்.

19ஆம் நூற்றாண்டில் கிறித்துவத்திலிருந்து தாய் மதத்தைக் காப்பதற்காக இந்து சீர்திருத்த அமைப்புகள் வலுவாகச் செயற்பட்டன. அதைக் கண்டு நடுங்கிப் போயிருந்தனர் சாதிவெறியினர். அந்த நேரத்தில் அமெரிக்காவிலிருந்து வந்தனர் ஆல்காட்டும் பிளாவட்கியும் இறையியல் கழகத்துடன் சென்னைக்கு, வருணங்கள் மனிதனின் உயர்ந்த குமுக அமைப்பு என்ற முழக்கத்துடன். சாதிவெறியர்கள் அங்கு சென்று மொய்த்துக் கொண்டனர். சீர்திருத்தர்கள் களத்தில் இல்லாமல் போயினர். இதற்கு அடிப்படை அமைப்பதற்கென்றே அனைத்துச் சமய மாநாட்டைக் கூட்டி அரசன் சேதுபதியை அமெரிக்கா அழைத்தது. அவர் விவேகானந்தரை விடுத்துவைத்தார்.

இறையியல் கழகத்தில் நடந்த மறைமுக அமெரிக்க அரசியலைக் கண்டுதான் அங்கு உறுப்பினராக இருந்து வெளியேறிய ஆங்கிலரான இயூம் இந்திய தேசியப் பேரவைக் கட்சியை உருவாக்கினார் என்றொரு ஐயம் எமக்கு உண்டு. அதன் பின்னர் ஆங்கிலரான அன்னி பெசன்று இறையியல் கழகத்தைக் கைப்பற்றிக்கொண்டு வீராப்பாக தன்னாட்சி கோட்பாட்டை வகுத்து முனைப்பிய(தீவிரவாத)த் தலைவர்களைக் களத்திலிருந்து அகற்றியது போன்றனவெல்லாம் நடைபெற்றது. இன்றும் அந்த இறையியல் கழகம் சாதி வெறியர்களின் புகலிடமாக விளங்குகிறது.

எனவே தாய் மதத்தைக் காக்க வேண்டும், அயல் மதங்களின் பெயரால் ஊடுருவும் அயல் விசைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நினைப்பவர்கள் தாய்மதச் சீர்திருத்தத்தில் முனைப்பாக ஈடுபட்டு வெற்றி ஈட்டியாக வேண்டும். நம்மிடையில் இன்று வேர்கொண்டிருக்கும் அயல் மதங்கள் நம் குமுகக் கோட்பாடுகளின் போதாமைகளால், அவற்றால் நமக்கு ஏற்பட்ட இயலாமைகளால் நம் குமுகத்தின் உடலில் ஏற்பட்ட சீழ் வடியும் புண்கள் என்ற உணர்வுடனும் அது இன்னொரு முறை நிகழ்ந்துவிடாமல் விழிப்புடனும் நாம் செயற்பட வேண்டும்.

அயல் நாட்டுப் பணம், அது உதவியாக வந்தாலும் சரி, முதலீடாக வந்தாலும் சரி நிறுத்தப்பட வேண்டும். உள்நாட்டு மக்கள் அனைவரும் தங்களிடமுள்ள பணம், அறிவு, உழைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி தங்கள் பொருளியல் வலிமையை, நாட்டின் பொருளியலை, வளத்தை வளர்க்க கட்டுப்பாடில்லாத உரிமையைப் பெற பாடுபடவேண்டும். அவற்றின் பலன்கள் எக்காரணத்தாலும் நம் நாட்டை விட்டு வெளியேறிவிடாமல் நாம் கவனத்துடன் இருக்க வேண்டும். இந்தக் குறிக்கோள்களுக்கு எதிர்நிற்கும் தடைகளை எதிர்த்துப் போராட வேண்டும். இணக்கம் என்பதின்றிப் போரிட வேண்டும். அவ்வாறு தற்சார்பு கொண்டால்தான், நாட்டின் பொதுவான செல்வ நிலையும் மக்களின் தனிப்பட்ட வாழ்நிலையும் மேம்பட்டால்தான் தெய்வநாயகம் போன்றோரின் ஏமாற்றுகளுக்கு இடம் கொடுக்காத, வெளிநாட்டுப் பணத்துக்கு மயங்காத மனநிலையை நம் மக்கள் பெறுவார்கள்.

எந்தச் சமயம் உண்மையான மனித நேயத்தை, மக்களுக்குள்ள பொருளியல் சம உரிமையைப் போற்றிப் பாதுகாக்கிறதோ அதுதான் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும். ஒரு குப்பைத் தொட்டியில் வீசப்பட்ட ஒரு குழந்தையைக் கண்டு, எடுத்து வளர்க்க விரும்பும் எந்த 'இந்து'வும் அது எந்த சாதியோ என்று குழம்பி வாளா இருக்கிறான். ஒரு கிறித்துவச் சாமியார் கண்டால் அதை எடுத்து கோயிலின் பராமரிப்பில் கிறித்துவக் குழந்தையாக வளர்க்கிறார். இது உண்மையில் பாளையங்கோட்டையில் நடந்த நிகழ்ச்சி. முகம்மதியர்கள் தங்கள் வசதிக்கேற்ப ஒன்றோ பலவோ ஆளற்ற, ஏழ்மையிலுள்ள குழந்தைகளைத் தத்தெடுத்து ஒன்றன்பின் ஒன்றாக ஆளாளுக்கும் வளர்த்துத் தங்கள் பக்கத்துக்கு வலுவைச் சேர்த்துக்கொள்கிறார்கள். இவர்கள் அனைவரும் இன்றோ நேற்றோ நம் தாய் மதத்திலிருந்து சென்றவர்கள் தாமே! அவர்களால் முடிவது ஏன் நம்மால் முடியாமல் போயிற்று? இதனால்தான் இன்று இந்து சமயம் அழிவை நோக்கி நிற்கும் உலகச் சமயங்களில் ஒன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இது நம் தாய்மதத் தலைவர்களுக்கு, தலைவர்கள் கூட தங்கள் சொந்த ஆதாயங்களுக்காக மக்களை ஏமாற்றுவது தொடர்ந்து வரும் நிகழ்வு, எனவே நேர்மையும் நாணயமும் நாட்டுப்பற்றும் கொண்ட அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஓர் எச்சரிக்கை!

குமரிமைந்தன்

3. 6. தோமாகிறித்தவம் தமிழியம் : ஞானியின் கடிதமும் பதிலும்

நண்பர் ஜெயமோகனுக்கு,

ஜெயமோகன் தன் இணையதளத்தில் ஒரு வாசகரின் கேள்விக்கு பதில்எழுதும்போது 'திராவிட சமயம்' ஆசிரியர் தெய்வநாயகம் அவர்களோடு என்னையும் தொடர்புபடுத்தி சிலவற்றை எழுதுகிறார். ஒருவரைப் பற்றி எழுதும் விமர்சனத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் விமர்சனம் என்பது மரியாதைக் குறைவாகவோ அவதூறு கிளப்புவதாகவோ இருப்பது எந்த வகையிலும் எனக்கு உடன்பாடில்லை. வழக்கமாக என்னைப் பற்றி நண்பர் எழுதும் விமர்சனத்திற்கு நான் பதில் எழுதுவதில்லை. ஆனால் அவதூறுக்கு நான் பதில் எழுதாமல் இருக்க முடியாது. அதுவும் தன் சவாலுக்கு எவரும் பதில் தரலாம் என்கிறார்.

ஜெயமோகன். சவால் விடுவது ஒரு சண்டியருக்கு பொருத்தமாக இருக்கலாம். எப்பொழுதும் மரியாதையோடு என்னால் மதிக்கப்படுகிற நண்பர் ஜெயமோகன் இப்படிச் சவால் விடுவதை என்னால் ஏற்கமுடியவில்லை. விமர்சனம் எழுதட்டும், அது இலக்கியத்தையோ, மெய்யியல் முதலியவற்றையோ அது வளர்ப்பதாக இருக்கட்டும். பிறரைத் தாக்கும் நோக்கத்தோடு, அவதூறு படுத்தும் நோக்கத்தோடு அதனால் தன்னை விளம்பரப்படுத்தும் நோக்கத்தோடு ஒருவர் எழுதுவது இலக்கியம் முதலியவற்றை வளர்ப்பதற்கு பதிலாக மனித உறவை, மனிதர்களை நாசப்படுத்துவதாகவே இருக்க முடியும். ஒருவகையில் இதுவும் மனித உரிமை மீறல். ஒரு எழுத்தாளர் இதைச் செய்யக் கூடாது.

ஆசிரியர் என என்னை மதித்து ஜெயமோகன் பல சமயங்களில் எழுதியிருக்கிறார். சில நூல்களை ஆற்றூர் ரவிவர்மா, சுந்தர ராமசாமி ஆகியவர்களோடு எனக்கும் சேர்த்து காணிக்கையாக்கி இருக்கிறார். இது குறித்தெல்லாம் நான் என்றும் பெருமைப்பட்டுக் கொள்ளவில்லை. எண்பதுகளின் தொடக்கத்தில் அவரும், நானும்

நெருக்கமாகப் பழகி இருக்கிறோம். அவருடைய சில படைப்புகளை 'நிகழ்' இதழில் நான் வெளியிட்டு இருக்கின்றேன். இதற்காகவும் நான் அவரிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை. அவரது படைப்புகளும், சிந்தனைகளும் தமிழ்ச் சூழலில் பரவலாக வேண்டும் என்பதைத்தவிர எனக்கு வேறு நோக்கம் எதுவுமில்லை. அவரது 'விஷ்ணுபுரம்' 'பின்தொடரும் நிழலின் குரல்' ஆகிய நாவல்கள் பற்றியும் சிறப்பாகவே எழுதி இருக்கிறேன். அவரை இந்துத்துவவாதி என்று நண்பர்கள் இகழ்ந்து உரைத்தபோது நான் அதை மறுத்து இருக்கிறேன். 'பின்தொடரும் நிழலின் குரலில்' மார்க்சியர் பற்றி அவர் தந்த விமர்சனங்களை நான் ஏற்றிருக்கிறேன்.

இறுதியாக 'கொற்றவை' நாவல் குறித்து தமிழ்நேயம் இரண்டு இதழ்களில் நண்பர்களின் கட்டுரைகளை விரிவாக வெளியிட்டு இருக்கிறேன். சிலப்பதிகாரத்தின் மீது எனக்கு பெரிதும் மரியாதை உண்டு. இளங்கோவின் குரலோடு இன்னும் பலரது குரலும் சிலம்பு கதையை பல முனைகளில் விரித்துச் செல்வதை நான் வரவேற்கிறேன். இனி தமிழ்ப் பேராசிரியர் என்று தம்மைக் கருதிக் கொள்வோர், நண்பர் ஜெயமோகனின் கொற்றவையைப் படிக்காமல் இருக்க முடியாது என்றும் எழுதினேன்.

இவற்றையெல்லாம் இங்கு குறிப்பிடுவதற்கு காரணம் ஜெயமோகன் என்னைப் பற்றி விமர்சனம் செய்யக்கூடாது என்பது அன்று. அவரது வளர்ச்சியை நான் பெரிதும் வரவேற்கிறேன். சுந்தர ராமசாமி முதலிய பெரியவர்களை அவர் தொடக்க காலத்திலிருந்தே தொடர்ந்து கடந்து வளர்ந்து வருகிறார் என்பதும் என் மதிப்பீடு. இவற்றையெல்லாம் சொல்லி என்னைத் தாக்க வேண்டாம் என்று அவரிடம் நான் முறையிட மாட்டேன். என்னைப் பற்றியல்லாமல் வேறு எவரைப் பற்றியும் அவர்களை இழிவுபடுத்தும் முறையில் (அ) அவதூறு கிளப்பும் முறையில் எழுத வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதுதான் என் நோக்கம்.

இப்படி அவதூறு கிளப்புவதில் ஜெயமோகனின் தன்முனைப்பு மட்டுமல்ல. ஆணவமும் வெளிப்படுகிறது. தன்முனைப்பைக் கூட நான் மதிக்கிறேன். ஒருவரின் ஆணவம் அருவருப்பாகத்தான் இருக்கிறது.

அடுத்து இனி, அவரது சில கருத்துகளுக்கு சுருக்கமாகப் பதில் தரவேண்டும். அறிஞர். தெய்வநாயகம் என் மரியாதைக்குரிய நண்பர். இந்துத்துவத்தோடு பல ஆண்டுகளாக அவர் போராடுகிறார். ஜெயேந்திரரையும் அவரைச் சார்ந்த பிராமணரையும் அவர் கடுமையாகச் சாடுகிறார். விவாதத்திற்கு அழைக்கிறார். அவரது வருணாசிரம எதிர்ப்பு எனக்கு பெரும்அளவு உடன்பாடு.

அவரது போராட்டத்தோடு உடன் வரவேண்டியவர்களில் பெரும்பான்மையோர் வரவில்லை. இதுகுறித்து எனக்கு வருத்தம் உண்டு. முதன்மையாக அவரது போராட்ட உணர்வை நான் பெரிதும் மதிப்பதோடு இதற்காக அவரோடு ஒத்துழைக்கவே விரும்புகிறேன். அவரது நடைமுறைகள் சிலவற்றோடு எனக்கு உடன்பாடு இல்லை. இதுபற்றி அவரும் அறிவார். இப்படி வாதிற்கு அழைத்து பிராமணீயத்தை அழிக்கமுடியாது. பிராமணீயத்தோடு, பிராமணர் அல்லாதோரும் ஒத்துச் செயல்படுகிறார்கள். வெறும் கருத்தியல் தளத்தில் மட்டும் அதை எதிர்த்துப் போராடுவது போதாது. இப்படியும் அவரோடு பேசுகிறேன்.

அறிஞர். தெய்வநாயகம் தோமாவழிக் கிறித்துவம் பற்றி மிகுந்த ஈடுபாட்டோடு பேசுகிறார். வள்ளுவத்தினுள்ளும் சைவ, வைணவத்தினுள்ளும் இன்னும் இந்திய தத்துவம் சிலவற்றினுள்ளும் தோமாவழிக் கிறித்துவம் பற்றி மிகுந்த நம்பிக்கையோடு எழுதுகிறார். இக்கருத்து எனக்கு உடன்பாடு இல்லை.

தாமஸ் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கலாம். இதற்கான வரலாற்று ஆதாரங்கள் நம்பத் தகுந்த முறையில் இல்லை. அன்றியும் திருக்குறள் முதலியவற்றின் எழுச்சிக்கு தாமஸ் முனிவர்தான் ஒரே காரணம் என்பதும் போதுமானதென தோன்றவில்லை. அதேசமயம் ஐரோப்பிய கிறித்துவத்தின் ஆதிக்க உணர்வு குறித்து தெய்வநாயகம் கூர்மையாகச் சாடுகிறார். தோமாவழிக் கிறித்துவத்தில் ஆதிக்கத்தை அவர் பார்க்கவில்லை. அண்மைக்காலத்தில் இயேசுவின் கொள்கைகளுக்குள் தனியுடைமை எதிர்ப்பை தெய்வநாயகம் முன்நிறுத்துகிறார்.

மதம் என்பதையும், சமயம் என்பதையும் கூட இப்பொழுது வேறுபடுத்திப் பேசுகிறார். மேலும் ஒன்று, பெரியார், அம்பேத்கர் ஆகியவர்களின் நாத்திகத்தை வரவேற்கிறார். சமணம், பௌத்தம் ஆகியவற்றின் நாத்திக கருத்தியலோடு தனக்குள்ள உடன்பாட்டையும் வேறு சில கூறுகளில்

அவர்களோடு தனக்குள்ள மாறுபாட்டையும் எடுத்துரைக்கிறார். தொடக்ககால கிறித்துவத்தின் பொதுமைக் கூறுகளை பாராட்டுகிறார். கத்தோலிக்கத் திருச்சபையைச் சாடுகிறார். தான் இந்துவாக பிறந்ததையும், பின்னர் கிறித்துவத்துக்கு மாறியதையும் பின்னர் சில அனுபவங்களோடு திருச்சபையை விட்டு வெளியேறியதையும், தற்பொழுது மதச்சார்பு என தனக்கு எதுவும் இல்லை என்று பேசுகிறார். இவற்றையெல்லாம் தந்திரங்கள் என்று என்னால் கருதமுடியவில்லை.

எனினும் இயேசு தேவகுமாரன் சிலுவையில் தன்னை பலியிட்டுக் கொண்டார். மீண்டும் உயிர்த்தெழுந்தார். மனித பாவங்களுக்கு கழுவாய் தேடினார். இப்படி இயேசுவின் வாழ்வை முழுமையாக அவர் நம்புகிறார். அதுமட்டுமல்ல இயேசு சார்ந்த இந்த பிம்பத்தை அவர் வள்ளுவத்தினுள்ளும் சைவம், வைணவம் ஆகிய சமயங்களின் உள்ளும் காண்கிறார். இதுபற்றி மிக அழுத்தமாக பேசுகிறார். சிவஞானபோதம் இதற்கு ஆதாரம் என்கிறார். இவ்வகை கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. இயேசு மனித சமூகத்தின் மேன்மைக்காக உயிர்த்தியாகம் செய்தார் என்பது வரலாறு இல்லை என்றே வைத்துக் கொண்டாலும் இயேசுவைப் பற்றிய இவ்வகையான பிம்பம் எனக்கு உடன்பாடு.

இயேசு மட்டுமல்லாமல் வரலாற்றுக் காலம் முழுவதும் மனித சமூகத்தின் மேன்மைக்காகத் தியாகம் செய்து கொண்டவர்களை இவ்வகை பிம்பத்தினுள் காணமுடியும்.

இந்திய ஞானமரபு குறித்து ஜெயமோகன் விரிவாக எழுதுகிறார். இந்திய ஞானமரபை இந்து ஞான மரபு என்று அவர் சுருக்கிப் பார்க்க மாட்டார் என்றே நான் நம்புகிறேன். இந்திய ஞானமரபுக்குள் மகாவீரர், புத்தர் என்று பலரைத்தொகுக்க முடியும். சாங்கிய முதலிய தரிசனங்களையும் உள்ளடக்க முடியும். சார்வாகமும் இந்திய மரபில் ஆற்றல்மிக்க ஒரு கூறு. வேதம் சார்ந்த வைதீக மரபினுள்ளும் வைதீகத்தை சாடும் கருத்தியலுக்கும் இடமுண்டு. இவ்வகைப் போக்கு முதலியவற்றை மறுத்து இந்திய ஞான மரபு என்பதை வேதங்களுக்குள் மட்டும் வைத்துக் காண்பதற்கு அறவே இடமில்லை. இவ்வகையான இந்திய ஞானமரபினுள் திராவிடர்க்கு தமிழர்களுக்கு ஒரு இடத்தை எவரும் மறுக்க வேண்டியதும் இல்லை. பார்ப்பனீயம் என்பதனுள்ளும் இடதுசாரிப் பார்ப்பனீயம் என்றும் பேசுவதற்கு இடமுண்டு. இந்துமதம் என்பதும் ஒன்றை மற்றது மறுப்பதான எத்தனையோ கூறுகளோடுதான் இயங்குகிறது. இப்படி எல்லாம் கருதும் என்னை இந்திய ஞானமரபுக்கு எதிரில் நிறுத்தி வைத்துப்பார்க்க வேண்டியதில்லை.

இனி தமிழ் மெய்யியல் பற்றி சிலவற்றை இங்கு நான் சொல்ல வேண்டும். தமிழ் மெய்யியலின் பல்லாயிரமாண்டு தொன்மை குறித்துப் பேசுகிறேன். குமரிக்கண்டம் இருந்ததற்கான ஆதாரங்கள் குறித்து நம்பிக்கையோடு இதுவரை நான் பேசியது இல்லை. குமரிக்கண்டம் என்பது ஒரு ஐதீகம் என்று கொற்றவையிலும் ஜெயமோகன் எழுதுகிறார். தமிழரின் தொன்மையை இரண்டாயிரமாண்டு கால வரலாற்றோடு சுருக்கிப் பார்க்க முடியாது. ஹரப்பா நாகரிகத்தோடு தமிழ் மரபை, தமிழர் வரலாற்றை இணைத்துப் பார்க்க முடியும். இந்திய நாகரிகம் என்று சொல்லப்படுவதன் மேலடுக்கு ஆரியம் என்றே வைத்துக் கொண்டாலும் அடித்தளம் முழுவதும் திராவிட நாகரிகம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஹரப்பா நாகரிகம் மேற்கிலுள்ள நாகரிகங்களோடு உறவு கொண்டிருந்தது என்பதிலும் எனக்கு உடன்பாடு உண்டு. (இயேசுநாதரைக் கூட திராவிடர் என்றே தெய்வநாயகம் குறிப்பிடுவதை நான் மறுக்கவில்லை. மற்றபடி அவர் தரும் ஆதாரங்கள் பற்றி நான் நம்பிக்கையோடு பேசமுடியாது. காரணம் அவை பற்றிய படிப்பறிவு எனக்குக் குறைவு. நம்பிக்கை மட்டுமே வைத்துக்கொண்டு பேசுவது தகாது என்பது பற்றிய உணர்வும் எனக்கு உண்டு).

மேலும் ஒன்று. ஆரியர் வருகை, சமஸ்கிருத உருவாக்கம் பற்றிய ஆய்வுகள் இன்னும் தொடர்வதாகவே நான் அறிகிறேன். சமஸ்கிருத உருவாக்கத்தினுள் தமிழருக்கும் பங்கு உண்டு. சமஸ்கிருதம் பற்றி, அதன் பல்லாயிரமாண்டு தொன்மை பற்றி, சரஸ்வதி நாகரிகம் பற்றி இந்துத்துவவாதிகள் விடாப்பிடியாகச் செய்யும் கதை அளப்புகளோடு எனக்கு மரியாதை இல்லை. வேதங்களினுள்ளும் பிற்காலத்தில் செருகப்பட்டதுதான் புருஷ சூக்தம் என்று அம்பேத்கர் ஆராய்ந்து உரைப்பது எனக்கு உடன்பாடு. ஆரியர் என்பது ஒரு இனமா, இல்லையா, என்பது பற்றி நான் உறுதியாக எதுவும் சொல்லமுடியாது. இவை பற்றியெல்லாம் நண்பர் ஜெயமோகனுக்கு உறுதியான கருத்துகள் உண்டு என்றால் நான் மேலும் தெரிந்து கொள்ளவே விரும்புகிறேன்.

‘இந்தியா’ என்று பேசுவதிலும் உள்ள பொருத்தப்பாடு பற்றி இங்கு பேசவேண்டுவதில்லை. இந்தியா என்பது ஆங்கிலேயர் தம் தேவைக்காக உருவாக்கிய கருத்து. இது யார் யாருக்கோ உடன்பாடாக இருக்கலாம். வேறு பெயர் என்று சொல்வதற்கு இல்லாததால் நானும் இப்படிக் குறிப்பிடுகிறேன். ஒவ்வொரு முறையும் மேற்கோளை பயன்படுத்துவதற்கும் இல்லை. தமிழ் மெய்யியல், தமிழ் வரலாறு, தமிழரின் தொன்மை பற்றியெல்லாம் எனக்கு பெருமளவில் நம்பிக்கை உண்டு. என்னைத் தமிழன் என்றுதான் சொல்லிக் கொள்கிறேன். இந்தியன் என்று சொல்லிக் கொள்ள முடியாது. தமிழகத்தில் தமிழர் என்றும் தமிழின் தொன்மை என்றும் பேசுகிற தமிழ் அறிஞர் பெருமக்களை நான் மதிக்கிறேன். அவர்களோடு எனக்கு முரண்பாடு இல்லை (கருத்து வேறுபாடு குறித்து எப்பொழுதும் ஆய்வுக்கு இடமுண்டு). ஜெயமோகன் இப்படித் தன்னை சொல்லிக்கொள்ள மாட்டார். ஜெயமோகனின் சார்பு குறித்து எனக்கு உறுதியாக எதுவும் தெரியாது. அவருக்கு இந்துத்துவ சார்பு இல்லை என்று இப்பொழுதும் நம்புகிறேன். ஆனால் இது பற்றி அவர் வெளிப்படையாக பேசுவதை எதிர்பார்க்கிறேன்.

அறிஞர் சாத்தூர்சேகரனின் ‘சமஸ்கிருதம் மொழி இல்லை’ என்ற கட்டுரையை தமிழ் நேயத்தில் வெளியிட்டேன். அதனாலேயே அவருடன் நான் முற்றிலும் உடன்படுகிறேன் என்று எவரும் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. சமஸ்கிருதம் என்பது ஒரு மொழிதான் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் சமஸ்கிருதத்திற்குச் சொல்லப்படும் தெய்வத்தன்மை எனக்கு அருவருப்பாகத் தோன்றுகிறது. சமஸ்கிருதம் எப்படி உருவாயிற்று என்ற வரலாறு பற்றி அறிஞர் தெய்வநாயகமும், சாத்தூர்சேகரனும், வேறு சிலரும் சில வரலாறுகளை எடுத்துரைக்கின்றனர். ஆங்கிலேயருக்கு சமஸ்கிருதம் உவப்பாகத்தான் இருந்தது. அவர்களுக்கு தமிழ், இனம்காட்டப்படவில்லை. ஆதிக்கங்கள் எத்தனையோ வகைகளில் வெளிப்படையாகவோ, மறைவாகவோ

செயல்படுகின்றன. இன்றைக்கும் இந்தியாவில் சமஸ்கிருதத்துக்கு நிகரான மரியாதை தமிழுக்கு இல்லை. தமிழருக்கு இல்லை.

செம்மொழி என்று இன்றுதான் பேசுகிறோம். செம்மொழி என்பதை வைத்து அரசியல்வாதிகள் என்னவெல்லாமோ தம் தேவைக்கு ஒத்தவாறு செய்வார்கள். தமிழின் தொன்மை நாகரிகம் குறித்து குறைந்த அளவுக்குக் கூட இதுவரை ஆய்வுகள் இல்லை. இந்தியா என்று அறியப்படும் எல்லைக்கு வெளியே தொன்மைக் காலம் தொட்டே தமிழ் பரவித்தான் இருந்தது.

இறுதியாக ஒன்று பணத்திற்காகவோ, வேறு ஆதாயங்களுக்காகவோ, நானும் எஸ்.வி.ஆர் முதலிய நண்பர்களும் செயல்படுகிறோம் என்று ஜெயமோகன் சொல்லுவது மிகமிக கொச்சைத்தனமான அவதூறு என்பதைத் தவிர வேறு எதுவும் சொல்வதற்கில்லை. தெய்வநாயகம் அவர்கள் கூட்டிய தமிழ் சமயம் பற்றிய கருத்தரங்கிற்கு நான் செல்லவில்லை. தமிழ் ஆன்மிகம் என்பதில் எனக்கும் அவருக்கும்கூட கருத்து வேறுபாடு உண்டு. தமிழ் ஆன்மிகம் பற்றி நான் நம்பிக்கையோடு பேசுவேன். அவர் கூறும் தமிழ் ஆன்மவியல் எனக்கு உடன்பாடு இல்லை. ஆதிக்கத்தை உள்வாங்கியது மதம் என்றும், சமயம் என்பதனுள் ஆதிக்கத்திற்கு இடமில்லை என்றும் அவர் கூறுவதை நான் மறுக்கவில்லை. இயேசுவின் மீது அவர் வைத்துள்ள முற்றான நம்பிக்கைக்காக அவரை நான் குறைத்துப் பேசமாட்டேன். இப்படி எந்த மனிதனுக்குள்ளும் தனக்குள்ளிருந்து கலைந்து கொள்ளமுடியாத சில உணர்வுகள் நம்பிக்கைகள் இருக்க முடியும். அவருடைய அறிவு எல்லைக்குள் இன்னும் தட்டுப்படாத உணர்வுகளை புரிந்து கொண்டு அவரால் களைய முடியவில்லை என்பதற்காக எவரையும் இகழ முடியாது. இயேசுவைப் பற்றி ஒருவர் முற்றாக நம்புவது கூட பாவம் என்றும் சொல்வதற்கு இடமில்லை.

நண்பர் ஜெயமோகனுக்கு நான் எந்த அறிவுரையும் சொல்லமுடியாது. மனித விடுதலையின் சார்பில் அவர் பேசுகிறார், செயல்படுகிறார் என்று அவரால் சொல்ல முடியும் என்றால் அது எனக்குப் போதுமானது. உலகமயமாதல் என்ற ஆதிக்கத்தோடு ஒத்துழைக்கும் மனிதத் தனமற்ற மனிதர்கள் மத்தியில் நாம் ‘பிடில்’ வாசிக்க முடியாது. ஜெயமோகனுக்கு நான் தரும் பதில் இதுவே முதலாவதாகவும் இறுதியாகவும் இருக்கட்டும்.

மேலும் சில நண்பர் சாத்தூர்சேகரன் அவர்களின் கட்டுரை பற்றி தம் கருத்துகளை எழுதுமாறு சொல்லியல் ஆய்வில் மிகுந்த ஈடுபாடு உடைய சில தமிழ் அறிஞர்களுக்கும் வேறு பலருக்கும் மடல்கள் எழுதியிருந்தேன். நண்பர் ஜோதி பிரகாசம் உட்பட சிலர் பதில் எழுதினார்கள். (நான் மதிக்கும் தமிழறிஞர் எவரும் பதில் எழுதவில்லை). நண்பர்களின் மடல்களுக்கு தன் சார்பிலான பதிலை விரிவாக சாத்தூர்சேகரன் எழுதியிருக்கிறார். சமஸ்கிருதம் தொடர்பாக மேலும் சில கட்டுரைகளை தமிழ்நேயத்துக்கு எழுதுவதாகக் கூறியிருக்கிறார்.

சாத்தூர்சேகரன் அவர்களின் கருத்துகள் குறித்து நண்பர்கள் எழுதிய மடல்களையும் அவற்றுக்கு சாத்தூர்சேகரன் அளித்த பதில்களையும் பிறிதொருசமயம் நான் வெளியிடலாம். சமஸ்கிருதத்தின் மீது எனக்கு வெறுப்பு இல்லை. சமஸ்கிருதத்தில் புலமை பெற்ற மணவாளன் அவர்கள்

சமஸ்கிருதத்தை ஆழமாகக் கற்றால்தான் தமிழிலிருந்து அவர்கள் எவ்வளவு எடுத்துக்கொண்டார்கள் என்பது புரியும் என்றார். மகான் அரவிந்தர் அவர்களின் ஆவணக்காப்பகத்தில் உள்ள அவரது குறிப்பேடுகள் முதலியவற்றை கவிஞர் இரா. மீனாட்சி அவர்களின் ஒத்துழைப்போடு ஆய்வுசெய்த நண்பர் சேதுபதி அவர்கள் அண்மையில் பெ.தூரன் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கில் வாசித்தகட்டுரையில் வேதங்களைப் பற்றிய தனது ஆய்வில் தெளிவுபடாத சில உண்மைகளை அறிந்துகொள்ள பாரதி மூலம் தான் அறிந்து கொண்ட தமிழ்நூல்கள் பெரிதும் பயன்பட்டன என்று அரவிந்தர் தாம் கைப்பட எழுதிய குறிப்புக்களை மேற்கோள் காட்டி பேசினார்.

ஆதிக்கவாதிகள் சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தி தமிழுக்குச்செய்த தீங்குகளை எந்தநாளும் மறக்கஇயலாது. சமஸ்கிருதத்துக்கு மையஅரசு செலவிடும் தொகையில் ஒரு சிறுபகுதியாவது தமிழுக்குக் கிடைத்தால் தமிழுக்குக் கிடைக்க வேண்டிய மரியாதை கிட்டும் என நம்புகிறேன்.

தமிழ்ச்சமயம் பற்றிய கருத்தரங்கில் தெய்வநாயகம் அவர்கள் முன்வைத்தக் கட்டுரைகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. எனினும் திராவிட சமயம் 2008 ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய இரண்டு இதழ்களில் வெளிவந்த தெய்வநாயகம் அவர்களின் விரிவான கட்டுரைகளை படித்த நிலையில் அவருக்கு நான் 24 பக்க அளவில் ஒரு கட்டுரை எழுதி அனுப்பி இருக்கிறேன். அக்கட்டுரைக் குறித்து தெய்வநாயகம் அவர்களின் கருத்து என்னவாக இருக்கும் என்று இதுவரை எனக்குத் தெரியாது. வழக்கமாக மாற்றுக் கருத்துகளை தன் இதழில் அவர் வெளியிடுவதில்லை. கருத்தரங்குகளிலும் தன் கருத்தை நிலைநிறுத்தும் நோக்கில் திரும்பத் திரும்ப பேசுவார் என்பதுவும் எனக்குத் தெரியும்.

இறுதியாக ஒன்று, அவரவர் கருத்தோடு இருந்து விடுவதுதான் நாகரிகம். அதற்கு பதில் சொல்லித்தான் தீரவேண்டும் என்பது அநாகரிகம்தான்.

ஞானி

அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய ஞானி அவர்களுக்கு,

தங்கள் குறிப்பின் முதல் வரிகள் என்னை நெகிழச்செய்தன, இன்றும் என்னை நீங்கள் உங்கள் மாணவராக எண்ணுகிறீர்கள் என்பது அதில் தெரிகிறது. அது என் நல்லூழ். எப்போதும் ஆசிரியனுடனான உறவு மாணவனுக்கு விலகுவதில்லை. என் தரப்பில் உங்கள் மனதை புண்படுத்தும் ஏதாவது சொல் வெளியாகியிருந்தால் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உங்களை அவதூறு செய்யும் நோக்கம் ஏதும் எனக்கு இல்லை. என் கட்டுரையிலும் சரி, அதன் பின் வந்த கடிதத்துக்கு பதில் அளிக்கையிலும் சரி, இதை தெளிவாகவே சொல்லியிருக்கிறேன். உங்கள் தனிப்பட்ட நேர்மையும் அர்ப்பணிப்பும் என் ஐயத்துக்கு அப்பாற்பட்டவை. உங்களையும் குமரிமைந்தனையும் பற்றிக் குறிப்பிடும்போது உங்களை பணத்தால் அல்ல, உங்கள் கருத்துகள் மீது உங்களுக்கிருக்கும் நம்பிக்கையை பயன்படுத்தியே உள்ளே இழுப்பார்கள் என்று தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறேன். நீங்கள் ஒத்துக்கொள்ளக்கூடிய வகையில், உங்கள்

மனம் உவகை கொள்ளும் வகையில் தங்கள் தரப்பை உங்களிடம் முன்வைத்துவிட்டு அவர்கள் மேடையில் உங்களை ஏற்றுவார்கள்.

ஐயா, உங்கள் கடிதமே அதற்குச் சிறந்த ஆவணம். தெய்வநாயகம் அவர்கள் தமிழர் பண்பாடு, திராவிட மதம் பற்றி என்னென்ன சொல்கிறார், அவற்றில் உங்களுக்கு இருக்கும் உடன்பாடு என்ன என்பதைப்பற்றியெல்லாம் சொல்கிறீர்கள். அவருக்கு கிறித்தவ மத அமைப்புகளுடன் தொடர்பில்லை என்று அவர் சொன்னதையே சொல்கிறீர்கள். அவரது கிறித்தவ மத நம்பிக்கை அவரது தனிப்பட்ட விஷயம் என்கிறீர்கள். இது உங்களுக்கு அளிக்கப்பட்ட சித்திரம்.

தெய்வநாயகம் அவர்களின் நூல்களில் அவர் சொல்வதென்ன என்பதை மிக வெளிப்படையாகவே நான் எடுத்து எழுதியிருக்கிறேன். தயவுசெய்து அவற்றையும் படித்துப் பாருங்கள். அவர் உங்களிடம் சொன்னவை அல்ல அவை. அவர் கிறித்தவசபைகள் அனைத்தாலும் முன்னிறுத்தப்படுவதை அவரது மாநாடுகள் மலர்கள் அனைத்திலும் தெளிவாகவே காணலாம். கிறித்தவம் அவரது அந்தரங்க மதநம்பிக்கை மட்டும் அல்ல. அவர் ஒரு எளிய தனிமனிதருமல்ல. அமெரிக்காவிலும் இந்தியாவிலும் பெரும் புள்ளிகளை பங்கெடுக்க வைத்தும், அனைத்து கிறித்தவ சபைகளையும் பங்கெடுக்கச் செய்தும், பலகோடி ரூபாய்செலவில் அவர் நடத்திய மாபெரும் மாநாடுகளே தெள்ளத்தெளிவாக அதற்குச் சான்று.

தெய்வநாயகம் பற்றி நீங்கள் கொண்டிருக்கும் மனச்சித்திரம் உங்களில் அவரால் உருவாக்கப்பட்டது. ஆனால் அது உங்களை பிரம்மாண்டமான சர்வதேசச் சதி ஒன்றின் பகுதியாக ஆக்குகிறது. எந்தத் தமிழ்த்தொன்மை மற்றும் மாண்புக்காக நீங்கள் குரலெழுப்புகிறீர்களோ அதற்கு அழிவை அளிப்பது அது.

ஆம், உங்கள் தீவிர நம்பிக்கைகளையே உங்களை சுரண்டுவதற்கான கருவிகளாக பயன்படுத்துவார்கள் என்றே நான் சொன்னேன். அதுவே நடந்திருக்கிறது.

•

இனி என்னைப்பற்றி. நீங்கள் எப்போதும் என்னைப்பற்றி புரிந்துகொண்டவர் என்பதே என் எண்ணம். ஆயினும் உங்கள் கடிதத்தில் கேட்டிருக்கும் கேள்விகளை உங்கள் நண்பர்களுக்காக மீண்டும் எதிர்கொள்கிறேன்.

1. நான் இந்துத்துவ அரசியலை ஏற்றுக்கொள்பவன் அல்ல. அடிப்படையில் பன்மைத்தன்மைகொண்டதும், உரையாடல்தன்மை கொண்டதுமான தத்துவமெய்ஞான மரபாகவே நான் இந்து ஞான மரபைக் காண்கிறேன். அதாவது இந்து ஞானமரபு ஓர் அமைப்பு அல்ல, அது ஒரு ஞானக்களன்.

ஆனால் இந்துத்துவ அரசியல் என்பது அந்தப் பன்மையை அழித்து இந்து மரபு சார்ந்து ஒற்றைப்படையான நம்பிக்கைகுறியீட்டு அமைப்பு ஒன்றை நிறுவவும் அதைக்கொண்டு ஒரு அரசியல் கோட்பாட்டை புனையவும் முயல்கிறது. அது இந்து ஞானமரபை அழிக்கக்கூடியது. இந்துத்துவ அரசியலுக்கு மாற்றாக இந்து மெய்ஞான மரபை நிறுத்துவதே உண்மையான இந்துத்துவ எதிர்ப்பாக இருக்க முடியும். விஷ்ணுபுரம் முதல் நான் அதையே செய்து வருகிறேன் என்பதை அறிவீர்கள். அதுவே

சாத்தியமும் கூட.

மாறாக, இங்குள்ள முற்போக்கினர் இந்துத்துவம் மீது கொண்ட காழ்ப்பால் பல்லாயிரம் வருட மரபும் மாபெரும் தத்துவ, இலக்கிய, கலைச்செல்வமும் கொண்ட இந்துஞானமரபை முழுமையாகவே நிராகரிக்கவும் அதை அழிக்கவும் தொடைதட்டுகிறார்கள். ஒற்றைப்படையான வாதங்களால் அதை இழிவுசெய்கிறார்கள். ஒன்றை எதிர்ப்பதற்கு அதை வசைபாடினால் போதும் என்பது ஒரு பெரியாரிய நம்பிக்கை. அதை உங்களைப்போன்று சமூகஇயங்கியல் கற்ற மார்க்ஸியர்களும் இன்று ஏற்றுக்கொண்டு வருகிறீர்கள்.

இந்துத்துவ எதிர்ப்பை இந்து எதிர் பாக்குவது வழியாக வெல்லமுடியாத ஒரு போராக அதை மாற்றிவிட்டிருக்கிறார்கள். இந்து மரபை வசைபாடி, அவமதித்து, எள்ளிநகையாடி, அநீதியான குற்றச்சாட்டுகளை சுமத்திப் பிரசாரம் செய்து, அதில் ஈடுபாடுகொண்ட கோடானுகோடி மக்களை நமது அரைகுறை அறிவுஜீவிகள் இந்து அடிப்படைவாதம் நோக்கி தள்ளிக்கொண்டிருக்கிறார்கள்.

அறிவுஜீவிகளிடமுள்ள இந்த வெறுப்பையும் வன்மத்தையும் இந்துமரபை, தமிழ்மரபை ஒட்டுமொத்தமாக எதிர்க்கும் சக்திகள் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்கின்றன. தமிழர்களின் அனைத்து பண்பாட்டு தனித்தன்மையும் ஒரு "pagan' மூடநம்பிக்கை என்று நம்பும் ஒரு மதவெறி அமைப்பு உங்களைப்போன்ற தமிழியர்களை உங்கள் இந்துஞான எதிர்ப்பின் பெயராலேயே தங்கள் சார்பில் திரட்டிக்கொள்ள முடியும். இன்று இங்குள்ள தமிழியர்கள், பெரியாரியர்கள், முற்போக்கினரில் பெரும்பகுதியினர் அறிந்தோ அறியாமலோ இவ்வாறு கைப்பாவைகளாக ஆகும் வாய்ப்பே அதிகம். என் ஆதங்கம் அச்சம் அந்தத் தளத்தில்தான்.

அனைத்துக்கும் மேலாக வடவர் எதிர்ப்பு, சமஸ்கிருத எதிர்ப்பு, பிராமண எதிர்ப்பு என எதிர்மறை நோக்குடன் உருவாக்கப்படும் எச்சிந்தனைகளையும் நான் நலம் பயப்பனவாக நினைக்கவில்லை. இம்மாதிரி எந்த எதிர்மறைச் சிந்தனையும் கடைசியில் சமூகப்பிரிவினைக்கும் வன்முறைக்கும்தான் நம்மைக் கொண்டுசெல்கிறது.

2. தமிழர்களின் தொன்மை, இந்திய பண்பாட்டிலும் ஞானமரபிலும் தமிழகத்துக்கு உள்ள பங்களிப்பு இன்னும் தேசிய அளவில் அங்கீகரிக்கப்படவில்லை என்ற எண்ணம் எனக்கு வலுவாகவே உண்டு. குமரிக்கண்டத்தை நான் நிரூபிக்கப்பட்ட உண்மையாக எண்ணவில்லை. ஆனால் இந்தியத் தொன்மங்கள் அனைத்தையும் வைத்து பார்க்கும்போது ஒரு வலுவான சாத்தியக்கூறு அது என்றே எண்ணுகிறேன். இந்தியப்பண்பாட்டில் தமிழர்களின் கொடை வேதகாலம் முதல் தொடங்குகிறது. அதன் அடிப்படைக் கட்டுமானத்திலேயே தமிழர் மெய்யியலும் பண்பாடும் உள்ளது. இதையெல்லாம் நான் விரிவாக எழுதியிருக்கிறேன். சாமவேதத்தை ஆராய்ந்த நடராஜகுருவே அதைச் சொல்லியிருக்கிறார். பலர் பேசியிருக்கிறார்கள்.

இந்த விஷயங்களை அறிவார்ந்த தளத்தில் முன்வைத்துப் பேசவேண்டும். அதற்கான கடும் உழைப்பும் பரந்துபட்ட நோக்கும் இன்று தேவை. ஆனால் இன்று நடப்பதென்ன? ஆய்வு என்றால் ஏதோ தன் மூளையில் தோன்றும்

கொப்புளங்கள் என்று நம்பும் ஒரு சிறு கூட்டம் நவீன ஆய்வுலகில் என்ன நடக்கிறது, ஒன்றை மெய்ப்பிக்கவும் பொய்ப்பிக்கவும் தேவையான முறைமை என்ன, என்ற போதமே இல்லாமல் கைக்குக் கிடைத்த சொற்களுக்கு விருப்பப்படி பொருள்கொள்ளும் அசட்டு சொல்லாராய்ச்சியையே செய்து கொண்டிருக்கிறது. அதை ஏதோ ஆய்வு என்று சொல்லி முன்னிறுத்துவதன் மூலமாக உண்மையான ஆராய்ச்சியே நிகழாமல் நின்றுவிட்டிருக்கிறது. ஆய்வுக்குள் கூட சாதிக்காழ்ப்புகளையே அளவீடாகக் கொள்கிறார்கள்.

இந்த ஆய்வாளர்கள் எந்த விதமான உலகப்பிரக்ஞையும் இல்லாமல் உலகத்தையே தமிழர்கள்தான் உருவாக்கினார்கள் என்றும் உலக மொழிகளே தமிழிலிருந்து உருவானவையே என்றும் கூச்சலிட்டு ஆய்வு என்பதையே கேலிக்கூத்தாக்கி விட்டிருக்கிறார்கள். தமிழர் தொன்மை சார்ந்த எதையுமே பேசினால் விஷயமறிந்தவர்கள் எல்லாம் நமுட்டுச் சிரிப்பு சிரிக்கும் நிலை உருவாகிவிட்டிருக்கிறது.

ஐயா, சாத்தூர் சேகரனின் நூலை எல்லாம் நீங்கள் ஓர் ஆய்வாக நினைப்பீர்கள் என்றால் என்ன சொல்வது? வருந்துகிறேன், மிக மிக வருந்தி வெட்குகிறேன், அவ்வளவுதான்.

3. இந்தியா பற்றிய உங்கள் கருத்து என்னை வருத்தம் கொள்ளச்செய்கிறது. இந்தியா ஆங்கிலேயரின் சிருஷ்டி என்றால் அதில் என்ன பிழை? ஆம், அரசியல் இந்தியா ஆங்கிலேயரின் ஆக்கமே. அது ஒரு வரலாற்று நிகழ்வு. எல்லா நவீன தேசங்களும் அப்படி வரலாற்றின் வழியாக உருவாகி வந்தவைதான். அப்படி வரலாற்றில் உருவாகி வருவதுதான் உண்மையான நவீனதேசியம்.

இந்த நவீன தேசியத்தை மேலும் நவீன தேசியமாக ஆக்கலாம். இன்னும் பன்மைத்துவம் கொண்டதாக ஆக்கலாம். இன்னும் நெகிழ்வான கட்டமைப்புக்கு கொண்டுவரலாம். அந்தக் கனவு எதுவும் சிறந்ததே.

இந்தியாவெங்கும் மக்கள் பரவலாக்கம் தொன்மையான காலம் முதல் நடந்து வருகிறது. ஆனால் பதிமூன்றாம் நூற்றாண்டு முதல் இந்திய நிலப்பகுதிகளில் நடந்த தொடர்போர்கள் மூலம் இந்தியாவில் மக்கள்பரிமாற்றம் விரைவாகியது. இன்றைய இந்திய நிலத்தில் மிக மலைசார்ந்த பகுதிகள் தவிர பிற பகுதிகள் எதிலும் மொழி, இனம், பண்பாடு சார்ந்த ஒரேவகை மக்கள் இல்லை.

பிரிட்டிஷ் ஆட்சியின் நிலையான ஆட்சி உருவாகி, போக்குவரத்து விரைவாகி, வாழ்க்கை வாய்ப்புகள் பெருகியபோது இந்த மக்கள் பரிமாற்றம் உச்சம் கொண்டது. எந்த ஒரு இந்தியனையும் எடுத்து அவரது முன்னோரின் ஊரென்ன என்று கேட்டால் ஓர் இடப்பெயர்வின் கதை இருக்கும். இந்த நிலப்பரப்பில் இவ்வாறு பரவியிருந்த மக்களுக்கு ஆங்கிலேயரின் இன, மொழி, மத அடையாளமில்லாத ஒரு நவீன நிர்வாக அரசு நம்பிக்கை ஊட்டியது. அவ்வாறு மெல்லமெல்ல உருவானதே நவீன இந்திய தேசியம்.

அந்த தேசிய உருவகத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டுசென்று, நவீன குடியரசுத்தன்மையை இணைத்து, அதன் பன்மைத்தன்மைக்கு அடிப்படை உறுதியை அளித்து, இன்றைய இந்தியா உருவகிக்கப்பட்டுள்ளது. அதன்

சிற்பிகளான காந்தி, நேரு, அம்பேத்கர் ஆகியோருக்கு இந்தியர் கடமைப்பட்டுள்ளனர்.

இந்த நவீன இந்திய தேசியத்துக்கு மாற்றாக மதவாத தேசியம் ஒன்றை முன்வைக்கிறார்கள் இந்துத்துவர். அதேபோல மொழிவாத தேசியத்தை உங்களைப்போன்றவர்கள் முன்வைக்கிறீர்கள். இரண்டுமே பழமைவாதத்தில் ஊன்றியவை. அடையாள அரசியல் சார்ந்தவை. வெறுப்பில் இருந்து முளைப்பவை.

ஐயா, நீங்கள் இந்திய தேசியத்தை நிராகரித்து முன்வைப்பது எதை தெரியுமா? மனக்குறுகல் மிக்க, வெறுக்கத்தக்க மொழிவெறி – ஃபாசிச தேசியம் ஒன்றை. அதை விட அனைத்து இந்துக்களையும் பௌத்தர்களையும் சமணர்களையும் தன்னுள் அடக்க என்னும் இந்து தேசியம் எவ்வளவோ மேலானது, விரிந்தது.

நாமக்கல்லில் சில மாதங்கள் முன்பு பொ.வேல்சாமி – பெருமாள்முருகன் ஏற்பாட்டில் நடந்த பதினெண்கீழ்க்கணக்கு ஆய்வுக் கருத்தரங்கில் நான் உங்களைச் சந்தித்தேன். அப்போது நீங்கள் உங்கள் தமிழியக்க நண்பர்களுடன் வந்திருந்தீர்கள். தமிழ்ச்சுவடிகள் குறித்து உங்களிடம் நான் விவாதித்துக் கொண்டிருந்தபோது உங்களை அழைத்து வந்த கோவை நண்பர் ஆவேசத்துடன் “தமிழை அழிச்சவனே இங்க உள்ள தமிழனல்லாத கும்பல்தான்… தெலுங்கனும் கன்னடனும் சௌராஷ்டிரனுமா இங்க குடியேறி தமிழ நாசம் பண்ணுறாங்க” என்று பேச நான் அதன் பின் ஒன்றுமே பேச இல்லாமல் விலகிக்கொண்டேன் என்பதை நினைவுறுவீர்கள் அல்லவா?

அவர் சொல்லவந்தது நானும் பொ.வேல்சாமியும் சொன்ன சில எளிய மாற்றுக் கருத்துகளை மறுக்க! தமிழறிஞர் பொ.வேல்சாமியின் முன்னோர் தமிழ்நாட்டுக்கு வந்து 300 வருடமாகிறது. தொல்காலம் முதல் எங்கள் முன்னோர் வாழ்ந்த நிலம் இப்போது தமிழ்நாட்டு எல்லைக்குள் இருக்கிறது. ஆனால் வெறுப்புக்கு ஏது அளவு?

நீங்கள் சொல்லும் தமிழ்தேசம் அமைந்தால் அடுத்த கணமே யார் தமிழர் என்ற கணக்கெடுப்பு தொடங்கும். அந்த தேசத்தின் முதல் பலியாடுகளாக முஸ்லிம்கள்தான் இருப்பார்கள். அதன்பின் நூற்றாண்டுகளாக இங்கே குடியேறி வாழ்ந்து இந்த நாட்டின் ஆலயங்களை ஏரிகளை பேரிலக்கியங்களை எல்லாம் படைத்த தெலுங்கு, கன்னட, சௌராஷ்டிர மக்கள் இரண்டாம் குடிமக்களாக அடையாளப்படுத்தப்படுவார்கள். அருந்ததியரும் நரிக்குறவர்களும் வேட்டையாடப்படுவார்கள். உங்களைச் சுற்றி ஒலிக்கும் குரல்கள் அதற்குச் சான்று.

ஐயா, உண்மையிலேயே அப்படி ஒரு பிரிவினை நடந்தால் எத்தனை கோடி தமிழர்கள் இந்தியாவெங்கிலும் இருந்து இங்கே வரவேண்டியிருக்கும் தெரியுமா? இங்கிருப்பவர்களில் கால்பங்கு இந்தியா முழுக்க வாழ்கிறார்கள். வேரூன்றி வெற்றி பெற்று வாழ்கிறார்கள். அது தமிழனின் விடாப்பிடியான உழைப்பின் விளைவு. அனைத்தையும் உதறி அவர்கள் இங்கே வரவேண்டும். இங்கே நூற்றாண்டுகளாக வேரூன்றியவர்களை நீங்கள் அங்கே துரத்துவீர்கள், இல்லையா? பிரிவினைகளின் ரத்தத்தை நாம் உலகமெங்கும் வேண்டுமளவு கண்டுகொண்டிருக்கிறோமே? இன்னும் தேவையா?

மனித வெறுப்பில் ஊறி, அதிகார பித்தேறி ஃபாசிசப் பிரிவினைவாதம் பேசும் இக்குரல்கள்தான் ஆப்ரிக்காவில் ரத்த ஆற்றை ஓடவிட்டுக் கொண்டிருக்கின்றன. கோடிக்கணக்கான மக்களை உள்நாட்டு யுத்தத்தின் விளைவான பஞ்சங்களில் பசித்து சாக விட்டுக்கொண்டிருக்கின்றன. உங்களைப்போன்ற அறிவுஜீவிகள்தான் ஃபாசிசத்துக்கு அடிப்படைகளை உருவாக்கித் தருகிறீர்கள். விளைவுகளில் நீங்களும் உங்கள் வாரிசுகளும் சிக்க மாட்டீர்கள் என்பதை வரலாறு மீண்டும் காட்டுகிறது. சாவதற்கு வரலாறு வேறு 'பிராய்லர்' களைத்தான் வளர்க்கிறது.

பெரும் மனிதாபிமானியாக நான் அறிந்த ஞானி வேறு. ஃபாசிசத்துக்கு அஸ்திவாரம் கட்ட அமர்ந்திருக்கும் ஞானி வேறு. மனிதர்களுக்குள் என்னென்னவோ மாற்றங்கள். ஆனால் நம்மால் நாம் நேசித்த மனிதர்களை எப்போதுமே நேசிக்கத்தான் முடிகிறது.

உங்கள் ஆசிகளை நாடும்,
ஜெயமோகன்

திரு. ஜெயமோகன்

அன்புள்ள நண்பருக்கு வணக்கம்,

நண்பர் முத்துக்குமார் மூலம் என் எதிர்வினையை பெற்றவுடன் மிகுந்த அக்கறையோடு பதில் எழுதியுள்ளீர்கள். மிக்க நன்றி! உங்களுக்கும் எனக்கும் இடையிலான அன்பு என்றைக்கும் ஒரே தன்மையுடன் நிலவும் என்பதில் எனக்குச் சிறிதளவும் ஐயமில்லை.

உங்கள் மடலும் இதை மெய்ப்பிக்கிறது.

வியக்கத்தக்க முறையில் உங்கள் கருத்தும் என்கருத்தும் சில தளங்களில் ஒன்றாகவே இருக்கின்றன. இந்துத்துவ எதிர்ப்புணர்வில் உங்களோடு முற்றாக நான் உடன்படுகிறேன். நீங்கள் இந்து ஞான மரபு என்கிறீர்கள். இதை நான் இந்திய ஞான மரபு என்று எடுத்துக் கொள்வதோடு, உங்களோடு நான் முற்றாக உடன்படுகிறேன். இந்திய ஞான மரபில் ஊறிய எவரும் பாசிஸ்ட் ஆக மாறவே முடியாது. உங்களோடு நான் பழகிய காலத்தில் இருந்த அதே மனிதனாகத்தான் இன்றும் வாழ்கிறேன். இடைக்காலத்தில் நான் உங்களை ஒரு போதும் ஐயுற்றதில்லை. ஆனால் என்னை எப்படி நீங்கள் பாசிஸ்ட் என்று நினைக்க நேர்ந்தது என்பது எனக்குப் புரியவில்லை. இடைக்காலத்தில் நான் தமிழியம் – தமிழ்த்தேசியம் குறித்து எழுதிய எந்தக் கட்டுரையையும் நீங்கள் படிக்கவில்லை என்றுதான் தோன்றுகிறது.

நாமக்கல்லில் மதிய உணவுக்குப்பிறகு மண்டபத்திற்கு திரும்பி வரும் வழியில் ஒரு நண்பர் உங்களோடு கத்திப்பேசி முடித்த சமயத்தில்தான் உங்களிடம் நான் வந்து சேர்ந்தேன். பிறகுதான் செய்தி அறிந்தேன். உங்களிடம் கத்திப் பேசியவர் க.ப.இராமசாமி என்ற பெரியவர்தான் என்று நினைக்கிறேன். அவரது வெறித்தனமான பேச்சையோ, கருத்தையோ நான் ஒருபோதும் மதித்ததில்லை. பாவாணர் பெயர் சொல்லிக்கொண்டு இப்படி வம்பும், வழக்கும் செய்து கொண்டிருப்பவர்கள் அவர்கள். அவர்களோடு எனக்கு ஒட்டும் இல்லை. உறவும் இல்லை.

இன்னுமொன்று, பெரியாரியக்கத்தைச் சார்ந்த பலர் வெறித்தனமாக பார்ப்பனீய எதிர்ப்பு, இந்துமத எதிர்ப்பில் அரசியல் நடத்திக் கொண்டிருப்பவர்கள். தமிழ்த்தேசியம் என்ற அரசியலில் இணைந்து இருக்கிற பெரும்பாலானவர் இத்தகையவர். இவர்களுக்கு மார்க்சியத்தோடு உறவில்லை. நான் மார்க்சியன் என்பதால் இவர்களும் என்னோடு நெருக்கமாக இருப்பதில்லை. தமிழ் உணர்வாளர் என்ற முறையில் இவர்கள் கூட்டத்தோடு நானும் இருக்கிறேன் என்பதைத் தவிர எங்களுக்குள் ஒத்தஉணர்வு இல்லை. பெரியாரியம் போதாது என்பதை விடாப்பிடியாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். சமதர்மம் என்ற மையத்தில் பெரியாரியத்தையும் மார்க்சியத்தையும் இணைத்தால் மட்டுமே தமிழ்ச் சூழலில் மனித விடுதலைக்கு வழி திறக்கும், என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

பெரியாரிய சிலரிடம் வெளிப்படும் பாசிச உணர்வை நான் ஒரு போதும் ஏற்கவில்லை. கட்சி மார்க்சியரோடும் எனக்குள்ள மாறுபாட்டை நீங்கள் நன்கு அறிவீர்கள் என நம்புகிறேன். இது குறித்து நான் உங்களுக்கு இங்கு விளக்க வேண்டியதில்லை.

நவீன இந்திய தேசம் என்று பேசுகிறீர்கள். இந்தியா என்ற பெரும் நிலப்பரப்பை ஒரு தேசமாக இராணுவம் முதலிய சக்திகளைக் கொண்டு தம் வசதிக்காக ஏற்படுத்தியவர் ஆங்கிலேயர் என்பதை நீங்களும் மறுக்க மாட்டீர்கள். இந்தியா ஒரு தேசம் இல்லை. இந்தியா ஒரு துணைக்கண்டம். இதன் எல்லைக்குள் தேசிய இனம் பல வாழ்கின்றன.

இந்தியாவின் அரசியலமைப்பு சட்டத்தின்கீழ் தேசிய இனங்களின் இறையாண்மையை ஒப்புக்கொள்வதாக ஒரு உண்மையான கூட்டாட்சி அமையவில்லை. எவ்வளவு நல்ல எண்ணத்தோடு அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது என்றே வைத்துக்கொண்டாலும் மொழி சார்ந்த தேசிய இனங்கள் பலவற்றுக்கிடையில் ஒருங்கிணைப்பை அரசியல்வாதிகள் ஏற்படுத்தவில்லை.

2020ல் இந்தியா ஒரு வல்லரசாகவோ நவீன தேசிய அரசாகவோ மக்கள் நல நோக்கில் உருவாகும் என்பதற்கான ஆதாரம் என்று சொல்வதற்கு இன்று எதுவும் இல்லை. காஷ்ரை இந்தியா தன்னிடம் தக்கவைத்துக் கொள்ள முடியாது. அதுபோல் கிழக்கு மாநிலங்கள் சிலவற்றையும் இராணுவத்தை வைத்து இந்தியா தனக்குள் இணைத்துக் கொள்ளவும் முடியாது. மாநிலங்களுக்கு இடையிலான முரண்பாடுகளும் குறையப் போவதில்லை. இந்துத்துவத்தின் மதவாத அரசியல் இந்திய மக்களை மேலும் மேலும் நாசமாக்கும். அமெரிக்கா முதலிய மேற்கத்தியருக்கு சேவை செய்யும் முறையில் உருவாகிற இந்தியா, எண்பது விழுக்காடு உழைக்கும் மக்களுக்கு எதிரான இந்தியாவாகத்தான் இருக்கமுடியும். இப்படி உருவாகிற இந்தியா மீது எனக்கு எந்த வகையிலும் நம்பிக்கை இல்லை. நீங்கள் நம்புகிற நவீன இந்திய தேசியம் என்ற கருத்து பெரும்பாலான இந்திய மக்களுக்கு எதிரான, இந்திய மக்களை நாசமாக்குகிற கருத்தென்றே, நான் நம்புகிறேன்.

இதுகுறித்து நீங்கள்தான் உங்களையே ஆய்வுசெய்து கொள்ள வேண்டும். இப்படி ஒரு கருத்து உங்களுக்குள் எப்படி உருவாகிற்று என்பதும் எனக்குப் புரியவில்லை. உங்கள் கருத்து ஆதிக்கவாதிகளுக்கு சாதகமான

கருத்தாகத்தான் இருக்கமுடியும். இதுபற்றி நமக்கிடையில் பேசுவதற்கு எதுவும் இல்லை.

இந்திய ஞான மரபு என்றும் நவீன இந்திய தேசியம் என்றும் நீங்கள் சொல்லும் இரு வேறு கருத்தியலுக்கு இடையில் என்ன உறவு இருக்க முடியும் என்பதும் எனக்குப் புரியவில்லை.

இனி, தெய்வநாயகம் பற்றி நான் குறிப்பிட வேண்டும். அவர் கூட்டும் கருத்தரங்குகளுக்கு என்னை அவர் விடாப்பிடியாக அழைத்தபோதும் நான் போகவில்லை. போகாததற்கு என் உடல்நலக் குறைவு, வசதிக்குறைவு என்பதுகூட காரணமில்லை. அவரது நூல்கள் சிலவற்றை நானும் படித்திருக்கிறேன். விடாப்பிடியாக அவரோடு நான் பேசுகிறேன்.

ஒரு பத்தாண்டுகளுக்கிடையில் அவரது நிலைப்பாட்டில் தொடர்ந்து மாற்றங்களும் ஏற்பட்டு வருகின்றன. அவரை முற்றாக நம்புகிற ஒரு கூட்டத்தோடுதான் அவர் இருக்கிறார் என்பதும் எனக்குத் தெரியும். அந்தக் கூட்டத்தில் ஒருவனாக என்னால் ஒருபோதும் இருக்க முடியாது. அவரது வசதிகளும் வாய்ப்புகளும் குறித்து எனக்கு அதிகம் தெரியாது. உலக அளவில் அவர் எவரோடெல்லாம் தொடர்பு கொண்டிருக்கிறார் என்பதுவும் எனக்குத் தெரியாது. இப்படி நான் சொல்லும் பொழுது அவருக்கு எதிராக நான் பேசுகிறேன் என்று நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம். அவருக்கும் எனக்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன என்பதில் நான் தெளிவாக இருக்கிறேன். அவரது வருண எதிர்ப்பு என்ற கருத்தில் அவரோடு எனக்கு உடன்பாடு உண்டு. தமிழகத்தில் அந்தணர் வரலாறு என்ற நூல் வெளிவந்தபோது, அந்த நூலின் பொய்மைகளை மறுப்பதில் அவரோடு நான் உடன்பாடு கொண்டிருந்தேன். தமிழ் ஆன்மிகம் என்று நான் பேசுகிறேன். தமிழ் ஆன்மவியல் என்று அவர் பேசுகிறார். நியூ யார்க்கில் அவர் ஏற்பாடு செய்த மாநாட்டின் கருப்பொருள், யேசுவின் இறப்பிற்குப் பின்னர் – போப்பின் தலைமையில் திருச்சபை உருவாக்கப்பட்டதற்கு முன்னரான இடைக்காலத்தில் நிலவிய 'தொடக்ககாலக் கிறித்துவம்' குறித்தது என நான் அறிகிறேன். 'எங்கல்ஸ்' தொடக்ககாலக் கிறித்துவம் பற்றி எழுதும் பொழுது, பொதுவுடைமைச் சமூகத்திற்கு அதுவொரு முன்மாதிரி என்று எழுதியிருக்கிறார். தெய்வநாயகம் அவர்களுக்கும் இக்கருத்து உடன்பாடு. யேசுநாதர் முன்வைத்த பொதுமைச் சமூகக்கூறுகளை அழித்துத்தான் திருச்சபை தனக்கான ஆதிக்கத்தை ஏற்படுத்தியது என்பது அவரும் ஒப்புக்கொள்கிற கருத்து. அண்மைக் காலத்தில் தெய்வநாயகம் இக்கருத்தில் ஊன்றி நிற்பதாக அறிகிறேன். இவ்வகையிலும் அவரோடு நான் உடன்படுகிறேன். மற்றபடி, யேசு என்ற படிமத்தை அவர் சைவத்தினுள்ளும், வைணவத்தினுள்ளும் காண்பதாகச் சொல்லுவது எனக்கு உடன்பாடில்லை.

மற்றபடி ஒரு இந்துத்துவவாதி போல அவரும் ஓர் ஆதிக்கவாதிதான் என்று என்னால் கருதமுடியவில்லை. அவருக்கோ இன்னொருவருக்கோ நான் வசப்பட்டு விடமாட்டேன். எனது நிலைப்பாட்டில் நான் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறேன். நான் ஒரு ஏமாளி என்பது போல நீங்கள் கருதுவது எனக்கு வருத்தமாகவும் சற்று வேடிக்கையாகவும் இருக்கிறது. இந்துத்துவத்துக்கு எதிரான கருத்தியல் போராட்டத்தில் முனைந்திருக்கும் ஒருவர் தெய்வநாயகம் நோக்கித் தன் பார்வையை செலுத்த வேண்டியதில்லை என்றே கருதுகிறேன். இலக்கியம், மெய்யியல் முதலிய

களங்களில் உங்கள் ஆற்றல் மிக்க பணியை பெரிதாக மதிக்கிறேன். பார்வை இன்மை காரணமாக இருபது ஆண்டுகளுக்கிடையில் எவ்வளவோ நான் இழந்துவிட்டேன்.

நண்பர்கள் மூலமே சிலவற்றை அறிந்துகொள்ள, பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

நான் நலத்தோடு இருக்கிறேன். உங்கள் துணைவியார், குழந்தைகள் நலம் பெரிதும் விரும்புகிறேன். எல்லோருக்கும் என் அன்பும் வணக்கமும்.

நன்றி.
தங்கள்
ஞானி

பகுதி 4

4. 1. விவிலியத்தின் முகங்கள் – ஓர் அறிமுகம்

கிறித்தவர்களால் தங்கள் மூலநூலாக ‘புனித பைபிள்’ என்று கொண்டாடப்பட்டு உலகமெங்கும் கொண்டுசெல்லப்படும் விவிலியம் உண்மையில் மிக நீண்ட வரலாறும், சீரற்ற வளர்ச்சிப்போக்கும் கொண்ட ஒரு சிந்தனை ஓட்டத்தை பதிவுசெய்துள்ள நூல்களின் தொகுப்பு ஆகும். இந்த நூல்கள் உருவாகி மொழியாக்கம் செய்யப்பட்டு பல்வேறு வரலாற்றுச் சூழல்களில் பலவாறாக தொகுக்கப்பட்டு, சுருக்கப்பட்டு, சேர்க்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன. இன்று நமக்கு கிடைக்கும் விவிலியமேகூட பல வடிவங்கள் கொண்டது. கிறித்தவ மதம் மிக வலிமையான நிறுவன அமைப்பு கொண்டது. கிறித்தவ தேவாலயங்கள் (church) அரசியலில் நேரடியாக பங்கெடுத்துக் கொண்டவை. நீண்ட நெடுங்காலம் புனித ரோமப்பேரரசு உலகின் பெரும்பகுதியை ஆண்டது. ஆகவே பைபிளுக்கு ஒரு மத நூல் என்பதற்கும் மேலாக ஒரு அரசியல் மூலநூல் என்ற மதிப்பும் உண்டு. அது நேரடியாகவே சட்டநூலாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே அந்நூல் அரசியல், சமூகவியல் தேவைகளுக்கு ஏற்ப பலவிதமான மாற்றங்களை அடைந்தது இயல்பே.

விவிலியம்

விவிலியம் என்னும் சொல் பைபிள் என்ற சொல்லின் தமிழாக்கம். யூத மரபு மற்றும் கிறித்தவ மதத்தின் அடிப்படைக் கூறுகளைக் கொண்ட எழுத்துக்களின் பெருந்தொகையே பைபிள் எனப்படுகிறது. பைபிள் என்ற பெயர் பிப்லியா (biblia) என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வந்தது. நூல்கள் என்று அதற்குப் பொருள். தாள் என்று பொருள் வரும் பாப்பிரஸ் என்ற சொல்லின் திரிபு அது. பாப்பிரஸ் புல்லில்தான் ஆரம்பகாலத்தில் நூல்கள் எழுதப்பட்டன.

யூத பைபிள், கிறித்தவ பைபிள் இரண்டும் சற்றே வேறுபட்டவை. யூத பைபிள் ஹீப்ரு மொழியில் எழுதப்பட்ட 39 நூல்களின் தொகை ஆகும். சிறிதளவு அராமிக் மொழியிலும் இது உள்ளது. கிறித்தவ பைபிள் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாடு 27 நூல்கள் கொண்டது. கிறித்தவ மதத்தில் உள்ள இரு பெரும் பிரிவினரால் பழைய ஏற்பாடு இரண்டு வேறுபட்ட வடிவங்களில் முதனூலாகக் கொள்ளப்பட்டுள்ளது. ரோமாபுரிக் கத்தோலிக்க மதம் யூதர்களின் பைபிளுடன் ஏழு வேறு நூல்களையும் சேர்த்துக் கொண்டுள்ளது. அவற்றில் சில நூல்கள் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட குறிப்புகள் மற்றும் கடிதங்கள். புரட்டஸ்டாண்டுகளின் பழைய ஏற்பாட்டில் யூத பைபிளில் உள்ள 39 நூல்கள் மட்டுமே உள்ளன. கத்தோலிக்க சபையால் சேர்க்கப்பட்ட நூல்கள் அபோகிரி:பா (பிற்சேர்க்கை) என்று புரட்டஸ்டாண்டுகளால் சொல்லப்படுகின்றன. ரோமாபுரிக் கத்தோலிக்கர்கள் அவற்றை மூலநூல்சேர்க்கை (ட்யூட்டரோ கானனிகல்) என்கிறார்கள்.

யூத பைபிள் மூன்று தனிப்பெரும் பிரிவுகள் கொண்டது. முதல்பகுதி தோரா (Torah) அல்லது சட்டம். இது மோஸஸின் புத்தகம் என்று சொல்லப்படுகிறது. நீபியம் (Nebiim) அல்லது வருநலமுரைப்போர் (தீர்க்கதரிசிகள்) என்ற பகுதி இரு பகுதிகளாக மேலும் பிரிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகால வருநலமுரைப்போர் முதல் பகுதியிலும் பிற்கால வருநலமுரைப்போர் இரண்டாம்பகுதியிலும் சொல்லப்பட்டுள்ளனர். கீடுபியம் (Ketubim) அல்லது மறைமொழிகள் பகுதியில் பாடல்கள், வருநலமுரைகள், மற்றும் சிறு நூல்கள் உள்ளன.

கிறித்தவ பழைய ஏற்பாடு உள்ளடக்க அடிப்படையில் நூல்களை தொகுத்துள்ளது. முதலில் வரலாற்று உள்ளடக்கம் கொண்ட நூல்கள். பெரும்பாலும் தோராவை சேர்ந்தவை. இரண்டாம் பகுதியில் அறிவுறுத்தும் நூல்கள் மற்றும் வழிபாட்டு நூல்கள். மூன்றாம் பகுதியில் வருநலமுரை நூல்கள். முறையே சென்றகாலம் நிகழ்காலம் மற்றும் வருங்காலத்துக்கான நூல்களாக இவை அமைக்கப்பட்டிருக்கலாம். புரட்டஸ்டாண்ட் பழைய ஏற்பாடு இதே அடுக்குமுறை கொண்டதே. ஆனால் யூத பைபிளில் உள்ள உட்கூறுகள் மட்டுமே இதில் சேர்க்கப்பட்டுள்ளன. புதிய ஏற்பாடு பைபிள் முக்கியமாக நான்கு இறைச்செய்திகள் (சுவிசேஷங்கள்) அடங்கியது. கிறித்தவத்தின் வரலாறும் அறக்கூற்றுகளும் புனித பவுல் முதலியோரின் கடிதங்களும் வருநலமுரைகளும் சேர்க்கப்பட்டது. பைபிளுக்கு உலகமெங்கும் மொழியாக்கங்கள் உண்டு, தொடர்ந்து புதிய மொழியாக்கங்கள் வந்தபடியும் உள்ளன.

மூலநூலும் சேர்க்கைகளும்

பைபிளின் மூலநூல் கேனன் (Canon) எனப்படுகிறது. எது மூலநூல், எந்த அடிப்படையில் என்பது எப்போதும் மாறுபாடுகள் கொண்டதாகவே உள்ளது. தேவாலய அமைப்பினால் உறுதிசெய்யப்பட்ட பகுதிகளே மூலநூல்கள் என்று அந்தந்த சபையினர் நம்புகிறார்கள். நீண்டகாலமாக கிரேக்க, லத்தீன் வடிவங்களை மூலநூல்களாக கருதும் போக்கு இருந்தது. அவையெல்லாம் மொழிபெயர்ப்புகளும் மறு ஆக்கங்களும் ஆகும். அராமிக் வடிவம்கூட மொழிபெயர்ப்பேயாகும். உண்மையில் இந்நூல்கள் எழுதப்பட்ட வடிவில் இன்று இல்லை. இவை எல்லா மொழிகளிலும் எளிய மக்களுக்கான 'முச்சந்தி' மொழியிலேயே மொழியாக்கம் செய்யப்பட்டன. பைபிளின் பலமொழிகளில் எழுதப்பட்ட பல்லாயிரம் தொல் கைப்பிரதிகள் இன்று கிடைக்கின்றன. இவற்றில் முக்கியமானவை ஏறத்தாழ 5000 இருக்குமென ஆய்வாளர் சொல்கிறார்கள். இவற்றில் மூல ஆசிரியரின் கைப்பிரதியாகக் கிடைப்பவை ஏதுமில்லை. கி.பி. 120140 காலகட்டத்தைச் சேர்ந்த புனித யோவானால் எழுதப்பட்ட சுவிசேஷத்தின் கைப்பிரதியே ஆகப் பழைமையானது. எப்போது முதன்முதலாக கிறித்தவ மூலநூல் அறிவிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரியவில்லை. புனித பவுல் தன் கடிதங்களையும் சில விவிலியப்பகுதிகளையும் மக்கள் கூடும் தேவாலய / வழிபாட்டிடங்களில் உரக்க வாசிக்கவேண்டும் என்று சொல்லியிருந்தார் என்று தெரிகிறது. ஆக பைபிளின் ஒருவடிவம் பவுல் அவர்களின் காலத்திலேயே முறைப்படுத்தப்பட்டுவிட்டது.

மூலநூல் சாராது எழுதப்பட்டு பைபிளுடன் இணைத்து வாசிக்கப்படும் பகுதிகளை அபாகிரி்பா (Apocrypha) என்பது மரபு. பிற்சேர்க்கைகள் மீண்டும் மீண்டும் உருவாகியுள்ளன. இதற்குக் காரணம் கிறித்தவத்தின் இறுக்கமான தேவாலய அமைப்புக்கு எதிராக உருவான பிற கிறித்தவ வழிபாட்டு முறைகளும் கோட்பாடுகளுமே. கிறித்தவத்தின் வரலாற்றில் இத்தகைய மீறல் மற்றும் முரண் போக்குகள் இல்லாத காலமே இருந்தது

இல்லை. நிகழ்காலத்திலும் ஏராளமான கிறித்தவ தனிமதங்கள் உள்ளன.

இறைச்செய்திகள் (சுவிசேஷங்கள்)

சுவிசேஷம் என்ற சொல் சுவிசேஷம் என்ற வடமொழி சொல்லாகும். நல்ல செய்தி என்று பொருள். காஸ்பல் (Gospel) என்ற சொல்லின் தமிழாக்கம் இது. இது என்பது இயேசுவின் கூற்றுக்கள் மற்றும் வரலாறு குறித்து எழுதப்பட்ட குறிப்புகளின் தொகை. பொதுவானதாக அங்கீகரிக்கப்பட்ட சுவிசேஷங்கள் நான்கு. மத்தேயு, மார்க்கு, லூக்கா, யோவான் ஆகியோரால் எழுதப்பட்டவை அவை. அவையே புதிய ஏற்பாடு என்று சொல்லப்படுகின்றன. ஆங்கிலச் சொல்லான காஸ்பல் என்பது கிரேக்கச் சொல்லான நற்செய்தி என்பதை ஒட்டி உருவாக்கப்பட்ட பழைய ஆங்கிலச்சொல்லான காட் ஸ்பெல் (godspel) என்பதன் மரூஉ.

அடிப்படை இறைச்செய்திகள் (Synoptic Gospels)

மத்தேயு, மார்க்கு, லூக்கா ஆகியோரால் இயற்றப்பட்ட முதல் மூன்று இறைச்செய்திகள் சினாப்டிக் சுவிசேஷங்கள் என்று சொல்லப்படுகின்றன. காரணம் அவை மூன்றும் கிட்டத்தட்ட ஒரே நோக்கில் இயேசுவின் செய்தியையும் வாழ்க்கையையும் கூறுகின்றன. ஏறத்தாழ சொற்களும் ஒரேபோல உள்ளன. இவையே அடிப்படை இறைச்செய்திகளாகச் சொல்லப்படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை பெரும்பாலான இறையியலாளர்கள் மத்தேயுதான் முதல் இறைச்செய்தியாளர் என்று நம்பினார்கள். மார்க்கின் இறைச்செய்தி மத்தேயு லூக்கா ஆகியோரின் இரு இறைச்செய்திகளின் சுருக்கப்பட்ட வடிவம் என்று எண்ணப்பட்டது. இன்றைய முடிவுகளின்படி மார்க்குதான் தொடக்க கால இறைச்செய்தியாளர். அவரே முதல்முதலாக இயேசு குறித்து எழுதியவர். மார்க்கின் இறைச்செய்தியே உண்மையில் பிற இறைச்செய்திகளுக்கான அடிப்படைக் கட்டுமானத்தையும் அளித்துள்ளது. அத்துடன் அராமிக் மொழியில் எழுதப்பட்ட பிற ஆவணங்களையும் மத்தேயு லூக்கா ஆகியோர் பயன்படுத்தியிருக்கலாம். இந்த மறைந்து போன மூலநூல் அல்லது மூலநூல்கள் Q என்று சொல்லப்படுகின்றன. ஜெர்மானிய மொழியில் மூலம் என்று பொருள் படும் Quelle என்ற சொல்லின் சுருக்கம் இது. அல்லது கிரேக்க மொழியில் கூற்று என்று பொருள்படும் லோஜியா Logia என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது.

புனித யோவானால் எழுதப்பட்ட இறைச்செய்தி முதல் மூன்றிலிருந்தும் பலபடியாக வேறுபடுகிறது. சினாப்டிக் இறைச்செய்திகளில் சொல்லப்பட்ட பல நிகழ்வுகள் முந்தைய இறைச்செய்திகளில் இல்லை. அவற்றில் உள்ள பல கூற்றுகள் இதிலும் இல்லை. முக்கியமான வேறுபாடு இயேசுவின் இறைக்கூற்றுகளை முன்வைக்கும் முறையில்தான் உள்ளது. சினாப்டிக் இறைச்செய்திகள் நீதிக்கதைகள் மற்றும் நன்மொழிகளின் வடிவில் இயேசுவின் கூற்றுகளை முன்வைக்கின்றன. ஆனால் யோவானின் இறைச்செய்தி நீளமான குறியீட்டுத்தன்மையும் ஆழமும் கொண்ட உரையாடல் மற்றும் விவாதங்களாக இயேசுவின் கூற்றுகளை சொல்கிறது. யோவான் இயேசுவை ஒரு புனிதராகவும் இறையுறவு கொண்ட மானுடராகவும் காட்டுகிறார். ஆனால் சினாப்டிக் இறைச்செய்திகள் அவரை இறைவனின் நேரடி தூதராக காட்டுகின்றன. யேசு அதிகமும் உலகியல் அறங்களில் நெறிகளை கச்சிதமான

சொற்களில் முன்வைப்பவராக சினாப்டிக் இறைச்செய்திகளில் காணப்படுகையில் யோவானின் இறைச்செய்தி மேலும் ஆன்மிகமானதாக உள்ளது. சினாப்டிக் இறைச்செய்திகளின்படி இயேசுக்கு அவரது வருகையின் நோக்கம் பின்னர்தான் அறிவிக்கப்பட்டது, விண்ணரசை நிறுவுதல். யோவான் கிறிஸ்து அதை முன்னரே சொல்வதாகக் காட்டுகிறார். யோவானின் இறைச்செய்தியை எழுதியவர் முந்தைய மூன்று இறைச்செய்திகளை அறிந்திருந்தாரா இல்லையா என்பது குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது.

இந்நான்கு இறைச்செய்தியாளர்களைத்தவிர வேறு இறைச்செய்தியாளர்கள் இருந்திருக்க வாய்ப்புண்டா? கண்டிப்பாக இருந்திருக்கலாம். இயேசுவின் மாணாக்கர்களில் பிறர் எழுதியிருக்கலாம், விளக்கியிருக்கலாம். அவை தொகுக்கப்படாமல் மறைந்து போயின என்று கொள்வதே முறை. தேவாலயம் நான்கு இறைச்செய்திகளை அடிப்படைச் செய்தியாகக் கொண்ட பிறகு பிற செய்திகள் புறனடைகளாகக் கருதப்பட்டிருக்கலாம். அவை தனி கோட்பாடுகளாக அல்லது வழிபாட்டு முறைகளாக புழங்கியிருந்திருக்கலாம். கிறித்தவத்துக்குள் இவ்வாறு புழங்கிய தனி போக்குகள் அல்லது மைய எதிர்ப்புப் போக்குகள் நாஸ்டிக் போக்குகள் என்று சொல்லப்பட்டன.

ஞானவாதம் (Gnosticism)

கிறித்தவ மதத்துக்குள் உருவான மைய எதிர்ப்பு போக்குகள் ஒட்டுமொத்தமாக இவ்வாறு சொல்லப்படுகின்றன. பொதுவான சில அடிப்படைகள் கொண்ட பல்விதமான மறைச்சமய இயக்கங்கள் இப்பெயரில் சுட்டப்படுகின்றன. கி.பி. 2 மற்றும் 3 ஆம் நூற்றாண்டுகளில் இப்போக்கு வலிமையாக இருந்தது. கிறித்தவ மைய மரபுக்கு முக்கியமான சவாலாக விளங்கியது. இச்சொல் கிரேக்கச் சொல்லான gnosis இல் இருந்து உருவானது. அதற்குப்பொருள் வெளிப்படுத்தப்பட்ட மறை. மண்ணுலகம் முற்றிலும் தீமைகளினால் ஆனது என்று சொன்ன இம்மதக்கோட்பாடு விண்ணிலிருந்து தூய அறிதல் மண்ணுக்கு ஒரு பொறியாக விழுந்தது என்றும் அதை உரியவர்கள் மறைவாக பகிர்ந்துகொள்ளவேண்டும் என்றும் சொன்னது. மறையறிவு என்பது அனைவருக்கும் உரியதல்ல, அதன்பொருட்டு பிற அனைத்தையும் உதறிவிட்டு மீள்பவர்களுக்கு மட்டுமே உரியது என்றனர் இவர்கள்.

இவர்களின் பிரபஞ்ச உருவாக்க கற்பனையானது சிக்கலானது. அரேபியா வழியாகக் கிடைத்த கீழை தேயத்து மெய்யியல்கூறுகளையும் கிரேக்க மரபின் அறிதல்களையும் ஒரு குறிப்பிட்ட வகையில் மறு ஆக்கம் செய்து உருவாக்கப்பட்டது. அறியமுடியாத மைய வல்லமையான கடவுளில் இருந்து பற்பல சிறு தெய்வங்கள் பிறந்தன. அதில் இருந்துதான் அறிதலுக்கான அன்னை தெய்வமான சோஃபியா பிறந்தாள். இவள்மூலம் முழுமுற்றான இறைவனை அறியவேண்டுமென்ற ஆவல் மண்ணில் உருவானது. இந்த தீய விருப்பின் காரணமாக தீமையின் தெய்வங்கள் உருவாயின. அத்தீய தெய்வங்களே பிரபஞ்சத்தை உருவாக்கின. அவையே மனிதர்களையும் படைத்தன. அவை மண்ணில் காமத்தையும் பகைமையையும் உருவாக்கி மனிதர்களை ஆண்டன. மண்ணில் இருள் சூழ்ந்திருந்தது.

இதை அறிந்த இறைச்சக்தியால் புனித அறிதலின் ஒளி மானுட மனங்களுக்கு இறக்கியருளப்பட்டது. பழைய ஏற்பாட்டில் உள்ள யகோவா என்ற கோபம் கொண்ட இறைவனை நாஸ்டிக் மதத்தவர் அந்த தீய தெய்வமாக எண்ணினார்கள். பாவத்தில் ஆழ்ந்து கிடந்த மானுடர்களை தண்டிக்கும்பொருட்டே அவர் இறைவனால் உருவாக்கப்பட்டார். இதன் அடிப்படையிலேயே இவர்கள் ஆதாம் ஏவாள் ஆகியோர் சுவர்க்க நீக்கம் செய்யப்பட்டது உள்ளிட்ட நிகழ்வுகளை விளக்கினர். இறைச்சக்தியின் மறைச்செய்தியை பெற்ற மானுடர் உலக வாழ்வில் இருந்து முற்றாக விலகி தனிமை நோன்பு மூலம் தங்கள் அகத்தை தூய்மைசெய்துகொண்டு இறைவனின் அருளைப்பெற வேண்டும்.

நாஸ்டிக் நம்பிக்கையாளர்களை கிறித்தவ தேவாலயம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் தங்களை கிறித்தவர்கள் என்றே எண்ணினார்கள். பைபிளுக்கு அவர்கள் தங்கள் நோக்கில் விளக்கங்களையும் தனி பைபிள்களையும் எழுதிக் கொண்டனர். தோமையரின் இறைச்செய்தி இவர்களால் எழுதப்பட்டது என்ற நம்பிக்கை உள்ளது. மக்தலேனா மரியை எழுதிய இறைச்செய்தி என்ற நூலும் இவர்களால் எழுதப்பட்டுள்ளது என்கிறார்கள். ஆனால் அது உண்மை அல்ல.

பொதுவாக நாஸ்டிக் நம்பிக்கையாளர்கள் சடங்குகள் சார்ந்த மரபான கிறித்தவ மதத்தை வெறுத்தார்கள். உண்ணா நோன்புகள் தனிமை நெறி தியானம் போன்றவற்றை முன்வைத்தார்கள். சிலர் உள்ளறிவை எழுப்பும் சடங்கு என்ற முறையில் புனித நீராட்டு சடங்கை மட்டும் செய்ததாகவும் தெரிகிறது. அன்றாட வாழ்க்கையை உதறி சமூகத்திலிருந்து பிரிந்து வாழ்வதென்பது இவர்களின் மத நம்பிக்கையில் மிகமிக முக்கியமானதாக இருந்தது. பிற்காலத்தில் பாடல்களை பாடி வழிபடுவது மற்றும் மந்திரச் சடங்குகள் ஆகியவை இவர்களிடம் குடியேறின. இவர்களில் இருந்து கிளைத்து வளர்ந்த பலநூறு வழிபாட்டுக்குழுக்களும் நம்பிக்கைமுறைகளும் உண்டு. கிறித்தவத்துக்குள் இத்தகைய மறைசமயக் குழுக்கள் என்றும் இருந்துள்ளன. இப்போதும் உள்ளன.

பிற்பாடு ரோமாபுரி கத்தோலிக்க கிறித்தவம் வலிமைபெற்றபோது நாஸ்டிக் மரபுகள் தொடர்ந்து வேட்டையாடப்பட்டு அழிக்கப்பட்டன. இம்மரபின் நூல்கள் நமக்கு இன்று கிடைப்பதில்லை. கத்தோலிக்க இறையியல் நூல்களில் நாஸ்டிக் நம்பிக்கைகளை எதிர்க்கும் பொருட்டு எடுத்துத் தரப்பட்டுள்ள ஏராளமான மேற்கொள்கள் மூலமே நாம் இவர்களைப்பற்றி அறிகிறோம். காலப்போக்கில் இவை சிறு ரகசியக் குழுக்களாக மாறி மறைந்தன. இன்று கிடைக்கும் முக்கியமான நாஸ்டிக் நூல்கள் காப்டிக் தேவாலயத்தைச் சேர்ந்தவை. காப்டிக் மொழியில் எழுதப்பட்டு எகிப்தின் நாக் ஹம்மாதி ஊரில் கிடைத்தவை.

கிடைத்துள்ள நாஸ்டிக் நூல்களில் இருந்து நாம் இம்மரபின் தோற்றம் குறித்தோ அல்லது இம்மரபின் மூல ஆசிரியர்களைப் பற்றியோ ஏதும் தெரிந்துகொள்ள இயல்வதில்லை. புறச்சமயத்தின் கோட்பாடுகள் கிறித்தவத்தில் ஊடுருவி இது உருவாயிற்று என்று பொதுவாக சொல்லலாம். பாரசீக துவைத மதங்களான மித்ரைஸம், ஜராதுஷ்டிரனிஸம் ஆகியவற்றினால் பாதிப்பு கொண்டு உருவான ஆரம்பகட்ட யூத நம்பிக்கைகள் சிரியா வழியாக ஐரோப்பாவில் ஊடுருவி

நாஸ்டிக் நம்பிக்கைகளை உருவாக்கின என்றும் சொல்லப்படுகிறது. இவர்களின் மதப்படிமங்களில் இச்செல்வாக்கு வெளிப்படையாகவே உள்ளது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நாஸ்டிக் அறிஞர்கள் பிளேட்டோவின் இலட்சியக் கருத்துமுதல்வாத நோக்குகளை ஆரம்பகட்ட கிறித்தவ மதக் கோட்பாடுகளுடன் இணைத்து தங்கள் கொள்கைகளை விரிவாக்கம் செய்ததாக தெரிகிறது. இதில் இரண்டாம் நூற்றாண்டு நாஸ்டிக் அறிஞர்களான வாலண்டினியஸ் மற்றும் அவரது மாணவரான டாலமீனியஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் கோட்பாடுகள் தனி மத அமைப்புகளாக மாறின. இரண்டாம் நூற்றாண்டில் ரோமாபுரி கத்தோலிக்க மதத்தில்கூட இவர்களின் செல்வாக்கு இருந்திருக்கிறது.

இரண்டாம் நூற்றாண்டில் சிரியாவில் நாஸ்டிக் நம்பிக்கையின் புதிய வளர்ச்சி நிலை உருவாயிற்று. இவர்கள் கிறித்தவ மதத்திற்குள் தியான முறையை உருவாக்க முயன்றனர். இருநிலைகளில் கத்தோலிக்க மதம் இச்சவாலை எதிர்கொண்டது. அது தன் கோட்பாடுகளை மேலும், மேலும் தர்க்க பூர்வமாக ஆக்கிக்கொண்டது. மண்ணுலகமே தீமை மிக்கது என்ற நாஸ்டிக் நம்பிக்கையை அது வலிமையாகத் தாக்கி மானுடர் இறைவனின் வடிவில் உருவாக்கப்பட்டவர்கள் என்ற கோட்பாட்டை வலிமையாக முன்வைத்தது. அது மக்களைக் கவர்ந்தது. மேலும் பிஷப்கள் என்ற மத அதிகாரிகளை உருவாக்கி கிறித்தவ உலகை சீரான நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்து தேவாலயத்தை வலிமைப்படுத்தினர். அவ்வாறாக உதிரி பிரசாரகர்களாக இருந்த நாஸ்டிக் மதத்தவர் அடக்கி ஒடுக்கி அழிக்கப்பட்டனர். மூன்றாம் நூற்றாண்டில் நாஸ்டிக் மதம் இல்லாமலாயிற்று.

இப்போதும் நாஸ்டிக் மரபைச்சேர்ந்த சிறிய ஒரு மத அமைப்பு ஈரானிலும் ஈராக்கிலும் உள்ளது. மண்டாயென்கள் (Mandaean) எனப்படும் இவர்கள் கடுமையாக ஒடுக்கப்படுகிறார்கள்.

தோமையரின் நற்செய்தி

தோமையர் எழுதிய சுவிசேஷம் என்ற இந்நூல் கண்டெடுக்கப்பட்ட வரலாறு சுவையானது. 1845 டிசம்பர் மாதத்தில் எகிப்தில் நாக் ஹம்மாதி என்ற கிராமத்தைச் சேர்ந்த அல்ஸமான் என்ற இனக்குழுவினரான முகம்மது அலி மற்றும் கலீ:பா அலி என்ற சகோதரர்கள் ஜபால் அல் டரிப் அன்ற மலைமுகடருகே இயற்கை எருவை மண்ணிலிருந்து வெட்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள். இது நாக் ஹம்மாதியில் இருந்து 11 கிலோமீட்டர் வடகிழக்காக அமைந்துள்ளது. அவர்கள் தோண்டும்போது சிவந்த மண்ணாலான ஒரு ஜாடியைக் கண்டடைந்தார்கள். கிட்டத்தட்ட 60 செ.மீ உயரமுள்ள பெரிய ஜாடி அது. அதற்குள் புராதனமான பாப்பிரஸ் சுவடிகள் இருந்தன.

அதிலிருந்த நூல்கள் அப்போது அங்கு இருந்த ஏழுபேரால் பங்கிடப்பட்டு எடுத்துக் கொள்ளப்பட்டன. சிலர் அவற்றை தொலைத்தாலும் முகமது அலி அவற்றை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தார். அவர் அதை உள்ளூரில் இருந்த காப்டிக் பாஸிலியஸ் அப்த் அல்மஸியா என்பவருக்கு கொடுத்தார். காப்டிக் தேவாலய மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க அங்கே தங்கியிருந்த ரகிப் அன்டிரவஸ் (Raghib Andrawus) என்பவர் அச்சுவடிகளின்

முக்கியத்துவத்தை உணர்ந்தார். அவர் அதை கெய்ரோவுக்குக் கொண்டு வந்தார். ரகிப் வந்த பின்னர் அவை ஆய்வாளர் கைக்கு வந்து சேர்ந்தன. 1946ல் அவை கெய்ரோ அருங்காட்சியகத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

ஜாடியில் இருந்த நூல்களில் பெரும் பகுதியை முகமது அலியின் தாய் கணப்புக்காக எரித்துவிட்டதாகத் தெரிகிறது. நெடுங்காலம் நாக் ஹம்மாதியில் கிடைத்த பல சுவடிகள் கெய்ரோவில் கள்ளச்சந்தையில் விற்கப்பட்டிருக்கின்றன. கெய்ரோவிலிருந்து அவை ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு யுங் இன்ஸ்டிடியூட் ஆ‌ஃப் ஸ்யூரிச்சில் வைக்கப்பட்டிருந்தன. பிற்பாடு அவை அச்சிட்டு வெளியிடப்பட்டபின் கெய்ரோ அருங்காட்சியகத்துக்கே கொடுக்கப்பட்டன. எகிப்தில் அதிபர் நாஸர் அதிகாரத்துக்கு வந்தபோது அவை தேசிய உடைமையாக்கப்பட்டன. இப்போது அவை கெய்ரோ காப்டிக் அருங்காட்சியகத்தில் உள்ளன.

இணையத்தில் இச்சுவடிகளைப்பற்றி ஏராளமான ஆராய்ச்சிகளும் விவாதங்களும் கிடைக்கின்றன. இன்று ஆய்வாளர்களின் ஆர்வத்தை மேன்மேலும் தூண்டும் ஒரு தளமாக இவை விளங்குகின்றன. செங்கடல் பகுதியில் கிடைத்த இதேபோன்ற சுவடிகளும் இந்நூல்களுடன் இணைத்து ஆராய வேண்டியவை. இவை செங்கடல் சுவடிகள் (Red Sea Scrolls) எனப்படுகின்றன.

இவை கி.பி. நாலாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாப்பிரஸ் சுவடிகள் என நிரூபிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 52 நூல்கள். பல நூல்கள் முதலில் கிரேக்க மொழியில் இருந்து காப்டிக் மொழிக்கு மொழியாக்கம் செய்யப்பட்டவை. இவற்றைப் பற்றிய தகவல்களை அறிய http://www.tertullian.org/rpearse/manuscripts/nag_hammadi.htm என்ற இணையப்பக்கத்தை வாசித்துப்பார்க்கலாம்.

எகிப்தில் அலக்ஸாண்டிரியாவை மையமாக்கி இருந்த கத்தோலிக்க தேவாலயம் காப்டிக் தேவாலயம் எனப்படுகிறது. இது பின்னர் ரோமாபுரி கத்தோலிக்க தேவாலயத்துடன் இணைந்து செயல்பட ஆரம்பித்தது. ஆனால் ஆரம்பத்தில் இது புனித தோமையரால் நிறுவப்பட்டு சுதந்திரமாக இயங்கியதாகச் சொல்லப்படுகிறது. காப்டிக் என்றால் கிரேக்க மொழியில் ‘எகிப்திய’ என்றுதான் பொருள்.

எகிப்து இஸ்லாமிய மயமானபோது காப்டிக் தேவாலயத்தின் வலிமை குன்றி அதன் தனித்தன்மை மறைந்தது. இந்திய சிரியன் கிறித்தவர்களும், மார்த்தோமா கிறித்தவர்களும் அலக்ஸாண்டிரியாவில் இருந்த காப்டிக் தேவாலயத்தையே நெடுநாள் தங்கள் தலைமையிடமாக கொண்டிருந்தார்கள். இப்போதுகூட ரோமாபுரிக் கத்தோலிக்க மதத்துடன் தொடர்பில்லாத தனித்த கத்தோலிக்க அமைப்புகளாகவே அவை இயங்குகின்றன. ரோமாபுரி கத்தோலிக்க தேவாலயத்தின் அங்கீகாரம் இல்லாவிட்டாலும் கூட தோமையரின் சுவிசேஷம் நெடுங்காலம் காப்டிக் தேவாலயத்தால் முதன்மைப்படுத்தப் பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

வரலாற்று ரீதியாக மிக விரிவான ஆய்வுகளும் விவாதங்களும் நிகழ்ந்துள்ளன. அவற்றை இணையம் மூலமே ஆழமாக பின் தொடர முடிகிறது. நாஸ்டிக் பைபிள்களில் தோமையரின் சுவிசேஷத்தை மட்டும் தத்துவ ஆய்வாளர்கள் கூர்ந்து ஆராய்கிறார்கள். வைது காட்டும் கிறிஸ்து

கத்தோலிக்க மதமும் புரட்டஸ்டாண்டு மதமும் காட்டும் கிறிஸ்துவிலிருந்து தெளிவாகவே மாறுபட்டிருக்கிறார். இவர் இறந்தபின் அடையப்பெறும் விண்ணுலகைப் பற்றி பேசவில்லை. மண்ணிலேயே அது எப்போதும் உள்ளது என்கிறார். அதைக் கண்டடைபவனே வீடுபேறு அடைபவன் என்கிறார். " நீங்கள் வரக்காத்திருப்பது எதுவோ அது ஏற்கனவே வந்துவிட்டது. ஆனால் நீங்கள்தான் அதை அடையாளம் காணவில்லை."

(கலைக்களஞ்சியங்களில் இருந்து)

4.2. புனித தோமையர் : ஓர் அறிமுகம்

இயேசுவின் மாணாக்கர்களில் முக்கியமானவரான புனித தோமையர் (St.Thomas) பற்றி விவிலியம் போதுமான அளவுக்கு செய்திகளை அளிப்பதில்லை. கத்தோலிக்க கலைக்களஞ்சியத்தில் தேடினால் தோமையரைப்பற்றி மிகச்சில குறிப்புகளே காணப்படுகின்றன. தோமையரின் பெயர் திருச்சபை அங்கீகரித்த நான்கு இறைச்செய்திகளிலும் மீண்டும் மீண்டும் வருகிறது. அவரது தெளிவான சித்திரத்தை அளிப்பது நான்காவது இறைச்செய்தியாளரான யோவானில்தான். இவர் தாமஸ் யூதாஸ் திதியோன் என்று சொல்லப்படுகிறார். இரட்டையரில் ஒருவன் என்ற பொருளில் (இது சமஸ்கிருதத்தில் இருந்து பெறப்பட்ட சொல். துவம் என்றால் இரண்டு).

தோமையர் யோவானின் இறைச்செய்தியில் இயேசு மேல் அழுத்தமான பிடிப்பும் துணிவும் கொண்ட முதல் மாணாக்கராகச் சொல்லப்படுகிறார். இயேசு லாஸரசை காணும் பொருட்டு ஜுதேயாவுக்கு மீண்டும் செல்லும் நோக்கத்தை அறிவித்தபோது இவர்தான் மற்ற மாணவர்களிடம் “நாமும் கூடவே செல்வோம். ஒருவேளை நாமனைவருமே கொல்லப்படலாம்”என்று சொன்னார்.(யோவான் எழுதிய இறைச்செய்தி 1116). மேலும் தோமையர் எளிதில் நம்பிவிடாதவராகவும் தருக்கம் சார்ந்து எதையும் ஆராய்பவராகவும் இருந்தார். இவரே யேசுவின் இறுதி உணவின்போது அவர் மீது ஐயத்தை எழுப்பினார். தோமையர் யேசுவிடம் சொன்னார். “கர்த்தரே நீங்கள் ஆவியா அல்லவா என்று நாங்கள் அறியோம். அதை நாங்கள் எப்படி தெளிவுபடுத்திக் கொள்வது?” (யோவான் எழுதிய இறைச்செய்தி 14:5).

ஆனாலும் தாமஸ் கிறிஸ்து உயிர்த்தெழுந்து வந்தபோது கேட்ட கேள்வியால்தான் வரலாற்றில் நிற்கிறார். “அவரது கைகளில் ஆணி அறையப்பட்ட துளைகளை கண்ணால் கண்டு அவற்றில் என் விரல்களை விட்டாலொழிய நான் அதை நம்பமாட்டேன்” என்று அவர் அடம்பிடித்தார். (யோவான் எழுதிய இறைச்செய்தி 20:25) ஆனால் எட்டு நாட்கள் கழித்து அவர் விசுவாசம் பெற்றார். அதற்காக யேசு அவரைக் கடிந்துகொண்டார். “நீ என்னைக் கண்டதனால் என்னை நம்பினாய் தாமஸ். ஆனால் காணாமலேயே நம்பியவர்கள் எவரோ அவர்களே அருள்கூரப்பட்டவர்கள்” (யோவான் எழுதிய இறைச்செய்தி 20:29). இக்காரணத்தால் இவர் ஐயப்பட்ட தாமஸ் (Doubting Thomas) என்று அழைக்கப்பட்டார். மேலைநாடுகளில், குறிப்பாக புரட்டஸ்டண்ட் மதத்தில், தோமையர் ஒரு படி குறைந்தவராகவே இனம் காணப்படுகிறார்.

தாமஸ் என்ற பெயர்குறித்தே ஏராளமான கிறித்தவ இறையியல் சார்ந்த ஊகங்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் முதன்மையான ஆவணம் என்பது கிரேக்க மொழியிலும் சிரிய மொழியிலும் சிற்சில பாடபேதங்களுடன் பேணப்பட்டுவரும் ‘தோமையரின் செயல்பாடுகள்’ (Acta Thomae) முக்கியமான ஆவணமாகும். அது பார்டசேன்ஸ் எழுதியதாக இருக்கலாம் (Bardesanes). கி.பி. 220க்கு முன்பாக எழுதப்பட்ட இவ்வாவணம் ஹரானக் (Harnack) ஆல் தன் குறிப்புகளில் (Chronologie, ii, 172) சான்றளிக்கப் பட்டுள்ளது. ஆனால் இதன் உண்மையான பிறப்பிடம் எடேசா (Edessa) ஆகும். அங்கு

தாமஸ் கீழைநாட்டில் கொல்லப்பட்டபின் கொண்டுவரப்பட்ட எலும்புகள் வைக்கப்பட்டு வணங்கப்பட்டதாகத் தெரிகிறது. இது தோமையரின் எலும்புகள்தான் என்பதற்கான ஆதாரம் என்னவெனில் அவர் இரு இடங்களில் யேசுவின் இரட்டைச் சகோதரர் ஆக குறிப்பிடப்படுகிறார் என்பதே. யூதாஸ் தாமஸ் என்று சிரிய மொழியில் சொல்லப்படும் தாமஸ் கிரேக்க மொழியில் திதிமோஸ் (இரட்டையர்) என்று சொல்லப்படுகிறார். இவை ஒரே பொருள் கொண்டவை.

இறையியலாளரான ரெண்டல் ஹாரிஸ் இந்த எலும்பு வழிபாடானது எடெஸாவில் இருந்த ஏதோ புறச்சமய (pagan) வழிபாட்டு முறையானது கிறித்தவத்துக்குள் ஊடுருவியதன் விளைவு என்கிறார். அவர் எடெஸாவிற்கு தாமஸின் எலும்புகள் வந்தது குறித்து கூறும் கதை இது. கிறிஸ்துவின் இறப்புக்குப் பின்னர் அவரது மாணாக்கர்கள் உலகைப் பகுத்துக்கொண்டு சமயப்பரப்புநர்களாக (அப்போஸ்தலர்) கிளம்பியபோது தாமஸின் கணக்குக்கு வந்தது இந்தியா. தாமஸ் இந்தியா செல்ல விரும்பவில்லை. அப்போது ஆவி வடிவில் வந்த யேசு அபான் (Abban) என்ற இந்தியக்கப்பலில் தோன்றி அதன் உரிமையாளரான குந்த ஃபார் (Gundafor) என்ற மன்னனுக்கு தாமஸை ஆசாரி வேலைசெய்யும் அடிமையாக விற்கச்செய்தார். அவ்வாறாக தாமஸ் அன்டிராபாலிஸ் (Andrapolis) என்ற இந்திய துறைமுகத்துக்கு வந்துசேர்ந்தார். அங்கு அவர் மன்னனுக்கு ஓர் அரண்மனை கட்டும் பணியில் அமர்த்தப்பட்டார். அப்பணத்தை தாமஸ் ஏழைகளுக்கு செலவழித்தார். மன்னன் அவரை சிறையிலடைக்க அவர் யேசுவின் அருளால் தப்பினார். அந்த அற்புதத்தை அறிந்த குந்த ஃபார் மதம் மாறி கிறித்தவர் ஆனார். அங்கே பலரை மதம் மாற்றியபின் தாமஸ் இன்னொரு நாட்டுக்குச் சென்றார். போகும் வழியில் பலவிதமான மாயமிருகங்களையும் பேய்களையும் அவர் சந்தித்தார்.

மிஸ்தாய் (Misdai சிரிய மொழியில் Mazdai) என்ற மன்னனின் நாட்டுக்கு அவர் வந்து சேர்ந்தார். அவனது மனைவி டெரிஷியாவையும் மகன் வாஸனையும் (Tertia/ Vazan) அவர் மதம் மாற்றினார். ஆகவே அவர் சிறைப்பிடிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். நகர் அருகே இருந்த குன்றுக்கு அவர் கொண்டுசெல்லப்பட்டு கொல்லப்பட்டார். அவரது சடலம் புராதன மன்னர்களின் கோபுரத்தின்கீழ் அடக்கம் செய்யப்பட்டது. பிற்பாடு அவரது ஆதரவாளர்களால் அவரது எலும்புகள் தோண்டி எடுக்கப்பட்டு எடெஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இங்கு குறிப்பிடப்படவேண்டிய விஷயம் என்னவென்றால் கி.பி. 46ல் இமைய மலைக்கு தெற்கே ஆ ஃப்கானிஸ்தான், பலுசிஸ்தான், பஞ்சாப் மற்றும் சிந்த் பகுதியை ஆண்டிருந்த மன்னனின் பெயர் கோண்டோ ஃபெர்னிஸ் என்று கிரேக்க மொழியிலும் குது ஃபாரன் என்று அம்மொழியிலும் சொல்லப்பட்டது. (Gondophernes/Gudupharan). நாணயங்கள் மூலமும் கிரேக்க தொன்மக்கதைகள் மூலமும் இது ஓரளவுக்கு உறுதிசெய்யப்பட்டுள்ளது. அந்தப் பகுதியின் மொழியான காரோஸ்தி (Kharoshthi)யிலும் ஐதீகங்கள் காணப்படுகின்றன. இது ஏற்கனவே கண்ட மன்னன்தான் என்பதில் பெரிதும் விவாதமில்லை. தக்த் இ ஃபாய் (Takht i Bahi) கல்வெட்டுகளின்படி அம்மன்னன் கி.பி. 20 முதல் கி.பி. 46 வரை ஆண்டான் என்பது நிபுணர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மிஸ்தாய் என்பது இந்துப் பெயர் ஈரானிய மொழிக்கு மாறியதாக இருக்கலாம்.

அப்படியானால் அது மதுராவை ஆண்ட வாசுதேவன் ஆக இருக்கலாம். கனிஷ்கருக்கு அடுத்தபடியாக பட்டத்துக்கு வந்த மன்னர் அவர். சிலபெயர்கள் பொருளில்லாதபடி உருவாக்கப்பட்டவையாகவும் இருக்கலாம்.

ஆனால் தோமையர் இந்தியாவின் தெற்கே மேற்குக்கடற்கரைக்கு வந்தார் என்றும் இங்கேயே கொல்லப்பட்டார் என்றும் மிகத் தீவிரமான நம்பிக்கை உள்ளது. 1955 டிசம்பர் 18 ல் இந்திய தலைநகர் டெல்லியில் தோமையர் தினம் கொண்டாடப்பட்டபோது அப்போதைய இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் சொன்னார் “புனித தோமையர் இன்று கிறித்தவ நாடுகளாக இருக்கும் பல நாடுகள் தோன்றுவதற்கு முன்னரே இந்தியக்கடற்கரைக்கு வந்தார். அவரிடமிருந்து தங்கள் கிறித்தவப் பாரம்பரியத்தை தொடங்கும் இந்திய கிறித்தவர்கள் ஐரோப்பிய நாட்டுக் கிறித்தவர்களை விடவும் பழைமையானவர்கள்.”

தோமையர் இந்தியா வந்து பத்தொன்பது நூற்றாண்டு தொடங்குவதை ஒட்டிய கொண்டாட்டத்தின் பகுதியாக புனித பாப்பரசர் பன்னிரண்டாம் பயஸ் 1952 டிசம்பர் 31ல் அனுப்பிய ரேடியோ செய்தியில் இவ்வாறு சொன்னார். “புனித தோமையர் இந்தியா வந்து 1900 வருடங்கள் தாண்டிவிட்டன. பிந்திய பல நூற்றாண்டுக்காலம் இந்தியா மேற்கிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்தியா தன்னுடைய முதல் அப்போஸ்தலரின் பாரம்பரியத்தை பேணிக்கொண்டது. இந்த அப்போஸ்தலரின் வழித்தோன்றல்களாக இன்று இந்தியாவில் உள்ள தோமையர் கிறித்தவ மக்களுக்கு எங்கள் சபையின் வாழ்த்துக்கள்.”

ஆனால் தோமையர் இந்தியா வந்தது உண்மையா என்ற ஐயம் வலுவானதே. காரணம் ஒன்று தோமையரின் வருகை இன்றும் ஓர் ஐதீகக் கதையாகவே உள்ளது. தோமையரின் வருகைக்கு ஆதாரமாகக் காட்டப்படும் எல்லா அமைப்புகளும் காலத்தால் மிகவும் பிற்பட்டவை.

மரபான நம்பிக்கைகளின்படி யேசுவின் 12 சீடர்களில் ஒருவரான புனித தோமையர் கி.பி. 52ல் இந்தியாவுக்கு வந்தார். கேரளத்தில் அன்றிருந்த முக்கிய துறைமுகமான கொடுங்கல்லூரில் இறங்கினார். இது கொடுங்கோளூர் என்றும் வஞ்சி என்றும் அழைக்கப்பட்டிருந்த துறைமுகம். சேரர்களின் பண்டைய தலைநகரம். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு கோயில் எடுத்த இடம் இதுவே என்று ஆதாரபூர்வமாக சொல்லப் படுகிறது. அந்த கண்ணகி ஆலயமே இன்றுள்ள கொடுங்கல்லூர் தேவி கோயில் என்று வரலாறு கூறுகிறது. தோமையர் கேரள பிராமணர்களுக்கு யேசுவின் நற்செய்தியைச் சொன்னார் என்றும் அவர்களில் பலர் மதம் மாறினார்கள் என்றும் கூறப்படுகிறது. அவர் ஏழு திருச்சபைகளை கேரள மண்ணில் உருவாக்கினாராம். அவை முறையே கொடுங்கல்லூர், கோட்டக்காவு, பாலயூர், கொல்லம், கோக்கமங்கலம், நிரணம் சேறயில் ஆகியவை. அவர் மலயாற்றூர் குன்றுகளுக்கு வந்து ஜெபம் செய்யும் பழக்கம் கொண்டிருந்தார் என்றும் சொல்லப்படுகிறது. அதன் பின் அவர் கிழக்குக் கடற்கரைக்கு இடம் பெயர்ந்தார். கி.பி. 72ல் அவர் சென்னைக்கு அருகே உள்ள புனித தோமையர் குன்று என இன்று அழைக்கப்படும் குன்றில் வாழ்ந்தபோது ஒரு மதவெறியனால் கொல்லப்பட்டார். அவரது உடல் மைலாப்பூருக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கே அவர் அடக்கம் செய்யப்பட்டார். இன்றும் அவரது சமாதி அங்கே

வழிபடப்படுகிறது.

உண்மையில் தோமையர் வந்திருக்க வாய்ப்புள்ளதா? உண்டு. அன்றைய கேரளக் கடற்கரைக்கும் மத்திய ஆசியாவுக்கும் இடையே நெருக்கமான உறவு இருந்தது. யவனர்களும் அராபியர்களும் தொடர்ந்து வணிக நோக்கத்துடன் கேரளத்துக்கு வந்தபடி இருந்தனர். இக்கடற்கரையில் இன்றும் குவியல் குவியலாக நாணயங்கள் கிடைத்தபடியுள்ளன. அதிகமும் ரோமாபுரி நாணயங்கள். அதற்கும் முன்பு கி.மு. 970 முதல் 930 வரை ஆண்ட இஸ்ரேலரின் சாலமோன் மன்னரின் மரக்கலங்கள் கேரளக் கடற்கரைக்கு வந்தபடி இருந்தன. அதற்கு புராதன பழைய ஏற்பாடு பைபிளிலேயே ஆதாரங்கள் உள்ளன. முசிரிஸ் என்று அப்போது குறிக்கப்பட்ட கொடுங்கல்லூரில் இருந்து முத்தும் மணிகளும் கொண்டுவரப்பட்டு மன்னருக்குப் படைக்கப்பட்டன. கேரளக்கடற்கரையிலிருந்து பெறப்பட்ட மிளகு முதலிய நறுமணப்பொருட்கள் அக்காலம் முதலே ஐரோப்பாவுக்கும் மத்திய ஆசிய நாடுகளுக்கும் மிகமிக பிரியமானவையாக இருந்தன. ரோமாபுரி பயணியும் வரலாற்றாசிரியருமான ப்ளினி (கி.மு. 2379) ஒவ்வொரு வருடமும் பொன்னாகவும் மணியாகவும் பெருஞ்செல்வம் கேரளத்துக்குச் செல்வதைப்பற்றி வருந்தி எழுதியிருக்கிறார். மலபார் பகுதிக் கப்பல்கள் பாரசீக வளைகுடா கடந்து சென்று வணிகம் செய்வதைப் பற்றியும் அவர் எழுதியுள்ளார். ப்ளினியைப் போலவே டாலமி (கி.மு. 100160) மற்றும் பெரிப்ளூஸ் ஆகியோரும் சேரக்கடற்கரைக்கு மேலைநாடுகளுடன் இருந்த நெருக்கமான உறவைப்பற்றி எழுதியுள்ளனர். முதல் நூற்றாண்டுமுதலே கேரளத்தில் மட்டாஞ்சேரி என்ற இடத்தில் யூத குடியிருப்புகள் உருவாகிவிட்டன. சமீபகாலம் வரை யூதர்கள் ஒரு தனிச்சமூகமாக அங்கிருந்தனர். அவர்களின் கோயிலும் (சினகாக்) அங்குள்ளது.

இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டிருக்க வாய்ப்புள்ள யூதாஸ் தாமஸ் குறிப்புகளின் படி முதல் நூற்றாண்டின் இறுதியில் புனித தோமையர் தன் சுவிசேஷங்களை குண்டபேர்ஸ் என்ற பார்த்திய மன்னரின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் செய்துகொண்டிருந்தார். (Gundaphares,Parthian). பாண்டிய மன்னரின் நிலமா இது என ஆராயலாம். இலக்கிய ஆதாரங்கள் தவிர இன்றும் எஞ்சும் தோமையர் மரபு கிறித்தவர்களின் (மார்த்தோமா கிறித்தவர்கள்) சமூகம் அவரது வருகைக்கான சிறந்த ஆதாரமாகும். இவர்கள் பாலையூர், அர்த்தாடு, நிலம்பூர் ஆகிய பகுதிகளில் இருந்து கேரளம் முழுக்க பரவினார்கள். மயிலாப்பூரில் உள்ள தோமையரின் சமாதியும் பறங்கிமலை கோயிலும் இன்றும் உள்ளவை. இப்புனித அப்போஸ்தலரின் எலும்புகள் எடெஸ்ஸா என்ற ஊருக்குக் கொண்டுசெல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

ஈஸிஃபஸ் (Eusebius, கி.பி. நாலாம் நூற்றாண்டு) புனித ஜெரோம் (St. Jerome, கி.பி.342420) ஆகியோரின் குறிப்புகளில் பாண்டேனியஸின் (Pantaenus) பயணம் பற்றி சொல்லப்பட்டுள்ளது. இவர் அலக்ஸாண்டிரியாவின் பிஷப் டிமிட்றியஸ் மூலம் இந்தியாவின் பிராமணர்களுக்கு கிறித்தவ மதத்தை கற்பிக்கும்பொருட்டு அனுப்பப்பட்டவர். கி.பி. 190ல் எழுதப்பட்ட இக்குறிப்புகளில் சில மேலதிக ஆதாரங்கள் கிடைக்கின்றன. மேலைக்கடற்கரையில் வாழ்ந்த தோமையர் மரபு கிறித்தவர்களைப்பற்றி இவற்றில் சொல்லப்பட்டுள்ளது. புனித எஃப்ரம் (St. Ephrem கி.பி. 306373) புனித

கிரிகோரி (St. Gregory of Nazianze கி.பி. 324390) புநித அம்புரோஸ் (St. Ambrose கி.பி. 333397) புனித ஜெரோம் (St.Jerome ஆறாம் நூற்றாண்டு) புனித கிரிகோரி (St. Gregory of Tours ஆறாம் நூற்றாண்டு) ஆகியோரின் குறிப்புகளிலெல்லாம் இந்தியாவில் கிறித்துவம் இருந்தமைக்கான சான்றுகளும் தோமையர் பற்றிய குறிப்புகளும் உள்ளன என்று சொல்லப்படுகிறது.

ஆனால் தாமஸ் இந்தியாவில் ஊழியம்செய்தார் என்பதற்கோ கணிசமான இந்தியக் கிறித்தவர்கள் நம்புவதுபோல அவர் மேற்குக் கடற்கரையில் இறங்கி கிழக்குக் கடற்கரையில் இறந்தார் என்பதற்கோ அவரை சென்னை மைலாப்பூருடன் தொடர்புபடுத்துவதற்கோ உறுதியான சான்றுகள் ஏதுமில்லை என்று சொல்லும் ஆய்வாளர்களும் உள்ளனர். எஃப்ரம் சிரியக், புனித கிரிகோரி, புனித அம்புரோஸ், புனித ஜெரோம், ஆகியோர் இதைப்பற்றிய மேலோட்டமான குறிப்புகளை விட்டுச்சென்றிருந்த போதும் கூட அவை போதுமான ஆதாரங்களாக இல்லை. ஆனால் சென்னை பறங்கிமலை அல்லது புனித தோமையர் மலையில் கல்லாலான ஒரு சிலுவை உள்ளது. இதில் ப்லாவி (Pahlavi) என்னும் தொன்மையான பெர்சியன் மொழியில் அமைந்த கல்வெட்டு உள்ளது. இது ஏழாம்நூற்றாண்டுக்கு முற்பட்டது. சிரிய மொழிச்சடங்குகளையும் சிரிய வேர்களையும் கொண்ட ஒரு கிறித்தவ சமூகம் மேலைக்கடற்கரையில் காணப்படுவதும் உண்மையே. இவர்கள் சிரியன் கிறித்தவர்கள் எனப்படுகின்றனர். இந்த சர்ச் உண்மையிலேயே புனித தாமஸ் அவர்களால் உருவாக்கப்பட்டதா என்பது இன்னும் குழப்பமானதே.

கி.பி. 325ல் நடந்த நைஸியா கவுன்ஸிலில் (Council of Nicea) சிரியகால்டியன் பிஷப் ஒருவர் இந்தியா மற்றும் பாரசீகத்துக்கான பிஷப்பாக கலந்துகொண்டமைக்கு சான்று உள்ளது. அப்போதே இந்தியாவில் கிறித்தவர்கள் இருந்திருக்கக் கூடும். ஆனால் அவர்கள் தாமஸ் அவர்களால் மதம் மாற்றப்பட்டவர்களா? கி.பி. 745ல் தாமஸ் கானா (Thomas Cana) என்னும் போதகரின் தலைமையில் ஒரு சிரிய மதமாற்றக்குழு கேரளக்கடற்கரையில் பணியாற்றியுள்ளது. அவர் பெயரைத்தான் புனித தோமையர் என்று இங்குள்ள கிறித்தவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். அவர் கேரள மரபில் க்னாயி தொம்மன் என்று சொல்லப்படுகிறார். இவ்வாறு இவ்விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது. வரலாற்றாதாரங்களை விடவும் நம்பிக்கைகளுக்கே இங்கு அதிக முக்கியத்துவம் உள்ளது.

கத்தோலிக்க சபையால் உறுதியாகச் சொல்லப்பட்ட சாத்தியமான தகவல் என்னவென்றால் ஆறாம் நூற்றாண்டு அளவில் காஸ்மோஸ் இண்டிகோப்லெய்ஸ்டஸ் (Cosmas Indicopleustes) மலபார் கடற்கரையில் (Male) கிறித்தவர்கள் இருந்தனர். அவர்களின் பிஷப் பாரசீகத்தில் பட்டமேற்றார் என்று குறிப்பிடுவதாகும். தோமையரின் எலும்புகள் நாலாம் நூற்றாண்டுவரை எடெஸ்ஸாவில் இருந்தன என்பதற்கு சான்று உள்ளன. அவை அங்கிருந்து சியோஸ் (Chios)க்கு 1258ல் கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து ஒர்டொனா (Ortona)வுக்கு கொண்டுசெல்லப்பட்டதாக ஆதாரபூர்வமாகச் சொல்ல முடியும். ஒரு தவறான புரிதலின் அடிப்படையில் தாமஸ் அமெரிக்காவுக்குச் சென்றதாக சிலர் நம்புகிறார்கள்.

ஆக்டா தோமா (Acta Thomae) வின் சுருக்கமான வடிவம் எதியோப்பிய

மொழியிலும் லத்தீனிலும் உள்ளது. தோமையரின் சுவிசேஷம் என்ற வடிவில் எகிப்தில் காப்டிக் மொழி வடிவில் கிடைத்துள்ள நூலை கத்தோலிக்க திருச்சபை அங்கீகரிக்கவில்லை. தோமையரின் வெளிப்பாடுகள் (Revelatio Thomae) என்ற பேரில் கிடைக்கும் நூல் பாப்பரசர் கெலசியஸ் (Pope Gelasius) அவர்களால் இறைமறுப்பு என்று விலக்கப்பட்டது. அதன் பல சிதைந்த வடிவங்கள் இப்போது பல இடங்களில் கிடைக்கின்றன.

ஆய்வாளர்களைப் பொறுத்தவரை புனித தோமையர் யார், அவர் இந்தியாவுக்கு வந்தாரா, இல்லையென்றால் கிழக்கே வந்த அவர் உண்மையில் எங்கு கிறித்தவச் செய்தியை பரப்பினார் என்பதெல்லாம் இன்றும் மர்மங்களே. அவரது இறைச்செய்தி பிற்பாடு கிறித்தவ தேவாலய அதிகார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட இறைச்செய்திகளிலிருந்து தத்துவார்த்தமாக மாறுபட்டிருந்தது என்று இப்போது தெரிகிறது. அதனால்தான் அவர் வரலாற்றில் இருந்து மறைந்து போனாரா என்ன?

(கலைக்களஞ்சியங்களில் இருந்து)

4. 3. மறைக்கப்பட்ட பைபிள் : தோமையர் எழுதிய சுவிசேஷம்

உயிர் வாழும் கிறிஸ்துவால் சொல்லப்பட்டதும் திதிமோஸ் யூதாஸ் தாமஸ் எழுதியதுமான ரகஸிய வசனங்கள் இவை:

1. அவர் மீண்டும் "இவ்வசனங்களின் யதார்த்தத்தை கண்டுபிடிப்பவன் இறப்பதில்லை" என்று சொன்னார்.
2. யேசு சொன்னார் : "தேடுபவன் கண்டடைவது வரை தேடுவானாக! கண்டடையும்போது அவன் அமைதியிழக்கிறான். அமைதியிழக்கும்போது அவன் ஆச்சரியப்படவும் அனைத்தையும் வென்றடக்கவும் செய்வான்."
3. யேசு சொன்னார்: "உங்கள் மீட்பர்கள் உங்களிடம் 'இதோ பரலோகம் வானிலிருக்கிறது " என்று சொல்வார்களெனில் வானத்துப் பறவைகள் உங்களுக்கு முன்பாகச்செல்லும். அவர் உங்களிடம் "அது சமுத்திரத்தில்" என்று சொல்வார்களெனில் மீன்கள் உங்களுக்கு முன்பாகச் செல்லும். உண்மையில் பரலோகம் உங்களுக்குள் இருக்கிறது. அது உங்களுக்கு வெளியேயும் உள்ளது. நீங்கள் எப்போது உங்களை அறிகிறீர்களோ அப்போது நீங்கள் அறியப்படுபவர்கள் ஆவதுடன் வாழும் பிதாவின் மைந்தர் நீங்களே என புரிந்துகொள்ளவும் செய்வீர்கள். ஆனால் நீங்கள் உங்களை அறியவில்லையென்றால் நீங்கள் வறுமையில் வசிக்கிறீர்கள். அவ்வறுமையே நீங்கள்தான்."
4. யேசு சொன்னார்: வயது முதிர்ந்து கிழவனான ஒருவன் ஏழுநாள் மட்டுமே வயதான சிசுவிடம் வாழ்க்கையைப்பற்றி பயிலத் தயங்கவில்லையெனில் அவன் வாழ்வான். ஏனெனில் முன்னே செல்லும் பலரும் பின்தங்கவும் அவர்கள் ஒருவராக ஆகவும் நேரக்கூடும்.
5. யேசு சொன்னார்: உங்கள் கண்முன்னால் இருப்பதை அங்கீகரியுங்கள். உங்களில் இருந்து மறைந்திருப்பதும் அப்போது உங்களுக்கு தெளிவாக தெரியவரும். ஏனெனில் மறைந்திருப்பது எதுவும் வெளிப்படாது போவதில்லை .
6. சீடர்கள் அவரிடம் "நாங்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ளவேண்டுமென நீ சொல்வாயா? நாங்கள் எப்படி பிரார்த்திப்பது? நாங்கள் தானங்கள் செய்யவேண்டுமா? என்னென்ன விரதங்கள் கடைப்பிடிக்கவேண்டும்?" என்று கேட்டார்கள். யேசு அவர்களிடம் "பொய் சொல்லாதிருங்கள். நீங்கள் வெறுப்பதை ஒருபோதும் செய்யாதிருங்கள். ஏனெனில் சொர்க்கத்தின் பார்வைக்கு எல்லாமே தெள்ளத்தெளிவாகத் தெரியும். எவ்வாறெனில் மறைந்திருக்கும் யாதொன்றும் வெளிப்படாமலோ மூடப்பட்ட்ட யாதொன்றும் திறக்கப்படாமலோ இருப்பதில்லை" என்றார்.
7. யேசு சொன்னார்: "மனிதனால் உள்வாங்கப்பட்டு மனிதனாக மாறும் சிங்கம் ஆசிர்வதிக்கப்பட்டதாகிறது. மனிதன் சிங்கத்தால் உள்வாங்கப்பட்டு சிங்கம் மனிதனாக ஆகுமென்றால் அந்த மனிதன்

சபிக்கப்பட்டவனாகிறான்.”

8. அவர் மீண்டும் சொன்னார்: “ மனிதன் கடலில் வலைவீசும் ஒரு அறிவுள்ள மீனவனைப்போன்றவன். வலை நிரம்ப சிறு மீன்களை அவன் பிடித்தான். அவற்றுக்கு இடையில் அறிவுள்ள மீனவன் ஒரு பெரியமீனையும் கண்டான். எந்தச் சிரமமும் இன்றி அந்த அறிவாளியான மீனவன் பெரியமீனை தேர்ந்தெடுத்த பிறகு சிறிய மீன்களையெல்லாம் கடலுக்கே திருப்பி வீசிவிட்டான். கேட்க செவி உடையவர்கள் கேட்பார்களாக!”

9. யேசு சொன்னார்: “விதைப்பவன் ஒரு கைமுழுக்க விதைகளை எடுத்துக் கொண்டுசென்று விதைத்தான். சில விதைகள் வழியிலே விழுந்தன. பறவைகள் அவற்றை உண்டன. சில விதைகள் பாறை மீது விழுந்தன. அவை வேர்விடவோ தளிர்க்கவோ கதிர்கொள்ளவோ செய்யவில்லை. சில விதைகள் முட்களுக்கிடையே விழுந்தன. முட்கள் அவற்றை நெருக்கின. புழுக்கள் அவற்றை தின்றன. சில விதைகள் நல்ல மண்ணில் விழுந்து நல்ல கதிர்களை முளைக்கவைத்தன. அவை அறுபது பங்கும் நூற்றியிருபது பங்கும் விளைந்தன.”

10. யேசு சொன்னார்: “நான் உலகத்தின்மீது நெருப்பை விதைத்திருக்கிறேன், கண்திறந்து காணுங்கள். அது பரவும் வரை அதை நான் பேணுகிறேன்.”

11. யேசு சொன்னார்: “இந்த சொர்க்கம் அகன்று போகும். அதன் மீதுள்ளவையும் அகன்று போகும். மரித்தவர் உயிர்வாழ்வில்லை , உயிர்வாழ்பவர் மரிப்பதுமில்லை. நீங்கள் மரித்தவற்றை உள்வாங்கும்போது அவற்றை உயிருள்ளவையாக ஆக்குகிறீர்கள். நீங்கள் ஒளியில் வாழ நேரும்போது என்ன செய்வீர்கள்? நீங்கள் ஒன்றாக இருந்த நாளில் நீங்கள் இரண்டாக ஆகிறீர்கள். ஆனால் நீங்கள் இரண்டாக ஆகும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?”

12. சீடர்கள் யேசுவிடம் : “நீ எங்களை விட்டுவிட்டுப் போய்விடுவாய் என எங்களுக்கு தெரியும். (அதன் பிறகு) எங்களை வழிநடத்தவேண்டியவர் யார்? ” என்று கேட்டார்கள் . யேசு அவர்களிடம் “நீங்கள் எங்கிருந்தாலும் அறத்தில் நிலைபெற்றவனான ஜேம்ஸிடம் போவீர்களாக. அவனுக்காகவே சொற்கமும் பூமியும் உருவாயின” என்றார்

13. யேசு தன் சீடர்களிடம்: “என்னை யாரிடமாவது ஒப்பிட்டு நான் யாரைப்போலிருக்கிறேன் என்று சொல்லுங்கள்” என்றார். சீமோன் பேதுரு அவரிடம் “நீ நீதியுள்ள ஒரு தேவனைப் போலிருக்கிறாய்” என்றார். மத்தேயு “நீ ஞானியான ஒரு தத்துவமேதையைப்போலிருக்கிறாய் என்றார் தோமையர் “ஆசிரியனே நீ யாரைப்போன்றவன் என்று சொல்ல என் நாக்குக்கு முற்றிலும் சக்தி இல்லை” என்றார். யேசு அவரிடம் “நான் உனது ஆசிரியனல்ல. நான் அளந்து ஊற்றிய நுரைக்கும் குடுவையை அருந்தியமையால் உனக்கு இப்போது போதை ஏறிவிட்டிருக்கிறது என்று சொன்னார். யேசு அவரை அழைத்துச் சென்று மூன்று விஷயங்களை அவருக்கு மட்டுமாக சொன்னார்.

தோமையர் திரும்பிவந்தபோது மற்ற சீடர்கள் யேசு உன்னிடம் மட்டுமாக அப்படி என்ன சொன்னார் என்று கேட்டார்கள். தோமையர் அவர்களிடம் “அவர் என்னிடம் சொன்னவற்றில் ஒரே ஒரு சொல்லை நான் உங்களிடம் சொன்னால்கூட நீங்கள் என்னை கல்லாலடிப்பீர்கள். அக்கற்களில் இருந்து நெருப்பு எழுந்துவந்து உங்களை பொசுக்கும்” என்றார்.

14. யேசு அவர்களிடம்: “நீங்கள் உண்ணாவிரதமிருந்தால் உங்களுக்கே பாவம் உண்டாகும். பிரார்த்தனை செய்தால் நீங்கள் அலட்சியம் செய்யப்படுவீர்கள். தானம் செய்தால் உங்கள் ஆத்மாவை கறைப்படுத்திக் கொள்வீர்கள். நீங்கள் ஏதாவது அயல் நாடுகளுக்குச் செல்கையில் அங்குள்ளவர்கள் உங்களை வரவேற்று உங்கள் முன் பரிமாறுவதை உண்ணுங்கள். அவர்களில் உள்ள நோயாளிகளை பரிசரியுங்கள். ஏனெனில் உங்கள் வாய்க்குள் போவது உங்களை அசுத்தமாக்குவதில்லை. உங்கள் வாயிலிருந்துவெளிவருவது எதுவோ அதுவே உங்களை அசுத்தப்படுத்துகிறது” என்றார்.

15. யேசு சொன்னார்: “பெண்களில் இருந்து பிறக்காதவனாகிய ஒருவனைக் கண்டால் அவன் முன் விழுந்து அவனை வணங்குங்கள். அவனே உங்கள் பிதா” .

16. யேசு சொன்னார்: “ஒருவேளை நான் பூமிமீது அமைதியை உருவாக்க வந்தவன் என்று சிலர் எண்ணக்கூடும். நான் அமைதியின்மையை விதைக்க வந்தவன் என அவர்கள் அறிவதில்லை. அக்கினியும், வாளும், வெஞ்சமரும். ஏனெனில் ஒரு வீட்டில் ஐந்து பேர் இருந்தார்களென்றால் இருவர் மூன்று பேருக்கு எதிராகவும் மூன்றுபேர் இருவருக்கு எதிராகவும் தகப்பன் மகனுக்கு எதிராகவும் மகன் தகப்பனுக்கு எதிராகவும் மாறுவார்கள். அவர்கள் தனிமைப்பட்டவர்களாக இருப்பார்கள்.”

17. யேசு சொன்னார் : “எந்தக் கண்ணும் இதுவரை பார்த்திராததும் எந்தக் காதும் இதுவரை கேட்டிருக்காததும் எந்தக் கையும் இதுவரை தொட்டறிந்திராததும் மனிதமனதிற்கு இதுவரை தோன்றியிருக்காததுமான ஒன்றை நான் உங்களுக்கு காட்டுவேன்.”

18. சீடர்கள் யேசுவிடம் சொன்னார்கள்: “எங்கள் முடிவு எப்படிப்பட்டதாக இருக்குமென சொல்லுங்கள்”. யேசு அவர்களிடம் “அப்படியானால் நீங்கள் உங்கள் தொடக்கத்தை கண்டறிந்துவிட்டீர்களா என்ன? ஏனெனில் தொடக்கம் எங்கோ முடிவும் அங்குதான். தொடக்கத்தில் தன் நிலையை உறுதி செய்பவன் ஆசீர்வதிக்கப்பட்டவன். அவன் முடிவையும் அறிவான். அவன் இறப்பதில்லை” என்றார்.

19. யேசு சொன்னார்: “படைப்புக்கு முன்னரே படைக்கப்பட்டவன் ஆசீர்வதிக்கப்பட்டவன். நீங்கள் என் சீடர்களாக ஆகி என் சொற்களை செவிமடுப்பீர்களென்றால் இந்தக் கற்கள் உங்களை உபசாரம் செய்யும். ஏனெனில் சொர்க்கத்தில் உங்களுக்காக ஐந்து மரங்கள் உண்டு. வேனிற்காலத்திலும் குளிர்காலத்திலும் யாரும் அவற்றை தொடுவதில்லை. அவற்றின் இலைகள் உதிர்வதில்லை. அவற்றை அறிபவர்களுக்கு மரணமுமில்லை.”

20. சீடர்கள் யேசுவிடம் : “ சொர்க்கம் எப்படிப்பட்டது என எங்களிடம் சொல்லுங்கள்” என்றார்கள். அவர் அவர்களிடம் சொன்னார், “அது விதைகளில் மிகச்சிறிய விதையான கடுகு போன்றது. ஆனால் உழப்பட்ட மண்ணில் விழுந்தால் அது செடியாக மாறுகிறது. அதில் விண்ணின் பறவைகள் கூடணையும்.”

21. மேரி யேசுவிடம் “ உன் சீடர்கள் யாரைப்போன்றவர்கள்?” என்று கேட்டாள். அவர் சொன்னார் “அவர்கள் தங்களுடையதல்லாத இடத்தில் தங்க நேர்ந்த குழந்தைகளைப்போல. இடத்தின் உரிமையாளன் வந்து “என் இடத்தை திருப்பிக் கொடுங்கள்” என்று சொல்லும்போது அவர்கள் அவன் முன்னால் வைத்தே உடுப்புகளை கழற்றி திருப்பித்தந்துவிட்டு இடத்தை அவனுக்கு விட்டுக் கொடுப்பார்கள். ஆகவே உங்களுக்கு சொல்கிறேன் திருடன் வரப்போகிறான் என ஒரு வீட்டுக்காரன் அறிந்தானென்றால் திருடன் வந்து வீட்டில் கன்னம் வைத்து பொருட்களைக் கொண்டுபோவதற்கு முன்னரே அவன் காவல் இருப்பான். அதைப்போல நீங்களும் இவ்வுலகுக்கு எதிராக உங்களை காத்துக் கொள்ளுங்கள். திருடர்கள் உங்களுக்குள் வராமலிருக்கும் பொருட்டு மகத்தான வல்லமை கொள்ளுங்கள். ஏனெனில் எதிர்பார்க்கப்படும் அந்தத் துயரம் கண்டிப்பாக உண்டாகும். உங்களுக்கிடையில் ஞானியான ஒருவன் இருக்கவேண்டும். தானியம் விளைந்தபோது அவன் தன் கையில் அரிவாளுடன் சீக்கிரமாக வந்து அறுவடை செய்தான். கேட்க செவி உடையவர்கள் கேட்பார்களாக”.

22. முலைப்பால் குடிக்கும் சிசுக்களை கண்ட யேசு தன் சீடர்களிடம் “முலைகுடிக்கும் இந்தக் குழந்தைகள் சொர்க்கத்தில் நுழைபவர்களைப்போல என்று சொன்னார். சீடர்கள் அவரிடம் “அப்படியானால் நாங்கள் குழந்தைகளாக மாறி சொர்க்கத்திற்குள் பிரவேசிக்கலாமா?” என்றார்கள். யேசு அவர்களிடம் “எப்போது நீங்கள் இரண்டை ஒன்றாக்குகிறீர்களோ, எப்போது நீங்கள் அகம் புறம் போலவும், புறம் அகம் போலவும், மேலே இருப்பது கீழே இருப்பது போலவும் ஆகிறீர்களோ, எப்போது நீங்கள் ஆண் ஆணும் பெண் பெண்ணும் அல்லாமலாகும்படி ஆணையும் பெண்ணையும் ஒன்றாக ஆக்கிக் கொள்கிறீர்களோ எப்போது நீங்கள் ஒரு கண்ணுக்கு பதிலாக பல கண்களும், ஒரு கைக்கு பதிலாக இன்னொரு கையும் ஒரு பாதத்துக்கு பதிலாக இன்னொரு பாதமும் ஒரு சமானத்தன்மைக்கு பதிலாக இன்னொரு சமானத்தன்மையும் உள்ளவர்களாகிறீர்களோ அப்போது நீங்கள் சொர்க்க ராஜ்யத்துக்குள் பிரவேசிப்பீர்கள்” என்றார் .

23. யேசு சொன்னார்:“நான் உங்களை ஆயிரத்துக்கு ஒருவராகவும் பத்தாயிரத்துக்கு இருவராகவும் தெரிவு செய்வேன். அவர்கள் தனித்தனியாக நிலைகொள்வார்கள்”.

24. அவரது சீடர்கள் அவரிடம்: “நீ இருக்குமிடத்தை எங்களுக்கு சொல்லிவிடு. நாங்கள் உன்னை மிகவும் தேடவேண்டியிருக்கிறது’’ என்றார்கள். அவர் அவர்களிடம் “கேட்கச் செவியுள்ளவர்கள் கேட்பார்களாக. ஒளிமிக்க மனிதனுக்குள்ளே ஒளி உள்ளது. அது இவ்வுலகையே ஒளிமிக்கதாக ஆக்குகிறது. அவன் ஒளிவிடவில்லை என்றால் அவன் இருட்டாக இருக்கிறான்” என்றார்.

25. யேசு சொன்னார் “உங்கள் சகோதரனை நீங்கள் உங்கள் ஆத்மாவைப்போல நேசியுங்கள். அவனை உங்கள் கண்களின் மணி போல காத்துக்கொள்ளுங்கள்.

26. யேசு சொன்னார் : “ உங்கள் சகோதரனின் கண்ணில் உள்ள தூசியை நீங்கள் காண்கிறீர்கள், ஆனால் உங்கள் கண்ணில் உள்ள குச்சியை நீங்கள் காண்பதில்லை. உங்கள் கண்களில் உள்ள குச்சியை எடுத்து வீசினீர்கள் என்றால் உங்கள் சகோதரனின் கண்களில் உள்ள தூசியை எடுப்பதற்கு உங்களுக்கு நன்றாகக் கண் தெரியுமே.”

27. யேசு சொன்னார்: ‘இவ்வுலகில் இருந்து நீங்கள் விலகி உபவசிக்காவிட்டால் நீங்கள் (பரலோக) ராஜ்யத்தைக் காணப்போவதில்லை. சபாத்தை சபாத்தாக கடைப்பிடிக்காவிட்டால் நீங்கள் பிதாவை காணப்போவதில்லை.”

28. யேசு சொன்னார்:“நான் உலகுக்கு மத்தியில் இடம் பிடித்து உடலுடன் அவர்களுக்கு முன்னால் வந்தேன். ஆனால் அவர்களெல்லாம் குடித்து போதையேறியவர்களாக இருப்பதையே கண்டேன். தாகமுள்ளவர்கள் எவரையுமே நான் காணவில்லை. உள்ளத்தால் குருடர்களாக இருக்கும் மனிதர்களுக்காக என் ஆத்மா வேதனை கொண்டது. ஏனெனில் அவர்கள் ஒன்றுமில்லாமல் இவ்வுலகுக்கு வந்தார்கள். வெறும் கையுடன் உலகை விட்டுச் செல்லும் பாதையையே தேடுகிறார்கள். இப்போது அவர்கள் பித்தெடுத்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் மதுவின் போதை இறங்கும்போது அவர்கள் வருத்தம் கொள்வார்கள்.”

29. யேசு சொன்னார் “ஆத்மாவினால்தான் உடல் உருவாயிற்றென்றால் அது ஒரு ஆச்சரியமான விஷயம்தான். உடல்மூலம் ஆத்மா உருவாயிற்றென்றால் அது ஆச்சரியங்களில் ஆச்சரியமான விஷயம். அந்தப் பெரும் செல்வம் இவ்வறுமைக்குள் எவ்வாறு குடியேறியது?”

30. யேசு சொன்னார்: “எங்கு மூன்று தேவர்கள் இருக்கிறார்களோ அவர்கள் தேவர்கள். எங்கே இரண்டு பேர் அல்லது ஒருவர் இருக்கிறார்களோ நான் அவர்களுடன் இருக்கிறேன்.”

31. யேசு சொன்னார்: “எந்த தீர்க்கதரிசியும் தன் ஊரில் வரவேற்கப்படுவதில்லை. எந்த வைத்தியனும் அவனை தெரிந்தவர்களை குணப்படுத்துவதில்லை.”

32. “ஓர் உயர்ந்த மலைமீது கோட்டைகட்டி அதனுள்ளே கட்டப்படும் நகரம் அழிவதில்லை, அதை ஒளித்துவைக்கவும் முடியாது.”

33. யேசு சொன்னார்: “நீங்கள் கேட்பவற்றை வீட்டுக்கூரை மீது ஏறி நின்று உலகுக்கு சொல்லுங்கள். ஏனெனில் யாரும் விளக்கை ஏற்றி பாறையின் அடியில் மறைத்து வைப்பதில்லை. வருபவர்களும் போகிறவர்களும் வெளிச்சம் பெறுவதன் பொருட்டு அதை உயர்ந்த விளக்குக் கம்பம்மீதுதான் வைக்கிறார்கள்.”

34. யேசு சொன்னார்: “ஒருகுருடன் இன்னொரு குருடனுக்கு வழிகாட்டி சென்றால் இருவருமே குழியில் விழுவார்கள்.”

35. யேசு சொன்னார்: “பலசாலியான ஒருவனின் கைகள் கட்டி போடாமல்

அவன் வீட்டை ஆக்ரமித்து அதை கையகப்படுத்த எவராலும் முடியாது. அவனை கட்டிப்போட்ட பிறகோ அவன் வீட்டை எளிதில் கொள்ளையடிக்க முடியும்."

36. "காலை முதல் அந்திவரை அந்திமுதல் காலைவரை நீங்கள் அணியப்போவதென்ன என்பதைப்பற்றி சிந்திக்காதிருங்கள்."

37. சீடர்கள் யேசுவிடம் :" நீ எப்போது எங்களுக்கு முன்னால் வெளிப்படுவாய்? எப்போது நாங்கள் உன்னை காண்பது?" என்று கேட்டார்கள். யேசு சொன்னார்: "சிறுகுழந்தைகள் போல என்று நீங்கள் உங்கள் ஆடைகளையெல்லாம் அவிழ்த்து காலுக்குக்கீழே போட்டு மிதிப்பீர்களோ அன்று நீங்கள் வாழும் பிதாவின் குமாரனைக் காண்பீர்கள்."

38. யேசு சொன்னார் "நான் உங்களுக்கு சொல்லும் இச்சொற்களைகேட்க நீங்கள் பலமுறை ஆசைப்பட்டதுண்டு. இதைச் சொல்லிக்கேட்க உங்களுக்கு வேறு யாரும் இல்லை. நீங்கள் என்னைத் தேடி அலைந்து கண்டடையமுடியாத நாட்கள் வரும்."

39. யேசு சொன்னார்: " பரீசர்களும் அறிஞர்களும் ஞானத்தின் சாவிகளை எடுத்து ஒளித்துவைத்திருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் உள்ளே நுழைந்ததுமில்லை. உள்ளே நுழைய விரும்புபவர்களை அனுமதித்ததுமில்லை. நீங்கள் சர்ப்பத்தைப்போல அறிவுக்கூர்மையுள்ளவர்களும் புறாக்களைப்போல களங்கமற்றவர்களும் ஆவீர்களாக."

40. யேசு சொன்னார் : "என் பிதாவுக்காக நான் வெளியே ஒரு முந்திரிக்கொடியை நட்டிருக்கிறேன், ஆனால் கொழுகொம்பில்லாமையால் அது வேருடன் பிடுங்கிவீசப்படும்."

41. யேசு சொன்னார்: "தன் கையில் ஏதேனும் சிலவற்றை வைத்திருப்பவனுக்கே, மேலும் கிடைக்கும். இல்லாதவனுக்கு அவனுக்குரிய அப்பம் கூட கிடைக்காமலாகும்."

42. யேசு சொன்னார்: "வழிப்போக்கர்களாக ஆகுங்கள்"

43. சீடர்கள் கேட்டார்கள்: "இவ்விஷயங்களை எங்களுக்கு சொல்ல நீ யார்?" யேசு அவர்களுக்கு சொன்னார் "நான் உங்களுக்கு சொல்வதில் இருந்து நான் யார் என நீங்கள் புரிந்துகொள்வதில்லை. நீங்கள் யூதர்களைப்போல இருக்கிறீர்கள். எப்படியென்றால் அவர்கள் மரத்தை நேசிக்கிறார்கள், அதன் பழத்தை வெறுக்கிறார்கள், அல்லது பழத்தை நேசிக்கிறார்கள் ஆனால் மரத்தை வெறுக்கிறார்கள்."

44. யேசு சொன்னார்: "பிதாவுக்கு எதிராக புறம் கூறுபவன் மன்னிக்கப்படுவான். சுதனுக்கு எதிராக புறம் கூறுபவன் மன்னிக்கப் படுவான் ஆனால் ஆவிக்கு எதிராக புறம் கூறுபவன் பூமியிலும் சொர்க்கத்திலும் மன்னிக்கப்படுவதில்லை."

45. யேசு சொன்னார்: "முட்களிலிருந்து முந்திரி பறிக்கமுடியாது. நெருஞ்சியிலிருந்து அத்திப்பழங்களைப் பறிப்பதுமில்லை. ஏனெனில் அவை காய்ப்பதில்லை. நல்ல மனிதன் தன் களஞ்சியத்திலிருந்து நன்மைகளை கொண்டுவருகிறான். தீயமனிதன் தன் தீமையின்

களஞ்சியத்திலிருந்து தீயவற்றையே கொண்டுவருகிறான். தீமை நிரம்பிய களஞ்சியம் அவனது இதயம்தான். அவன் தீயவற்றையே சொல்கிறான். ஏனெனில் தன் இதயத்தின் விரிவில் இருந்தும் அவன் தீயவற்றையே கண்டடைகிறான்."

46. யேசு சொன்னார்: "பெண்களில் இருந்து பிறந்தவர்களில் ஆதாம் முதல் யோவான் ஸ்நானகன் வரையிலானவர்களில் யோவானுக்கு முன்னால் கண்களை தாழ்த்தவேண்டாதவர்களாக அவரைவிட மேலானவர்களாக யாருமில்லை. ஆனால் நான் சொல்கிறேன் உங்களில் யார் ஒரு குழந்தைபோல ஆகிறீர்களோ அவன் (கடவுளின்) ராஜ்யத்தை அறியவும் யோவான் ஸ்நானகனை விட மேன்மையானவனாக ஆகவும் செய்வான்."

47. யேசு சொன்னார் : "ஒரு மனிதனால் ஒரேசமயம் இரு குதிரைகள்மீது ஏறவோ, இரு விற்களை வளைக்கவோ முடியாது. ஒரு சேவகனால் இரு தலைவர்களுக்கு சேவை செய்வதும் முடியாத காரியம். அப்படியானால் அவன் ஒருவரை மதிக்கவும் இன்னொருவரை நிந்திக்கவும் செய்வான். யாரும் பழைய மது குடித்தபிறகு புதிய மது குடிக்க விரும்புவதில்லை. பழைய பாத்திரங்கள் உடையாமலிருக்கையில் அவற்றில் புதிய மது நிரப்புவதில்லை. கெட்டுப்போகும் என்பதனால் பழைய மதுவை புதிய பாத்திரங்களில் நிறைப்பதுமில்லை. கிழிந்துபோகும் என்பதனால் பழைய துணித்துண்டை புதிய துணியுடன் சேர்த்து தைப்பதில்லை."

48. யேசு சொன்னார்: "ஒருவீட்டில் இருவர் ஒருவருக்கொருவர் சமாதானத்தை உருவாக்குகிறார்கள் என்றால் அவர்கள் மலைகளிடம் "விலகிச்செல்லுங்கள்' என்று சொன்னால்கூட அவை விலகிச்செல்லும்."

49. யேசு சொன்னார்: "தனித்திருப்பவர்களும் தேர்வுசெய்யப்பட்டவர்களுமானவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். நீங்கள் (கடவுளின்) ராஜ்யத்தை கண்டடைவீர்கள்."

50. யேசு சொன்னார்: "அவர்கள் உங்களிடம் 'நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று கேட்டால் 'நாங்கள் ஒளியிலிருந்து வந்தோம். எங்கு ஒளி தானாகவே உருவாகி, தன்னைத்தானே நிறுவிக்கொண்டு, அவர்களுடைய உருவங்கள் வழியாக வெளிப்படுகிறதோ அங்கிருந்து வந்தோம்' என்று சொல்லுங்கள். அவர்கள் உங்களிடம் 'அது நீங்கள் தானா?' என்று கேட்டார்களென்றால் 'ஆம் நாங்கள் தன் குழந்தைகளும் வாழ்ந்துகொண்டிருக்கும் பிதாவினால் தேர்வு செய்யப்பட்டவர்களுமாவோம்' என்று சொல்லுங்கள். அவர்கள் உங்களிடம் 'உங்கள் பிதாவின் அடையாளமாக உங்களிடமுள்ளது 'என்ன? கேட்டார்களேயானால் 'அது இயக்கமும் ஓய்வும் தான்' என்று பதில் சொல்லுங்கள்.

51. அவரது சீடர்கள் அவரிடம் " இறந்தவர்களின் ஓய்வு எப்போது வந்து சேரும்? புதிய உலகம் என்று வரும்?" என்று கேட்டார்கள். அவர் அவர்களுக்கு சொன்னார் " நீங்கள் வரக்காத்திருப்பது எதுவோ அது ஏற்கனவே வந்துவிட்டது. ஆனால் நீங்கள்தான் அதை அடையாளம் காணவில்லை."

52. அவரது சீடர்கள் அவரிடம்: “இருபத்துநான்கு தீர்க்கதரிசிகள் இஸ்ரேலில் உரையாற்றினார்கள். அவர்களனைவருமே உன்னிலிருந்து உரையாற்றினார்கள்” என்றனர். அவர் அவர்களிடம் “நீங்களெல்லாம் உங்கள் மத்தியிலே வாழ்பவர்களை பொருட்படுத்தாமல் இறந்துபோனவர்களைப்பற்றி மட்டும் பேசுகிறீர்கள்” என்றார்.

சிலுவையின் பெயரால் கிறித்தவம் குறித்து Siluvaiyin Peyaraal: Kiriththavam Kuriththu
ஜெயமோகன் Jeyamohan ©

This digital edition published in 2016 by

Kizhakku Pathippagam

177/103, First Floor, Ambal's Building,

Lloyds Road, Royapettah,

Chennai 600 014, India.

Email: support@nhm.in
Web: www.nhmreader.in

First published in print in December 2009 by Kizhakku Pathippagam

All rights reserved.

Kizhakku Pathippagam is an imprint of New Horizon Media Private Limited, Chennai, India.

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of copyright and those responsible may be liable in law accordingly.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.